

ஏப்ரல் 2021

winmeen.com


*Learning Leads to Ruling*

# நடப்பு நிகழ்வுகள்







**1. 'ஹோலா மொஹல்லா' என்பது பின்வரும் எந்த மாநிலத்தில் / யூனியன் பிரதேசத்தில் கொண்டாடப்படுகிற விழாவாகும்?**



அ) மகாராஷ்டிரா

**ஆ) பஞ்சாப் ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) அஸ்ஸாம்

✓ 'ஹோலா மொஹல்லா' என்பது பஞ்சாபின் ஆனந்த்பூர் சாகிப்பில் ஆண்டுதோறும் சீக்கிய சமூகத்தைச்சார்ந்தவர்கள் கொண்டாடும் பண்டிகை ஆகும். இந்த விழா, பொதுவாக சந்திர மாதத்தின் இரண்டாவது நாளில் கொண்டாடப்படுகிறது. இது ஹோலி பண்டிகையைத் தொடர்ந்து கொண்டாடப்படுகிறது. நடப்பாண்டு, மார்ச்.10 அன்று இவ்விழா கொண்டாடப்பட்டது. இந்த விழா தற்காப்பு துணிச்சலை கொண்டாடுகிறது.

---

**2. 'உலக வளர்ச்சி அறிக்கை' 2021'இன் கருப்பொருள் என்ன?**

**அ) Data for better lives ☑**

ஆ) Data for better economy

இ) Data for better administration

ஈ) Data for better world

✓ உலக வளர்ச்சி அறிக்கை – 2021 ஆனது 'சிறந்த வாழ்க்கைக்கான தரவு' என்ற கருப்பொருளுடன் வெளியிடப்பட்டுள்ளது. இது வளர்ச்சிக்கான தரவுகளின் பங்கை மட்டுமே மையமாகக்கொண்ட முதல் உலக வளர்ச்சி அறிக்கையாகும். COVID கொள்ளைநோயானது உலகளாவிய தரவில் ஏற்றத்தாழ்வுகளை இன்னும் அதிகமாக்கியுள்ளதால், ஏழைமக்களுக்கு சமமான அணுகலை உறுதி செய்வது குறித்து இவ்வறிக்கை பேசுகிறது.

---

**3.BRICS அமைப்பின் நடப்பாண்டிற்கான (2021) தலைவராக பொறுப்பேற்றுள்ள நாடு எது?**

அ) சீனா

**ஆ) இந்தியா ☑**

இ) இரஷ்யா

ஈ) தென்னாப்பிரிக்கா

✓ 2021ஆம் ஆண்டுக்கு, BRICS அமைப்பின் தலைவர் பதவி இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. மூன்று நாள் கூட்டத்தின் தொடக்கத்துடன் இந்தியா தனது தலைவர் பதவியைத் தொடங்கியுள்ளது. இந்தக் கூட்டத்திற்கு வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளர் தலைமைதாங்கினார். இந்தச் சந்திப்பின்போது, இந்தியா, நடப்பாண்டிற்கான அதன் கருப்பொருள்கள் மற்றும் முன்னுரிமைகளை உறுப்புநாடுகளுக்கு அறிமுகப்படுத்தியது.

---

**4. 'கேலோ இந்தியா திட்டமானது' பின்வரும் எந்நிதியாண்டுவரை நீட்டிக்கப்பட்டுள்ளது?**

அ) 2022-23

ஆ) 2023-24

இ) 2024-25

**ஈ) 2025-26 ☑**

✓ 'கேலோ இந்தியா திட்'டமானது 2021-22 முதல் 2025-26 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய விளையாட்டு அமைச்சர் கிரண் ரிஜிஜு மாநிலங்களவையில் அறிவித்தார். புதிய 'கேலோ இந்தியா' திட்டத்தைச் செயல்படுத்த ₹8750 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த தரவு விளையாட்டு அமைச்சகத்தால் நிதியமைச்சகத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. கேலோ இந்தியா திட்டத்தின்கீழ், 2021-22'க்கான பட்ஜெட்டில் ₹657.71 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

---

**5. அண்மைய SBI அறிக்கையின்படி, இந்தியாவில், இரண்டாவது COVID அலை, எத்தனை நாட்கள் வரை நீடிக்கக்கூடும்?**

அ) 50

**ஆ) 100 ☑**

இ) 200

ஈ) 300

100

✓ இந்தியாவில் இரண்டாவது COVID-19 அலையின் காலம் 100 நாட்கள் வரை நீடிக்கும் என்று பாரத வங்கியின் ஆராய்ச்சிக்குழுவின் அறிக்கை அடிக்கோடிட்டுக்காட்டுகிறது. இந்த அறிக்கையை வங்கியின் தலைமை பொருளாதார ஆலோசகர் சௌமியா காந்தி கோஷ் எழுதியுள்ளார்.

✓ உள்ளூரளவிலான பொது முடக்கங்கள் அல்லது கட்டுப்பாடுகள் தொற்று நோய் பரவலைக் கட்டுப்படுத்தவில்லை என்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது. மகாராஷ்டிரா, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் இது கண்கூடாக காணப்பட்டது. எனவே, பொதுமுடக்கங்கள் பயனற்றது என்றும் தடுப்பூசி மட்டுமே இதற்கான ஒரே தீர்வு என்று அவ்வறிக்கை அறிவுறுத்துகிறது.

---

**6.அண்மைய ஆய்வின்படி, இந்தியாவில் ஏற்படும் வெப்ப அலைகள், எந்தப் பகுதியின் வெப்பமயமாதலால் ஏற்படுகின்றன?**



**அ) ஆர்க்டிக் பிராந்தியம் ☑**

ஆ) அண்டார்டிகா பிராந்தியம்

இ) பசிபிக் பெருங்கடல்

ஈ) இந்திய பெருங்கடல்

✓ இந்தியா மற்றும் பிரேசில் ஆராய்ச்சியாளர்களின் ஓர் அண்மைய ஆய்வு "Large-scale connection to Deadly Indian Heatwaves" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. இந்த ஆய்வின்படி, ஏப்ரல் மற்றும் மே மாத கோடை காலங்களில் இந்தியாவில் வீசும் வெப்ப அலைகள், ஆர்க்டிக் பிராந்தியத்தின் குறிப்பிடத்தக்க வெப்பமயமாதலால் ஏற்படுகின்றன.

✓ "Quasi-Resonant Amplification" எனப்படும் ஒரு முறைமையால் இந்திய வெப்ப அலைகள் ஏற்படுகின்றன என்று அவர்கள் கூறுகிறார்கள்.

---

**7. தேசிய கல்விக்கொள்கை – 2020'இன் அடிப்படையில், பிரிட்டிஷ் கவுன்சிலால் புதிய மதிப்பீட்டு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக அறிவித்த இந்திய அமைப்பு எது?**

அ) AICTE

ஆ) UGC

**இ) CBSE ☑**

ஈ) NAAC

✓ மத்திய இடைநிலைக்கல்வி வாரியம் (CBSE) தேசிய கல்விக்கொள்கை -2020'இன் அடிப்படையில் 6-10 வகுப்புகளுக்கான திறன் அடிப்படையிலான மதிப்பீட்டு கட்டமைப்பை அறிவித்தது. இம்மதிப்பீடு முக்கியமாக மூன்று பாடங்களை (ஆங்கிலம் (வாசிப்பு), அறிவியல் மற்றும் கணிதம்) உள்ளடக்கிய மாணவர்களின் ஒட்டுமொத்த கற்றல் விளைவுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ பிரிட்டிஷ் கவுன்சிலானது UK அறிவு கூட்டாளரான AlphaPlus உடன் இணைந்து இந்தக் கட்டமைப்பை வடிவமைத்து உருவாக்கியுள்ளது.

---

**8.எந்த நாட்டின் நாடாளுமன்றம் தனது தற்போதைய அதிபரை 2024ஆம் ஆண்டு முதல் மேலும் இரு பதவிக்காலத்துக்கு போட்டியிட உதவும் மசோதாவை நிறைவேற்றியுள்ளது?**



அ) சீனா

**ஆ) ரஷியா ☑**

இ) அமெரிக்கா

ஈ) கனடா

✓ ரஷ்யாவின் கீழவையான டுமா, சமீபத்தில் ஒரு மசோதாவுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. ரஷியாவின் தற்போதைய அதிபர் விளாடிமிர் புதினை 2024ஆம் ஆண்டு முதல் தொடங்கி மேலும் இரண்டு பதவிகாலத்துக்கு போட்டியிட வழிவகை செய்யும் மசோதாதான் அது. 2020 ஜூலை மாதம், நாடு தழுவிய வாக்கெடுப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு திருத்தங்களைத் தொடர்ந்து தேர்தல்கள் குறித்த வரைவு சட்டம் அங்கீகரிக்கப்பட்டது. இம்மசோதா, 2036ஆம் ஆண்டுவரை புதினுக்கு பதவிகளை வகிப்பதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

---

**9. இந்தியாவைத்தவிர கருச்சிதைவுகள் நேர்ந்தால் விடுப்பளிக்கும் சட்டத்தை நிறைவேற்றிய வேறு நாடு எது?**



அ) சுவிச்சர்லாந்து

ஆ) நார்வே

**இ) நியூசிலாந்து ☑**

ஈ) ஜெர்மனி

- ✓ கருச்சிதைவு அல்லது குழந்தை பிறப்பைத் தொடர்ந்து தாய்மார்களுக்கும் அவர்களுடனிருப்பவர்களுக்கும் சம்பளத்துடன்கூடிய விடுப்புக்கான உ–ரிமையை வழங்கும் சட்டத்தை நியூசிலாந்து நாடாளுமன்றம் சமீபத்தில் நிறைவேற்றியது. இந்தியாவுக்குப்பிறகு, இதுபோன்றதொரு சட்டத்தை இயற்றிய உலகின் இரண்டாவது நாடாக நியூசிலாந்து மாறிவிட்டது.
- ✓ நியூசிலாந்தில் உள்ள பெண்களுள் நான்கில் ஒருவர் கருச்சிதைவுக்கு ஆளாகின்றனர். ஒருவேளை குழந்தை இறந்து பிறந்தால், இந்தச் சட்டம் ஊழியர்களுக்கு மூன்று நாட்கள் வரை விடுப்பு அளிக்கும்.

---

**10. ஐநா அமைதி காக்கும் படையினருக்கு கிட்டத்தட்ட 2 இலட்சம் அளவிலான COVID தடுப்பூசிகளை பரிசாக வழங்கவுள்ள நாடு எது?**

அ) சீனா

ஆ) ரஷியா

**இ) இந்தியா ☑**

ஈ) இங்கிலாந்து



- ✓ ஐநா அமைதிகாக்கும் படையினருக்கு பரிசாக இந்தியா 200000 டோஸ் COVID–19 தடுப்பூசிகளை வழங்குவதாக அறிவித்துள்ளது. இது மார்ச் 27 அன்று அனுப்பப்பட்டு அமைதி காக்கும் பணிக்கு விநியோகிக்கப்படும்.
- ✓ இதன்மூலம், உலகெங்குமுள்ள 12 அமைதி காக்கும் நடவடிக்கைகளில் பணியாற்றும் 85,782 ஐநா அமைதி காக்கும் படையினருக்கு COVID–19 தடுப்பூசிகளை வழங்க முடியும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழ்நாட்டின் முதல் அதிநவீன 3 டெஸ்லா MRI கருவி: ராமச்சந்திராவில் அறிமுகம்**

உலகத்தின் அதிநவீன 96 சேனல், 3 டெஸ்லா MRI கருவியை ஸ்ரீ ராமச்ச–ந்திரா மருத்துவ மையத்தில் அதன் மேலாண் இயக்குநர் V R வெங்கடாச–லம் இயக்கிவைத்தார். இதுகுறித்து ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவன கதிரியக்கவியல் துறைத்தலைவர் மருத்துவர் வெங்க–டசாய் கூறியதாவது: இந்த GE சிக்னா ஸ்கேனர் உயர்தர நிழற்படங்களி–ல் மிகத்துல்லியமான உடல்கூறு மாறுதல்களையும் மிகத்தெளிவாக அளித்து, சிறந்த சிகிச்சை அளிக்க உதவும்.

இதில் அகலமான நுழைவு வாயில் இருப்பதால் பருமனானவர்கள்கூட நெரிசல்நிலை உணராமல், பதற்றம், சத்தமில்லாமல் 50 சதவீத வேகத்தில் ஸ்கேனை முடிக்கலாம். மிக நுண்படப்பிடிப்புத்தன்மைகள் கொண்ட இந்த ஸ்கேனர், வலிப்பு நோய், குழந்தைகளுக்கான மூளை ஸ்கேன், நரம்புகள் மற்றும் தேவைக்கேற்ப ஸ்கேன்களை அதிநவீன தரத்தில் கொடுக்கிறது.

கட்டிகள், தசை, எலும்பு, கர்ப்பத்தில் உள்ள குழந்தை, மார்பக புற்றுநோய், இரத்தக்குழாய் சார்ந்த நோய்கள் ஆகியவற்றை ஆழ்ந்து ஆராய இந்த ஸ்கேனர் உதவி செய்யும்.

---

**2. இரண்டு ஆண்டுகளுக்குப்பின் தடைநீக்கம்; இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பருத்தி, சர்க்கரை இறக்குமதி**

ஜம்மு காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு நீக்கியதால் எரிச்சல் அடைந்த பாகிஸ்தான், இந்தியா உடனான தூதரக உறவை முறித்து கொண்டது. இந்தியா, பாகிஸ்தான் வர்த்தகம், போக்குவரத்து முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. இந்நிலையில், பாகிஸ்தானின் பொருளாதார ஒத்துழைப்பு குழு கூட்டம் இஸ்லாமாபாத்தில் நடந்தது. இதுகுறித்து நிதி அமைச்சர் ஹமாத் அசார் கூறுகையில், "இந்தக் கூட்டத்தில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கான 2 ஆண்டு கால தடை விலக்கி கொள்ளப்பட்டது.

இந்தியாவில் இருந்து 5 லட்சம் டன் சர்க்கரை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது. இதன்மூலம், இந்தியா–பாகிஸ்தான் இடையிலான வர்த்த–கம் மீண்டும் தொடரவுள்ளது. பாகிஸ்தானின் சிறு, குறு, நடுத்தர தொழில் துறையினர் பாதிக்கப்பட்டதால், பருத்தி இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்ட–து. தற்போது, நடப்பாண்டு ஜூன் மாதம் முதல் இந்தியாவில் இருந்து பருத்தி இறக்குமதி செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது" என்றார்.

---

**3. இந்தியா– தஜிகிஸ்தான் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மேலும் வலுப்படும்**

இந்தியா–தஜிகிஸ்தான் நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பு மேலும் வலுப்படவுள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்–கர் தெரிவித்தார். தஜிகிஸ்தான் தலைநகர் துஷான்பேயில் நடைபெற்ற ஆப்கானிஸ்தான் தொடர்பான மத்திய ஆசிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் 9ஆவது மாநாட்டில் அமைச்சர் ஜெய்சங்கர் கலந்து கொ–ண்டார். அப்போது, தஜிகிஸ்தான் நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் சிரோஜிதின் முஹ்ரிதீனுடன் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பின் அவர் இதை தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்தி அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

பள்ளிகளில் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை, பொறியியல் பட்டறை, மருந்து உற்பத்தி ஆலைகள், தகவல் தொழில்நுட்ப மையங்கள், புனர்வாழ்வு மையங்கள், வர்சோப்–1 நீர்மின் நிலையத்தின் நவீனமயமாக்கல் உள்ளிட்ட பல திட்டங்களை, தஜிகிஸ்தானில் பல்லாண்டுகளாக வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளோ–ம். அடுத்த ஆண்டு நிறைவடைய உள்ள துஷான்பே–சோர்டட் நெடுஞ்சா–லையின் 8 வழிச்சாலைப் பணிகளில் இந்தியா ஈடுபட்டுள்ளது. இந்தப் பணிகள் நிறைவடையும்பட்சத்தில் துஷான்பே நகரின் போக்குவரத்து நெருக்கடி குறையும். இதேபோல இந்தியாவின் கடனுதவி திட்டங்களின் மூலம், தஜிகிஸ்தானில் சமூக மேம்பாட்டு மானியத் திட்டங்களையும், எரிசக்தி மற்றும் போக்குவரத்து துறைகளின் திட்டப்பணிகளையும் இந்தியா மேற்கொண்டுவருகிறது.

இந்தோ–தாஜிக் நட்பு மருத்துவமனை இருநாடுகளிடையிலான ஒத்துழை–ப்பின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக விளங்குகிறது. தற்போதைய ஐநா பாதுகாப்புக்குழுவின் நிரந்தரமற்ற உறுப்பினர் சேர்க்கையின்போது, தஜிகி–ஸ்தானுக்கு முன்னுரிமை அளிப்போம்" என்றார் ஜெய்சங்கர்.

---

**4. கோவிஷீல்ட் தடுப்பூசி சேமித்து வைக்கும் காலம் 9 மாதங்களாக நீட்டிப்பு: டிசிஜிஐ அனுமதி**

இந்தியாவில் தயாரிக்கப்படும் 'கோவிஷீல்ட்' கரோனா தடுப்பூசியை சேமித்து வைக்கும் காலத்தை 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களாக நீட்டித்து இந்திய மருந்துக் கட்டுப்பாடு ஆணையம் (டிசிஜிஐ) அனுமதித்துள்ளது. இந்தியாவில் இந்தத் தடுப்பூசியை தயாரித்து விநியோகம் செய்து வரும் புனேயில் உள்ள சீரம் நிறுவனத்துக்கு கடிதம் மூலம் இதற்கான அனுமதியை இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு ஆணையர் வி ஜி சோமானி அளித்துள்ளார். அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பது:

கோவிஷீல்ட் தடுப்பூசியை பெயர் ஒட்டப்படாத 5 மில்லி லிட்டர் உள்ளிட்ட பல்வேறு அளவிலான கண்ணாடி குப்பிகளில் அடைத்து, 9 மாதங்கள் வரை சேமித்து வைக்க அனுமதி அளிக்கப்படுகிறது. அவ்வாறு கூடுதல் காலம் சேமித்துவைக்கப்படும் தடுப்பூசிகள் குறித்த விவரங்களை பிரிவு வாரியாக டிசிஜிஐ அலுவலகத்துக்கும், ஹிமாச்சல பிரதேசம் கசௌலியில் உள்ள மத்திய மருந்துகள் ஆய்வகத்துக்கும் அனுப்பி வைக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, 'கோவிஷீல்ட்' தடுப்பூசியை இரண்டாம் தவணையாக செலுத்திக்கொள்ளும் இடைவெளியை முதல் தவணை செலுத்தியதில் இருந்து 4 முதல் 6 வாரங்கள் என்பதை 6 முதல் 8 வாரங்களாக அதிகரிக்க மாநில அரசுகளை மத்திய சுகாதாரத்துறை அண்மையில் கேட்டுக்கொண்–டது. கூடுதல் பலன் கிடைக்கும் என்ற அடிப்படையில் இந்தப் பரிந்துரை செய்யப்படுவதாக மத்திய சுகாதாரத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, தடுப்பூசியை சேமித்து வைப்பதற்கான காலத்தை 6 மாதங்கள் என்ற அளவிலிருந்து 9 மாதங்களாக உயர்த்தி DCGI இப்போது அனுமதி அளித்திருக்கிறது.

---

**5. மத்திய அரசின் அவசர காலகடனுதவித் திட்டம் ஜூன் வரை நீட்டிப்பு**

மத்திய அரசின் அவசர காலக் கடனுதவித் திட்டம் வரும் ஜூன் மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து நிதியமைச்சகம் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: கரோனா தொற்றுப் பரவலால் முடங்கிய தொழில் துறையை மீட்பதற்காக, ₹3 லட்சம் கோடியில் அவசரகாலக் கடனுதவித் திட்டத்தை மத்திய அரசு கடந்த ஆண்டு பிப்ரவரி 29 அன்று அறிவித்தது. இந்தக் கடனுதவி திட்டம், பின்னர் கடந்த ஆண்டு நவம்பர் 30 வரையிலும், அதைத்தொடர்ந்து நிகழாண்டு மார்ச் 31ஆம் தேதி வரையிலும் நீட்டிக்கப்பட்டது. தற்போது இந்தத் திட்டம், வரும் ஜூன் 30ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தத் திட்டத்தின்கீழ் கடனுதவி பெறும் துறைகளில் சுற்றுலா, உணவகம், பயண ஏற்பாடு ஆகிய துறைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி, கடனைத் திருப்பிச் செலுத்தும் காலமானது 2 ஆண்டுகள் சலுகைக்காலம் உள்பட 6 ஆண்டுகளாகவும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தகுதியான தொழில் நிறுவனங்களுக்கு வங்கிகள்மூலம் கடனுதவி அளிப்பது, பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு உகந்த சூழல்களை உருவாக்கவும் உதவிகரமாக இருக்கும். இத்திட்டத்தின்கீழ் கடனுதவி அளிக்கும் வங்கிகளுக்கு ஊக்கத் தொகை அளிக்கப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### 6. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நடப்பு நிதியாண்டில் 7.5%–12.5% ஆக இருக்கும்

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2021–22–ஆம் நிதியாண்டில் 7.5 சதவீதம் முதல் 12.5 சதவீதமாக இருக்கும் என்று உலக வங்கி கணித்துள்ளது. உலக வங்கி–பன்னாட்டு நிதியம் இடையேயான வருடாந்திரக் கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளது. அதை முன்னிட்டு, 'தெற்காசியாவின் பொருளாதார நிலை' என்ற அறிக்கையை உலக வங்கி வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தியாவில் கரோனா நோய்த்தொற்று பரவத்தொடங்கும் முன்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பு வீழ்ச்சி காணத் தொடங்கியது. கடந்த 2016–17ஆம் நிதியாண்டில் நாட்டின் GDP வளர்ச்சி 8.3 சதவீதமாக இருந்தது. அது 2019–20–ஆம் நிதியாண்டில் 4 சதவீதமாகக் குறைந்தது. மக்களின் நுகர்வு குறைந்தது, வங்கி சாரா நிதி நிறுவனங்களின் வீழ்ச்சி, முதலீடுகள் குறைந்தது உள்ளிட்டவை நாட்டின் வளர்ச்சி வீழ்ச்சியடைந்த–தற்கான முக்கிய காரணங்கள் ஆகும். கரோனா நோய்த்தொற்றுப் பரவல் காரணமாக பொருளாதார வளர்ச்சி மேலும் வீழ்ச்சி கண்டது.

அதிலிருந்து இந்தியாவின் பொருளாதாரம் வேகமாக மீண்டு வருகிறது. எனினும், பொருளாதாரம் முழுமையாக இன்னும் மீளவில்லை. கடந்த ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் கடும் வீழ்ச்சியைச் சந்தித்தது. அந்நிலையுடன் ஒப்பிடுகையில் தற்போதைய வளர்ச்சி ஆச்சரியமளிக்கிற–து. 2021–22–ஆம் நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.5 சதவீதம் முதல் 12.5 சதவீதமாக இருக்கும். கரோனா தடுப்பூசி திட்டம் செயல்படுத்தப்படும் விதம், சர்வதேச நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, பொதுமுடக்கக் கட்டுப்பாடுகள் உள்ளிட்டவற்றைப் பொருத்து இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மாறுபடும்.

நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்பி வருகின்றன. பொருளாதாரத்தின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை இரு நிதியாண்டுகளுக்கு சுமார் 1% வீழ்ச்சிகாணும் எனக்கணிக்கப்பட்டுள்ளது. 2021–22ஆம் நிதியாண்டில் இந்திய அரசின் நிதிப்பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 10 சதவீதத்துக்கு அதிகமாகவே இருக்கும்.

அரசின் கடன் 2020–21ஆம் நிதியாண்டில் GDP மதிப்பில் 90 சதவீதமாக இருக்கும். 2021–22ஆம் நிதியாண்டில் கடன் மதிப்பு குறையத் தொடங்கு–ம். அதே காலகட்டத்தில் நாட்டிலுள்ள ஏழை மக்கள் விகிதம், கரோனா தொற்று பரவலுக்கு முந்தைய நிலையை அடையும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### 7. 4 ஆண்டுகளில் மின்னணு பணப் பரிமாற்றம் 71% அதிகரிக்கும்!

இந்தியாவில் வரும் 2025–ஆம் ஆண்டில் மின்னணு முறையில் (டிஜிட்டல்) பணப்பரிமாற்றம் நிகழுவது 71.7 சதவீதமாக அதிகரிக்கும் என்று ACI வேல்ட்வைட் நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன்மூலம் இந்தியாவில் ரொக்கமாக பணத்தைக் கையாளுவது குறைந்து பற்று, கடன் அட்டைகள், பேமண்ட் வாலட், QR கோடுகள்மூலம் பணம் செலுத்துவது, வங்கி இணையதளம், செயலிகள்மூலம் பணப்பரிமாற்றம் நடைபெறுவது வேகமாக அதிகரித்து வருவது தெரியவந்துள்ளது.

சர்வதேச அளவில் மின்னணு பணப்பரிமாற்ற சேவையில் ஈடுபட்டு வரும் ACI வேல்ட்வைட் நிறுவனம் இது தொடர்பாக இந்தியாவில் நடத்திய ஆய்வில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

கடந்த 2020ஆம் ஆண்டில் சீனாவைவிட இந்தியாவில்தான் அதிக மதிப்புக்கு மின்னணு முறையில் பணப்பரிமாற்றம் நிகழ்ந்துள்ளது. எனினும், மின்னணு முறையில் உடனடியாகப் பணப்பரிமாற்றம் செய்வது இப்போது இந்தியாவில் 15.6 சதவீதமாக உள்ளது. உடனடியாக அல்லாமல் பிறமுறைகளில் மின்னணு பணப்பரிமாற்றம் செய்வது 22.9 சதவீதமாக உள்ளது. பணத்தை ரொக்கமாகக் கையாளுவது 61.4 சதவீதமாக உள்ளது. எனினும், 2025ஆம் ஆண்டில் மின்னணு முறையில் உடனடியாகப் பணப்பரிமாற்றம் செய்வது 37.1 சதவீதமாகவும், உடனடியாக அல்லாமல் பிறமுறைகளில் மின்னணு பணப்பரிமாற்றம் செய்வது 34.6 சதவீதமாகவும் அதிகரிக்கும். அதேநேரத்தில் பணத்தை ரொக்கமாகக் கையாளுவது 28.3 சதவீதமாகக் குறையும்.

2024ஆம் ஆண்டு நாட்டின் மொத்தப் பணப்பரிமாற்றத்தில் 50 சதவீதத்து–க்குமேல் மின்னணுமுறைக்கு வந்துவிடும். இந்தியாவில் அரசு, வங்கிகள் மற்றும் பல்வேறு நிதிசார்ந்த நிறுவனங்கள் மின்னணு முறை பணப் பரிமாற்றத்தைத் தொடர்ந்து ஊக்கப்படுத்தி வருவதே இதற்கு முக்கியக் காரணமாகும். 2020ஆம் ஆண்டில் மின்னணு முறையில் பணப்பரிமாற்றம் நிகழ்ந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்த இடங்களில் சீனா, தென்கொரியா, தாய்லாந்து, பிரிட்டன் ஆகியவை உள்ளன என்று அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

### 8. மேலும் 3 ரஃபேல் விமானங்கள் இந்தியா வந்தடைந்தன

பிரான்ஸில் இருந்து மேலும் 3 ரஃபேல் விமானங்கள் புதன்கிழமை இந்தியா வந்தடைந்தன. இதன் மூலம் அந்நாட்டில் இருந்து இதுவரை இந்தியா வந்து சேர்ந்துள்ள ரஃபேல் விமானங்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது. இதுதொடர்பாக இந்திய வான்படை சுட்டுரையில் வெளியிட்ட பதிவில், "பிரான்ஸில் இருந்து 3 ரஃபேல் விமானங்கள் நடுவ–ழியில் எங்கும் நிற்காமல் இந்தியா வந்தடைந்தன.

அந்த விமானங்களுக்கு ஐக்கிய அரபு அமீரக விமானப்படை விமானங்கள் மூலம் நடுவானில் எரிபொருள் நிரப்பப்பட்டது" என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் நாட்டின் எந்தப்பகுதியில் அந்த விமானங்கள் தரையிறங்கின என்ற விவரத்தை இந்திய வான்படை தெரிவிக்கவில்லை. பிரான்ஸிடம் இருந்து ₹59,000 கோடி மதிப்பில் 36 ரஃபேல் போர் விமானங்களை கொள்முதல் செய்ய அந்நாட்டு அரசுடன் இந்திய மத்திய அரசு ஒப்பந்தம் மேற்கொண்டது. அந்த ஒப்பந்தம் கையொப்பமாகி சுமார் 4 ஆண்டுகள் கழித்து கடந்த ஆண்டு ஜூலை 29ஆம் தேதி முதல் தொகுப்பாக 5 ரஃபேல் விமானங்கள் இந்தியா வந்தடைந்தன.

அதன்பின்னர் கடந்த ஆண்டு நவ.3ஆம் தேதி இரண்டாவது தொகுப்பாக 3 ரஃபேல் விமானங்களும், கடந்த ஜன.27 அன்று மூன்றாவது தொகுப்பாக 3 ரஃபேல் விமானங்களும் இந்தியா வந்துசேர்ந்தன. தற்போது 4ஆவது தொகுப்பாக மேலும் 3 ரஃபேல் விமானங்கள் வந்துள்ளதையடுத்து, இது வரை இந்தியா வந்து சேர்ந்துள்ள ரஃபேல் விமானங்களின் எண்ணிக்–கை 14 ஆக அதிகரித்துள்ளது.

---

### 9. மிருகங்களுக்கான கரோனா தடுப்பூசி: முதல்முறையாக பதிவு செய்தது ரஷியா

உலகிலேயே முதல்முறையாக கரோனா தொற்றிலிருந்து மிருகங்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான தடுப்பூசியை ரஷியா பதிவு செய்துள்ளது. இதுகுறித்து அந்த நாட்டு வேளாண் பாதுகாப்பு கண்காணிப்பு அமைப்பு தெரிவித்ததாவது: மிருகங்களுக்கு கரோனா தொற்று ஏற்படாமல் பாதுகாப்பதற்கான தடுப்பூசி முதல்முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்தத் தடுப்பூசியை விலங்குகளுக்குச் செலுத்தினால், 6 மாதங்களுக்கு கரோனாவிடமிருந்து பாதுகாப்பு கிடைக்கும். இதுதொடர்பான ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 'கார்னிவாக்–கோவ' எனப் பெயரிடப்பட்டுள்ள அந்தத் தடுப்பூசி, கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து நாய்கள், பூனைகள், நரி இனங்கள் மற்றும் பிற விலங்குகளுக்கு சோதனை முறையில் செலுத்தி சோதிக்கப்பட்டது.

இந்தத்தடுப்பூசி, அடுத்த மாதத்திலிருந்து பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. மனிதர்களிடையே பரவிவரும் கரோனா தீநுண்மி, விலங்குகளின் உடல்களில் புகுந்து உருமாற்றம் பெற்று வீரியமடைவதைத் தடுக்க, கார்னிவாக்–கோவ் போன்ற விலங்குகளுக்கான தடுப்பூசிகள் உதவும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

---

### 10. சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதம் 1.1% வரை குறைப்பு

சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதத்தை மத்திய அரசு 1.1 சதவீதம் வரை குறைத்து அறிவித்துள்ளது. வங்கிகளில் நிரந்தர வைப்புத் தொகைக்கான வட்டி குறைக்கப்பட்டதையடுத்து சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதமும் குறைக்கப்பட்டுள்ளது. 2021–22ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டுக்கான இந்த வட்டி விகிதம் ஏப்.1ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. இதுதொடர்பாக நிதித்துறை அமைச்சகம் தெரிவித்திருப்பது: பொது வருங்கால வைப்பு நிதிக்கான (PPF) வட்டி விகிதம் 0.7 சதவீதம் குறைக்கப்பட்டு 6.4 சதவீதமாகவும், தேசிய சேமிப்பு

சான்றிதழுக்கான (NSC) வட்டி விகிதம் 0.9 சதவீதம் குறைக்கப்பட்டு 5.9 சதவீதமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மூத்த குடிமக்களுக்கான ஐந்து ஆண்டு சேமிப்புத் திட்டத்துக்கான வட்டி விகிதம் 0.9% குறைக்கப்பட்டு 6.5 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதல்முறையாக சேமிப்பு வைப்புத் தொகைக்கான வட்டி விகிதமானது 4 சதவீதத்தில் 0.5 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. ஓராண்டுக்கான வைப்புத் தொகை வட்டி விகிதமானது 1.1 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி 5.5 சதவீதமாக இருந்த வட்டி விகிதம் 4.4 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இரு ஆண்டுக்கான வைப்புத் தொகை வட்டி விகிதமானது 5 சதவீதத்தில் 0.5 சதவீதமும், 3 ஆண்டுக்கான வைப்புத் தொகை வட்டி விகிதமானது 0.4 சதவீதமும், 5 ஆண்டுக்கான வைப்புத் தொகை வட்டி விகிதமானது 0.9 சதவீதமும் குறைக்கப்பட்டுள்ளது.

பெண் குழந்தைகளுக்கான செல்வமகள் சேமிப்புத் திட்டத்துக்கான வட்டி விகிதமானது 0.7% குறைக்கப்பட்டு 6.9 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள–து. கிசான் விகாஸ் பத்திரத்துக்கான (KVP) ஆண்டு வட்டி விகிதமானது 0.7 சதவீதம் குறைக்கப்பட்டு 6.2 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

---

### 11. துருப்பிடிக்கா எஃகு உற்பத்தி 19% வீழ்ச்சி

நாட்டில் துருப்பிடிக்கா எஃகு (ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்) உற்பத்தி 2020–ஆம் ஆண்டில் 19 சதவீதம் குறைந்து 31.7 கோடி டன்னாக குறைந்துள்ளதாக இந்திய எஃகு மேம்பாட்டு சங்கம் (ஐஎஸ்எஸ்டிஏ) தெரிவித்துள்ளது. கரோனா நெருக்கடியால் கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை பொது முடக்கம் அமல்படுத்தப்பட்டிருந்த நிலையிலும், உலகளவில் துருப்பிடிக்காத எஃகு உற்பத்தியில் இந்தியா தொடா்ந்து இரண்டாவது இடத்தில் உள்ளது.

இதுகுறித்து ஐஎஸ்எஸ்டிஏ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு–ள்ளதாவது: இந்தியாவில் துருப்பிடிக்கா எஃகு உற்பத்தி 2020ஆம் ஆண்டில் 3.17 மெட்ரிக் டன்னாக இருந்தது. இது, முந்தைய ஆண்டைவிட 19 சதவீதம் சரிவாகும். 2019ஆம் ஆண்டில் துருப்பிடிக்கா எஃகு உற்பத்தி 3.93 மெட்ரிக் டன் என்று பதிவு செய்யப்பட்டது. எனினும், பொது முடக்கம் தளா்த்தப்பட்ட பின்னர் துருப்பிடிக்கா எஃகு உற்பத்தியும் அதற்கான தேவையும் 2020 ஜூலை மீட்சியைக் கண்டது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### 12. ரஜினிக்கு தாதா சாகேப் பால்கே விருது: மத்திய அரசு அறிவிப்பு

திரைத்துறையில் சாதனை படைத்ததற்காக நடிகர் ரஜினிகாந்த்துக்கு தாதா சாகேப் பால்கே விருது அறிவிக்கப்பட்டுள்ளது. தாதாசாகெப் பால்கே இந்திய திரைப்படத் துறையில் முதன்முதலில் 108 ஆண்டுகளுக்கு முன்பு ராஜா ஹரிச்சந்திரா என்ற திரைப்படத்தை தயாரித்தார். அவர் பெயரில் சிறந்த திரைப்பட சாதனையாளர்களுக்கு சாகேப் பால்கே விருது வழங்கப்படுகிறது. இந்திய திரைத்துறையில் சிறந்த பங்களிப்பை அளித்ததற்காக நடிகர் ரஜினிகாந்திற்கு 51 ஆவது தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்படுவதாக மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் தெரிவித்துள்ளார். மேலும் மோகன்லால், சங்கர் மகாதேவன், ஆஷா போஸ்லே, விஸ்வஜித் சாட்டர்ஜி, சுபாஷ் கைய் ஆகிய ஐந்து பேர் கொண்ட ஜூரி உறுப்பினர்கள் ரஜினிகாந்தை தேர்வு செய்திருப்பதாகவும், ரஜினிகாந்தின் 50 ஆண்டுகால கலை சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்படுவதாக பிரகாஷ் ஜவடேகர் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் தேர்தல் நடைபெறும் சமயத்தில் இந்த விருது அறிவிக்கப்பட்டிருப்பதாக செய்தியாளர்கள் கேட்டபோது, ரஜினிகாந்த் திரையுலகில் சிறந்த சேவையை செய்து உள்ளார். இது அவருடைய திரைப்பட சாதனைக்கு, சேவைக்கு கொடுக்கப்பட்ட விருது. தமிழக தேர்தலுக்கும் ரஜினியின் விருதுக்கும் தொடர்பில்லை. இதை ஒப்பிட்டுப் பேசுவது தவறு என்று ஜவடேகர் தெரிவித்தார். இந்த விருது முன்பு தமிழ் திரை உலகில் பிரபலமான இயக்குநரும், தயாரிப்பாளருமான எல்.வி.பிரசாத், நாகிரெட்டி, நடிகர் திலகம் சிவாஜி கணேசன், இயக்குநர் பாலச்சந்தர், அமிதாப் பச்சன், வினோத் கண்ணா, லதா மங்கேஷ்கர், கன்னட நடிகர் ராஜ்குமார், கேரள இயக்குநர் ஆடூர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் ஏற்கனவே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த விருதை பெறும் 51ஆவது நடிகர் ரஜினிகாந்த் ஆவார். தாதாசாகேப் பால்கே விருதை பெறவுள்ள 4–வது தமிழ்த் திரைப்படக் கலைஞர் என்கிற பெருமை ரஜினிகாந்த்துக்குக் கிடைத்துள்ளது. கடைசியாக 2018–ல் பிரபல நடிகர் அமிதாப் பச்சனுக்கு பால்கே விருது அளிக்கப்பட்டது. 1982–ல் எல்.வி. பிரசாத் பால்கே விருதைப் பெற்றார். 1996–ல் சிவாஜி கணேசனுக்கும் 2010–ல் கே.பாலசந்தருக்கும் இவ்விருது அளிக்கப்பட்டது.

இதையடுத்து பால்கே விருதைப் பெறவுள்ள 4–வது தமிழ்த் திரைப்படக் கலைஞர் என்கிற பெருமை ரஜினிகாந்த்துக்குக் கிடைத்துள்ளது.

---

### 13. சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி குறைப்பு வாபஸ்

மத்திய அரசின் சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதத்தை மத்திய அரசு 1.1 சதவீதம் வரை குறைத்து அறிவித்திருந்தது. இதற்கு அனைத்து தரப்பிலும் இருந்து கடும் எதிர்ப்பு எழுந்த நிலையில், அந்த அறிவிப்பை திரும்பப் பெறுவதாக நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார். வங்கிகளில் நிரந்தர வைப்புத் தொகைக்கான வட்டி குறைக்கப்பட்டதை அடுத்து 2021–22ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டுக்கான சிறுசேமிப்பு திட்டங்களுக்கான வட்டி விகிதத்தை குறைத்து மத்திய நிதித்துறை அமைச்சகம் அறிவித்தது. அதன்படி, பொது வருங்கால வைப்பு நிதிக்கான (PPF) வட்டி விகிதம் 0.7 சதவீதம் குறைக்கப்பட்டு 6.4 சதவீதமாகவும், தேசிய சேமிப்பு சான்றிதழுக்கான (NSC) வட்டி விகிதம் 0.9% குறைக்கப்பட்–டு 5.9 சதவீதமாகவும், மூத்த குடிமக்களுக்கான 5 ஆண்டு சேமிப்புத் திட்டத்துக்கான வட்டி விகிதம் 0.9 சதவீதம் குறைக்கப்பட்டு 6.5 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முதல்முறையாக சேமிப்பு வைப்புத் தொகைக்கான வட்டி விகிதமானது 4 சதவீதத்தில் 0.5 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. ஓராண்டுக்கான வைப்புத் தொகை வட்டி விகிதமானது 1.1 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி 5.5 சதவீதமாக இருந்த வட்டி விகிதம் 4.4 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ள–து. இரு ஆண்டுக்கான வைப்புத்தொகை வட்டி விகிதமானது 5 சதவீதத்தி–ல் 0.5 சதவீதமும், 3 ஆண்டுக்கான வைப்புத்தொகை வட்டி விகிதமானது 0.4 சதவீதமும், 5 ஆண்டுக்கான வைப்புத்தொகை வட்டி விகிதமானது 0.9 சதவீதமும் குறைக்கப்பட்டுள்ளது. பெண் குழந்தைகளுக்கான செல்வமகள் சேமிப்புத் திட்டத்துக்கான வட்டி விகிதமானது 0.7 சதவீதம் குறைக்கப்பட்டு 6.9 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வட்டி விகிதம் ஏப்.1 முதல் அமலுக்கு வருகிறது என அறிவிக்கப்பட்டது.

இனையடுத்து மத்திய அரசின் சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகித குறைப்பு நடவடிக்கைக்கு அனைத்து தரப்பிலும் இருந்து கடும் எதிர்ப்பு எழுந்தது. இந்நிலையில், மத்திய அரசின் சிறுசேமிப்பு திட்டங்களுக்–கான வட்டி விகிதம் 4 சதவீதத்தில் இருந்து 3.5 சதவீதமாக குறைக்கப்பட்–டது திரும்பப்பெறப்படுவதாகவும், ஏற்கனவே 2020–2021ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் இருந்த வட்டி விகிதம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

---

### 14. பாலின இடைவெளி குறியீட்டில் இந்தியாவுக்கு 140–ஆவது இடம்

உலக பொருளாதார மையம் (WEF) வெளியிட்ட பாலின இடைவெளி குறியீட்டில் இந்தியா 140–ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. கடந்த ஆண்டுக்கான குறியீட்டுடன் ஒப்பிடுகையில், இந்தியா 28 இடங்கள் சரிவைச் சந்தித்துள்ளது.

சர்வதேச அளவில் சமூகம், பொருளாதாரம் உள்ளிட்டவற்றில் ஆண்களுக்–கும் பெண்களுக்கும் இடையே காணப்படும் இடைவெளியை ஆய்வு செய்து, உலக பொருளாதார மையம் வெளியிட்டு வருகிறது. நடப்பு ஆண்டுக்கான சர்வதேச பாலின இடைவெளி குறியீட்டை அந்த மையம் அண்மையில் வெளியிட்டது. மொத்தம் 156 நாடுகளில் நடத்தப்பட்ட அந்த ஆய்வில் இந்தியா 140ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

கடந்த ஆண்டில் மொத்தமாக 153 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வு முடிவில், இந்தியா 112ஆவது இடத்தைப் பிடித்திருந்தது. அரசியல் சாா்ந்த விவகாரங்களில் பெண்களின் பங்கேற்பும், அவர்களுக்கான வாய்ப்பும் 13.5% அளவுக்குக் குறைந்துள்ளதே இந்தியாவின் குறியீடு சரிவடைந்ததற்–குக் காரணம் என்று உலக பொருளாதார மையம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கடந்த 2019ஆம் ஆண்டில் பெண் அமைச்சர்களின் சதவீதம் 23.1ஆக இருந்தது. இது 2021ஆம் ஆண்டில் 9.1 சதவீதமாகக் குறைந்துள்ள–து. நாட்டில் பொருளாதார விவகாரங்களில் பெண்களின் பங்கேற்பு 3% அளவுக்குக் குறைந்துள்ளது. பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் பெருமளவில் குறைந்துள்ளது. நிர்வாகம், தொழில்நுட்ப விவகாரங்களில் பெண்களின் பங்களிப்பு மிகவும் குறைவாகவே உள்ளது.

நாட்டிலுள்ள 8.9% நிறுவனங்களில் மட்டுமே தலைமை மேலாளர்கள் பொறுப்பில் பெண்கள் உள்ளனர். ஆண்களின் வருமானத்தில் 5'இல் ஒரு பங்கை மட்டுமே பெண்கள் பெறுகிறார்கள். சுகாதார விவகாரத்தில் பெண்கள் தொடர்ந்து பாகுபடுத்தப்படுகின்றனர். நாட்டில் பிறப்பு பாலின விகிதத்திலும் பெரும் இடைவெளி காணப்படுகிறது.

படிப்பறிவில்லா ஆண்களின் சதவீதம் 17.6ஆக உள்ளது. இதுவே படிப்பறிவில்லா பெண்களின் சதவீதம் 34.2ஆக உள்ளது.

**பாலின இடைவெளி குறியீட்டுப் பட்டியலில் உள்ள முதல் 5 நாடுகள் (பாலின இடைவெளி குறைவு)**

1–ஐஸ்லாந்து

2–பின்லாந்து

3–நார்வே

4–நியூஸிலாந்து

5–ஸ்வீடன்

**பட்டியலில் கடைசி இடங்களில் உள்ள நாடுகள் (பாலின இடைவெளி அதிகம்)**

156–ஆப்கானிஸ்தான்

155–ஏமன்

154–ஈராக்

153–பாகிஸ்தான்

152–சிரியா

**இந்தியாவின் அண்டை நாடுகளின் நிலை**

65–வங்கதேசம்

106–நேபாளம்

107–சீனா

109–மியான்மர்

116–இலங்கை

130–பூடான்

**1."உலக பொருளாதார கண்ணோட்ட" அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ) உலக வங்கி

ஆ) ஆசிய வளர்ச்சி வங்கி

**இ) பன்னாட்டுச் செலவாணி நிதியம் ☑**

ஈ) ஐநா வளர்ச்சித் திட்டம்

✓ "உலக பொருளாதார கண்ணோட்டம்" என்பது பன்னாட்டுச் செலவாணி நிதியத்தால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் ஒரு முதன்மை அறிக்கை –யாகும். இந்த ஆண்டுக்கான (2021) அறிக்கை ஏப்.6ஆம் தேதி அன்று வெளியிடப்படவுள்ளது. இந்தியாவின் பொருளாதாரம் படிப்படியாக மீளும் பாதையிலிருப்பதாக பன்னாட்டுச்செலவாணி நிதியம் அறிவித்துள்ளது.

---

**2. பின்வரும் இந்தியாவின் எந்த முதன்மை அறிவியல் ஆலோசகரி –ன் பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது?**



அ) B P கனுங்கோ

**ஆ) K விஜய் ராகவன் ☑**

இ) N S விஸ்வநாதன்

ஈ) R காந்தி

✓ K விஜயராகவனுக்கு இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகரா –க ஓராண்டு பதவிநீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. பணியாளர் அமைச்சகம் பிறப்பித்த உத்தரவின்படி, அமைச்சரவையின் நியமனக்குழு இப்பதவி நீட்டிப்புக்கு ஒப்புதல் அளித்தது. அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமை தொடர்பான விஷயங்களில் பிரதமர் மற்றும் அமைச்சரவைக்கு அவர் பாரபட்சமற்ற ஆலோசனைகளை வழங்குகிறார்.

---

**3. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'எவர் கிவன்' என்றால் என்ன?**




அ) COVID தடுப்பூசி

**ஆ) சரக்குக்கப்பல் ☑**

இ) சீர்வேக ஏவுகணை

ஈ) ஐ.நா. தீர்மானம்

✓ எகிப்தின் சூயஸ் அருகேயுள்ள சூயஸ் கால்வாயில் சமீபத்தில், MV எவர் கிவன் என்ற ஒரு சரக்குக்கப்பல் சிக்கிய. இது கால்வாயின் குறுக்கே சிக்கிக்கொண்டதால், நீர்வழிப்பாதையை கடந்து செல்ல வேண்டிய 150' க்கும் மேற்பட்ட கப்பல்கள் தடைபட்டன.

✓ 'எவர் கிவன்' என்ற இக்கப்பல், ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடை –யில் சரக்குகளை ஏற்றிச்சென்றது. சூயஸ் கால்வாய் என்பது ஒரு குறுகிய, மனிதனால் உருவாக்கப்பட்ட கால்வாயாகும். இது ஆப்பிரிக்க கண்டத்தை சினாய் தீபகற்பத்திலிருந்து பிரிக்கிறது.

---

**4. மாநிலத்தின் மிகவுயர்ந்த கௌரவமான மகாராஷ்டிர பூஷண் விருதை வென்ற இந்திய புகழ்பெற்ற பாடகர் யார்?**



அ) S P பாலசுப்பிரமணியம்

**ஆ) ஆஷா போஸ்லே ☑**

இ) லதா மங்கேஷ்கர்

ஈ) முகேஷ் சந்த்

✓ புகழ்பெற்ற பாடகி ஆஷா போஸ்லே 2020ஆம் ஆண்டிற்கான மகாராஷ் டிர பூஷண் விருதுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளதாக மகாராஷ்டிரா அரசு அறிவித்துள்ளது. இது, அம்மாநில அரசின் மிகவுயர்ந்த கௌரவமாகும். முதலமைச்சர் உத்தவ் தாக்கரே தலைமையிலான குழு இந்த முடிவை எடுத்தது. அம்மாநிலத்தைச் சார்ந்த புகழ்பெற்ற நபர்களின் சிறப்பான சாதனைகளை அங்கீகரிப்பதற்காக இவ்விருது, கடந்த 1996ஆம் ஆண்டில் மகாராஷ்டிர மாநில அரசால் நிறுவப்பட்டது.

---

**5. 2020ஆம் ஆண்டிற்கான EY தொழில்முனைவோராக தேர்ந்தெ –டுக்கப்பட்டவர் யார்?**



**அ) ஹரிஷ் மரிவாலா ☑** ஆ) பிரதாப் சந்திர ரெட்டி

இ) பைஜு இரவீந்திரன் ஈ) பேயூஷ் பன்சால்

✓ நுகர்வோர் பொருட்கள் நிறுவனமான மேரிகோவின் தலைவர் ஹரிஷ் மரிவாலா, 2020ஆம் ஆண்டிற்கான EY தொழில்முனைவோராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். அப்பலோ ஹாஸ்பிடல்ஸ் எண்டர்பிரைஸ் லிமிடெட் நிறுவனரும் நிர்வாகத்தலைவருமான பிரதாப் சந்திர ரெட்டிக்கு வாழ்நா –ள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது. வணிக மாற்றத்திற்காக பைஜு இரவீந்திரனுக்கும், துளிர் நிறுவன பிரிவில் லென்ஸ்கார்ட்டின் பியூஷ் பன்சாலுக்கும் விருது வழங்கப்பட்டது.

---

**6. 'DIKSHA' வலைத்தளத்துடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

**அ) கல்வி அமைச்சகம் ☑**

ஆ) தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம்

இ) திறன் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ) வேளாண் அமைச்சகம்

✓ CBSE பள்ளிகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உருவாக்கிய 100+ காமிக் நூல்களை மத்திய கல்வி அமைச்சர் இரமேஷ் பொக்ரியால் 'நிஷாங்க்' வெளியிட்டார். NCERT பாடப்புத்தகங்களின் தலைப்புகளுடன் ஒத்திருக்கும் இந்த காமிக்ஸ் நூலை, 'DIKSHA' வலைத்தளத்திலோ அல்லது DIKSHA செயலி வழியாகவோ அணுகலாம்.

✓ வாட்ஸ்அப் சாட்போட் மூலமாகவும் அவற்றை அணுகலாம். 'DIKSHA' ஒரு இணையவழி கற்றல் வலைத்தளமாகும்.

---

**7. பின்வரும் எந்த அறிவியலாளரின் கண்டுபிடிப்பை நினைவுகூரு –ம் வகையில், இந்தியாவில், ஆண்டுதோறும் தேசிய அறிவியல் நாள் அனுசரிக்கப்படுகிறது?**



**அ) சர் சி வி இராமன் ☑**

ஆ) சர் ஐசக் நியூட்டன்

இ) அலெக்ஸாண்டர் கிரகாம் பெல்

ஈ) லூயி பாஸ்டர்

✓ 'இராமன் விளைவு' கண்டுபிடிக்கப்பட்டதை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் பிப்ரவரி.28ஆம் தேதி இந்தியாவில் தேசிய அறிவியல் நாள் அனுசரிக்கப்படுகிறது. அதே நாளில், CV ராமன் 'இராமன் விளைவு' கண்டுபிடிப்பை அறிவித்தார். அவருக்கு, கடந்த 1930'இல் நோபல் பரிசு வழங்கப்பட்டது. "Future of Science and Technology and Innovation: Impact on Education Skills and Work" என்பது நடப்பாண்டு வரும் (2021) தேசிய அறிவியல் நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**8.புவியிணக்க இடைச்சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட வேண் –டிய இந்தியாவின் முதல் புவி கண்காணிப்பு செயற்கைக்கோளின் பெயர் என்ன?**



அ) RISAT 11

**ஆ) GISAT 1 ☑**

இ) GSAT 7

ஈ) INSAT 11

✓ GISAT–1 என்பது இந்தியாவின் முதல் புவி கண்காணிப்பு செயற்கைக் கோளாகும். இது புவியிணக்க இடைச்சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்ப –டவுள்ளது. GSLV–F10 ஏவுகலத்தைப்பயன்படுத்தி GISAT–1 ஏவப்பட உள்ளதாக இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) தெரிவித்துள்ளது. 2,268 கிலோ எடைகொண்ட இந்தச் செயற்கைக்கோள், இந்த ஆண்டு ஏப்.18 அன்று ஏவப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**9. சூயஸ் கால்வாயில் ஏற்பட்ட தடையைக் கையாள நான்கு அம்ச உத்தியை மேற்கொண்ட மத்திய அமைச்சகம் எது?**

அ) பெட்ரோலிய அமைச்சகம்

**ஆ) வணிகம் & தொழிற்துறை அமைச்சகம் ☑**

இ) கனரக தொழிற்சாலைகள் அமைச்சகம்

ஈ) வெளிவிவகார அமைச்சகம்

✓ சூயஸ் கால்வாயில் ஏற்பட்ட தடையைக் கையாளுவதற்காக மத்திய வணிக அமைச்சகம் 4 அம்ச உத்தியை வகுத்தது. இது துறைமுகங்கள்,

கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகம் மற்றும் பிற பங்குதார–ர்களுடனான ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தது. அரசாங்க மதிப்பீட்டின் படி, ஒரு வாரகாலத்திற்குள் அந்தத் தடை ஒழிக்கப்படும்.

**10. சமீபத்தில், 'ஷாஹீன் 1A' என்ற அணுவாற்றல் திறன்கொண்ட ஏவுகணையை ஏவிய நாடு எது?**

**அ) பாகிஸ்தான் ☑**

ஆ) ஆப்கானிஸ்தான்

இ) ஐக்கிய அரபு அமீரகம்

ஈ) இஸ்ரேல்



✓ பாகிஸ்தான், ஷாஹீன்–1A என்ற அணுசக்தி திறன்கொண்ட ஏவுகணை–யை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது. அதிநவீன மேம்பட்ட வழிகாட்டுதல் அமைப்புடன் 900 கிமீட்டர் தூரம் வரை செல்லும் திறன் கொண்டதாகும் இந்த ஏவுகணை. கடந்த பிப்ரவரியில், 290 கிமீ தூரம் வரை செல்லும் திறன்கொண்ட முதல் எறிகணையை பாகிஸ்தான் வெ–ற்றிகரமாக சோதனை செய்தது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பொதுத் துறை நிறுவனங்கள் தேர்வு வாரியத்தின் தலைவராக மல்லிகா ஸ்ரீநிவாசன் நியமனம்**

டாஃபே நிறுவனத்தின் தலைவரும், நிர்வாக இயக்குநருமான மல்லிகா ஸ்ரீநிவாசன் பொதுத்துறை நிறுவனங்கள் தேர்வு வாரியத்தி–ன் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். தனியார் துறையைச் சார்ந்த தொழிலதிபர் ஒருவர் பிஇஎஸ்பி வாரியத்தின் தலைவராக நியமனம் செய்யப்படுவது இதுவே முதல் முறை. இதுகுறித்து மத்திய பணியாளர் நல அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள–தாவது: தனியார் துறையைச்சார்ந்த தொழிலதிபரான மல்லிகா ஸ்ரீநி–வாசன் பிஇஎஸ்பி வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரது நியமனத்துக்கு அமைச்சரவையின் நியமனக்குழு ஒப்புதலை வழங்கியுள்ளது. இவர் அப்பதவியில் மூன்றாண்டு காலத்துக்கு இருப்பார் என அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**2. மார்ச் மாத GST வசூல் ₹1.23 லட்சம் கோடியாக உயர்வு**

கடந்த மார்ச் மாதம் ₹1.23 லட்சம் கோடி சரக்கு மற்றும் சேவை வரி (GST) வசூலாகியுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. தொடர்ந்து ஆறாவது மாதமாக GST வசூல் ₹1 லட்சம் கோடியை கடந்துள்ளது. மேலும், GST வரிவிதிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது முதல், 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் வசூலாகியிருப்பதே அதிகபட்ச தொகையாகும். இதுதொடர்பாக மத்திய நிதியமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த மார்ச் மாதம் வசூலான மொத்த GST ₹1,23,902 கோடி. இது கடந்த ஆண்டு இதே மார்ச் மாதத்தை ஒப்பிடுகையில் 27% அதிகமாகும்.

தொடர்ந்து ஐந்து மாதங்களாக GST வருவாய் உயர்ந்து வரும் நிலை மார்ச் மாதமும் நீடித்துள்ளது. கடந்த மார்ச் மாதம் வசூலான மொத்த GST ₹1,23,902 கோடி. இதில் மத்திய GST ₹22,973 கோடி; மாநில GST ₹29,329 கோடி; ஒருங்கிணைந்த GST ₹62,842 கோடி. ₹8,757 கோடி செஸ் வரி வசூலாகியுள்ளது. கடந்த பிப்ரவரி மாதம் வசூலான GST, கடந்தாண்டு பிப்ரவரியில் வசூலான GSTஉடன் ஒப்பிடுகையில் 7% அதிகம். ஆனால், கடந்த மார்ச், 27 சதவீதம் அதிகமான GST வசூலாகியுள்ளது.

**3. புவி ஆய்வுக்கான GISAT செயற்கைக்கோள்: ஏப்.18–ல் விண்ணில் செலுத்த ISRO முடிவு**

தொழில்நுட்பக் கோளாறால் தள்ளிவைக்கப்பட்ட GISAT செயற்கைக் கோள், GSLV F10 ராக்கெட்மூலம் ஏப்.18ஆம் தேதி விண்ணில் ஏவப்பட உள்ளது. புவி கண்காணிப்பு மற்றும் பேரிடர் மீட்பு பணிகளுக்காக GISAT–1 என்ற அதிநவீன 'ஜியோ இமேஜிங்' செயற்கைக்கோளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) தயாரித்தது.

**GSLV F10 ராக்கெட்**

இந்தச் செயற்கைக்கோளை GSLV F10 ராக்கெட் மூலம் ஹரிகோட்டா–வில் உள்ள ஏவுதளத்தில் இருந்து கடந்த ஆண்டு மார்ச் 5ஆம் தேதி விண்ணில் செலுத்த ISRO திட்டமிட்டது. இந்நிலையில் திடீர் தொழில்நுட்பக் கோளாறால் GSLV ராக்கெட் ஏவுதல் தேதிகுறிப்பிடாமல் தள்ளிவைக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து, மார்ச் 28ஆம் தேதி விண்–ணில் ஏவ ISRO திட்டமிட்டது. ஆனால், சில தொழில்நுட்ப பணிகள் இன்னும் முடிவடையாததால் ஏப்ரல்.18ஆம் தேதி விண்ணில்செலுத்த ISRO முடிவு செய்துள்ளது.

GISAT 2,268 கிலோ கிராம் எடைகொண்டது. இதன் ஆயுட்காலம் ஏழு ஆண்டுகள். இதிலுள்ள ஐந்து விதமான 3D கேமராக்கள் மற்றும் தொலைநோக்கி மூலம் புவிப்பரப்பை துல்லியமாக படம் எடுக்கவும், பார்க்கவும் முடியும். மேலும், வானிலை நிலவரங்களை தொடர்ந்து கண்காணித்து புயல் உள்ளிட்ட பேரிடர் காலங்களில் முன்னெச்சரிக்–கை நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளவும் உதவும்.

**4. மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர் அடையாள சின்னமாக தேர்வு:**

தமிழகம் முழுவதும் வரும் 6–ம் தேதி சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளது. இத்தேர்தலில் அனைத்து மாற்றுத் திறனாளிகளும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன. இந்த சூழலில், சர்வதேச மாற்றுத் திறனாளிகளுக்கான வீல் சேரில் அமர்ந்து வாள் சண்டை போடும் விளையாட்டு வீரர் நூர்தீனை சென்னை மாவட்டத்தை சேர்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள சின்னமாக தேர்தல் ஆணையம் தேர்வு செய்துள்ளது. இவர், மாற்றுத் திறனாளிகள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்று தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியில் ஈடுபட உள்ளார்.

**5. ராணுவத்தின் மேற்கு பிரிவு தளபதியாக மஞ்சிந்தர் சிங் பொறுப்பேற்பு**

ராணுவத்தின் மேற்கு பிரிவு தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் மஞ்சிந்தர் சிங், ஹரியாணா மாநிலம் சந்திமந்திரில் உள்ள தலைமையகத்தில் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார். பின்னர் போரில் வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவிடமான வீர் சம்ரிதியில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். மஞ்சிந்தர் சிங், பஞ்சாப் மாநிலம் கபுர்தலாவில் உள்ள சைனிக் பள்ளி மற்றும் உத்தராகண்டின் டேராடூனில் உள்ள இந்திய ராணுவ பயிற்சி மையத்தில் (ஐஎம்ஏ) பயின்றவர் ஆவார். இவர் கடந்த 1986–ம் ஆண்டு டிசம்பர் 20–ம் தேதி, 19 மெட்ராஸ் ரெஜிமென்ட்டில் முதன் முதலாக பணியில் சேர்ந்தார். கடந்த 34 ஆண்டுகளில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.

நாட்டுக்காக ஆற்றிய சிறப்பான பணிக்காக, இவருக்கு யூத் சேவா மெடல் (2015) மற்றும் வஷிஸ்ட் சேவா மெடல் (2019) ஆகிய விருதுகள் வழங்கப்பட்டு உள்ளன.

**1. மின்னணு வணிக நிறுவனங்களுக்கு சமமான வரி விதிப்பதற்–காக, இந்தியாவுக்கு எதிராக பதிலடி கொடுக்கும் வர்த்தக நடவடிக்–கையை முன்மொழிந்துள்ள நாடு எது?**

அ) ரஷியா

**ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ) சீனா

ஈ) இங்கிலாந்து

✓ அமெரிக்காவின் வர்த்தக பிரதிநிதியானது (USTR) மின்னணு வணிக நிறுவனங்களுக்கு சமமான வரி விதிக்கும் இந்தியா மற்றும் வேறு சில நாடுகளுக்கு எதிராக பதிலடி கொடுக்கும் வர்த்தக நடவடிக்கைகளை முன்மொழிந்துள்ளது.

✓ 2020 ஜூனில், டிஜிட்டல் சேவைகள் மீதான வரி விதிப்பு (அ) இந்தியா, இத்தாலி, துருக்கி, இங்கிலாந்து, ஸ்பெயின் & ஆஸ்திரியாவின் சமமான வரிமுறைக்கு எதிராக, அமெரிக்க வர்த்தகச் சட்டம் 1974'இன் பிரிவு 301'இன்கீழ், அமெரிக்கா ஒரு விசாரணையைத் தொடங்கியது.

---

**2. உலகின் மிகப்பெரிய நிகழ்த்துக்கலை அமைப்பான பன்னாட்டு நாடக நிறுவனத்தின் தலைமையிடம் அமைந்துள்ள இடம் எது?**

அ) ரோம்

**ஆ) பாரிஸ் ☑**

இ) ஜெனீவா

ஈ) மாஸ்கோ

✓ சர்வதேச நாடக நிறுவனமானது உலகின் மிகப்பெரிய நிகழ்த்துக்கலை அமைப்பு ஆகும். இது நாடக & நடன வல்லுநர்கள் மற்றும் UNESCO ஆகியவற்றால் கடந்த 1948ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. உலக நாடக நாள் ஆண்டுதோறும் மார்ச்.27 அன்று சர்வதேச நாடக நிறுவனத்தாலும் உலகெங்கிலும் உள்ள நாடக சமூகத்தின் மையங்களாலும் கொண்டாட–ப்படுகிறது. அதே தேதியில் 1962'இல், "தியேட்டர் ஆப் நேஷன்ஸ்" சீசன் பாரிஸில் தொடங்கப்பட்டது.

---

**3. IUCN'இன் ஓர் அண்மைய அறிக்கையின்படி, சிறிய, இலகுவான ஆப்பிரிக்க காட்டு யானையின் நிலை என்ன?**



அ) அச்சுறு நிலையை அண்மித்த இனம்

ஆ) அழிவாய்ப்பு நிலையிலுள்ள இனம்

இ) அருகிவிட்ட இனம்

**ஈ) மிகவும் அருகிவிட்ட இனம் ☑**

✓ இயற்கை பாதுகாப்புக்கான பன்னாட்டு ஒன்றியம் (IUCN) தனது புதிய மதிப்பீட்டை அண்மையில் வெளியிட்டது. தந்தத்துக்காக வேட்டையாட–ப்படுவதும், மனிதர்களின் ஆக்கிரமிப்பினாலும் ஆப்பிரிக்காவில் உள்ள இரு வகை யானைகள் எதிர்கொள்ளும் அழுத்தங்களை இந்த மதிப்பீடு எடுத்துக்காட்டுகிறது. சவானா யானைகள் "அருகிவிட்ட இனம்" என்றும், மிகச்சிறிய, இலகுவான காட்டு யானைகள் "மிகவும் அருகிவிட்ட இனம்" என்றும் IUCN அறிவித்துள்ளது.

---

**4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "HEAL-COVID" என்ற நாடு தழுவிய சோதனை செயல்படுத்தப்படவுள்ள நாடு எது?**



அ) USA

**ஆ) UK ☑**

இ) ரஷியா

ஈ) தைவான்

✓ ஐக்கியப் பேரரசானது HEAL-COVID (COVID-19 தொற்றின் நீண்டகால விளைவுகளைத் தணிக்க உதவுகிறது) என்ற ஒரு நாடு தழுவிய மருந்து சோதனையைத் தொடங்கவுள்ளது. பயனுள்ள சிகிச்சை முறைகளைக் கண்டறிவதற்காக, நாடு முழுவதும் உள்ள நோயாளிகளுக்கு சந்தையில் ஏற்கனவே கிடைக்கக்கூடிய பாதுகாப்பான, இருக்கும் அனைத்து மருந்துகளையும் தேர்வு செய்து செலுத்தி சோதிக்கப்படும்.

✓ நோயாளிகளிடையே இறப்பைக் குறைப்பதற்கான மருந்துகளைக் கண்–டுபிடிப்பதை இந்தச் சோதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, கமலேஷ் சந்திர சக்ரவர்த்தி என்பவர் யார்?**



அ) SBI'இன் முன்னாள் CMD

**ஆ) ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் ☑**

இ) முன்னாள் தலைமை விஜிலென்ஸ் ஆணையர்

ஈ) உச்சநீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் கமலேஷ் சந்திர சக்ரவர்த்தி சமீபத்தில் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 68. பஞ்சாப் தேசிய வங்கி (2007-2009) மற்றும் இந்தியன் வங்கி (2005-2007) ஆகியவற்றின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

---

**6. ஓய்வுபெற்ற போர்குணமுள்ள நாய்களை 'சிகிச்சை நாய்களாக' நியமிக்க முடிவு செய்துள்ள ஆயுதப்படை எது?**



அ) இந்திய இராணுவம்

ஆ) இந்திய கடற்படை

**இ) இந்தோ-திபெத்திய எல்லைக்காவல் படை ☑**

ஈ) இந்திய கடலோர காவல்படை

✓ இந்தோ-திபெத்திய எல்லைக்காவல்படையானது ஓய்வுபெற்ற போர்க–ுணமுள்ள நாயினங்களை 'சிகிச்சை நாய்களாக' பயன்படுத்த முடிவு செய்துள்ளது. மருத்துவ சிகிச்சையில் உட்பட்டிருக்கும் பணியாளர்களை விரைவாக மீட்க அவை உதவும். மேலும் அவை, சிப்பாய்களின் மாற்றுத் திறன்கொண்ட சிறார்களின் சிகிச்சையிலும் பயன்படுத்தப்படவுள்ளன. இந்தியாவிலேயே முதன்முறையாக, ஓய்வுபெற்ற நாயினங்கள் படையி–னருக்கு சேவை செய்ய பயன்படுத்தப்படவுள்ளன.

---

**7. இந்தோ-தென் கொரிய நட்பு பூங்கா கட்டப்பட்டுள்ள இடம் எது?**



அ) சியோல்

ஆ) சென்னை

இ) பெய்ஜிங்

**ஈ) புது தில்லி ☑**

✓ இந்தோ-தென் கொரிய நட்பு பூங்கா புது தில்லி – கண்டோன்மென்ட்டில் கட்டப்பட்டுள்ளது. 1950-53 கொரியப் போரின்போது இந்திய அமைதி காக்கும் படையின் பங்களிப்பை நினைவுகூரும் வகையில் இப்பூங்கா கட்டப்பட்டுள்ளது. இந்தப் பூங்காவை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் தென் கொரியாவின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் சு வூக் ஆகியோர் இணைந்து திறந்துவைத்தனர்.

---

**8. எந்த நாட்டின் இளைஞர்களுக்காக 'ஸ்வர்ண ஜெயந்தி' உதவித் தொகை திட்டத்தை இந்தியப் பிரதமர் தொடங்கி வைத்துள்ளார்?**



அ) இலங்கை

**ஆ) வங்காளதேசம் ☑**

இ) நேபாளம்

ஈ) மியான்மர்

✓ இந்தியப்பிரதமர் மோடி, வங்காளதேச தேசிய நாள் கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக, வங்காளதேசத்துக்கு இரு நாள் அலுவல்பூர்வ பயணம் மேற்கொண்டுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையில் அரை நூற்றாண்டு கால உறவுகளை குறிக்கும் வகையில், வங்காளதேச இளைஞர்களுக்கு 'சுவர்ண ஜெயந்தி' உதவித்தொகை திட்டத்தை மோடி அறிவித்துள்ளார்.

✓ இந்தியாவிற்கு வருகைதரவும், இந்தியாவின் துளிர் மற்றும் புத்தாக்க சூழலமைப்பில் சேரவும் வங்கதேசத்தின் 50 தொழில்முனைவோருக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

---

**9. உலக மேம்பாட்டு அறிக்கையின்படி, கட்டற்ற தரவுக்கொள்கை–யைக்கொண்டுள்ள குறைந்த வருவாய்கொண்ட நாடுகளின் சதவீ–தம் என்ன?**

அ) 5% **ஆ) 11% ☑**

இ) 22% ஈ) 33%

11%

- ✓ உலக வங்கியின் அண்மைய உலக மேம்பாட்டு அறிக்கையின்படி, பெரும்பாலான நாடுகள் குறிப்பாக வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் கட்டற்ற தரவுக்கொள்கையை செயல்படுத்தவில்லை. குறைந்த வருவாய் கொண்ட நாடுகளுள் 11% நாடுகள் மட்டுமே திறந்தநிலை உரிமத்துடன் தங்கள் தரவை தொடர்ந்து கிடைக்கச் செய்து வருகின்றன.
- ✓ குறைந்த நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளுள் இந்தச் சதவீதம் 19 சதவீதமாக உள்ளது; உயர்–நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளுள் இந்தச்சதவீதம் 22 சதவீதமாகவும், உயர் வருவாய் கொண்ட நாடுகளுள் இந்தச்சதவீதம் 44 சதவீதமாகவும் உள்ளது.

---

**10. உலகின் முதல் கப்பல் சுரங்கப்பாதை கட்டப்படுகிற நாடு எது?**

அ) போலந்து

**ஆ) நார்வே ☑**

இ) பிரான்ஸ்

ஈ) ஜிம்பாப்வே



- ✓ ஸ்டாதாவெட் கடலில் கப்பல்கள் செல்ல உதவும் உலகின் முதல் கப்பல் சுரங்கப்பாதை எனக்கூறப்படுவதை நிர்மாணிப்பதற்கு, நார்வே சமீபத்தி–ல் ஒப்புதல் பெற்றுள்ளது. இது ஒரு மைல் நீளமுள்ள 118 அடி அகலமுள்ள சுரங்கப்பாதையாக கட்டப்படவுள்ளது, இது, வடமேற்கு நார்வேயிலுள்ள ஸ்டாதாவெட் தீபகற்பத்தின் வழியாக செல்லும்.
- ✓ இந்தத் திட்டத்திற்கு சுமார் 2.8 பில்லியன் நார்வே குரோனர்கள் (330 மில்லியன் அமெரிக்க டாலர்) செலவாகும். மூன்று முதல் நான்கு ஆண்டு காலத்திற்குள் இது கட்டி முடிக்கப்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அயோத்தி முதல் சித்திரகூடம் வரை ஸ்ரீராமர் வனவாசம் சென்ற பாதையில் புதிய சாலை!**

உத்தர பிரதேச மாநிலத்தில் அயோத்தி முதல் சித்திரகூடம் வரை, ஸ்ரீராமர் வனவாசம் சென்ற பாதையில் 210 கிமீ தொலைவுக்கு புதிய சாலை அமைக்க மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

இராமாயண இதிகாசத்தின்படி, அயோத்தியில் ராஜ்ய பட்டாபிஷேகத்தைத் துறந்த ஸ்ரீராமர் தனது மனைவி சீதை, சகோதரர் லட்சுமணனுடன் 14 ஆண்டு வனவாசம் மேற்கொள்வதற்காக நாட்டைவிட்டு வெளியேறிச் சென்ற பாதையாக, அயோத்தியிலிருந்து சித்திரகூடம் வரை அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த இதிகாச நிகழ்ச்சியை மீட்டெடுக்கும் வகையில் "இராமர் வனவாசப்பாதை" என்ற பெயரில் புதிய நெடுஞ்சாலைத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தச்சாலை, உத்தர பிரதேசத்தின் அயோத்தியில் தொடங்கி, பைசாபாத், சுல்தான்பூர், பிரதாப்கர், ஜேத்வாரா, சிருங்கவேர்பூர் உள்ளிட்ட இடங்கள் வழியாக மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள சித்திரகூடம் வரை அமைக்கப்படுகிறது. இந்தத் தகவல் மத்திய சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலைத் துறை அமைச்சக ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சாலை, தேசிய நெடுஞ்சாலைச் சாலை எண்கள் 28, 96, 731A ஆகியவற்றின் ஊடாகச் செல்கிறது. தவிர, சிருங்கவேர்பூரில் கங்கை நதியின் மேல் பாலத்துடன் பசுமைச் சாலை அமைக்கும் திட்டமும் இதில் அடங்கியுள்ளது.

---

**2. மியாமி ஓபன்: ஆஷ்லி பர்ட்டி சாம்பியன்**

அமெரிக்காவில் நடைபெற்ற மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஆஸ்திரேலியாவின் ஆஷ்லிபர்ட்டி மீண்டும் சாம்பியன் ஆனார். இதன்மூலம் உலகின் முதல்நிலை வீராங்கனை அந்தஸ்தையும் அவர் தக்கவைத்துக்கொண்டுள்ளார்.

போட்டித்தரவரிசையில் முதலிடத்திலிருந்த பர்ட்டி இறுதிச்சுற்றில், போட்டித் தரவரிசையில் எட்டாவது இடத்திலிருந்த கனடாவின் பியான்கா ஆன்ட்ரி–ஸ்குவை எதிர்கொண்டார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பர்ட்டி 6–3, 4–0 என்ற செட்களில் முன்னிலையில் இருந்தபோது பியான்–காவின் வலதுகாலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் போட்டியிலிருந்து விலகினார். இதனால் பர்ட்டி வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார்.

கடந்த 2019ஆம் ஆண்டு மியாமி ஓபனிலும் பர்ட்டி சாம்பியன் ஆகியிருந்த நிலையில், தற்போது அந்தப்பட்டத்தை அவர் தக்கவைத்துக்கொண்டார். கரோனா தொற்று சூழல் காரணமாக கடந்த ஆண்டு போட்டி இரத்து செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**ஆறாவது வீராங்கனை**

மியாமி ஓபன் பட்டத்தை தொடர்ந்து வென்றவர்கள் வரிசையில் பர்ட்டி 6ஆவது வீராங்கனையாக இணைந்துள்ளார். இதற்கு முன் ஸ்டெஃபானி கிராஃப் (ஜெர்மனி), மொனிகா செலஸ் (அமெரிக்கா), அரான்ட்ஸா சென்ஷெ–ஸ் விகாரியோ (ஸ்பெயின்), செரீனா மற்றும் வீனஸ் வில்லியம்ஸ் (அமெரி–க்கா) ஆகியோர் இவ்வாறு மியாமி ஓபன் பட்டத்தை அடுத்தடுத்து இரு முறை வென்றுள்ளனர்.

---

**3. மியாமி ஓபன்: பட்டம் வென்றார் ஹியூபர்ட் ஹர்காக்ஸ்**

மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் போலாந்தின் ஹியூபர்ட் ஹர்காக்ஸ் கோப்பை வென்றார். அவர் தனது டென்னிஸ் வாழ்க்கையில் இதுவரை வென்ற பட்டங்களிலேயே இதுதான் மிகப்பெரியதாகும். அதாவது இது அவரது முதல் ATP மாஸ்டர்ஸ் பட்டமாகும். போட்டித்தரவரிசையில் 26ஆம் இடத்திலிருந்த ஹியூபர்ட் இறுதிச்சுற்றில், போட்டித் தரவரிசையில் 21ஆம் இடத்திலிருந்த இத்தாலியின் ஜானிக் சின்னரை எதிர்கொண்டார்.

இருவருக்கும் இடையே விறுவிறுப்பாக 1 மணி நேரம் 43 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தின் முடிவில் ஹியூபர்ட் 7–6 (7/4), 6–4 என்ற செட்களில் வெற்றிபெற்றார். 'மாஸ்டர்ஸ் 1000' போட்டியில் சாம்பியன் பட்டம் வெல்லும் முதல் போலாந்து வீரர் என்ற பெருமையை ஹியூபர்ட் பெற்றுள்ளார். உலகின் 37ஆம் நிலை வீரராக இருக்கும் ஹியூபர்ட், அடுத்த வாரத்தில் வெளியாகும் தரவரிசை பட்டியலில் முதல் முறையாக 16ஆவது இடத்தைப் பிடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஷூகோ அயாமா – எனா ஷிபாஹரா**

மியாமி ஓபன் மகளிர் இரட்டையர் பிரிவில் ஜப்பானின் ஷூகோ அயாமா / எனா ஷிபாஹரா இணை சாம்பியனானது. போட்டித்தரவரிசையில் 5ஆம் இடத்தில் இருந்த அயாமா / ஷிபாஹரா ஜோடி இறுதிச்சுற்றில் 6–2, 7–5 என்ற செட்களில் போட்டித்தரவரிசையில் 8ஆம் இடத்திலிருந்த அமெரிக்கா–வின் ஹேலி கார்டர் / பிரேஸிலின் லுய்சா ஸ்டெஃபானி இணையை வீழ்த்தியது.

---

**4. மகளிர் கிரிக்கெட்: கோப்பை வென்றது ரயில்வேஸ் அணி**

மகளிர் ஒருநாள் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்திய ரயில்வே அணி ஏழு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஜார்க்கண்ட் அணியை வீழ்த்தி கோப்பையை வென்றது. 14ஆவது ஆண்டாக நடைபெற்ற இந்தப் போட்டியில், ரயில்வேஸ் அணி கோப்பை வென்றது இது 12ஆவது முறையாகும்.

குஜராத் மாநிலம், இராஜ்கோட்டில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த ஜார்க்கண்ட் 50 ஓவர்களில் அனைத்து விக்கெட் இழப்புக்கு 167 ரன்கள் அடித்தது. அடுத்து ஆடிய ரயில்வேஸ் 37 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 169 இரன்கள் எடுத்து வென்றது.

---

**5. ஒலிம்பிக் துப்பாக்கி சுடுதல்: இந்திய அணியில் இளவேனில், மானு**

டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் துப்பாக்கி சுடுதல் விளையாட்டில் 10 பிரிவுகளில் பங்கேற்பதற்கான 15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்–பட்டது. இதில், 10 மீ ஏர் ரைபிளில் உலகின் முதல்நிலை வீராங்கனையா–க உள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த இளவேனில் வாலறிவன் மற்றும் மானு பாக்கர்போன்ற முக்கிய வீராங்கனைகள் இடம்பிடித்துள்ளனர். சமீபத்தில் நடைபெற்ற உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் தங்கம் வென்ற சிங்கி யாதவ், ரிசர்வ் வீராங்கனையாக தேர்வாகியுள்ளார்.

தேசிய தேர்வுக் குழுவானது, COVID–19 சூழலை கருத்தில் கொண்டு ஒவ்வொரு பிரிவுக்கும் இரு ரிசர்வ் போட்டியாளர்களை அறிவித்துள்ளது.

**10 மீட்டர் ஏர் ரைபிள்:**

**ஆடவர்:** திவ்யான்ஷ் சிங் பன்வார், தீபக் குமார் (ரிசர்வ்: சந்தீப் சிங், ஐஷ்வரி பிரதாப் சிங் தோமர்)

**மகளிர்:** அபூர்வி சந்தேலா, இளவேனில் வாலறிவன் (ரிசர்வ்: அஞ்சும் முட்கி–ல், ஷ்ரேயா அகர்வால்)

**50 மீட்டர் ரைபிள் 3 பொசிஷன்ஸ்:**

**ஆடவர்:** சஞ்சீவ் ராஜ்புத், ஐஷ்வரி பிரதாப் சிங் தோமர், (ரிசர்வ்: ஸ்வப்னில் குசேல், செயின் சிங்)

**மகளிர்:** அஞ்சும் முட்கில், தேஜஸ்வினி சாவந்த் (ரிசர்வ்: சுனிதி சௌஹான், காயத்ரி)

**10 மீட்டர் ஏர் பிஸ்டல்:**

**ஆடவர்:** சௌரவ் சௌதரி, அபிஷேக் வர்மா (ரிசர்வ்: ஷாஸார் ரிஸ்வி, ஓம் பிரகாஷ் மிதர்வால்)

**மகளிர்:** மானு பாக்கர், யஷஸ்வினி சிங் தேஸ்வால் (ரிசர்வ்: ஸ்ரீ நிவேதா, ஷ்வேதா சிங்)

**25 மீட்டர் ஸ்போர்ட்ஸ் பிஸ்டல் மகளிர்:** ராஹி சர்னோபாத், மானு பாக்கர் (ரிசர்வ்: சிங்கி யாதவ், அபிந்த்யா பாட்டீல்)

**ஸ்கீட் ஆடவர்:** அங்கத்வீர் சிங் பாஜ்வா, மைராஜ் அகமது கான் (ரிசர்வ்: குர்ஜோத் சிங் காங்குரா, வீராஸ் ஷேக்)

**10 மீ ஏர் ரைபிள் கலப்பு அணி:** திவ்யான்ஷ் சிங் பன்வார், இளவேனில் வாலறிவன், தீபக் குமார், அஞ்சும் முட்கில்

**10 மீ ஏர் பிஸ்டல் கலப்பு அணி:** சௌரவ் சௌதரி, மானு பாக்கர், அபிஷேக் வர்மா, யஷஸ்வினி சிங் தேஸ்வால்

---

### 6. 471 மில்லியன் கிலோ மீட்டர் பயணம்; செவ்வாயில் தரையிறங்கியது 'இஞ்செனுயிட்டி' ஹெலிகாப்டர்

செவ்வாய்க் கிரகத்தில் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிக் கழகமான நாசா அனுப்பிய பெர்சவரன்ஸ் ரோவர் என்ற விண்கலம் கடந்த பிப்ரவரி.18ஆம் தேதி தரையிறங்கியது. இந்த நிலையில் அந்த விண்கலத்தோடு பொறுத்த–ப்பட்டிருந்த 'இஞ்செனுயிட்டி' என்ற சிறிய ஹெலிகாப்டர் செவ்வாய்க்கிரக–த்தில் தரையிறங்கியுள்ளதாக NASA அறிவித்தது.

இஞ்செனுயிட்டி ஹெலிகாப்டரை செவ்வாய்க் கிரகத்தில் ஏப்ரல்.11ஆம் தேதி பறக்கச்செய்ய NASA திட்டமிட்டுள்ளது. அந்தச் சோதனை வெற்றி பெற்றால் கிரகங்களை ஆய்வு செய்வதில் NASA புதிய பாய்ச்சலை நிகழ்த்தும் என்று கூறப்படுகிறது. 471 மில்லியன் கிலோமீட்டர் பயணம் செய்து செவ்வாய்க் கிரகத்தை அடைந்திருக்கும் இந்த ஹெலிகாப்டர், பூமிக்கு வெளியே வேறொரு கிரகத்தில் பறக்க இருக்கும் முதல் ஹெலிகாப்டர் ஆகும்.

இந்தச் சிறிய இரக ஹெலிகாப்டர் 1.8 கிலோ எடை கொண்டது. பூமியுடன் ஒப்பிடும்போது செவ்வாய்க் கிரகத்தில் 1/3 பங்கு மட்டுமே புவியீர்ப்பு விசை இருக்கும். அதேபோல் அதன் வளிமண்டல அடர்த்தி பூமியின் வளிமண்டல அடர்த்தியில் ஒரு சதவீதந்தான். செவ்வாய்க் கிரகத்தில் தட்பவெப்பநிலை கணிக்கமுடியாத அளவுக்கு இருக்கும். இரவு நேரத்தில் வெப்பநிலை மைனஸ் 90℃ வரை குறையும். இதனால் மின்னணு பொருட்கள் உடை–யவும், உறையவும் வாய்ப்புகள் உள்ளன. இதனால் இந்த ஹெலிகாப்டரி–ல் உட்புற ஹீட்டர் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த ஹீட்டர் ஹெலிகாப்டரின் மூடப்படாத பகுதிகளை குளிரிலிருந்து பாது–காக்கும் என்று அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த ஹெலிகாப்ட–ரை ஐந்து முறை பறக்கச் செய்ய NASA திட்டமிட்டுள்ளது. முதலில் ஒரு வினாடிக்கு ஒரு மீட்டர் என்று 10 மீட்டர் உயரம் வரைச் செல்லும். அங்கே முப்பது வினாடிகளுக்கு சுழலும். அதன் பிறகு தரைப்பரப்பை நோக்கி இறங்கும். 85 மில்லியன் டாலர் செலவிட்டு NASA இந்த ஹெலிகாப்டரை உருவாக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---


### 7. ஒரு நாளைக்கு: 37 கிமீ தூரத்துக்கு: நெடுஞ்சாலை பணி:

கடந்த 2014 ஏப்ரல் நிலவரப்படி தேசிய நெடுஞ்சாலை 91,287 கிமீட்டராக இருந்தது. இது மார்ச் 2021'இல் 1,37,625 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது. 2021'இல் ஒரு நாளைக்கு கட்டுமானம் செய்யப்படும் நெடுஞ்சாலை தொ–லைவு 37 கிமீட்டராக உயர்ந்துள்ளதாக மத்திய நெடுஞ்சாலைத் துறை தெரிவித்துள்ளது. நெடுஞ்சாலைத்துறைக்காக 2021–22 நிதி ஆண்டுக்கா–ன பட்ஜெட்டில் ₹1,83,101 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதே நிதி ஒதுக்கீடு 2015'இல் ₹33,414 கோடியாக மட்டுமே இருந்தது.

அந்தவகையில் இந்த ஆண்டு ஒதுக்கீடானது 5.5 மடங்கு உயர்ந்துள்ளது என்றும் அமைச்சகம் கூறியுள்ளது. அதேசமயம் நெடுஞ்சாலை திட்டங்களு–க்காகப் பகிரப்பட்ட 2020 நிதியாண்டை காட்டிலும் 126% உயர்ந்துள்ளது என்று நெடுஞ்சாலைத்துறை தெரிவித்துள்ளது.

---

**1. பன்னாட்டு விண்வெளி மையத்தில் (ISS) கண்டறியப்பட்ட புதிய வகை பாக்டீரியத்துக்கு பின்வரும் எந்த இந்திய அறிவியலாளரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது?**



அ) ஜெகதீஷ் சந்திரபோஸ்

ஆ) A P J அப்துல் கலாம்

**இ) அஜ்மல் கான் ☑**

ஈ) C V இராமன்

✓ NASA மற்றும் தெற்கு கலிபோர்னியா பல்கலைக்கழகத்துடனான ஒப்பந்-தத்தின்கீழ், ஜெட் புரபல்ஷன் ஆய்வகத்தில் அண்மையில் மேற்கொள்ள-ப்பட்ட ஆராய்ச்சியில், ISS'இல் நான்கு பாக்டீரியாக்கள் கண்டுபிடிக்கப்ப-ட்டுள்ளன. அறிவியலாளர்கள் குழுமத்தில் இந்தியாவின் ஹைதராபாத் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஒரு குழுவும் இடம்பெற்றிருந்தது.

✓ திரிபுகளுள் ஒன்றுக்கு, பல்லுயிர் பெருக்கத்தில் நிபுணத்துவம் பெற்ற புகழ்பெற்ற இந்திய அறிவியலாளரான அஜ்மல் கானின் நினைவாக *Methylobacterium ajmalii* எனப் பெயர் சூட்டப்பட்டது.

---

**2. ஆசிய கால்பந்து கூட்டமைப்பின் (AFC) மகளிர் ஆசிய கோப்பை 2022 போட்டியை நடத்தவுள்ள நாடு எது?**

அ) UK

**ஆ) இந்தியா ☑**

இ) இலங்கை

ஈ) வங்காளதேசம்

✓ கடந்த 1979ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக ஆசிய கால்பந்து கூட்டமைப்பின், மகளிர் ஆசிய கோப்பை – 2022 போட்டியை நடத்தும் உரிமையை இந்தியா பெற்றுள்ளது. அகில இந்திய கால்பந்து சம்மேளன-த்தின் தலைவர் பிரபுல் படேல், இப்போட்டியை 12 அணிகள் பங்கேற்கு-ம் போட்டியாக அறிவித்தார். முந்தைய காலங்களில் வெறும் எட்டு அணிகள் மட்டுமே போட்டிகளில் இடம்பெற்றன.

✓ போட்டியை நடத்துவதால் இந்தியா நேரடியாக போட்டிகளில் பங்கேற்க தகுதிபெறும். இந்நிகழ்வு 2023 FIFA மகளிர் உலகக் கோப்பைக்கான தகுதிப்போட்டியாகவும் இருக்கும்.

---

**3. 2021 மார்ச் 31 நிலவரப்படி, நாடு முழுவதும் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தால் எட்டப்பட்ட புதிய சாதனை என்ன?**



அ) 1 கோடி

ஆ) 2 கோடி

**இ) 4 கோடி ☑**

ஈ) 5 கோடி

✓ 2024ஆம் ஆண்டுக்குள் கிராமப்புறத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் குழாய் வசதி வழங்கலை நோக்கமாகக் கொண்ட ஜல் ஜீவன் இயக்கம், 2019 ஆகஸ்ட்.15 அன்று அறிவிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் சமீபத்தில் நான்கு கோடி கிராமப்புற வீடுகளுக்கு குடிநீர் குழாய் வசதி வழங்கப்பட்டு அத்திட்டம் புதிய சாதனையை எட்டியுள்ளது.

✓ 100% குடிநீர் குழாய் வசதியை வழங்கியுள்ள முதல் மாநிலமாக கோவா மாநிலம் மாறியுள்ளது.

---

**4. 'புவி மணிநேர நாளானது' ஆண்டுதோறும் எந்த மாதத்தின் கடைசி சனிக்கிழமையில் அனுசரிக்கப்படுகிறது?**



அ) பிப்ரவரி

**ஆ) மார்ச் ☑**

இ) டிசம்பர்

ஈ) ஜனவரி

✓ புவி மணிநேர நாளானது, ஆண்டுதோறும் மார்ச் மாதத்தில் வரும் கடைசி சனிக்கிழமையன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. நடப்பாண்டு (2021), மார்ச்.27 அன்று புவி மணிநேர நாள் அனுசரிக்கப்ப-ட்டது. இது ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரில் விளக்கணைப்பு நாளாக கடந்த 2007ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

✓ இயற்கையின் முக்கியத்துவம் மற்றும் இயற்கைசார்ந்த உலகளாவிய முயற்சிகளில் மக்கள் ஆற்றக்கூடிய பங்கைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நாளாக இந்நாள் உள்ளது.

---

**5. அண்மையில் தொடங்கி வைக்கப்பட்ட 'மிதாலி விரைவு' என்ற புதிய பயணிகள் இரயிலானது டாக்காவையும் பின்வரும் எந்த இந்திய நகரத்தையும் இணைக்கிறது?**



**அ) புதிய ஜல்பைகுரி ☑**

ஆ) வாரணாசி

இ) ஜெய்ப்பூர்

ஈ) திருச்சிராப்பள்ளி

✓ இந்தியப் பிரதமர் மோடியும் வங்காளதேச பிரதமர் ஷேக் ஹசீனாவும் இணைந்து அண்மையில், 'மிதாலி எக்ஸ்பிரஸ்' என்ற புதிய பயணிகள் இரயிலை தொடங்கி வைத்தனர். இது, மேற்கு வங்காளத்தின் டாக்கா கன்டோன்மென்ட்டையும் புதிய ஜல்பைகுரியையும் வங்காளதேசத்தின் எல்லைப்புற இரயில் நிலையமான சிலாகதி வழியாக இணைக்கிறது.

✓ மைத்ரீ எக்ஸ்பிரஸ் (டாக்கா – கொல்கத்தா) மற்றும் பந்தன் எக்ஸ்பிரஸ் (குல்னா – கொல்கத்தா) ஆகியவற்றை தொடர்ந்து இது மூன்றாவது பயணிகள் இரயில் ஆகும்.

---

**6. சாலைப் போக்குவரத்து அமைச்சகத்தின் அண்மைய தரவுகளின் படி இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான பழைய வாகனங்கள் உள்ள மாநிலம் எது?**



அ) தெலுங்கானா

ஆ) மகாராஷ்டிரா

**இ) கர்நாடகா ☑**

ஈ) ஹிமாச்சல பிரதேசம்

✓ மத்திய சாலைப்போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகம் வெளியிட்-டுள்ள தகவல்களின்படி, கர்நாடக மாநிலத்தில் பதினைந்தாண்டுக்கும் பழமையான அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள் உள்ளன.

✓ இந்தியாவில் இதுபோன்று நான்கு கோடிக்கும் அதிகமான பழைய வாகனங்கள் உள்ளன. அவற்றுள் எழுபது இலட்சம் வாகனங்களுடன் கர்நாடக மாநிலம் முதலிடத்தில் உள்ளது.

---

**7. மத்திய தகவல் ஆணையத்தின் ஆண்டு அறிக்கையின்படி, அதி-கபட்சமாக கோரிக்கைகளை நிராகரித்த மத்திய அமைச்சகம் எது?**

அ) வேளாண் அமைச்சகம்

ஆ) பாதுகாப்பு அமைச்சகம்

**இ) உள்துறை அமைச்சகம் ☑**

ஈ) வெளியுறவு அமைச்சகம்

✓ மத்திய தகவலாணையத்தின் ஆண்டு அறிக்கையின்படி, 2019–20ஆம் ஆண்டில் அனைத்து தகவலறியும் உரிமை (RTI) கோரிக்கைகளிலும் 4.3% மட்டுமே மத்திய அரசு நிராகரித்துள்ளது. இந்த நிராகரிப்புகளில் கிட்டத்தட்ட 40% எந்தவொரு சரியான காரணத்தையும் கொண்டிருக்க-வில்லை மற்றும் தகவலறியும் உரிமைச் சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட விதிவிலக்குகளின்கீழ் வரவில்லை.

✓ 90% நிராகரிப்புகள் பிரதமர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெறப்பட்ட அனைத்து தகவலறியும் உரிமை கோரிக்கைகளுள் இருபது சதவீதத்துடன், மத்திய உள்துறை அமைச்சகமானது மிகவதிகமான நிராகரிப்பு வீதங்களைக் கொண்டிருந்தது.

---

**8. "சாந்திர் ஒக்ரோஷேனா–2021" என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையிலான ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியாகும்?**



அ) இலங்கை

**ஆ) வங்காளதேசம் ☑**

இ) நேபாளம்

ஈ) மியான்மர்

✓ வங்காளதேசத்துடனான கூட்டு இராணுவப் பயிற்சியில் இந்தியா பங்கே-ற்கவுள்ளது. இந்தப் பயிற்சிக்கு, "சாந்திர் ஒக்ரோஷேனா–2021" என்று

பெயரிடப்பட்டுள்ளது. இது, 2021 ஏப்.4 முதல் வங்காளதேசத்தில் தொடங்கவுள்ளது.

✓ இது, இருபடைகளுக்கும் இடையில் நடைபெறும் 9 நாள் பயிற்சியாகும். மேலும், 'வங்காளதேசத்தின் தந்தை – 'வங்கபந்து' ஷேக் முஜிபுர் ரகுமானின்' பிறந்த நூற்றாண்டு விழாவை நினைவுகூரும் விதமாக இந்தப் பயிற்சியின் தொடக்க தேதி அமைக்கப்பட்டுள்ளது.

---

**9. 'வஜ்ர பிரகார் – 2021' என்பது இந்தியாவின் சிறப்புப் படைகட்கும் வேறெந்நாட்டிற்கும் இடையே நடத்தப்படும் ராணுவப்பயிற்சியாகும்?**



**அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஆ) சீனா

இ) ரஷியா

ஈ) பிரான்ஸ்

✓ இந்திய சிறப்புப் படைகளானது, அமெரிக்காவின் சிறப்புப் படைகளுடன் இணைந்து ஹிமாச்சல பிரதேச மாநிலத்தின் பக்லோவில் ஒரு கூட்டு இராணுவப்பயிற்சியை மேற்கொண்டன. இந்த கூட்டு சிறப்பு படைப் பயிற்சியின் பதினோராவது பதிப்பு, 'வஜ்ர பிரகார் – 2021' என்ற பெயரில் சிறந்த நடைமுறைகள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கத்துடன் நடைபெற்றது. 2021 பிப்ரவரியில், இவ்விரு நாடுகளின் படைகளும், 'யுத் அபியாஸ்' என்ற பயிற்சியை மேற்கொண்டன.

---

**10. 'ஆனந்தம்: மகிழ்ச்சிக்கான மையம்' திறக்கப்பட்டுள்ள நிறுவனம் எது?**

அ) IIT மெட்ராஸ்

ஆ) IISc, பெங்களூரு

**இ) IIM ஜம்மு ☑**

ஈ) IIM அகமதாபாத்

✓ மத்திய கல்வியமைச்சர் இரமேஷ் பொக்ரியால், சமீபத்தில் ஜம்மு இந்திய மேலாண்மை கழகத்தில் (IIM) "ஆனந்தம்: மகிழ்ச்சிக்கான மையம்" என்றவொன்றைத் திறந்து வைத்தார். மனவழுத்தத்தைக் கையாளவும், நேர்மறை எண்ணங்களை பரப்புவதற்கு மக்களுக்கு உதவுவதே இந்த மையத்தின் நோக்கமாகும்.

✓ இதன் முதன்மை நோக்கங்களாவன ஆலோசனை, முழுமையான நலன், மகிழ்ச்சி மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் தலைமைத்துவம் & ஆசிரிய மேம்பாடு குறித்த தேர்ந்தெடுக்கப்பட்ட படிப்புகள் என ஐந்து பரந்துபட்ட பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வாக்களிக்க 12 ஆவணங்களில் ஏதேனும் ஒன்று போதும்**

சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிக்க நிழற்படத்துடன்கூடிய வாக்காளர் அடையாள அட்டை இல்லாவிட்டாலும் வாக்காளர்கள் தங்களது வாக்கினைச்செலுத்தலாம். வாக்காளர் பட்டியலில் பெயர் இருப்பது கட்டாயம்.

வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்து, வாக்காளர் அடையாள அட்டை இல்லாதபட்சத்தில், தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்டுள்ள 11 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைக் காண்பித்து வாக்காளர்கள் தங்களது வாக்கினைச்செலுத்தலாம். தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்டுள்ள 11 ஆவணங்கள் விவரம்:

1. ஆதார் அட்டை.

2. கடவுச்சீட்டு.

3. ஓட்டுநர் உரிமம்.

4. மத்திய, மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றி வருவதற்கான நிழற்படத்துடன்கூடிய அடையாள அட்டை.

5. வங்கி அல்லது அஞ்சலக சேமிப்புக் கணக்குப் புத்தகம்.

6. தேசிய மக்கள்தொகை பதிவேடு அளித்துள்ள ஸ்மார்ட் அட்டை.

7. நூறு நாள் வேலை திட்டத்துக்கான அட்டை.

8. PAN (நிரந்தர கணக்கு எண்) அட்டை

9. தொழிலாளர் நலத்துறையின் சுகாதார காப்பீட்டு அட்டை.

10. நிழற்படத்துடன்கூடிய ஓய்வூதிய ஆவணம்.

11. நா.உ'கள், ச.ம.உ'களாக இருந்தால் அவர்களுக்கான அதிகாரப்பூர்வ அடையாள அட்டை.

வாக்காளர்கள் வழக்கமாக பயன்படுத்தும் நிழற்படத்துடன்கூடிய வாக்காளர் அடையாள அட்டை கையிலிருந்தால் தேர்தல் ஆணையம் வரையறுத்துள்ள 11 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை உடன் எடுத்துச்செல்ல வேண்டிய அவசியமில்லை.

---

**2. வாக்குப் பதிவு நேரமும், நடைமுறைகளும்...**

தேர்தல் வாக்குப் பதிவு நேரம்: காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை.

2 மணி நேரத்துக்கு ஒருமுறை வாக்குப்பதிவு நிலவரங்கள் வெளியாகும்.

இரவு 7 மணிக்கு முன்பாக வாக்குச்சாவடிக்கு வரும் அனைவருக்கும் டோக்கன்கள் விநியோகிக்கப்படும்.

அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் தலா 12 கரோனா நோய்த்தொற்றைத் தடுக்கும் கவச உடைகள் அளிக்கப்படும்.

மாலை 6 மணி முதல் 7 மணி வரையிலான ஒரு மணி நேரத்தில் கரோனா பாதித்தோர் வாக்களிக்க வரலாம். அவர்கள் கரோனா கவச உடையை அணிந்துவருவது கட்டாயம்.

கரோனா நோய்த்தொற்று பாதித்தோர் வாக்களிக்க வரும்போது, வாக்குச் சாவடியில் உள்ள அனைவரும் கரோனா கவச உடையை அணிந்திருப்பர். இதர நடைமுறைகள் அனைத்தும் வாக்களிப்பின்போது பின்பற்றப்படுவையாகவே இருக்கும்.

---

## புகார் கூற செயலியும் தொலைபேசி வசதியும்

**சென்னை, ஏப். 5:** தேர்தல் தொடர்பான புகார்கள், விவரங்கள், கூடுதல் வசதிகளைப் பெறுவதற்கான தனித்த செயலிகள், தொலைபேசி எண்களை தேர்தல் ஆணையம் உருவாக்கியுள்ளது. இதுகுறித்து, தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு திங்கள்கிழமை வெளியிட்ட தகவல்:-

**cVIGIL:** தேர்தல் தொடர்பான புகார்களை ஆதாரங்களுடன் தெரிவிக்க இந்த செயலி பயன்படுகிறது. இந்த செயலியில் பதிவேற்றம் செய்யப்படும் புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இந்த செயலி வழியாக இதுவரை 3,991 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**PWD:** மாற்றுத் திறனாளி வாக்காளர்களுக்கென உருவாக்கப்பட்ட செயலியாகும். வாக்குச் சாவடிகளுக்குச் செல்வதற்கு முன்பாக, இந்தச் செயலியில் மாற்றுத் திறனாளி வாக்காளர்கள் பதிவு செய்யலாம். அவர்களுக்கு வாக்குச் சாவடியில் சக்கர நாற்காலி வசதி ஏற்படுத்தித் தரப்படும். மாற்றுத் திறனாளி வாக்காளர்களுக்கு தபால் வாக்கு வசதி அளிக்கப்பட்டிருந்தது. இந்த வாய்ப்பினை 28,531 மாற்றுத் திறனாளி வாக்காளர்கள் கோரியிருந்தனர். அவர்களில் 28,159 பேர் வாக்கினைச் செலுத்தியுள்ளனர்.

தொலைபேசி வசதி: தேர்தல் குறித்த அனைத்துப் புகார்களையும் பொது மக்கள் 1950 என்ற கட்டணமில்லாத தொலைபேசி எண்ணிலும் தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கும் போது, 1950 என்ற எண்ணுடன் மாவட்ட எஸ்டிடி எண்ணைக் குறிப்பிட வேண்டும். இதே போன்று, மாநில தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்தை 1800 4252 1950 என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

**VoterHelpline:** தேர்தல் ஆணையத்தின் இந்த செயலி வழியாக வாக்காளர்களுக்குத் தேவையான அனைத்து விவரங்களை பெற்றுக் கொள்ளலாம். தேர்தல் குறித்த புகார்கள், வாக்காளர்களின் தொகுதிகள் போன்ற விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

**voterportal:**" வாக்காளர்களுக்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த இணையதளத்தின் **(voterportal.eci.gov.in)** வழியாக பல்வேறு சேவைகளை பெற முடியும். வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா, வாக்குச் சாவடி எங்கு உள்ளது, வாக்குச் சாவடி அதிகாரி யார், மின்னணு வாக்காளர் அடையாள அட்டையை பதிவிறக்கம் செய்வது போன்ற வாக்காளர் தொடர்பான சேவைகளைப் பெறலாம்.

---

## ஏவுகணைத் தாக்குதலிலிருந்து கடற்படை கப்பல்களை காக்கும் புதிய தொழில்நுட்பம்

### டிஆர்டிஓ உருவாக்கியது

**புது தில்லி, ஏப். 5:** எதிரிகளின் ஏவுகணைத் தாக்குதலில் இருந்து கடற்படை கப்பல்களை பாதுகாப்பதற்காக மேம்படுத்தப்பட்ட சாஃப் தொழில்நுட்பம் ஒன்றை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) உருவாக்கியுள்ளது

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் ஆய்வகமான பாதுகாப்பு ஆய்வகம், ஜோத்பூர், இந்த முக்கிய தொழில்நுட்பத்தின் மூன்று வகைகளான குறைந்த தூர சாஃப் ராக்கெட், நடுத்தர தொலைவு சாஃப் ராக்கெட் மற்றும் நீண்ட தூர சாஃப் ராக்கெட் ஆகியவற்றை உள்நாட்டிலேயே உருவாக்கியுள்ளது. இவை இந்திய கடற்படையின் தேவைகளை பூர்த்தி செய்யும்.

இந்த முன்னேறிய தொழில்நுட்பத்தை ஜோத்பூர் பாதுகாப்பு ஆய்வகம் வெற்றிகரமாக உருவாக்கியிருப்பது தற்சார்பு இந்தியாவை நோக்கிய மற்றுமொரு முக்கிய நகர்வாகும்.

இந்த மூன்று வகை தொழில்நுட்பங்களையும் அரபிக் கடலில் இந்திய கடற்படை கப்பலில் இருந்து பரிசோதனை செய்து பார்த்த போது அவற்றின் செயல் திறன் திருப்திகரமாக இருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்னணுத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் சாஃப், எதிரிகளின் ரேடார் கண்காணிப்பிலிருந்தும் ஏவுகணைகளிலிருந்தும் கடற்படை கப்பல்களை பாதுகாக்கப் பயன்படுத்தப்படுகிறது.

---

**3.ஜம்மு–காஷ்மீர்: உலகின் உயரமான இரயில்வே பாலத்தின் வளைவை கட்டமைக்கும் பணி நிறைவு**

ஜம்மு–காஷ்மீரில் உள்ள செனாப் ஆற்றுப் படுகையில் கட்டப்பட்டு வரும் உலகின் உயரமான இரயில் பாலத்தின் வளைவை கட்டமைக்கும் பணி நிறைவடைந்தது. ஜம்மு–காஷ்மீரில் உள்ள செனாப் ஆற்றுப் படுகையில் இருந்து 359 மீ உயரத்தில் இரயில் பாலம் கட்டப்பட்டு வருகிறது. ₹1,486 கோடி மதிப்பில் 1.3 கிமீ நீளத்தில் கட்டப்பட்டுவரும் இப்பாலத்தை தாங்கும் இரும்பு வளைவை கட்டமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது.

---

**4. கிழக்கிந்திய பெருங்கடல் பகுதியில் இந்தியா கூட்டு கடற்படை பயிற்சி**

இந்தியா உட்பட 'QUAD' அமைப்பில் இடம்பெற்றிருக்கும் நாடுகள், பிரான்சு–டன் இணைந்து கிழக்கு இந்திய பெருங்கடல் பகுதியில் மிகப்பெரிய அளவிலான மூன்று நாள் கூட்டு கடற்படை பயிற்சியை தொடங்கின. இந்த நாடுகளிடையே கிழக்கு இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் வளர்ந்து வரும் இராணுவ ஒத்துழைப்பை பிரதிபலிக்கும் வகையில் இந்தக் கூட்டுப் பயிற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

பிரான்ஸ் சார்பில் நடத்தப்படும் 'லா பெரௌஸ்' என்ற இந்தக் கூட்டுப் பயிற்சியில் இந்திய கடற்படையின் தாக்குதல் கப்பல்கள் சாத்புரா, கில்டன் ஆகியவற்றுடன் நீண்டதூர கண்காணிப்பு விமானந்தாங்கி போர்க்கப்பலா–ன பி–8ஐ கப்பலும் பங்கேற்கிறது. இவை, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் போர்க்கப்பல்கள் மற்றும் போர் விமானங்களுடன் பயிற்சியில் ஈடுபடும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த கூட்டுப்பயிற்சியில் வான்வழித்தாக்குதல் மற்றும் வான்வழி தாக்குதல் எதிர்ப்பு பயிற்சி, தரைவழி தாக்குதல் எதிர்ப்பு பயிற்சி, ஒரு கப்பலிலிருந்து மற்றொரு கப்பலுக்கு வீரர்கள் பறந்து செல்லுதல் உள்ளிட்ட மேம்பட்ட மற்றும் சிக்கலான கடற்படை பயிற்கள் இடம்பெறும்.

இந்தோ–பசிபிக் பிராந்தியத்தை சுதந்திரமானதாகவும், அனைவருக்குமா–னதாகவும் மாற்றுவது, பன்னாட்டுச் சட்டங்களின் அடிப்படையிலான நடைமுறைகளை அந்தப் பகுதியில் உறுதிபடுத்துவது ஆகியவையே இந்த கூட்டுப்பயிற்சியின் முக்கிய குறிக்கோளாகும்.

---

**5. விளையாட்டாய் சில கதைகள்: ஒலிம்பிக் போட்டி தொடங்கிய நாள்**

உலகில் நாகரிகம் வளர்வதற்கு முன்பே, கிமு 776'இல் சில நாடுகள் பங்கேற்ற ஒலிம்பிக் போட்டிகள் கிரேக்க நாட்டில் நடத்தப்பட்டதாக வரலாறு கூறுகிறது. இந்தக் காலகட்டத்தில் பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. பின்னர் காலம் செல்லச்செல்ல, இப்போட்டியின் மதிப்பு குறைந்து பின்னர் ஒலிம்பிக் போட்டிகளே நின்றுபோனது.

இதைத்தொடர்ந்து நவீன யுகத்தில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்த கிரேக்க நாட்டினர் 18ஆம் நூற்றாண்டு முதல் முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். இதன் தொடக்கமாக உள்ளூர் இளைஞர்கள் கலந்துகொண்ட போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. இந்நிலையில் பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த பைரே டி குபெர்டின் என்பவர், நவீன ஒலிம்பிக் போட்டிக்கான அடிப்படை விதிகளை வகுத்தார். 1892ஆம் ஆண்டில் பன்னாட்டு விளையாட்டு அமைப்புகளிடம், ஒலிம்பிக் போட்டியை மீண்டும் தொடங்குவதுபற்றி அவர் விவாதித்தார். இதைத்தொடர்ந்து 1894ஆம் ஆண்டில் நடந்த பன்னாட்டு விளையாட்டு அமைப்புகளின் கூட்டத்தில், ஒலிம்பிக் போட்டியை மீண்டும் தொடங்க முடிவெடுக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து 1896ஆம் ஆண்டு, ஏப்.6ஆம் தேதி முதலாவது ஒலிம்பிக் போட்டி ஏதென்ஸ் நகரத்தில் தொடங்கியது. இந்த ஒலிம்பிக் போட்டியில் சைக்கிளிங், கத்திச்சண்டை, ஜிம்னாஸ்டிக்ஸ், டென்னிஸ், துப்பாக்கி சுடுதல், நீச்சல், தடகளம், பளுதூக்குதல் மற்றும் மல்யுத்தம் ஆகிய 9 பிரிவுகளில் மட்டுமே போட்டிகள் நடத்தப்பட்டன. 13 நாடுகளைச் சார்ந்த 241 வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்றனர். முதல் நாளன்று நடந்த டிரிபிள் ஜம்ப் போட்டியில் (மும்முறை தாண்டும் போட்டி) அமெரிக்க தடகள வீரரான ஜேம்ஸ் கோனோளி தங்கப்பதக்கம் வென்றார். இதன்மூலம் ஒலிம்பிக்கில் முதல் தங்கப்பதக்கத்தை வென்ற வீரர் என்ற பெருமையைப்பெற்றார். இதைத்தொடர்ந்து நடைபெற்ற உயரந்தாண்டும் போட்டியிலும் பங்கேற்ற ஜேம்ஸ் கோனோளி, இதில் வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றினார்.

---

**6. சேதி தெரியுமா?**

**மார்ச் 26:** வங்கதேச சுதந்திரப் பொன்விழா ஆண்டு கொண்டாட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். இதையொட்டி வங்கதேசத்தின் டாக்கா – மேற்குவங்கத்தின் புதிய ஜல்பைகுரி இடையே புதிய பயணிகள் இரயில் தொடங்கப்பட்டது.

**மார்ச் 28:** ஒரு நாள் கிரிக்கெட்டில் 5,000 ரன்களைக் கடந்த இரண்டாவது இந்திய இணை என்கிற பெருமையை ரோஹித் சர்மா–ஷிகர் தவான் ஜோடி பெற்றது. இதற்கு முன் இந்தப் பெருமையை சச்சின் டெண்டுல்கர் – சவுரவ் கங்குலி ஜோடி பெற்றிருந்தது.

**மார்ச் 29:** சூயஸ் கால்வாயில் சிக்கிக்கொண்ட 'எவர் கிவன்' என்ற பெரிய கப்பல் ஒருவாரகால போராட்டத்துக்குப்பிறகு மீட்கப்பட்டது. மண்ணள்ளிகள், இழுவை படகுகள்மூலம் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது.

**மார்ச் 30:** உலகிலேயே முதன்முறையாக கரோனா தொற்றிலிருந்து விலங்குகளுக்கு பாதுகாப்பு அளிக்கும், "கார்னிவாக்–கோவ்" என்ற தடுப்பூசியை ரஷியா உருவாக்கியுள்ளது.

**மார்ச் 31:** இந்தியாவிலிருந்து சர்க்கரை, பருத்தி ஆகியவற்றை இறக்குமதி செய்ய பாகிஸ்தான் முடிவெடுத்தது. இந்தியாவிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்வதில்லை என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த முடிவை அந்நாடு கைவிடுவதாக அறிவித்தது. ஆனால், இந்த முடிவு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**ஏப்.1:** நாடு முழுவதும் 45 வயது மேற்பட்டோருக்கு கரோனா தடுப்பூசி செலுத்தும் திட்டம் தொடங்கியது.

**ஏப்.1:** இந்திய திரைப்படத் துறையில் வழங்கப்படும் மிகவுயரிய விருதான 'தாதா சாகேப் பால்கே' விருதுக்கு நடிகர் ரஜினி தேர்வுசெய்யப்பட்டார். ஏற்கனவே பத்மபூஷண், பத்மவிபூஷன் ஆகிய விருதுகளை அவர் பெற்றுள்ளார்.

**ஏப்.1:** தமிழ்நாடு தேர்தல் பரப்புரையில் சர்ச்சைக்குரிய வகையில் பேசிய திமுக மக்களவை உறுப்பினர் ஆ ராசா, 48 மநே பரப்புரை மேற்கொள்ள தலைமைத்தேர்தல் ஆணையம் தடைவிதித்தது.

---

**7. இந்தியா, ஐக்கிய அமீரகம், இஸ்ரேல் இடையே 2030இல் முத்தரப்பு வர்த்தகம் ₹8 இலட்சம் கோடியாக உயரும்**

இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் & இசுரேல் ஆகிய நாடுகளுக்கிடையிலான முத்தரப்பு வர்த்தகம் 2030இல் ₹8 லட்சம் கோடி அளவுக்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தோ–இஸ்ரேல் வர்த்தக சபையின் சர்வதேச கூட்டமைப்பு ஏற்பாடு செய்த கூட்டத்தில் இந்நாடுகளுக்கிடையிலான வர்த்தக சூழல் குறித்து விவாதிக்கப்பட்டது.

---

**1.** **2020ஆம் ஆண்டின் ஆக்ஸ்போர்டு ஹிந்தி சொல்லாக தெரிவு செய்யப்பட்ட சொல் எது?**

**அ) ஆத்மநிர்பார்தா ☑**

ஆ) நாரி ஷக்தி

இ) ஆதார்

ஈ) சம்விதான்

✓ ஆக்ஸ்போர்டு குழுமமானது 2020ஆம் ஆண்டின் ஆக்ஸ்போர்டு ஹிந்தி சொல்லாக, 'ஆத்மநிர்பார்தா' என்ற சொல்லைத் தேர்வு செய்துள்ளது. ஹிந்தி மொழியில், இந்தச் சொல்லுக்கு 'தன்னம்பிக்கை' என்று பொருள்.

✓ ஆக்ஸ்போர்டு தேர்ந்தெடுத்த முந்தைய ஆண்டின் ஹிந்தி சொற்கள் – 'ஆதார்' (2017), 'நாரி சக்தி' (2018) மற்றும் 'சம்விதான்' (2019). பிரதமரின் உரையைத்தொடர்ந்து, 'ஆத்மநிர்பார்தா' என்ற சொல் அதிகளவில் பொது மக்களால் பயன்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

**2.** **"ஆசியா மற்றும் பசிபிக்கில் 2021'இல் பொருளாதார மற்றும் சமூக ஆய்வினை" வெளியிட்டு, 2021-22ஆம் ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சியை 7% என மதிப்பிட்ட நிறுவனம் எது?**

அ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

**ஆ) UNESCAP ☑**

இ) உலக வங்கி

ஈ) ஆசிய வளர்ச்சி வங்கி

✓ ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளுக்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையம் (UNESCAP) ஆசியா மற்றும் பசிபிக் 2021'இன் பொருளாதார மற்றும் சமூக ஆய்வு என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. அறிக்கையின்படி, 2021-22ஆம் ஆண்டில் இந்தியா 7% பொருளாதார வளர்ச்சியை பதிவுசெய்யும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

---

**3.** **P K மிஸ்ரா, அனில் கன்வத் மற்றும் அசோக் குலாட்டி ஆகியோர் உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட குழுவில், எந்தப் பிரச்சனையை ஆய்வுசெய்வதற்காக உறுப்பினர்களாக உள்ளனர்?**

அ) முதலீட்டைத் திரும்பப்பெறுதல்



**ஆ) வேளாண் சட்டங்கள் ☑**

இ) தொழிற்சார் சுகாதாரம்

ஈ) மதமாற்ற எதிர்ப்பு சட்டங்கள்

✓ 3 புதிய சர்ச்சைக்குரிய வேளாண் சட்டங்களை ஆய்வு செய்வதற்காக 2021 ஜனவரியில், உச்சநீதிமன்றம், நால்வர் குழுவை நியமித்தது. மேலும், அறிவிக்கப்படும்வரை, அம்மூன்று வேளாண் சட்டங்களை அமல் -படுத்துவதை தற்காலிகமாக அது நிறுத்திவைத்தது. உறுப்பினர்களில் P K மிஸ்ரா, அனில் கன்வத், அசோக் குலாட்டி மற்றும் பூபிந்தர் சிங் மான் ஆகியோர் அடங்குவர். அந்தக் குழு தனது அறிக்கையை சமீபத்தில் உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது.

---

**4.** **அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு (2021-26) நிர்ணயிக்கப்பட்டுள்ள புதிய பணவீக்க இலக்குக்கற்றை எது?**

**அ) 2.0 முதல் 6.0 சதவீதம் வரை ☑**



ஆ) 1.5 முதல் 5.5 சதவீதம் வரை

இ) 2.5 முதல் 6.5 சதவீதம் வரை

ஈ) 3.0 முதல் 7.0 சதவீதம் வரை

✓ இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934'இன்கீழ் 2021 ஏப்ரல்.1 முதல் 2026 மார்ச்.31 வரையிலான பணவீக்க இலக்கு 4 சதவீதமாக இருதரப்பிலும் 2 சதவீத வித்தியாசத்துடன் வைக்கப்பட்டுள்ளதாக பொருளாதார விவகார செயலாளர் அறிவித்தார். முந்தைய ஐந்து ஆண்டுகளில் (2016-21) அரசா -ங்கத்தால் ரிசர்வ் வங்கிக்கு ஆணையிடப்பட்ட இலக்கும் இதுதான்.

✓ ரிசர்வ் வங்கியானது 2021 மார்ச்.31 வரை வருடாந்திர பணவீக்கத்தை 4 சதவீதமாக, 6% உயர்ந்தபட்ச சகிப்புத்தன்மையுடனும், 2% குறைந்தபட் -ச சகிப்புத்தன்மையுடனும் பராமரிக்க வேண்டும்.

---

**5.** **"தெற்காசிய தடுப்பூசிகள்" என்ற அறிக்கையில், எந்த நிறுவனம், FY22'இல், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 7.5% முதல் 12.5% வரை இருக்கும் என்று மதிப்பிட்டுள்ளது?**

அ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஆ) S & P

**இ) உலக வங்கி ☑**

ஈ) ஆசிய வளர்ச்சி வங்கி

✓ உலக வங்கியானது அண்மையில், "தெற்காசிய தடுப்பூசிகள்" என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

✓ தனியார்துறை நுகர்வும் பொதுத்துறை முதலீடும் 2021-22'இல் (FY22) இந்திய பொருளாதாரத்தை 10.1% அளவுக்கு வளர்ச்சியடைய வைக்கும் என அவ்வறிக்கை கூறுகிறது. COVID-19 தொற்றால் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மையின் காரணமாக, 2021-22 நிதியாண்டில் இந்தியாவின் பொரு -ளாதார வளர்ச்சி 7.5% முதல் 12.5% வரை இருக்கும் என்றும் அது மதிப்பிட்டுள்ளது. 2020-21 நிதியாண்டில் இந்திய பொருளாதாரம் 8.5% சுருங்கக்கூடும் என்றும் அது கணித்துள்ளது.

---

**6.** **NITI ஆயோக் தொடங்கிய 'AIM – PRIME' திட்டத்தின் நோக்கம் என்ன?**

அ) மாணவர்களிடையே புத்தாக்கங்களை ஊக்குவித்தல்

**ஆ) அறிவியல்சார்ந்த துளிர் நிறுவனங்களை ஊக்குவித்தல் ☑**

இ) பள்ளிகளில் AI & ML ஐ ஊக்குவித்தல்

ஈ) மாணவ தொழில்முனைவோருக்கு ஆதரவளித்தல்

✓ NITI ஆயோகின் அடல் புத்தாக்க இயக்கம் (AIM), AIM-PRIME (Program for Researchers on Innovations, Market-Readiness & Entrepreneurship கண்டுபிடிப்புகள், சந்தை-தயார்நிலை மற்றும் தொழில்முனைவோர் பற்றிய ஆராய்ச்சியாளர்களுக்கான திட்டம்) திட்டத்தை அறிமுகப்படுத்திய -ுள்ளது. இது, இந்தியா முழுவதும் அறிவியல் அடிப்படையிலான துளிர் நிறுவனங்களை ஊக்குவிப்பதையும் ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இந்தத் திட்டத்தை தொடங்குவதற்காக, AIM ஆனது பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையுடன் கூட்டுசேர்ந்துள்ளது. இது வெஞ்சர் சென்டர் என்றவொரு இலாப நோக்கற்ற தொழில்நுட்ப வணிக காப்பகத்தால் செயல்படுத்தப்படும்.

---

**7.** **அண்மையில், 2019ஆம் ஆண்டுக்கான எம்போரிஸ் ஸ்கைஸ்கி -ராப்பர் விருதுபெற்ற லக்தா மையம் அமைந்துள்ள நாடு எது?**

அ) ஐக்கிய அரபு அமீரகம்



ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

இ) சௌதி அரேபியா

**ஈ) ரஷியா ☑**

✓ ரஷியாவின் புனித பீட்டர்ஸ்பர்க்கில் அமைந்துள்ள லக்தா மையத்திற்கு 2019ஆம் ஆண்டுக்கான எம்போரிஸ் ஸ்கைஸ்கிராப்பர் விருது வழங்கப் -பட்டுள்ளது. இது உயரமான கட்டடக்கலைக்கு வழங்கப்படும் மிகவும் மதிப்புமிக்க விருதாகும். இந்தக் கட்டடம் 462 மீ உயரம் கொண்டது. 20 ஆண்டுகளுக்கு முன்பு இந்த விருது தொடங்கப்பட்டதிலிருந்து, ரஷியா முதன்முறையாக இந்த விருதைப் பெற்றுள்ளது.

---

**8.** **'உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கை'யை வெளியிடுகிற பன்னாட்டு அமைப்பு எது?**

**அ) உலக பொருளாதார மன்றம் ☑**

ஆ) உலக வங்கி

இ) ஐநா வளர்ச்சித் திட்டம்

ஈ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

✓ உலக பொருளாதார மன்றமானது அண்மையில் உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கை – 2021'ஐ வெளியிட்டது. 156 நாடுகளில் இந்தியா 140ஆவது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டின் அறிக்கையில், இந்தியா 112ஆவது இடத்தில் இருந்தது. நடப்பாண்டில், இந்தியா, 28 இடங்கள் பின்தங்கியுள்ளது. பொதுவில் இந்தியாவின் பாலின இடைவெளி 62.5

சதவீதமாக உள்ளது. அரசியல் அதிகாரமளித்தல் துணைக் குறியீட்டில் பெரும்பாலான சரிவு காணப்பட்டதாக அக்குறியீடு குறிப்பிட்டது.

---

**9. இந்தியாவிற்கும் பின்வரும் எந்நாட்டிற்கும் இடையிலான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் கூட்டு ஒப்பந்தம் (CECPA), 2021 ஏப்.1 முதல் நடைமுறைக்கு வந்தது?**

அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஆ) ஜப்பான்

**இ) மொரீஷியஸ் ☑**

ஈ) இலங்கை

✓ இந்தியா–மொரீஷியஸ் விரிவான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மை ஒப்பந்தத்தில், 2021 பிப்.22 அன்று இந்திய அரசு கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தம் தொடர்பான அனைத்து சட்ட முறைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்கங்கள் வாரியம் அறிவித்துள்ளது. இந்த ஒப்பந்தம் 2021 ஏப்.1 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

---

**10. 'Exam Warriors' நூலின் புதிய பதிப்பின் ஆசிரியர் யார்?**

**அ) இந்தியப்பிரதமர் ☑**

ஆ) இந்தியக்குடியரசுத்தலைவர்

இ) இந்தியக்குடியரசுத்துணைத்தலைவர்

ஈ) மக்களவை சபாநாயகர்



✓ இந்தியப் பிரதமர் மோடி, 'Exam Warriors' என்ற நூலின் புதிய பதிப்பை எழுதியுள்ளார். இந்த நூல், மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தேர்வின்போது ஏற்படும் கவலை மற்றும் மனவழுத்தத்தை சமாளிக்க பல புதிய மந்திரங்களைக்கொண்டுள்ளது. இது, முன்னணி நூல் விற்பனை அங்காடிகளிலும், இணைய அங்காடிகளிலும் விற்பனைக்கு கிடைக்கும். இந்த நூல், NaMo செயலியிலும் கிடைக்கப்பெறுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பேரவைத் தேர்தல்: 71.79% வாக்குப் பதிவு**

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் தோராயமாக 71.79 சதவீதம் வரை வாக்குகள் பதிவாகின. இதன் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புகள் இருப்பதாக தலைமைத்தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார். இதனிடையே, வாக்குப்பதிவின்போது கோளாறு காரணமாக 100'க்கும் மேற்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் மாற்றப்பட்டன. முதல் முறையாக சட்டப்பேரவைத் தேர்தலில் ஒப்புகைச்சீட்டு இயந்திரங்கள் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் பயன்படுத்தப்பட்டன.

தமிழ்நாட்டின் பதினாறாவது சட்டப்பேரவைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு காலை 7 மணிக்குத் தொடங்கியது.

கரோனா நோய்த்தொற்று காரணமாக, ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச்சாவடி என வரையறுக்கப்பட்டிருந்தது. இதனால், வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 67,775'லிருந்து 88,937 வாக்குச் சாவடிகளாக அதிகரிக்கப்பட்டன. மாலை 7 மணிக்கு வாக்குப் பதிவு நிறைவடைந்ததும், வாக்குப்பதிவுக்கு பயன்படுத்தப்பட்ட அனைத்து இயந்திரங்களும் வாக்கு எண்ணும் மையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. தமிழ்நாடு முழுவதும் 42 அமைவிடங்களில் 75 வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சட்டப்பேரவைத் தேர்தல் களத்தில் 3,998 வேட்பாளர்கள் உள்ளனர். அவர்களுள் 411 பெண்கள். தேர்தலில் பதிவான வாக்குகள் அனைத்தும் மே 2 அன்று எண்ணப்படவுள்ளன.

**மாவட்ட வாரியாக வாக்குப் பதிவு சதவீதம் (தோராயமாக)**

| | |
|---|---|
| திருவள்ளூர் | 68.73 |
| சென்னை | 59.40 |
| காஞ்சிபுரம் | 69.47 |
| வேலூர் | 72.31 |
| கிருஷ்ணகிரி | 74.23 |
| தருமபுரி | 77.23 |
| திருவண்ணாமலை | 75.63 |
| விழுப்புரம் | 75.51 |
| சேலம் | 75.33 |
| நாமக்கல் | 77.91 |
| ஈரோடு | 72.82 |
| நீலகிரி | 69.24 |
| கோவை | 66.98 |
| திண்டுக்கல் | 74.04 |
| கரூர் | 77.60 |
| திருச்சி | 71.38 |
| பெரம்பலூர் | 77.08 |
| கடலூர் | 73.67 |
| நாகப்பட்டினம் | 69.62 |
| திருவாரூர் | 74.90 |
| தஞ்சாவூர் | 72.17 |
| புதுக்கோட்டை | 74.47 |
| சிவகங்கை | 68.49 |
| மதுரை | 68.14 |
| தேனி | 70.47 |
| விருதுநகர் | 72.52 |
| ராமநாதபுரம் | 67.16 |
| தூத்துக்குடி | 70.00 |
| திருநெல்வேலி | 65.16 |
| கன்னியாகுமரி | 68.41 |
| அரியலூர் | 77.88 |
| திருப்பூர் | 67.48 |
| கள்ளக்குறிச்சி | 78.00 |
| தென்காசி | 70.95 |
| செங்கல்பட்டு | 62.77 |
| திருப்பத்தூர் | 74.66 |
| ராணிப்பேட்டை | 74.36 |

---

**2. ஒரே நாளில் 43 இலட்சம் கரோனா தடுப்பூசிகள்: இந்தியா சாதனை**

COVID-19'க்கு எதிரான போராட்டத்தில் புதிய சாதனையாக, கடந்த 24 மணி நேரத்தில் 43 இலட்சம் தடுப்பூசிகள்போட்டு இந்தியா புதிய சாதனை படைத்துள்ளது. இதுவரை நாட்டில் ஒரே நாளில் போடப்பட்ட தடுப்பூசி எண்ணிக்கையில் இது மிகவதிகம்.

---

**3. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக என்.வி. ரமணா நியமனம்**

உச்ச நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக நீதிபதி என்.வி. ரமணா நியமிக்கப்பட்டுள்ளார். உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக என்.வி. ரமணாவை நியமித்து குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார். இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்டிருக்கும் அறிவிக்கையில், நீதிபதி ரமணா, உச்சநீதிமன்றத்தின் 48ஆவது தலைமை நீதிபதியாக ஏப்ரல்.24 அன்று பதவியேற்றுக் கொள்கிறார்.

தற்போது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருக்கும் எஸ்.ஏ. போப்டே அவர்களின் பதவிக்காலம் ஏப்.23'இல் நிறைவு பெறுவதை அடுத்து, புதிய தலைமை நீதிபதி நியமிக்கப்பட்டுள்ளார். உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் என்.வி. ரமணா, 2022ஆம் ஆண்டு ஆக.26 வரை இப்பதவியை வகிப்பார்.

---

**4. புதிய வருவாய்த் துறைச் செயலராக தருண் பஜாஜ் நியமனம்**

பொருளாதார விவகாரங்கள் துறையின் செயலர் தருண் பஜாஜ், மத்திய அரசின் புதிய வருவாய்த் துறைச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய அரசின் பல்வேறு துறைகளின் செயலர்கள் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக, மத்திய பணியாளர்–பயிற்சித்துறை அமைச்சகம் பிறப்பித்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: ஹரியானாவைச் சேர்

–ந்த மூத்த இ ஆ ப அதிகாரியும், பொருளாதார விவகாரங்கள் துறை செயல–ருமான தருண் பஜாஜ், வருவாய்த்துறையின் புதிய செயலராக நியமிக்கப்–பட்டுள்ளார். அவர் வகித்த பொருளாதார விவகாரங்கள் துறையின் செயல–ராக மூத்த இ ஆ ப அதிகாரி அஜய் சேத் நியமிக்கப்பட்டுள்ளார்.

உள்துறை கூடுதல் செயலரான ஞானேஷ் குமார், நாடாளுமன்ற விவகார–ங்கள் அமைச்சகத்தின் செயலராகவும், தகவல், ஒலிபரப்பு அமைச்சகத்தி–ன் சிறப்புச்செயலர் அலி ராஸா ரிஸ்வி, பொதுத்துறை நிறுவனங்கள் துறையின் செயலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். வருவாய்த்துறை சிறப்பு செயலர் அனில்குமார் ஜா, பழங்குடியினர் விவகாரங்கள் துறையின் செய–லராக நியமிக்கப்பட்டுள்ளார் என அவ்வுத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**5. நடப்பாண்டில் இந்தியப் பொருளாதாரம் வளரும்: IMF கணிப்பு**

நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 12.5 சதவீதம் அதிகரிக்கும் என்று பன்னாட்டு நிதியம் கணித்துள்ளது. உலக வங்கியின் வருடாந்திர மாநாடு விரைவில் நடைபெறவுள்ளது. இதையொட்டி, வாஷிங்டனைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் பன்னாட்டுச் செலவாணி நிதியம் (IMF) அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டிருப்பதாவது: நடப்பு நிதியாண்டின் இந்தியாவின் பொரு–ளாதார வளர்ச்சி 12.5 சதவீதம் அதிகரிக்கும். இது, அடுத்த நிதியாண்டில் 6.9% அதிகரிக்கும். கடந்த ஆண்டு கரோனா பரவலால் பாதிப்புகள் இருந்த போதிலும், சீனாவின் பொருளாதாரம் 2.3 சதவீதம் வளர்ச்சி அடைந்தது.

நடப்பு நிதியாண்டில் அது, 8.6 சதவீதமாகவும், அடுத்த நிதியாண்டில் 5.6 சதவீதமாகவும் இருக்கும். நடப்பு நிதியாண்டில் சீனாவைவிட இந்தியாவி–ன் பொருளாதார வளர்ச்சி அதிகமாக இருக்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து IMF அமைப்பின் தலைமைப் பொருளா–தார நிபுணர் கீதா கோபிநாத் கூறியதாவது: கடந்த 2020'இல் சர்வதேச பொருளாதாரம் 3.3 சதவீதம் சரிவைச் சந்தித்தது.

நடப்பு நிதியாண்டிலும், அடுத்த நிதியாண்டிலும் பொருளாதாரம் மீண்டும் வரும் என கணித்துள்ளோம். நடப்பு நிதியாண்டில் சர்வதேச பொருளாதார வளர்ச்சி 6%ஆகவும், 2022'இல் 4.4%ஆகவும் இருக்கும் என்றார் அவர்.

---

**6. ஒருநாள் தரவரிசை: ஷிகா பாண்டே முன்னேற்றம்**

ஐசிசியின் ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் பௌலர்கள் பிரிவில் இந்திய வீராங்கனை ஷிகா பாண்டே முதல் 10 இடங்களுக்குள்ளாக முன்னேறியு–ள்ளார். ICC வெளியிட்ட திருத்தப்பட்ட தரவரிசையின்படி, ஷிகா 610 புள்ளிகளுடன் 10ஆவது இடத்துக்கு திரும்பியுள்ளார்.

சக வீராங்கனைகளான ஜுலன் கோஸ்வாமி 681 புள்ளிகளுடன் 5ஆம் இடத்திலும், பூனம் யாதவ் 641 புள்ளிகளுடன் 8ஆவது இடத்திலும் நீடிக்கி–ன்றனர். ஆஸ்திரேலிய தரப்பில் மீகன் ஷட் 762 புள்ளிகளுடன் 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். அந்த அணியின் நிகோலா கேரி முதல் முறையாக 37ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இப்பிரிவில் ஆஸ்திரேலி–யாவின் ஜெஸ் ஜோனசன் (793) முதலிடத்தில் தொடர, தென் ஆப்பிரிக்கா–வின் மாரிஸானே காப் 747 புள்ளிகளுடன் 3ஆம் இடத்தில் இருக்கிறார்.

பேட்ஸ்வுமன்கள் வரிசையில் இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா 710 புள்ளிகளுடன் 7ஆம் இடத்தில் இருக்க, கேப்டன் மிதாலி ராஜ் 709 புள்ளிக–ளுடன் 8ஆவது இடத்தில் இருக்கிறார். ஆஸ்திரேலியாவின் அலிஸா ஹீலி மீண்டும் 3ஆவது இடத்துக்கு (753) வந்துள்ளார். சக வீராங்கனை எலிஸ் பெரி 701 புள்ளிகளுடன் 9ஆவது இடத்தில் இருக்கிறார். அந்த அணியின் ஆஷ்லி கார்டனர் முதன்முறையாக 30ஆவது இடத்தைப் பிடித்–துள்ளார். நியூஸிலாந்தின் லௌரென் டௌன் 55 இடங்கள் முன்னேறி 62ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இப்பிரிவில் இங்கிலாந்தின் டேமி பியூ–மௌண்ட் 765 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கிறார். தென் ஆப்பிரிக்–காவின் லிஸெலெ லீ 758 புள்ளிகளுடன் 2ஆம் இடத்தைப்பிடித்துள்ளார்.

ஆல்–ரவுண்டர்கள் பிரிவில் ஒரே இந்தியராக தீப்தி சர்மா 343 புள்ளிகளுட–ன் 5ஆவது இடத்தில் தொடர்கிறா'. ஆஸ்திரேலியாவின் எலிஸ் பெரி (461), தென் ஆப்பிரிக்காவின் மாரிஸானே காப் (418), மேற்கிந்தியத் தீவுக–ளின் ஸ்டெபானி டெய்லர் (410) ஆகியோர் இப்பிரிவில் முறையே முதல் 3 இடங்களில் உள்ளனர்.

---

**7. உலக தடகள ரிலே: இந்திய அணியில் தனலட்சுமி, ஹிமா தாஸ்**

உலக தடகள ரிலே போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியில் தமிழக வீராங்கனை தனலட்சுமியுடன் ஹிமா தாஸ், டூட்டி சந்த் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

போலந்தில் மே.1 மற்றும் 2 அன்று நடக்கவுள்ள இப்போட்டி, டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு தகுதிபெறுவதற்கான வாய்ப்பு வழங்கும் போட்டியாகும். இப்போட்டியில் ஆடவருக்கான 4*400 மீட்டர் ரிலே பிரிவுக்காக அமோஜ் ஜேக்கப், நாகநாதன் பாண்டி, முகமது அனாஸ் யாஹியா, ஆரோக்கிய ராஜீவ், சர்தாக் பாம்ப்ரி, அய்யாசாமி தருண், நிர்மல் நோவா டாம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மகளிருக்கான 4*400 மீட்டா' ரிலேவில் பூவம்மா, சுபா வெங்கடேஷ், கிரன், அஞ்சலி தேவி, ரேவதி, விஸ்மயா, ஜிஸ்னா மேத்யூ ஆகியோர் களம் காணுகின்றனர். மகளிருக்கான 4*100 மீட்டர் ரிலேவுக்காக தனலட்சுமி, டூட்டி சந்த், ஹிமா தாஸ், அர்ச்சனா சுசீந்திரன், ஹிமாஸ்ரீ ராய், தானேஷ்வரி ஆகியோர் தேர்வாகியுள்ளனர்.

இப்போட்டியில் முதல் 8 இடங்களுக்குள்ளாக வரும் அணிகள் நேரடியாக டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு தகுதிபெறும். தோகாவில் 2019'இல் நடைபெற்–ற உலக சாம்பியன்ஷிப்பில் பங்கேற்றதன்மூலம் 4*400 மீட்டருக்கான கலப்பு அணிகள் பிரிவில் இந்தியா ஏற்கனவே டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு தகுதிபெற்றுவிட்டது.

---

**8. டோக்கியோ ஒலிம்பிக்: வட கொரியா பங்கேற்கவில்லை**

கரோனா சூழல் காரணமாக டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்கப்போவ–தில்லை என்று வட கொரியா அறிவித்துள்ளது. உலக அளவிலான கரோ–னா பாதிப்பிலிருந்து தங்களது விளையாட்டு வீரர், வீராங்கனைகளை பாதுகாக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அந்நாட்டு விளையா–ட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த மார்ச் 25 அன்று நடந்த தேசிய ஒலிம்பிக் கமிட்டி கூட்டத்தின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அந்த அமைச்சகத்தின் வலைதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை தங்களிடம் அதிகாரப்பூர்வமாக வட கொரியா இன்னும் தங்களிடம் உறுதிப்படுத்தவில்லை என்று ஜப்பான் ஒலிம்பிக் கமிட்டி தெரி–வித்துள்ளது. வட கொரியா – தென் கொரியா இடையே சுமூகமற்ற உறவு உள்ளபோதிலும், கடந்த 2018ஆம் ஆண்டு தென் கொரியாவில் நடந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க 22 போட்டியாளர்களையும், அரசு அதிகாரிகளையும், ஊடகத்தினரையும் வட கொரியா அனுப்பியிருந்த–து குறிப்பிடத்தக்கது.

---

**9. ஏப்ரல்.7 – உலக சுகாதார நாள்.**

---

**10. பசுமை தீர்ப்பாய உறுப்பினர்களாக தமிழ்நாட்டைச் சார்ந்த மூன்று பேர் நியமனம்**

தேசிய பசுமை தீர்ப்பாய உறுப்பினர்களாக தமிழ்நாட்டைச் சார்ந்த நீதிபதி எம் சத்தியநாராயணன், முன்னாள் தலைமைச்செயலர் கிரிஜா வைத்திய நாதன், முன்னாள் வருவாய் நிர்வாக ஆணையர் கே சத்யகோபால் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்தவழக்குகளை விசாரிக்க தில்லியில் தேசிய பசுமை தீர்ப்பாய முதன்மை அமர்வு உருவாக்கப்பட்டது. அதன்தொடர்ச்சியா–க சென்னை கொல்கத்தா, புனே, போபால் ஆகிய இடங்களிலும் மண்டல அமர்வுகள் தொடங்கப்பட்டன. இவற்றுக்கு நீதித்துறை உறுப்பினராக நியமிக்க தமிழ்நாட்டைச் சார்ந்த உயர்நீதிமன்ற நீதிபதி எம் சத்தியநாராய–ணன், முன்னாள் தலைமைச்செயலர் கிரிஜா வைத்தியநாதன், முன்னா–ள் வருவாய் நிர்வாக ஆணையர் கே சத்யகோபால் பெயர்களை பரிந்து–ரைத்து மத்திய அரசுக்கு மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் கருத்துரு அனுப்பியது. அதற்கு மத்திய அரசுகடந்த ஆண்டு ஒப்புதல் அளித்தது.

அதனடிப்படையில் புனேயில் உள்ள பசுமை தீர்ப்பாய மேற்கு மண்டல அமர்வின் நீதித்துறை உறுப்பினராக எம் சத்தியநாராயணனையும், தொழில்நுட்ப உறுப்பினராக கே சத்யகோபாலையும், சென்னை தென் மண்டல அமர்வின் தொழில்நுட்ப உறுப்பினராக கிரிஜா வைத்தியநாத–னையும் நியமித்து தீர்ப்பாயத் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

---

**1.** 'பூர்வகுடி மற்றும் பழங்குடி மக்களின் வன ஆளுகை' என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?

அ) உலக வங்கி

**ஆ) உணவு & உழவு அமைப்பு ☑**

இ) ஐக்கிய நாடுகள்

ஈ) ஆசிய வளர்ச்சி வங்கி


✓ ஐநா அவையின் உணவு மற்றும் உழவு அமைப்பானது அண்மையில், 'பூர்வீக மற்றும் பழங்குடி மக்களின் வன ஆளுகை' என்ற அறிக்கையை வெளியிட்டது. அறிக்கையின்படி, லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியனில் காடழிப்பு விகிதங்கள், பூர்வீக மற்றும் பழங்குடி பகுதிகளில் கணிசமாகக் குறைவாக உள்ளன.

✓ லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் பூர்வகுடிகளின் மேம்பாட்டுக்கான நிதியம், இந்த அறிக்கையை கூட்டாக இணைந்து வெளியிட்டது.

---

**2.** 'CACTus மற்றும் CIISCO' என்பது அறிவியல் & தொழில்நுட்பத் துறையால் தொடங்கப்பட்ட மென்பொருளாகும். இது எத்துறையுடன் தொடர்புடையது?

**அ) சூரிய திட்டம் ☑**



ஆ) நீடித்த வேளாண்மை

இ) இமயமலை சுற்றுச்சூழல் அமைப்பு

ஈ) நீர் திட்டம்

✓ சூரியனிலிருந்து வெளியேற்றப்படும் வளியின் மிகப்பெரிய குமிழ்களை கண்டறிய அறிவியலாளர்கள் ஒரு புதிய நுட்பத்தை உருவாக்கியுள்ளதா–க அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அறிவித்துள்ளது. இப்புதிய நுட்பம், இந்தியாவின் முதல் சூரியனை ஆராயும் திட்டமான ஆதித்யா–L1'இல் பயன்படுத்தப்படும். Computer Aided CME Tracking Software (CACTus) மற்றும் CMEs Identification in Inner Solar Corona (CIISCO) ஆகிய இரு மென்பொருட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

---

**3.** COVID–19'க்கு எதிரான உலகின் முதல் விலங்கு தடுப்பூசியை அறிவித்துள்ள நாடு எது?

அ) சீனா

**ஆ) ரஷியா ☑**



இ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஈ) இஸ்ரேல்

✓ COVID–19'க்கு எதிரான உலகின் முதல் விலங்கு தடுப்பூசி ரஷியாவில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதற்கு, 'Carnivac–Cov' எனப் பெயர் சூட்டப்பட்ட–டுள்ளது. நாட்டின் வேளாண் பாதுகாப்பு கண்காணிப்புக் குழுவான ரோ–சல்கோஸ்னாட்ஸரின் கூற்றுப்படி, தடுப்பூசிபோட்ட ஆறு மாதங்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி நீடிக்கும். இந்தத் தடுப்பூசியின் பயன்பாடு வைரஸ் பிறழ்வுகளின் வளர்ச்சியைத் தடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**4.** 'முக்திஜோதா உதவித்தொகை திட்டம்' என்பது கீழ்காணும் எந்த நாட்டின் மாணாக்கர்களுக்காக இந்திய அரசால் வழங்கப்படுகிறது?

அ) நேபாளம்



**ஆ) வங்காளதேசம் ☑**

இ) இலங்கை

ஈ) மியான்மர்

✓ இந்திய அரசு தனது புதிய முக்திஜோதா உதவித்தொகை திட்டத்தின் கீழ் வங்காளதேச விடுதலைப் போராளிகளின் 2000 குடும்பத்தினருக்கு உதவித்தொகை அறிவித்துள்ளது. கடந்த 2017ஆம் ஆண்டில் இத்திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம், 5 ஆண்டுகாலத்திற்குள், வங்கதேசத்தில் உள்ள 10,000 மாணவர்களுக்கு பயனளிப்பதை நோக்கமாகக் கொண்–டுள்ளது. இந்த ஆண்டு, மேல்நிலை மற்றும் இளங்கலை பிரிவுகளைச் சேர்ந்த தலா 1000 மாணவர்களுக்கு அவர்களது கணக்கில் நேரடியாக உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

---

**5.** 'லா பெரௌஸ்' என்பது எந்த நாட்டால் நடத்தப்படவுள்ள பாதுகாப்–புப் பயிற்சியாகும்?

அ) இத்தாலி



ஆ) இஸ்ரேல்

**இ) பிரான்ஸ் ☑**

ஈ) அமெரிக்கா

✓ ஏப்ரல் 5 முதல் 7 வரை வங்காள விரிகுடாவில் 'லா பெரௌஸ்' என்ற கூட்டு கடற்படைப் பயிற்சியை பிரான்ஸ் நடத்தவுள்ளது. இந்தியா தனது QUAD கூட்டாளர்களான ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளுடன் இந்தப் பயிற்சியில் இணைய உள்ளது.

✓ இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் USA ஆகிய நாடுகளைச் சார்ந்த கடற்படைக் கப்பல்களுடன் இரு பிரெஞ்சு கப்பல்கள் இணைந்து இதில் பங்கேற்கவுள்ளது. இந்தியாவும் பிரான்சும் இணைந்து இருதரப்பு கடற்படைப் பயிற்சியான 'வருணா'வை இந்த மாத இறுதியில் மேற்கொள்ளவுள்ளன.

---

**6.** விரைவான சாலைகட்டுமானத்திற்காக உலக சாதனை படைத்த நாடு எது?

அ) சீனா



ஆ) ஜப்பான்

**இ) இந்தியா ☑**

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

✓ மிகவிரைவான சாலை கட்டுமானத்திற்கான உலக சாதனையை இந்தியா படைத்திருப்பதாக மத்திய அமைச்சர் நிதின்கட்கரி அறிவித்தார். இந்தியா, 24 மணி நேரத்திற்குள் 2.5 கிமீ நீள நான்கு வழிச்சாலையை கான்கிரீட் சாலையாக அமைத்து கின்னஸ் உலக சாதனை படைத்திரு–ப்பதாக நுழைந்துள்ளது. மேலும், 24 மணி நேரத்திற்குள்ளாக சோலாப்பூர்–பீஜப்பூர் சாலையை 25 கிமீ நீள நிலக்கீல் சாலையாகவும் அமைத்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. 2020–21 நிதியாண்டில் ஒரு நாளைக்கு 37 கிமீ சாலை என்ற சராசரி விகித சாதனையும் படைக்கப்பட்டுள்ளது.

---

**7.** இந்தியாவில் உள்ள ஜப்பானிய ஆட்டோமொபைல் உற்பத்தியா–ளர்களுக்கு கடன் வழங்குதற்காக, ஜப்பானின் JBIC உடன் கூட்டு சேர்ந்துள்ள வங்கி எது?

அ) பஞ்சாப் தேசிய வங்கி

**ஆ) பாரத வங்கி ☑**

இ) கனரா வங்கி

ஈ) ஐசிஐசிஐ வங்கி


✓ இந்தியாவின் மிகப்பெரிய கடன் வழங்குநரான பாரத வங்கியானது (SBI) ஜப்பான் வங்கியுடன் $1 பில்லியன் அமெரிக்க டாலர் வரையிலான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதாக அறிவித்துள்ளது.

✓ JBIC முற்றிலும் ஜப்பான் அரசாங்கத்திற்கு சொந்தமான வங்கியாகும். இக்கடன், இந்தியாவில் உள்ள ஜப்பானிய ஆட்டோமொபைல் உற்பத்தியாள–ர்களின் வணிக நடவடிக்கைகளுக்கான நிதியை சீராக ஊக்குவிக்க விரும்புகிறது. SBI கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் JBIC'உடன் இதேபோன்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. பயனாளிகளில் வழங்கு–நர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் இறுதிப்பயனர்கள் அடங்குவர்.

---

**8.** அதன் காந்தப்புலங்களை பயன்படுத்தி M 87 கருந்துளையைக் கைப்பற்றிய தொலைநோக்கி எது?

அ) ஹப்பிள் தொலைநோக்கி



**ஆ) ஈவண்ட் ஹாரிசான் தொலைநோக்கி ☑**

இ) Giant Magellan தொலைநோக்கி

ஈ) Thirty Meter தொலைநோக்கி

✓ சமீபத்தில், ஈவண்ட் ஹாரிசான் தொலைநோக்கி கொண்டு பணிபுரியும் வானியலாளர்களால் கருந்துளையின் புதிய தோற்றம் வெளியிடப்பட்டது. இந்தத் தோற்றத்தில், வானியலாளர்கள், துளைக்கு அருகேயுள்ள காந்தப் புலங்களை வரைபடமாக்கியுள்ளனர்.

- ✓ இந்த ஈவண்ட் ஹாரிசான் தொலைநோக்கி, முதன்முதலில் 2018ஆம் ஆண்டில், கருந்துளையின் படங்களை வெளிப்படுத்தியது. இக்கருந்துளை, விண்மீன் பேரடை M87'இல் 55 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.

---

**9. நகரங்கள் மற்றும் தேசிய தலைநகர பிராந்தியத்திற்கு அருகில் அனல்மின்னுற்பத்தி நிலையங்கள் அமைத்தல் தொடர்பான விதிகளை திருத்தியுள்ள அமைச்சகம் எது?**



அ) உள்துறை அமைச்சகம்

ஆ) எரிசக்தி அமைச்சகம்

இ) புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

**ஈ) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் ☑**

- ✓ மத்திய சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள்தொகைகொண்ட தேசிய நகரங்கள் மற்றும் தேசிய தலைநகர பிராந்தியத்தில் 10 கிமீ தூரத்திற்குள் அனல் மின்னுற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படுவது தொடர்பான விதிகளை திருத்தியுள்ளது. இத்திருத்தப்பட்ட விதிகளின்படி, சில உமிழ்வு விதிகள், 2022ஆம் ஆண்டின் இறுதிக்குள் அனல் மின்னுற்பத்தி நிலையங்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

---

**10. அவையொழுங்கைப் பராமரிப்பதற்காக சட்டமன்றத்தில் அதன் விதிகளை திருத்திய மாநிலம் எது?**

அ) பீகார்

**ஆ) ஹரியானா ☑**

இ) உத்தர பிரதேசம்

ஈ) மத்திய பிரதேசம்

GOVERNMENT OF HARYANA

- ✓ ஹரியானா மாநிலம் அண்மையில் அதன் மாநில சட்டமன்றத்தில் அதன் நடைமுறை&நடத்தை விதிகளின்கீழ் பல்வேறு விதிகளை திருத்தியது. இந்தப் புதிய விதிகளில், குறைந்தது 2 அமைச்சர்களாவது அவையில் இருப்பதை கட்டாயமாக்குதல் மற்றும் அமளியின்போது, உறுப்பினர்கள், அவையில் ஆவணங்களை கிழிக்கவிடாமல் தடுப்பது ஆகியவை அடங்கும். இது அவையொழுங்கைப்பராமரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழ்நாட்டில் 72.78% வாக்குப் பதிவு: தலைமைத் தேர்தல் அதிகாரி அதிகாரபூர்வ அறிவிப்பு**

தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமாக 72.78 சதவீத வாக்குகள் பதிவானதாக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார். மேலும், மாவட்ட வாரியாகவும் வாக்குப் பதிவு சதவீத விவரங்களை அவர் வெளியிட்டுள்ளார். தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு கடந்த 06-04-2021 அன்று நடைபெற்றது. இந்தத் தேர்தலில் அதிகபட்சமாக கரூர் மாவட்டத்தில் 83.92 சதவீதமும், அரியலூர் மாவட்டத்தில் 82.47 சதவீதமும், தருமபுரி மாவட்டத்தில் 82.35 சதவீதமும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 80.14 சதவீதமும், நாமக்கல் மாவட்டத்தில் 79.92 சதவீத வாக்குகளும் பதிவாகின. குறைந்தபட்சமாக சென்னை மாவட்டத்தில் 59.09 சதவீதமும், திருநெல்வேலியில் 66.65 சதவீத வாக்குகளும் பதிவாகின. மாவட்ட வாரியாக வாக்குப் பதிவு விவரங்கள்: (சதவீதத்தில்...)

கரூர் – 83.92.

அரியலூர் – 82.47.

தருமபுரி – 82.35.

கள்ளக்குறிச்சி – 80.14.

நாமக்கல் – 79.72.

சேலம் – 79.22.

பெரம்பலூர் – 79.09.

திருவண்ணாமலை – 78.62.

விழுப்புரம் – 78.56.

இராணிப்பேட்டை – 77.92.

திருப்பத்தூர் – 77.33.

கிருஷ்ணகிரி – 77.30.

திண்டுக்கல் – 77.13.

ஈரோடு – 77.07.

திருவாரூர் – 76.53.

கடலூர் – 76.50.

புதுக்கோட்டை – 76.41.

நாகப்பட்டினம் – 75.48.

தஞ்சாவூர் – 74.13.

திருச்சி – 73.79.

விருதுநகர் – 73.77.

வேலூர் – 73.73.

தென்காசி – 72.63.

காஞ்சிபுரம் – 71.98.

தேனி – 71.75.

திருவள்ளூர் – 70.56.

மதுரை – 70.33

தூத்துக்குடி – 70.20.

திருப்பூர் – 70.12.

நீலகிரி – 69.68.

இராமநாதபுரம் – 69.60.

சிவகங்கை – 68.94.

கோவை – 68.70.

கன்னியாகுமரி – 68.67.

செங்கல்பட்டு – 68.18.

திருநெல்வேலி – 66.65.

சென்னை – 59.06.

---------------------

மொத்தம் – 72.78.

---------------------

**ஊரகப் பகுதிகளில் வாக்கு சதவீதம் அதிகம்:**

மாநகராட்சி தொகுதிகளில் மிகவும் குறைவு தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பாலக்கோடு தொகுதியில் அதிகபட்சமாக 87.33 சதவீத வாக்குகள் பதிவாகின. அதைத்தொடர்ந்து கரூர் மாவட்டம் குளித்தலை தொகுதியில் 86.15 சதவீத வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சென்னையில் உள்ள 16 தொகுதிகளில் 11 தொகுதிகளில் 60 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளே பதிவாகியுள்ளன. தமிழ்நாட்டிலேயே மிகக்குறைந்த அளவாக வில்லிவாக்கம் தொகுதியில் 55.52 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

---

**2. AC., LED விளக்குகள் தயாரிப்பு: ₹6,238 கோடியில் உற்பத்திசார் ஊக்குவிப்பு திட்டம்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

குளிர்சாதனங்கள் (AC), LED மின்விளக்குகள் தயாரிப்பில் ₹6,238 கோடி செலவில் உற்பத்தி சார்ந்த ஊக்குவிப்பு திட்டத்தை செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: உள்நாட்டில் குளிர்சாதனங்கள், LED விளக்குகள் ஆகியவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், இந்திய தயாரிப்புகள் சர்வதேச அளவிலான போட்டியில் பங்கேற்கவும் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த மின்சாதனங்களை ஐந்து ஆண்டுகள் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களுக்கு 4 முதல் 6 சதவீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

**சூரியமின்சக்தி தகடுகள்:** உற்பத்தி சார்ந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் ₹4,500 கோடி முதலீட்டில் சூரிய மின்தகடுகளை தயாரிப்பதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. 13 முக்கிய துறைகளில் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும்

மத்திய பட்ஜெட்டில் உற்பத்திசார்ந்த ஊக்குவிப்பு திட்டத்துக்கு ₹1.97 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மின்சாதனங்கள், மருந்துப்பொருள்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள், உணவு தயாரிப்பு, LED விளக்கு மற்றும் குளிர்சாதனங்கள், சூரியமின்சக்தி தகடுகள் ஆகிய 6 துறைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**கல்வி, ஆராய்ச்சியில் ஒத்துழைப்பு: இந்தியா, ஜப்பானிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்:**

கல்வி, ஆராய்ச்சி ஒத்துழைப்பு மற்றும் பகிர்தலுக்காக இந்திய அரசின் விண்வெளித் துறையின்கீழ் இயங்கும் தேசிய வளிமண்டல ஆராய்ச்சி ஆய்வகம், ஜப்பானின் கியோடோவில் உள்ள கியோடோ பல்கலைக்கழகத்தின் நீடித்த மனித மண்டல ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இந்த ஒப்பந்தம், இந்தியாவில் 2020 நவம்பர் 4ஆம் தேதியும், ஜப்பானில் 2020 நவம்பர் 11ஆம் தேதியும் கையெழுத்திடப்பட்டு அஞ்சல் மூலம் பரிமாறிக்கொள்ளப்பட்டது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து மத்திய அமைச்சரவைக்கு எடுத்துரைக்கப்பட்டது.

---

### 3. காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக எஸ் மாதேஸ்வரன் பொறுப்பேற்பு

காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக S மாதேஸ்வரன் பொறுப்பேற்றுக்கொண்டார். மத்திய உயர்கல்வித்துறை பரிந்துரையின்படி காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் K M அண்ணாமலைமூலம், புதிய துணைவேந்தராக S மாதேஸ்வரன் (58) நியமிக்கப்பட்டார். இந்தப் பதவியில் அவர் 5 ஆண்டு காலம் நீடிப்பார் என பல்கலை பதிவாளர் வி பெ ரா சிவக்குமார் தெரிவித்துள்ளார்.

---

### 4. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தோர் எண்ணிக்கை 63.63 இலட்சம்

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருப்போரின் எண்ணிக்கை 63.63 இலட்சமாக உள்ளது. கடந்த பிப்ரவரிமாத நிலைவரப்படி, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்து காத்திருப்போரின் விவரங்களை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. அதன் விவரம்: 18 வயதுக்கட்பட்ட பள்ளி மாணவர்கள் 16.87 இலட்சம் பேரும், கல்லூரி மாணவர்கள் 12.98 இலட்சமும், 24 முதல் 35 வயது வரையிலானோர் 22.78 இலட்சம் பேரும், 36 வயது முதல் 57 வயது வரையிலானோர் 10.89 இலட்சம் பேரும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்களது பெயர்களைப் பதிவுசெய்துள்ளனர்.

58 வயதுக்கு மேற்பட்ட 8, 841 பேருடன் சேர்த்து அரசுவேலைக்காக பதிவு செய்து காத்திருக்கும் மொத்த நபர்களின் எண்ணிக்கை 63, 63, 122 ஆக உள்ளது என தமிழக அரசு வெளியிட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### 5. பிரதமரின் முத்ரா திட்டம் மூலம் ஆறு ஆண்டுகளில் 28 கோடி பேருக்கு ₹14.96 இலட்சம் கோடி கடனுதவி

பிரதம மந்திரி முத்ரா யோஜனா திட்டத்தின்கீழ் கடந்த ஆறு ஆண்டுகளில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் 28.68 கோடி பேருக்கு ₹14.96 லட்சம் கோடி வரை கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய நிதித் துறை தெரிவித்துள்ளது. பிரதமர் மோடி தலைமையிலான பாஜக ஆட்சியில் 2015ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது முத்ரா திட்டம்.

பொருளாதார ரீதியாக புறக்கணிக்கப்பட்ட வகுப்பினர், வளர்ந்து வரும் தொழில்முனைவோர், வர்த்தகம் மற்றும் சேவைத்துறை, வேளாண் சார்புடைய தொழில்முனைவோர், பெருநிறுவனங்கள் அல்லாத சிறு குறு நிறுவனங்கள் போன்றோர் கடன் பெறும் வகையில் மூன்று வகையான முத்ரா திட்டம் கொண்டுவரப்பட்டது. வங்கிகள், வங்கிசாரா நிதி நிறுவனங்கள், ஊரக வட்டார வங்கிகள்மூலம் இக்கடனுதவிகள் வழங்கப்படுகின்றன. இதில் அதிகபட்சம் ₹10 இலட்சம் வரை கடன் அளிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்தத் திட்டத்தில் கடந்த மார்ச்.19 வரை அடைந்துள்ள இலக்குகள் குறித்த பட்டியலை மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ளது. சிசு, கிஷோர், தருண் ஆகிய மூன்று திட்டங்கள் வாயிலாக கடன் அளிக்கப்படுகிறது. இதில் சிசு திட்டத்தில் ₹50,000 வரையிலும், கிசோர் திட்டத்தில் ₹5 இலட்சம் வரையிலும், தருண் திட்டத்தில் ₹10 இலட்சம் வரையிலும் கடன் அளிக்கப்படுகிறது.

முத்ரா திட்டம் தொடங்கப்பட்ட ஆறு ஆண்டுகளில் 14.96 இலட்சம் கோடி 28.68 கோடி பேருக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. நெருக்கடியான 2020–21 நிதியாண்டிலும் 4.20 கோடி பேருக்கு 2.66 லட்சம் கோடி கடன் கொடுக்கப்பட்டுள்ளன. கடன்பெற்றவர்களில் சராசரியாக ₹52,000 பெற்றுள்ளனர். 88% கடன் 'சிசு' வகை கடனாக இருந்தது. 24% பேர் புதிய தொழில்முனைவோராக இருந்தனர். பாலின ரீதியாக பார்த்தால் அதிக கடன் பெற்றவர்களில் 68 சதவீதம் பேர் பெண் தொழில்முனைவோர்கள்.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் 22.53%, சிறுபான்மையினர் 11 சதவீதம் என உள்ளனர். இந்தக் கடன்களால் 2015 முதல் 2018 வரை சுமார் 1.12 கோடி பேர் வேலைவாய்ப்பை பெற்றனர். இதில், பெண்கள் 69 இலட்சம் பேராக இருந்தனர் என நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### 6. பிரதமர் மோடியுடன் ஜான் கெரி சந்திப்பு: பருவநிலை மாற்ற மாநாடு குறித்து ஆலோசனை

பிரதமர் மோடியை அமெரிக்க அதிபரின் பருவநிலை மாற்றத்துக்கான சிறப்புத் தூதர் ஜான் கெரி சந்தித்துப்பேசினார். இந்தச் சந்திப்பின்போது இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவிருக்கும் ஐ.நா. பருவநிலை மாற்ற மாநாடுகுறித்து அவர்கள் விவாதித்தனர்.

---

### 7. ₹1 லட்சம் கோடி மதிப்பிலான அரசு நிதிப்பத்திரங்கள் வாங்கப்படும்

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில், அரசு வெளியிடும் ₹1 இலட்சம் கோடி மதிப்பிலான நிதிப்பத்திரங்களை நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் வாங்கவுள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி உறுதியளித்துள்ளது. நடப்பு 2021–22ஆம் நிதியாண்டில் இந்திய ரிசர்வ் வங்கியின் முதலாவது நிதிக்கொள்கைக்குழுக்கூட்டம் மும்பையில் நடைபெற்றது. RBI ஆளுநர் சக்திகாந்த தாஸ் உட்பட அக்குழுவின் 6 உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறித்த முக்கிய ஆலோசனையில் ஈடுபட்டனர்.

**முதலீட்டு நிதி:**

பொருளாதாரத்தில் பணப்புழக்கத்தை அதிகரிக்கும் நோக்கில் வங்கிகளுக்கு மூலதன நிதியை வழங்குவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, NABARD வங்கிக்கு ₹25,000 கோடி, சிறு தொழில்நிறுவனங்கள் வளர்ச்சி வங்கிக்கு ₹15,000 கோடி, தேசிய வீட்டுவசதி வங்கிக்கு ₹10,000 கோடி வழங்கப்படவுள்ளது. நடப்பு நிதியாண்டில் வழங்கப்படவுள்ள இந்த மூலதன நிதியானது, வங்கிகளின் கடன் வழங்கும் திறனை அதிகரிக்கும்.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) நடப்பு நிதியாண்டில் 10.5 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் வளர்ச்சி 26.2 சதவீதமாகவும், 2ஆவது காலாண்டில் 8.3 சதவீதமாகவும், 3ஆவது காலாண்டில் 5.4 சதவீதமாகவும், கடைசி காலாண்டில் 6.2 சதவீதமாகவும் இருக்கும்.

---

### 8. இருவருக்கு கரோனா: ஒலிம்பிக் தகுதிப் போட்டியிலிருந்து இந்திய ஜூடோ அணி விலகியது

கிர்ஜிஸ்தானில் நடைபெறும் ஜூடோ போட்டியில் பங்கேற்கச் சென்றிருந்த இந்திய அணியில் இருவருக்கு கரோனா பாதிப்பு ஏற்பட்டதை அடுத்து, அணியினர் அனைவரும் போட்டியிலிருந்து விலகியுள்ளனர். இப்போட்டி, ஆசியா–ஓசியானியா பகுதிக்கான ஒலிம்பிக் தகுதிப்போட்டியாகும். இந்திய அணி ஒன்று, கரோனா பாதிப்பு காரணமாக ஒலிம்பிக் தகுதிப்போட்டியில் இருந்து வெளியேறுவது இது முதல்முறை.

73 கிலோ பிரிவு வீரர் அஜய் யாதவ், 52 கிலோ பிரிவு வீராங்கனை ரிது ஆகியோருக்கு கரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

---

### 9. ஆசிய பாக்ஸிங்: மேரி கோம் தலைமையில் இந்திய அணி

தில்லியில் மே மாதம் நடைபெறவுள்ள ஆசிய சாம்பியன்ஷிப் குத்துச் சண்டை போட்டியில் பங்கேற்பதற்காக மேரி கோம் உள்ளிட்ட வீராங்கனைகள் அடங்கிய இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. மே 21 முதல் 31 வரை நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் மோனிகா (48 கிலோ), மேரி கோம் (51 கிலோ), சாக்ஷி (54 கிலோ), ஜேஸ்மின் (57 கிலோ), சிம்ரன்ஜித் கௌர் (60 கிலோ), பவிலாவ் பசுமதாரி (64 கிலோ), லோவ்லினா போர்கோஹெய்ன் (69 கிலோ), பூஜா ராணி (75 கிலோ), சவீதி பூரா (81 கிலோ) அனுபமா (81 கிலோவுக்கு மேல்) ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இதில், ஆசிய போட்டியில் ஆறு முறை பதக்கம் வென்றுள்ள மேரி கோம், உலக சாம்பியன்ஷிப்பில் இரண்டு பதக்கம் வென்றவரான லோவ்லினா

போர்கோஹெய்ன், சிம்ரஞ்சித் கௌர், பூஜா ராணி ஆகியோர் ஏற்கனவே ஒலிம்பிக் போட்டிக்கு தகுதிபெற்றவர்களாவர்.

---

**10. கல்வராயன் மலை சமவெளி வனப்பகுதியில் வாழும் இருவாச்சி பறவைகள்**

சேலம் மாவட்டம், கல்வராயன் மலை, தருமபுரி மாவட்டம், சித்தேரி மலைப்பகுதி இடையே காணப்படும் சமவெளி வனப்பகுதியில் இந்திய சாம்பல் இருவாச்சி பறவைகள் அதிக அளவில் வாழ்ந்து வருவது வனத் துறையினர் ஆய்வில் தெரியவந்துள்ளது.

சேலம் மாவட்டம், கல்வராயன் மலை, தருமபுரி மாவட்டம், சித்தேரி மலைத்தொடர்களுக்கு இடையே, சேலம் மாவட்டம் தும்பல் மாமாஞ்சியில் தொடங்கி, தருமபுரி மாவட்டம், சேலூர், வேலனூர், சிட்லிங், கோட்டப்பட்டி வரை 50 சதுர மைல் பரப்பளவில் சமவெளி வனப்பகுதி காணப்படுகிறது. இந்தக் காட்டுப்பகுதியில் காட்டெருமை, பல்வேறு இன மான்கள், கரடி உள்ளிட்ட ஏராளமான வனவுயிரிகள் வாழ்ந்து வருகின்றன.

---

**11. நாட்டில் முதல்முறையாக சூரிய ஒளியில் இயங்கும் சோலார் கோழிக்குஞ்சு பொரிப்பான் இயந்திரம் வடிவமைப்பு: தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் புதிய முயற்சி**

சூரிய ஒளியில் இயங்கும் கோழிக்குஞ்சு பொரிப்பான் இயந்திரத்தை, தனியார் கல்லூரி மாணவிகளுடன் இணைந்து கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் வடிவமைத்துள்ளது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சென்னையை அடுத்த மாதவரத்தில் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் இயங்கும் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கருவிமயமாக்கல் ஆய்வு மையம் கால்நடை மற்றும் கோழி வளர்ப்புக்கு தேவையான நவீன கருவிகளை குறைந்த விலையில் வடிவமைத்து விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது.

அந்தவகையில் பல்கலைக்கழகம் ஆய்வு மையம் சார்பில் நாட்டிலேயே முதல்முறையாக சூரிய ஒளியில் இயங்கும் வகையிலான கோழிக்குஞ்சு பொரிப்பான் இயந்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதேபோல், சென்னை பனிமலர் பொறியியல் கல்லூரியின் மாணவிகளுடன் இணைந்து பல்க–லை பேராசிரியர்கள் ர வெங்கடரமணன், கே சங்கிலி மாடன் ஆகியோர் இந்தக் கருவியை வடிவமைத்துள்ளனர்.

---

**12. நடப்பு நிதி ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 12.5%: சர்வதேச செலாவணி நிதியம் கணிப்பு**

கரோனா பரவல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து சென்று ஆண்டுமார்ச் மாதம் இந்தியாவில்ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. உலக நாடுகள் அதன் எல்லைகளை மூடின. இதனால் உலகளாவிய அளவில் பொருளாதா–ரச் செயல்பாடுகள் முடங்கின. வேலையிழப்பு, ஊதியக்குறைப்பை மக்கள் எதிர்கொண்டனர். இதனால் உலகப் பொருளாதாரம் கடும் சரிவுக்கு உள்ளானது.

இந்தியாவில் படிப்படியாக ஊரடங்கு தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து தொழிற்செயல்பாடுகள் ஊக்கம் பெறத் தொடங்கின. இந்நிலையில் கடந்த ஜனவரி மாதம் சர்வதேச செலாவணி நிதியம் (IMF) வெளியிட்ட கணிப்பில் 2021–22ம் நிதி ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 11.5 சதவீதமாக இருக்கும் என்று தெரிவித்தது. இந்நிலையில் தற்போதைய கணிப்பில் வளர்ச்சி விகிதம் 1 சதவீதம் அதிகரிக்கப்பட்டு 12.5 சதவீதமாக இருக்கும் என்று ஐஎம்எஃப் தெரிவித்துள்ளது. அதேபோல் 2022–23ஆம் நிதி ஆண்டில் வளர்ச்சி 6.9 சதவீதமாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவின் 12.5 சதவீத வளர்ச்சி என்பது வளர்ந்த மற்றும் வளரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளின் வளர்ச்சி விகித்தைவிட அதிகம்.

---

**1.** "World 2030: Public Survey" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?

அ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஆ) உலக வங்கி

இ) ஐ நா வளர்ச்சித் திட்டம்

**ஈ) UNESCO ☑**

✓ அண்மையில், UNESCO அமைப்பானது "World 2030: Public Survey" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை, 2020 மே முதல் 2020 செப்டம்பர் வரை உலகம் முழுவதும் நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது.

✓ இந்த அறிக்கையின்படி, காலநிலை மாற்றம், வன்முறை மற்றும் மோதல், பல்லுயிர் இழப்பு, பாகுபாடு மற்றும் சமத்துவமின்மை போன்றவை அமைதியான சமூகத்தை பாதிக்கும் சில முக்கியமான சவால்களாக இனங்காணப்பட்டுள்ளன.

---

**2.** "இந்தியாவில் பெண்கள் மற்றும் ஆண்கள் 2020" அறிக்கையை வெளியிட்டுள்ள அமைச்சகம் எது?

அ) உள்துறை அமைச்சகம்

ஆ) பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

**இ) புள்ளிவிவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் ☑**

ஈ) பாதுகாப்பு அமைச்சகம்

✓ மத்திய புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகமானது அண்மையில், "இந்தியாவில் பெண்கள் மற்றும் ஆண்கள் 2020" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை, கடந்த 1995ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் மத்திய புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தால் வெளியிடப்பட்டு வருகிறது.

✓ இந்த ஆண்டின் அறிக்கை, இத்தொடரில், 20ஆவது இடத்தில் உள்ளது. இது, கொள்கை வகுப்பாளர்கள், திட்டமிடுபவர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு பாலினம் தொடர்பான தரவை வழங்குகிறது.

---

**3.** நாட்டின் நகர்ப்புற வீதியோர விற்பனையாளர்களுக்கு ஆண்டுக்கு ₹10,000 வரை நடப்பு மூலதன வசதியை வழங்க முடிவு செய்துள்ள திட்டத்தின் பெயர் என்ன?

அ) பிரதமர் கிஸான்

ஆ) முத்ரா யோஜனா

**இ) பிரதமர் ஸ்வநிதி ☑**

ஈ) TLTRO

✓ PM SVANIDHI திட்டத்தின்கீழ், நகர்ப்புற வீதியோர விற்பனையாளர்கள், வங்கிகளில் ஆண்டுக்கு ₹10,000 வரை நடப்பு மூலதன கடன்பெற அனுமதிக்கப்படுகிறார்கள். COVID-19 பொது முடக்கத்தின்போது விற்பனையாளர்களுக்கு நுண்கடன் வசதியை வழங்குவதற்காக இந்தத் திட்டம் இந்திய அரசால் தொடங்கப்பட்டது. உள்துறை அமைச்சகத்தின் அண்மைய தரவுகளின்படி, இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மொத்த கடன்களில், தனியார் வங்கிகள், 1.6% மட்டுமே பங்களித்துள்ளன.

---

**4.** தேசிய சேமிப்பு நிறுவனத்தின் தரவுகளின்படி, அரசாங்கத்தின் சிறு சேமிப்புத் திட்டங்களுக்கு அதிக பங்களிப்பு செய்துள்ள மாநிலம் எது?

அ) உத்தர பிரதேசம்

ஆ) மத்திய பிரதேசம்

**இ) மேற்கு வங்கம் ☑**

ஈ) ஹரியானா

✓ நிதியமைச்சகத்தின்கீழ் தேசிய சேமிப்பு நிறுவனம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, மேற்கு வங்க அரசாங்கம் சிறு சேமிப்புத் திட்டங்களுக்கு மிக உயர்ந்த பங்களிப்பை வழங்கியுள்ளது. அஞ்சல் நிலையங்கள் மற்றும் வங்கிகளில் 15%'க்கும் அதிகமான வைப்புகளில் அது பங்குகொண்டுள்ளது. இப்பட்டியலில், மேற்கு வங்கத்தைத் தொடர்ந்து உத்தர பிரதேசம், மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் உள்ளன.

---

**5.** 2020ஆம் ஆண்டுக்கான உலக பல்கலைக்கழகங்களின் தரவரிசையில், இந்திய பல்கலைக்கழகங்களுள் முதலிடம் பிடித்த பல்கலைக்கழகம் எது?

அ) அண்ணா பல்கலைக்கழகம்

ஆ) ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்

இ) ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகம்

**ஈ) கல்கத்தா பல்கலைக்கழகம் ☑**

✓ ஷாங்காய் தரவரிசை என்றும் அழைக்கப்படுகிற உலக பல்கலைக்கழகங்களின் தரவரிசை - 2020 அண்மையில் வெளியிடப்பட்டது. இந்தத் தரவரிசைப்படி, கல்கத்தா பல்கலைக்கழகம் இந்திய பல்கலைக்கழகங்களுள் முதலாவது இடத்தையும், நாட்டின் உயர்கல்வி நிறுவனங்களுள் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது. 15 இந்திய பல்கலைக்கழகங்கள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

---

**6.** "சங்கல்ப் சே சித்தி" - கிராமம் மற்றும் டிஜிட்டல் இணைவு இயக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ள அமைப்பு எது?

அ) UNICEF

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி

இ) NABARD

**ஈ) TRIFED ☑**

✓ மத்திய பழங்குடியினர் நல அமைச்சகத்தின் கீழ் உள்ள பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு (TRIFED) சமீபத்தில் "சங்கல்ப் சே சித்தி" - கிராமம் மற்றும் டிஜிட்டல் இணைவு இயக்கத்தை அறிமுகம் செய்தது. இந்த இயக்கம், 2021 ஏப்ரல்.1 அன்று தொடங்கியது. இது, 150 அணிகள் பங்கேற்கும் நாட்டின் 1500 கிராமங்களை உள்ளடக்கும் 100 நாள் இயக்கமாகும். அந்தக் கிராமங்களின் வன் தன் மையங்களை செயல்படுத்துவதே இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

---

**7.** 2022ஆம் ஆண்டளவில், பெட்ரோலில் எத்தனை சதவீத அளவிற்கு எத்தனால் கலப்பதற்கு இந்திய இலக்கு நிர்ணயித்துள்ளது?

அ) 1%

ஆ) 1.5%

இ) 2%

**ஈ) 10% ☑**

10%

✓ 2022ஆம் ஆண்டளவில் பெட்ரோலில் 10% எத்தனால் கலக்கும் இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது. சமீபத்தில், எதனால் விநியோகம் ஆரம்பித்த முதல் 4 மாதங்களுக்குள், பெட்ரோலில் 7.2 சதவீதத்திற்கும் அதிகமான எத்தனால் கலப்பை இந்தியா அடைந்துள்ளது.

✓ கோவா, கர்நாடகா, மகாராஷ்டிரா போன்ற சில மாநிலங்கள் 9-9.5% எத்தனால் கலப்பை அடைந்துள்ளன. 2022ஆம் ஆண்டுக்குள் இந்தியா 10% எத்தனால் கலப்பு இலக்கை எட்டும் பாதையில் உள்ளது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

---

**8.** தேசிய கடல்சார் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) ஏப்ரல் 2

ஆ) ஏப்ரல் 3

இ) ஏப்ரல் 4

**ஈ) ஏப்ரல் 5 ☑**




✓ ஆண்டுதோறும் ஏப்.5 அன்று தேசிய கடல்சார் நாள் கொண்டாடப்படுகிறது. நடப்பாண்டின் (2021) தேசிய கடல்சார் நாள் அதன் 58ஆவது பதிப்பைக்குறிக்கிறது, அதே வேளையில், 1964ஆம் ஆண்டில் இந்நாள் முதல் கொண்டாட்டம் நிகழ்த்தப்பட்டது. உலகளாவிய கடல்சார் பொருளாதாரத்தை ஆதரிப்பதற்காக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

✓ முழுக்க முழுக்க இந்தியாவுக்குச் சொந்தமான "SS லாயல்டி" கப்பலின் முதல் பயணத்தை நினைவுகூரும் வகையில், ஏப்ரல்.5ஆம் தேதி தேசிய கடல்சார் நாள் கொண்டாடப்படுகிறது.

---

**9. முதன்முறையாக, 2020ஆம் ஆண்டில், ஏப்ரல்.5ஆம் தேதியை எந்த நாளாக ஐநா அவை கடைப்பிடித்தது?**

**அ) பன்னாட்டு மனச்சான்று நாள் ☑**

ஆ) அன்பை ஊக்குவிப்பதற்கான பன்னாட்டு நாள்

இ) பன்னாட்டு அமைதி நாள்

ஈ) கலாசாரத்தை ஊக்குவிப்பதற்கான பன்னாட்டு நாள்

- ✓ கடந்த 2019இல் நடைபெற்ற ஐநா அவையின் 73ஆவது அமர்வின்போது, ஏப்.5ஆம் தேதியை 'பன்னாட்டு மனச்சான்று நாள்' என அறிவிக்கக்கோ –ரும் கோரிக்கையை பக்ரைன் ஐநா அவையிடம் வழங்கியது.
- ✓ "அன்பு மற்றும் மனச்சான்றுடன் கூடிய அமைதியான கலாசாரத்தை ஊக்குவித்தல்" என்ற தீர்மானத்தை ஒரு மனதாக ஏற்றுக்கொண்டு, ஏப்.5ஆம் தேதியை 'பன்னாட்டு மனச்சான்று நாள் – International Day of Conscience' என ஐநா அறிவித்தது. 2020ஆம் ஆண்டில் இச்சிறப்பு நாள் முதன்முறையாக கொண்டாடப்படுகிறது.

---

**10. BCCI'இன் ஊழல் தடுப்பு பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டு –ள்ளவர் யார்?**



**அ) ஷபீர் உசேன் சேகாதம் கண்ட்வாவாலா ☑**

ஆ) V K சிங்

இ) அஜை குமார் பல்லா

ஈ) விஜை குமார்

- ✓ குஜராத்தின் முன்னாள் DGP ஷபீர் உசேன் சேகாதம் கண்ட்வாவாலா, BCCI'இன் ஊழல் தடுப்பு பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு முன்பு இப்பதவியிலிருந்த அஜித் சிங்கின் பதவிக்காலம் 2021 மார்ச் மாதம் முடிவடைந்தது. 1973ஆம் ஆண்டுத் தொகுதியைச் சார்ந்த இகாப அதிகாரியான இவர், கடந்த 2010'இல் தனது இகாப சேவையில் இருந்து ஓய்வுபெற்றார். ஏப்.9 முதல் IPL தொடங்கப்படுவதை முன்னிட்டு ஷபீர் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பயங்கரவாதத்துக்கு எதிராக இணைந்து பணியாற்ற இந்தியா–இலங்கை உறுதி**

பயங்கரவாத குழுக்கள், தலைமறைவாக உள்ளவர்களுக்கு எதிராக இணைந்து பணியாற்ற இந்தியாவும் இலங்கையும் மீண்டும் உறுதியேற்றுள்ளன. இந்தியா–இலங்கை காவல் உயரதிகாரிகள் இடையேயான காணொலிக் கூட்டம் நடைபெற்றது. அதில் இந்தியா தரப்பில் உளவுத்துறையின் இயக்குநர் அர்விந்த் குமார் தலைமையிலான குழு பங்கேற்றது. இலங்கை சார்பில் அந்நாட்டின் காவல்துறைத்தலைவர் சி டி விக்ரமரத்னே தலைமையிலான குழு பங்கேற்றது.

---

**2. ஒலிம்பிக் பாய்மர படகு போட்டிக்கு மேலும் 2 தமிழக வீரர்கள் உள்பட 3 பேர் தகுதி**

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கான ஆசிய மண்டல தகுதிச்சுற்று பாய்மர படகு சாம்பியன்ஷிப் போட்டி ஓமனில் நடந்தது. இதில் ஆண்களுக்கான லேசர் ஸ்டாண்டர்டு பிரிவில் இந்திய வீரர் விஷ்ணு சரவணன் ஒட்டுமொத்தமாக 2ஆவது இடத்தை பிடித்து ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றார். இதேபோல் 49 ER கிளாஸ் பிரிவில் இந்தியாவின் கே சி கணபதி – வருண் தாக்கர் ஜோடி முதலிடத்தை பிடித்து ஒலிம்பிக் வாய்ப்பை உறுதி செய்தது. இவர்கள் இருவரும் சென்னையை சேர்ந்தவர்கள் ஆவர்.

ஏற்கனவே இந்த போட்டியின் மூலம் இந்திய வீராங்கனை 23 வயதான நேத்ரா குமணன் (சென்னை கல்லூரி மாணவி) லேசர் ரேடியல் பிரிவில் ஒலிம்பிக்குக்கு தகுதிபெற்றதுடன், ஒலிம்பிக் பாய்மரபடகு போட்டியில் அடி எடுத்துவைக்கவிருக்கும் முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையையும் படைத்திருந்தார்.

---

**3. இராமநாதபுரம் வனச்சரகருக்கு சர்வதேச விருது**

இராமநாதபுரம் வனச்சரகருக்கு வன பாதுகாப்பு தொடர்பான சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளது. சுவிச்சர்லாந்தை தலைமையிடமாகக்கொண்ட பன்னாட்டு இயற்கை பாதுகாப்பு சங்க அமைப்பு நடப்பு ஆண்டு முதல் சர்வதேச அளவில் சிறந்த வனச்சரகர் விருதை வழங்குகிறது.

இந்த அமைப்பானது உலக வனச்சரகர் கூட்டமைப்பு, உலக வனவுயிரின பாதுகாப்பு மையம் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனவுயிரின அமைப்புமூலம் சிறந்த வனச்சரகருக்கான விருதை தெரிவுசெய்து வழங்குகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மன்னார்வளைகுடா தேசியபூங்கா பகுதியில் கடல் அட்டை கடத்தலை தடுத்து, அலையாத்தி காடுகளை காப்பாற்றும் வகையில் செயல்பட்டதற்காக இராமநாதபுரம் வனச்சரக அலுவலர் சு சதீஷ் விருதுக்குத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார். டேராடூனில் உள்ள இந்திய வன உயிரின நிறுவன மூத்த ஆய்வாளர் சிவகுமார் பரிந்துரை அடிப்படையில் அவரை விருதுக்கு தேர்ந்தெடுத்துள்ளனர். சதீஷுக்கு ஏப்.7 அன்று இணை –யதளம்மூலம் பாராட்டுச்சான்றுடன், ₹7.25 இலட்சம் நிதியும் வழங்கப்பட்டு –ள்ளது. சதீஷுடன் கம்போடியா, மியான்மர், ரஷ்யா, கொலம்பியா உள்ளிட்ட 8 நாட்டு வனச்சரகர்களும், நம் நாட்டில் உத்தரகாண்ட் ராஜாஜி புலிகள் காப்பக வனச்சரகர் மகேந்திரகிரி ஆகியோரும் விருது பெற்றுள்ள –னர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**4. உயர்நீதிமன்றத்தில் உதவி சொலிசிட்டர் ஜெனரல் நியமனம்:**

சென்னை உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசுக்கான புதிய உதவி சொலிசிட்டர் ஜெனரலாக வழக்கறிஞர் R ராஜேஷ் விவேகானந்தனை குடியரசுத்தலைவர் நியமித்துள்ளார். சென்னை உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு தரப்பில் வழக்குகளில் ஆஜராகி வாதிடுவதற்காக கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் மற்றும் உதவி சொலிசிட்டர் ஜெனரல் தவிர்த்து, மத்திய அரசு பேனல் வழக்கறிஞர்கள் துறை வாரியாக நியமிக்கப்படுவது வழக்கம்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் உதவிசொலிசிட்டர் ஜெனரலாக பதவி வகித்த கார்த்திகேயனின் பதவிக்காலம் முடிவுக்கு வந்ததை அடுத்து, புதிய உதவி சொலிசிட்டர் ஜெனரலாக வழக்கறிஞர் ஆர் ராஜேஷ் விவேகானந்தனை குடியரசுத்தலைவர் நியமித்துள்ளார்.

---

**1. 'அரிய நோய்களுக்கான தேசிய கொள்கை – 2021'க்கு ஒப்புதல் அளித்துள்ள அமைச்சகம் எது?**

அ) உள்துறை அமைச்சகம்

**ஆ) சுகாதார அமைச்சகம் ☑**

இ) கல்வி அமைச்சகம்

ஈ) நிதி அமைச்சகம்

Ministry of Health & Family Welfare
Government of India

✓ அரிய நோய்களுக்கான தேசிய கொள்கை – 2021'க்கு மத்திய சுகாதார அமைச்சகம் சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் தேசிய கொள்கை அரிய நோய்களுக்கான சிகிச்சைக்கான அதிக செலவைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தக் கொள்கை நாட்டின் பல்வேறு பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்து ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

✓ PM–JAY'இன்கீழ் வரும் 40% பயனாளிகள் இந்தக்கொள்கையின்மூலம் பயனடைவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

---

**2. வாரணாசியிலிருந்து களவாடப்பட்ட, '18ஆம் நூற்றாண்டைச்சார்ந்த அன்னபூர்ணா தேவியின் சிலை'யைத் திருப்பித்தரவுள்ள நாடு எது?**

**அ) கனடா ☑**

ஆ) பிரேஸில்

இ) போர்ச்சுகல்

ஈ) சீனா



✓ 18ஆம் நூற்றாண்டில் வாரணாசியில் உள்ள ஒரு கோவிலில் இருந்து களவாடப்பட்ட அன்னபூர்ணா தேவியின் சிலையை கனடா நாடு திருப்பி அனுப்பவுள்ளது. அரசாங்க அறிக்கையின்படி, சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு இந்தச் சிலை திருடப்பட்டது. இந்த சிலை கனடாவின் மெக்கென்சி கலைக்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இது ஒட்டவாவிற்கான இந்திய உயராணையரிடம் ஒப்படைக்கப்பட்டது.

---

**3. சமீப செய்திகளில் இடம்பெற்ற, "Ingenuity" என்றால் என்ன?**

**அ) NASA'இன் செவ்வாய் ஹெலிகாப்டர் ☑**

ஆ) ISRO'இன் திட்டம்

இ) COVID–19 தடுப்பூசி

ஈ) புதிய கோள்



✓ "Ingenuity" என்பது செவ்வாய் கிரகத்தில் உந்துதலுக்காக NASA உருவாக்கிய ஒரு மினி ஹெலிகாப்டர் ஆகும். சமீபத்தில் செவ்வாய் கிரகத்தில் வெற்றிகரமாக தரையிறங்கிய NASA'இன் 'Perseverance' ஊர்திமூலம் இது சரிசெய்யப்பட்டது.

✓ இந்த ஹெலிகாப்டர் செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் வெற்றிகரமாக இறக்கிவிடப்பட்டது. ஏப்.11 அன்று செவ்வாயின் வளிமண்டலத்தின்மீது அது இயக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**4. ஏவுகணை அமைப்புகளின் உற்பத்தியில் பங்கெடுக்க, தனியார் துறை நிறுவனங்களை அனுமதித்துள்ள அமைப்பு எது?**

அ) ISRO **ஆ) DRDO ☑**

இ) BEML ஈ) HAL

✓ ஏவுகணை அமைப்புகளின் மேம்பாடு மற்றும் உற்பத்தியில் தனியார் துறை நிறுவனங்கள் அதனுடன் கைகோர்க்க பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO) அனுமதித்துள்ளது. வளர்ச்சியுடன் கூடிய உற்பத்தி கூட்டாண்மை திட்டத்தின்கீழ் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், Vertical Launched Short–Range Surface to Air Missile system (VL–SRSAM) ஆகியவை அடங்கும்.

---

**5. 2021 ஜனவரியில் அறிவிக்கப்பட்ட வாடகை மற்றும் குத்தகை ஒப்பந்தங்களை ஒழுங்குபடுத்துவதற்கான அவசர ஆணைக்கு ஒப்புதல் அளித்துள்ள மாநிலம் எது?**

அ) குஜராத் **ஆ) உத்தரபிரதேசம் ☑**

இ) பீகார் ஈ) மத்திய பிரதேசம்

✓ உத்தர பிரதேச அமைச்சரவை உத்தரபிரதேச நகர்ப்புற வளாகத்தின் குத்தகை (2ஆவது) அவசர ஆணை 2021'க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இது, ஒரு சொத்தை வாடகைக்கு எடுக்க, ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை கட்டாயமாக்குவதால் குத்தகை தகராறுகளை குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ தற்போதைய சட்டத்தின்கீழ் மோதல் தீர்வுக்கான தெளிவான வழிமுறை ஏதுமில்லை. இது, 2021 ஜனவரியில் உ பி மாநிலத்தில் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

---

**6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, Receivables Exchange of India (RXIL) என்பதுடன் தொடர்புடைய துறை எது?**

அ) வேளாண்மை

ஆ) அந்நிய செலாவணி

**இ) MSME'கள் ☑**

ஈ) தங்க இறக்குமதி

✓ MSME'களுக்கான விலைப்பட்டியல் தள்ளுபடி தளமாக Receivables Exchange of India (RXIL) உள்ளது. இது, ரிசர்வ் வங்கியின் அங்கீகாரம் பெற்ற TReDS (Trade Receivables Discounting System) பரிமாற்ற தளம் ஆகும். இத்தளம் 7000'க்கும் மேற்பட்ட பதிவுசெய்யப்பட்ட MSME'களைக் கொண்டுள்ளது. 2017ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து 5,00,000 விலைப்பட்டியல்களை அது செயலாக்கியுள்ளது.

---

**7. தருண் பஜாஜை அடுத்து புதிய பொருளாதார விவகாரத் துறை செயலாளராக நியமிக்கப்பட்டவர் யார்?**

**அ) அஜை சேத் ☑**

ஆ) B P கனுங்கோ

இ) அனில் குமார் ஜா

ஈ) R காந்தி



✓ 1987ஆம் ஆண்டு இஆப அதிகாரியும், பெங்களூரு மெட்ரோ இரயில் கார்ப்பரேஷனின் நிர்வாக இயக்குநருமான அஜை சேத் பொருளாதார விவகாரங்கள் துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். புதிய வருவாய் செயலாளராக தற்போதைய பொருளாதார விவகாரங்கள் துறை செயலர் தருண் பஜாஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

**8.கீழ்காணும் எந்த நாட்டில், பெஞ்சமின் நெதன்யாகு அவர்கள் புதிய அரசாங்கத்தை அமைக்கவுள்ளார்?**

அ) இத்தாலி

**ஆ) இஸ்ரேல் ☑**

இ) ஆப்கானிஸ்தான்

ஈ) ஈரான்



✓ இஸ்ரேலின் மிகநீண்டகால தலைவரும், தற்போதைய பிரதம அமைச்சருமான பெஞ்சமின் நெதன்யாகு இஸ்ரேலிய அதிபரிடமிருந்து புதிய அரசாங்கம் அமைப்பதற்கான ஆணையைப் பெற்றார். 2 ஆண்டுகளில் நான்காவது முறையாக மார்ச்.23 அன்று நடந்த இஸ்ரேல் தேர்தல், ஒரு முடிவில்லாத தேர்தலாக முடிந்தது.

✓ நெதன்யாகு, 2009 முதல் தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்து வருகிறார், இப்போது ஒரு புதிய அரசாங்கத்தை உருவாக்க, அவருக்கு 28 நாட்கள் கெடு வைக்கப்பட்டுள்ளது.

---

**9.சமீபசெய்திகளில் இடம்பெற்ற செனோபாட்கள், எவ்வுயிரினத்தின் ஸ்டெம் செல்களிலிருந்து உருவாக்கப்படுகிற ரோபோக்களாகும்?**

அ) முதலை

**ஆ) தவளை ☑**

இ) முயல்

ஈ) ஆடு



✓ டப்ட்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தவளைகளின் ஸ்டெம் செல்களிலிருந்து 'ஜெனோபாட்ஸ்' என்ற ரோபோக்களை உருவாக்கியுள்ளனர். இந்த ரோபோக்கள், ஏதேனும் சேதமடைந்தால் தாங்களாகவே

அதை ஆற்றிக்கொள்ளும் திறன் படைத்தவை. அவற்றின் மேற்பரப்பில் உள்ள 'சிலியா' துகள்களைப் பயன்படுத்தி அவற்றால் நகரவும் முடியும்.

✓ அவற்றால் அணிகளாக திரண்டு ஒன்றாக வேலை செய்யவியலும். மேலும், அவற்றின் சுற்றுப்புறங்கள்பற்றிய தகவல்களையும் அவற்றால் பதிவுசெய்யவியலும். இந்த ரோபோக்களை உயிரி–மருத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வுகளில் பயன்படுத்த முடியும்.

---

**10.சந்தை மூலதனத்தில் $100 பில்லியன் அமெரிக்க டாலர்களைக் கடந்து, இந்தியாவில் மூன்றாவது இடத்தைப்பிடித்த நிறுவனங்கள் குழுமம் எது?**

அ) ரிலையன்ஸ்

ஆ) TATA

இ) மைக்ரோசாப்ட்

**ஈ) அதானி ☑**

✓ TATA குழுமம் மற்றும் ரிலையன்ஸ் குழுமத்திற்குப் பிறகு, கௌதம் அதானியின் அதானி நிறுவனங்கள் குழுமம், சந்தை மூலதனத்தில் $100 பில்லியன் டாலர்களைக் கடக்கும் இந்தியாவின் மூன்றாவது நிறுவனம் என ஆனது. அதானி குழுமத்தின் 6 பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் மொத்த சந்தை மூலதனம், ₹7.84 இலட்சம் கோடி அல்லது $106.8 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது என்று பங்கு பரிவர்த்தனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்திய கடல்பகுதியில் அனுமதியின்றி அமெரிக்க கடற்படை பயிற்சி**

இந்திய கடல்பகுதியில் மத்திய அரசின் முன் அனுமதியைப் பெறாமல் அமெரிக்காவின் கடற்படைக் கப்பல் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டு இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டதாக அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இதற்கு இந்திய தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் கடற்கரையோரப் பகுதிகளிலிருந்து 200 கடல்மைல் தொலைவானது (சுமார் 370 கிமீ) பிரத்தியேக பொருளாதார மண்டலமாக வரையறுக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் மற்ற நாடுகள் இராணுவப் பயிற்சி உள்ளிட்டவற்றை மேற்கொள்வதற்கு, முன் அனுமதியைப் பெற வேண்டும் என்று இந்திய அரசு விதிகளை வகுத்துள்ளது. ஆனால், இந்த விதிகளை அமெரிக்கா ஏற்க மறுத்துவருகிறது.

சர்வதேச விதிகளுக்குள்பட்டு எந்தக் கடல்பகுதியிலும் பயணிக்கவோ பயிற்சிகளை மேற்கொள்ளவோ அனுமதி உண்டு என்று அந்நாட்டு கடற்படை கூறிவருகிறது. இத்தகைய சூழலில், இலட்சத்தீவுகளுக்கு அருகே உள்ள கடல்பகுதியில் அமெரிக்க கடற்படை பயிற்சியை மேற்கொண்டது. இதுதொடர்பாக அந்நாட்டு கடற்படைசார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், 'லட்சத்தீவுகளில் இருந்து 130 கடல்மைல் தொலைவில் 'USS ஜான் பால் ஜோன்ஸ்' என்ற தாக்குதல் கப்பலில் கடந்த 7 அன்று பயிற்சி மேற்கொள்ளப்–பட்டது. இது இந்தியாவின் பிரத்யேக பொருளாதார மண்டலப் பகுதிக்குள் வருகிறது.

எனினும், பயிற்சி மேற்கொள்வது தொடா்பாக இந்திய அரசிடமிருந்து முன் அனுமதி பெறப்படவில்லை. சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டு இப்பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. சுதந்திரமாகக் கடற்பயணம் மேற்கொள்வதைத் தடுக்கும் வகையில் இந்திய அரசின் விதிகள் உள்ளன. அந்த விதிகளுக்கு சவால் விடுக்கும் வகையிலும், அதே வேளையில் சர்வதேச சட்டங்களுக்கு உள்பட்டும் அமெரிக்க கடற்படை பயிற்சி மேற்கொண்டது.

---

**2. தமிழ்நாட்டில் டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக N S சந்தோஷ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.**

---

**3. கிரிஜா வைத்தியநாதன் நியமனத்திற்கு உயர்நீதிமன்றம் தடை**

தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் நிபுணத்துவ உறுப்பினராக முன்னாள் தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன் நியமனத்துக்கு தடை விதித்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், மத்திய அமைச்சரவையின் பணி நியமனக்குழு கடந்த டிச.12 அன்று, தமிழகத்தின் தலைமைச்செயலாளராக பணியாற்றி ஓய்வுபெற்ற கிரிஜா வைத்தியநாதன், வருவாய் நிர்வாக ஆணையராக பணியாற்றி ஓய்வுபெற்ற சத்யகோபால், மற்றும் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த இந்திய வனத்துறை அதிகாரி அருண்குமார் வர்மா உள்ளிட்ட மூவரை தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் நிபுணத்துவ உறுப்பினராக நியமனம் செய்ய ஒப்புதல் அளித்திருந்தது.

தேசிய பசுமைத் தீர்ப்பாய சட்டப்பிரிவின்படி நிபுணத்துவ உறுப்பினராக நியமனம் செய்யப்பட கூடிய நபருக்கு 15 ஆண்டுகள் இந்திய ஆட்சிப்பணி அனுபவமும், அதில் ஐந்து ஆண்டுகள் சுற்றுச்சூழல் சார்ந்த துறையில் பணியாற்றிய அனுபவமும் இருக்கவேண்டும். கிரிஜா வைத்யநாதனுக்கு 15 ஆண்டுகளுக்கு மேல் இந்திய ஆட்சிப்பணி அனுபவம் இருந்தாலும், 5 ஆண்டுகளுக்கு சுற்றுச்சூழல் சார்ந்த பணிகளின் அனுபவம் இல்லை.

அவர் மூன்று ஆண்டுகள் 6 மாத காலம் மட்டுமே சுற்றுச்சூழல் துறையில் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டுள்ளார். எனவே, அவரது நியமனம் தேசிய பசுமைத் தீர்ப்பாய விதிகளுக்கு எதிரானது. இதனைக் கருத்தில் கொண்டு அவரது நியமனத்தை இரத்து செய்ய வேண்டும் என கோரப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், மத்திய அரசு, கிரிஜா வைத்தியநாதன் ஆகியோர் பதிலளிக்க உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்சீவ் பானர்ஜி, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், பல்வேறு பதவிகளை வகித்திருந்தாலும் சுற்றுச்சூழல் விவகாரங்களை கையாண்டது தொடர்பான அனுபவம் கிரிஜா வைத்தியநாதனுக்கு இல்லை, சட்டப்படி தேவைப்படும் தகுதியையும் அவர் பெற்றிருக்கவில்லை என கருத்து தெரிவித்தனர். பின்னர் தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் நிபுணர் குழு உறுப்பினராக முன்னாள் தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன் நியமனத்துக்கு தடை விதித்து உத்தரவிட்டனர். இதுதொடர்பாக மத்திய சுற்றுச்சூழல் துறை, மத்திய பணியாளர் துறை கிரிஜா வைத்தியநாதன் ஆகியோர் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஏப்ரல் 16–ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர். கிரிஜா வைத்தியநாதன் வரும் ஏப்ரல் 19–ஆம் தேதி பதவியேற்க இருந்தது குறிப்பிடத்தக்கது.

---

**4. இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் கணவர் பிலிப் காலமானார்**

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவர் பிலிப் காலமானார். அவருக்கு வயது 99. இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவர் பிலிப், உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டு சில மாதங்களாக சிகிச்சையில் இருந்து வந்த நிலையில் இன்று அவர் காலமானார். தனது வின்ஸ்டர் கேட்சில் அரசு மாளிகையில் இளவரசர் பிலிப்பின் உயிர் பிரிந்ததாக பக்கிங்காம் அரண்மனையிலிருந்து தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளவரசர் சார்லஸின் தந்தையான பிலிப், வயோதிகம் காரணமாக கடந்த 2017ஆம் ஆண்டு பொது வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெற்றார். மேலும், இங்கிலாந்து அரச குடும்ப வரலாற்றில் மிக அதிக காலம் இளவரசராக இருந்தவர் பிலிப் என்பது குறிப்பிடத்தக்கது. இளவரசர் பிலிப்பின் மறைவா –ல் ஏற்பட்ட துக்கத்தில் உலகெங்கிலும் உள்ள மக்களுடன் இங்கிலாந்து அரச குடும்பமும் இணைகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**5. ஆன்லைனில் தேன் விற்பனை – தேனீ வாரியத்துடன் இந்தியன் வங்கி ஒப்பந்தம்:**

தேன் மற்றும் தேன் பொருட்களை இணையவழிமூலம் பெறுவதற்காக, தேசிய தேனீ வாரியத்துடன் இந்தியன் வங்கி ஒப்பந்தம் செய்துள்ளது.

தேன் மற்றும் தேன் பொருட்களை இந்தியன் வங்கி, தங்களது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணையதளம் மூலம் பெறுவதற்கான புதிய வசதியை ஏற்படுத்தி உள்ளது. இதற்காக, தேசிய தேனீ வாரியத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

**'மது கிரந்தி'**

இதைத்தொடர்ந்து, தேன் மற்றும் தேன் பொருட்களை வாங்குவதற்காக, 'மது கிரந்தி' என்ற இணையதளத்தை மத்திய விவசாயத் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தொடங்கிவைத்தார். இந்த இணையதளம்மூலம், தேன் & தேன் பொருட்களை பெறுவதோடு, அவை எங்கெல்லாம் கிடைக்கு –ம் என்ற விவரத்தையும் தெரிந்து கொள்ளலாம்.

---

**1.** **E9 நாடுகளைச் சார்ந்த கல்வி அமைச்சர்களின் ஆலோசனைக் கூட்டத்தில், இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தியவர் யார்?**

அ) இரமேஷ் பொக்ரியால் நிஷாங்க்

ஆ) நிர்மலா சீதாராமன்

இ) நரேந்திர மோடி

**ஈ) சஞ்சை தோத்ரே ☑**



✓ மத்திய கல்வி இணையமைச்சர் சஞ்சை தோத்ரே, E9 நாடுகளின் கல்வி அமைச்சர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் இந்தியாவைப் பிரதிநிதித்–துவப்படுத்தினார். "E9 initiative: Scaling up digital learning to accelerate progress towards Sustainable Development Goal 4" என்பது இக்கூட்டத்–தின் கருப்பொருளாகும்.

✓ வங்காளதேசம், பிரேசில், சீனா, எகிப்து, இந்தியா, இந்தோனேசியா, மெக்–ஸிகோ, நைஜீரியா மற்றும் பாகிஸ்தான் ஆகியவை E9 நாடுகளாகும்.

---

**2.** **மத்திய சுகாதார அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்–த சுகாதார தகவல் தளத்தின்கீழ், எத்தனை நோய்களை கண்டறிய இயலும்?**

அ) 10

ஆ) 15

இ) 22

**ஈ) 33 ☑**

33

✓ மத்திய சுகாதார மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் Dr ஹர்ஷ் வர்தன் சமீபத்தில் ஒருங்கிணைந்த சுகாதார தகவல் தளத்தை மெய்நிகர் முறை–யில் தொடங்கி வைத்தார். இந்தத் தகவல் தளத்தின் முந்தைய பதிப்பில் 18 நோய்களை கண்டறியும் வசதியை ஒப்பிடும்போது தற்போது 33 நோய்களைக் கண்டறியும் திறனை இந்தத் தளம் கொண்டுள்ளது.

✓ இந்தத் தகவல் தளத்தின் புதிய பதிப்பானது இந்தியாவின் நோய் கண்–காணிப்பு திட்டத்திற்கான தரவு உள்ளீடு & நிர்வாகத்தை வழங்கும்.

---

**3.** **இந்தியாவின் நாற்பத்து எட்டாவது தலைமை நீதிபதியாக நியமி–க்கப்பட்டுள்ளவர் யார்?**

அ) இரஞ்சன் கோகோய்

ஆ) சரத் அரவிந்த் பாப்டே

இ) தீபக் மிஸ்ரா

**ஈ) N V இரமணா ☑**



✓ இந்திய அரசியலமைப்பின் 124ஆவது பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அதிகார–ங்களின்படி, இந்தியாவின் 48ஆவது தலைமை நீதியரசராக நீதியரசர் NV இரமணா அவர்களை இந்தியக்குடியரசுத்தலைவர் நியமித்துள்ளார். அவர் 2021 ஏப்.24 அன்று இந்திய தலைமை நீதியரசராக பொறுப்பேற்று–க்கொள்வார். அவர், கடந்த 2014ஆம் ஆண்டு முதல் உச்சநீதிமன்றத்தில் நீதியரசராக இருந்துவருகிறார். அவர் ஓய்வுபெறுவதற்கு இன்னும் 16 மாதகாலங்கள் உள்ளன.

---

**4.** **உலகின் மிகப்பெரிய சூரிய மின்னுற்பத்தி நிறுவனமாக கருதப்ப–டும் லாங்கி கிரீன் எனர்ஜி நிறுவனம் சார்ந்த நாடு எது?**

அ) இந்தியா

ஆ) ஜப்பான்

**இ) சீனா ☑**

ஈ) ஜெர்மனி

LONGi

✓ சீனாவின் லாங்கி பசும் ஆற்றல் தொழினுட்ப நிறுவனமானது உலகின் மிகப்பெரிய சூரிய ஆற்றல் உற்பத்தி நிறுவனமாகும். இந்த நிறுவனம் சமீபத்தில் ஹைட்ரஜன் சந்தையில் நுழைந்தது. இந்த நிறுவனம் ஜியான் லாங்கி ஹைட்ரஜன் தொழினுட்ப நிறுவனம் என்ற பெயரில் ஓர் இணை நிறுவனத்தை உருவாக்கியுள்ளது. லாங்கி கிரீன் எனர்ஜி தொழினுட்ப நிறுவனத்தின் நிறுவனர் லி செங்குவோவின் இப்புதிய நிறுவனத்திற்கு தலைவராக பணியாற்றுவார்.

---

**5.** **மும்பையில் அக்டோபர் மாதம் நிகழ்ந்த மின்தடைக்குப் பின்னால், எந்தத் தீம்பொருள் இருப்பதாக கூறப்படுகிறது?**

**அ) Shadow Pad ☑**

ஆ) October Shutdown

இ) Shutdown Oct

ஈ) Blackout Oct



✓ மும்பையில் கடந்த அக்டோபர் மாதம் நிகழ்ந்த மின்தடைக்குப் பின்னால் 'ஷேடோபேட்' எனக்கூறப்படும் தீம்பொருள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இது, கடந்த காலத்திய சீன இணையவெளி தாக்குதல்களுடன் இணை–த்து பேசப்படுகிறது. 2017ஆம் ஆண்டில் இது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தத் தீம்பொருள் முறையான மென்பொருள் வழங்குநரான NetSarang மென்பொருளின் புதுப்பிப்புகளில் செலுத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

---

**6.** **சமீபத்தில் அறிவிக்கப்பட்ட, 'தீர்ப்பாய சீர்திருத்த அவசர ஆணை'யி–ன்படி, மேல்முறையீட்டு அதிகாரிகளின் அதிகாரங்கள் எந்த அமைப்–புடன் சேர்க்கப்பட்டுள்ளன?**

அ) உச்ச நீதிமன்றம்

**ஆ) உயர்நீதிமன்றங்கள் ☑**

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) அமலாக்க இயக்குநரகம்



✓ தீர்ப்பாய சீர்திருத்தங்கள் (சீரமைப்பு மற்றும் சேவை விதிகள்) அவசர ஆணை – 2021'ஐ மத்திய அரசு சமீபத்தில் அறிவித்தது. இந்த அவசர ஆணையின்படி, தற்போதுள்ள மேல்முறையீட்டு அதிகாரிகள் மாற்றப்பட்–டு, அவர்களின் அதிகாரங்கள் உயர்நீதிமன்றங்களுக்கு வழங்கப்படுகி–ன்றன. ஒளிப்பதிவு சட்டம்; பதிப்புரிமை சட்டம்; சுங்க சட்டம்; காப்புரிமை சட்டம்; AAI சட்டம்; வர்த்தக குறியீடுகள் சட்டம்; புவிசார் குறியீடு (பதிவு & பாதுகாப்பு) சட்டம்; தாவர வகைகள் மற்றும் உழவர்கள் உரிமைகள் பாதுகாப்பு சட்டம் மற்றும் NH (நிலம் மற்றும் போக்குவரத்து) கட்டுப்பாட்டுச் சட்டம் ஆகிய சட்டங்கள் இதனுள் அடங்கும்.

---

**7.** **இரசாயன & உர அமைச்சகமானது எந்த அமைப்புடன் சேர்ந்து வேதி உற்பத்தி தொடர்பான தேசிய கருத்தரங்கத்தை நடத்தியது?**

அ) ஆசிய வளர்ச்சி வங்கி

**ஆ) UNIDO ☑**

இ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஈ) ஆசிய உட்கட்டமைப்பு & முதலீட்டு வங்கி

UNIDO

✓ மத்திய ரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகமானது "வேதியியல் உற்பத்தியின் போட்டித்திறன் மற்றும் நீடித்த தன்மைக்கான சிறந்த உற்பத்தி மற்றும் புத்தாக்கம் குறித்த தேசிய உரையாடலை" ஏற்பாடு செய்தது. ஐநா தொழிற்துறை மேம்பாட்டமைப்பானது (UNIDO) வறுமைக் குறைப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்காக தொழிற்துறை வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

✓ இந்தத் தேசிய உரையாடலையும், 'இந்தியாவில் தூய உற்பத்தி' (ஸ்வச் உத்யோக்)'இன் கீழ் ஓர் உரையாடலையும் UNIDO ஏற்பாடு செய்தது.

---

**8.** **"வளர்ச்சி மற்றும் அமைதிக்கான பன்னாட்டு விளையாட்டு நாள்" அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) ஏப்ரல் 4

**ஆ) ஏப்ரல் 6 ☑**

இ) ஏப்ரல் 8

ஈ) ஏப்ரல் 10

INTERNATIONAL DAY OF SPORT FOR DEVELOPMENT AND PEACE

✓ 2013ஆம் ஆண்டில் ஐநா அவையின் பொது அவையின் தீர்மானத்திற்குப் பிறகு, ஏப்.6 அன்று உலகெங்கிலும் "வளர்ச்சி மற்றும் அமைதிக்கான பன்னாட்டு விளையாட்டு நாள்" அனுசரிக்கப்பட்டு வருகிறது.

✓ நீடித்த வளர்ச்சி மற்றும் மனித உரிமைகளின் முன்னேற்றத்திற்கு வி–ளையாட்டுகளின் நேர்மறையான பங்களிப்பைக் கொண்டாடுவதற்கா–க இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. கொள்ளைநோயிலிருந்து மீள்வது மற்றும் அம்மீட்டெடுப்பில் சமத்துவத்தின் முக்கியத்துவம் ஆகியவற்றைச் சுற்றி இந்த ஆண்டின் கருப்பொருள் அமைக்கப்பட்டுள்ளது.

**9.அண்மையில் அதன் வணிக ரீதியிலான நடவடிக்கையைத் தொ–டங்கிய பராகா அணுமின் நிலையம் அமைந்துள்ள நாடு எது?**



அ) கத்தார்

**ஆ) ஐக்கிய அரபு அமீரகம் ☑**

இ) சௌதி அரேபியா

ஈ) குவைத்

- ✓ ஐக்கிய அரபு அமீரகத்தில் (UAE) உள்ள பராகா அணுமின் நிலையம் அரபு உலகின் முதல் அணுமின்னுற்பத்தி நிலையமாகும். அபுதாபியில் அமைந்–துள்ள இவ்வணுமின்னுற்பத்தி நிலையம் அண்மையில் அதன் வணிக ரீதியிலான நடவடிக்கைகளைத்தொடங்கியது.
- ✓ இந்த அ ணுமின்னுற்பத்தி நிலையத்தின் முதல் மெகாவாட் தேசிய மின் கட்டமைப்பில் நுழைந்துள்ளது. இது 2019ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது.

---

**10.** **2021 உலக சுகாதார நாளுக்கான கருப்பொருள் என்ன?**



அ) Road safety

ஆ) Support Nurses and Midwives

**இ) Building a Fairer and Healthier World for Everyone ☑**

ஈ) Food safety

- ✓ உலக சுகாதார நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்.7 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இது, கடந்த 1948ஆம் ஆண்டில் உலக நலவாழ்வு அமைப்பு (WHO) நிறுவப்பட்டதை குறிக்கிறது. இந்தச் சிறப்பு நாள், உலகெங்குமுள்ள மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட சுகாதாரத்தலைப்பி–ல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ "Building a Fairer & Healthier World for Everyone" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ரெம்டெசிவிர் மருந்து ஏற்றுமதிக்கு தடை: மத்திய அரசு**

கரோனா சிகிச்சைக்கான ரெம்டெசிவிர் மருந்தை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு தடை விதித்துள்ளது. நாட்டில் கரோனா வைரஸ் பரவலின் 2ஆவது அலை வேகமாக பரவி வருகிறது.

இந்த மருந்து எளிதில் கிடைக்கும் வகையில், உள்நாட்டில் ரெம்டெசிவர் ஊசி மருந்து தயாரிக்கும் அனைத்து நிறுவனங்களும், ரெம்டெசிவர் இருப்பு நிலவரம், விநியோகிஸ்தர்கள் விவரங்களை தங்கள் இணையதள–த்தில் தெரிவிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர். இந்த இருப்பு விவரங்களை மருந்து ஆய்வாளர்கள் மற்றும் இதர அதிகாரிகள் சரிபார்த்து, முறைகேடுகள் நடந்ததால் மற்றும் கள்ளச்சந்தையில் விற்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என உத்தரவிடப்பட்டிருக்கிறது. மாநில சுகாதாரத்துறை செயலாளர்கள் இது குறித்து, அந்தந்த மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களின் மருந்து ஆய்வாளர்களுடன் ஆலோசிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

COVID தொற்றாளர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சையில் ரெம்டெசிவிர் ஊசி மருந்து முக்கிய இடம் வகிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

---

**2. தமிழகத்தில் தடுப்பூசி சிறப்பு செயல் திட்டம் தொடக்கம்**

தமிழ்நாட்டில் 45 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தும் வகையிலான சிறப்பு செயல் திட்டம் ஏப்.11 அன்று தொடங்கியது. அதன்படி, நாள்தோறும் இரண்டு இலட்சம் பேருக்கு தடுப்பூசி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக மாநிலம் முழுவதும் 5000'க்கு மேற்பட்ட மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் கடந்த ஜனவரி மாதம் 16ஆம் தேதி முதல் தடுப்பூசி செலுத்தும் பணிகள் தொடங்கின.

முதல்கட்டமாக சுகாதாரப் பணியாளர்கள், முன்கள பணியாளர்கள் என, 5 இலட்சம் பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக முதியவ–ர்களுக்கும், 45 வயதுக்கு மேற்பட்டோருக்கும் தடுப்பூசிகள் வழங்குவது தொடங்கப்பட்டது. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அவர்கள் ஆர்வமாக தடுப்பூசி செலுத்திக் கொண்டு வருகின்றனர். அந்த வகையில், இதுவரை 37 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டதா–கத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. புதுமை தொழில் ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் தமிழ்நாடு முதலிடம்**

மத்திய அரசு உதவியுடன் உயர்கல்வி நிறுவனங்களில் செயல்பட்டுவரும் புதுமை கண்டுபிடிப்புத் தொழில் ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என சென்னை IIT புதுமை தொழில் ஊக்குவிப்பு மைய இணைத்தலைவர் பேராசிரியர் அசோக் சுன்சுன்வாலா கூறினார்.

---

**4. வங்கதேசத்தில் ராணுவத் தளபதிகள் மாநாடு: எம் எம் நரவணே பங்கேற்பு**

வங்கதேசத்தில் நடைபெற்ற இராணுவத் தளபதிகள் மாநாட்டில் இந்திய இராணுவத் தலைமைத்தளபதி எம் எம் நரவணே பங்கேற்றார். பாகிஸ்தானிடம் இருந்து வங்கதேசம் சுதந்திரம் பெற்றதன் ஐம்பதாவது ஆண்டு விழா, வங்கபந்து ஷேக் முஜிபுர் ரஹ்மானின் பிறந்த நூற்றாண்டு பிறந்தநாள்விழா ஆகியவை வங்கதேசத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த விழாக்களில் பங்கேற்பதற்காக, வங்கதேச இராணுவத் தலைமைத் தளபதி அஜீஸ் அகமதுவின் அழைப்பின்பேரில் எம் எம் நரவணே 5 நாள் அரசு முறைப் பயணமாக அந்நாட்டுக்குச் சென்றுள்ளார்.

விழாவின் ஒருபகுதியாக நடைபெற்ற மாநாட்டில் 'சர்வதேச மோதல்களின் மாறும் தன்மை: ஐநா அமைதிகாப்புப்படையின் பங்கு' என்ற தலைப்பில் அவர் உரையாற்றினார். விழாவின் மற்றொரு பகுதியாக, இந்தியா, வங்க தேசம், இலங்கை, பூடான் ஆகிய நாடுகள் பங்கேற்கும் கூட்டு ராணுவப் பயிற்சி நடைபெற்று வருகிறது. அமெரிக்கா, பிரிட்டன், துருக்கி, சவூதி அரேபியா, குவைத், சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சார்ந்தவர்கள் பார்வை–யாளர்களாகப் பங்கேற்றுள்ளனர். அண்டை நாடுகளுடன் இணைந்து செயல்படுவதற்காக நடத்தப்படும் இந்த கூட்டு இராணுவப்பயிற்சி திங்கள் கிழமை நிறைவடைகிறது.

---

**5. நாடு முழுவதும் வைரஸ் தொற்று அதிகரித்து வரும் நிலையில் – 4 நாள் கரோனா தடுப்பூசி திருவிழா தொடங்கியது: தகுதியுள்ள அனைவரும் போட்டுக் கொள்ள பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள்**

நாடு முழுவதும் வைரஸ் தொற்று பரவல் அதிகரித்து வரும் நிலையில், 4 நாள் கரோனா தடுப்பூசி திருவிழா நேற்று தொடங்கியது. தகுதியுள்ள அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ள முன்வர வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவில் கரோனா தடுப்பூசி போடும் பணி, கடந்த ஜனவரி 16–ம் தேதி தொடங்கியது. முதல் கட்டமாக சுகாதாரம், மருத்துவ துறையில் பணியாற்றுபவர் களுக்கு தடுப்பூசி போடப்பட்டது. அதைத் தொடர்ந்து, பிப்.2 முதல் மக்கள் சேவையில் பணியாற்றும் முன்களப் பணியாளர்களுக்கு போடப்பட்டது. மார்ச் 1 முதல் 60 வயதுக்கு மேற்பட்டவர் களுக்கும், 45 வயது மேற்பட்டவர்களில் நோய் பாதிப்புகள் உள்ளவர்களுக்கும், அதைத் தொடர்ந்து ஏப்.1 முதல் 45 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

சமூக ஆர்வலர் ஜோதிபா புலே பிறந்தநாளான ஏப்ரல் 11 முதல் அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்.14 வரை கரோனா தடுப்பூசி திருவிழா நடக்கும் எனவும் பிரதமர் தெரிவித்திருந்தார். நாட்டு மக்களிடையே தடுப்பூசி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இதன் நோக்கம் ஆகும்.

**மேலும் 5 மருந்துகள்**

இந்தியாவில் இப்போது சீரம் நிறுவனம் தயாரிக்கும் கோவிஷீல்டு மற்றும் பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவேக்ஸின் ஆகிய 2 கரோனா தடுப்பூசிகள் கடந்த ஜனவரி முதல் பயன்பாட்டில் உள்ளன. தற்போது 45 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி போடப்படுகிறது. வரும் அக்டோபர் மாதத்துக்குள் மேலும் 5 தடுப்பு மருந்து களுக்கு அனுமதி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக ரஷ்யாவின், ஸ்புட்னிக் – வி, பயோ – இ, நோவேக்ஸ், ஜைடஸ் கடிலா, இன்ட்ராநேசல் ஆகிய 5 கரோனா தடுப்பு மருந்துகள் விரைவில் பயன்பாட்டுக்கு வரும் என மத்திய அரசு வட்டாரங்கள் தெரவித்துள்ளன. குறிப்பாக ஸ்புட்னிக்–வி மருந்துக்கு அடுத்த 10 நாட்களில் அவசரகால பயன்பாட்டுக்கு அனுமதி வழங்கப்படும் எனத் தெரிகிறது.

ஸ்புட்னிக்–வி வரும் ஜூன் மாதத்திலும், ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனத்தின் பயோ–இ மற்றும் ஜைடஸ் கடிலா ஆகியவை ஆகஸ்ட் மாதத்திலும், நோவாவேக்ஸ் செப்டம்பரிலும், இன்ட்ராநேசல் அக்டோபரிலும் பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு நாளில் வழங்கப்படும் தடுப்பூசி எண்ணிக்கை அளவிலும் இந் தியா முன்னிலை வகிக்கிறது. இந்தியா வில் ஒரு நாளைக்கு 38 லட்சத்து

93,288 டோஸ் தடுப்பூசி விநியோகம் செய்யப்படு வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ரெம்டெசிவர் ஏற்றுமதிக்கு தடை**

கரோனா நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வரும் சூழலில் ரெம்டெசிவர் மருந்து ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. ரெம்டெசிவர் ஆக்டிவ் பார்மசூடிகல்ஸ் மூலப்பொருள் உள்ளிட்டவற்றை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு நேற்று தடை விதித்துள்ளது.

கரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் ரெம்டெசிவர் மருந்து செலுத்தப்படுகிறது. தற்போது தொற்று அதிகரித்து வரும் சூழலில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தேவையான மருந்துகள் இருப்பில் வைத்திருக்கும் நோக்கில் இம்மருந்து ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டுள் ளது. இந்தியாவில் ஏழு நிறுவனங்கள் ரெம்டெசிவர் ஊசி மருந்தை தயாரிப்பதற்கு அமெரிக்க நிறுவனமான கிலீட் சர்வீசஸ் நிறுவனத்திடம் அனுமதி பெற்று ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன.

இந்நிறுவனங்கள் மாதத்துக்கு 38.80 லட்சம் தடுப்பு மருந்துகளை தயாரிக்கும் திறன்கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

---

**6. முதியோர், மனநலம் பாதித்தவர்கள், ஆதரவற்ற சிறுவர், சிறுமிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் 'காவல் கரங்கள்' திட்டம்: சென்னை காவல் துறை விரைவில் தொடக்கம்**

சாலையோரம் சுற்றித்திரியும் முதியோர், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், யாசகம் வாங்கும் சிறுவர், சிறுமிகள் என ஆதரவற்ற நிலைமையில் உள்ளவர்களை தேடிக்கண்டுபிடித்து மறுவாழ்வளிக்கும் 'காவல் கரங்கள்' திட்டத்தை சென்னை காவல் துறை விரைவில் தொடங்க உள்ளது.

பொதுவாக, சட்டம், ஒழுங்கு, குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் தவிர சமூக நலன் சார்ந்த சேவைகளிலும் போலீஸார் ஈடுபடுவது வழக்கம். அதன்படி, தேர்தலுக்கு பிறகு முதல் கட்டமாக 'காவல் கரங்கள்' எனும் திட்டத்தை சென்னை போலீஸார் தொடங்கவுள்ளனர். இத்திட்டத்தின்படி, சாலையோ–ரம் சுற்றித்திரியும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களை மீட்டு, அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கவுள்ளனர். உடல் நலிவுற்று சாலையோரம் சுற்றித் திரியும் முதியவர்களை மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது அல்லது காப்பகத்தில் பாதுகாப்பாக சேர்த்துவிடுவது போன்ற பணிகளையும் மேற்கொள்ளவுள்ளனர். உடல் நலிவுற்று படுத்த படுக்கையாக சாலையோரம் அல்லது வீடுகளில் இருப்பவர்களை மருத்துவமனையில் சேர்த்து உரிய சிகிச்சை அளிக்கவும் முடிவு செய்துள்ளனர்.

---

**7. மின்தடை ஏற்படுவதை தடுக்க மின் கம்பங்களில் புதிய கருவி பொருத்த மின்வாரியம் திட்டம்**

அதிக மின்–இணைப்பு உள்ள மின்கம்பங்களில் பழுது ஏற்பட்டு மின்தடை ஏற்படுவதைத் தடுக்க, "அலுமினியம் பஸ்பர்" என்ற புதிய கருவியை பொருத்த மின்வாரியம் திட்டமிட்டுள்ளது. தமிழ்நாட்டில் 2 கோடி வீட்டு மின் இணைப்புகள், 35 லட்சம் வணிக நிறுவன மின் இணைப்புகள், 7 லட்சம் தொழிற்சாலை மின்–இணைப்புகள், 24 லட்சம் விவசாய மின் இணைப்புக–ள், 11 லட்சம் குடிசை மின் இணைப்புகள் என மொத்தம் 2.90 கோடிக்கும் மேலான மின்இணைப்புகள் உள்ளன.

இதன்மூலம், மின்கம்பங்களில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் அதை உடனடி யாக சரிசெய்ய முடிவதோடு, மின்தடை ஏற்படுவதும் குறையும் என்று மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

**8. இந்திய தொழிலதிபர் யூசுப் அலிக்கு ஐக்கிய அரபு அமீரகத்தின் உயரிய விருது**

இந்தியாவைச் சேர்ந்த தொழிலதிபரும் லூலூ குழுமத்தின் தலைவருமா–ன யூசுப் அலிக்கு ஐக்கிய அரபு அமீரகத்தின் மிகவுயரிய சிவிலியன் விருது வழங்கப்பட்டுள்ளது. அபுதாபி பட்டத்து இளவரசர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் இவ்விருதை நேற்று முன்தினம் வழங்கி கௌரவித்தார். கேரளாவைச் சார்ந்த தொழிலதிபரான யூசுப் அலி (65), அபுதாபியில் வர்த்தகம் சார்ந்த பணிகள் மற்றும் தொழில்துறையில் மிக முக்கியமான பங்களிப்பை ஏற்படுத்தியதற்காக இந்த விருது வழங்கப்படுகிறது.

---

**9. 2 மணி நேரத்துக்குள் 36 புத்தகங்கள் படித்து 5 வயது சிறுமி உலக சாதனை**

அபுதாபியில் வசித்து வரும் 5 வயதான இந்திய–அமெரிக்க சிறுமி 2 மணி நேரத்துக்குள் 36 புத்தகங்களை படித்து உலக சாதனை படைத்துள்ளார்.

சென்னையைச் சேர்ந்த பெற்றோருக்கு அமெரிக்காவில் பிறந்த இந்திய – அமெரிக்க சிறுமி கியாரா கவுர். 5 வயதான இச்சிறுமி தற்போது பெற்றோருடன் ஐக்கிய அரபு அமீரகத்தில் வசித்து வருகிறார்.

இந்த சிறுவயதில் 36 புத்தகங்களை 1 மணி 45 நிமிடங்களில் படித்து முடித்து உலக சாதனை செய்துள்ளார். இந்த சாதனைக்காக லண்டன் உலக சாதனை புத்தகத்திலும் ஆசியா சாதனைப் புத்தகத்திலும் கியாரா கவுர் இடம் பிடித்துள்ளார். கடந்த பிப்.13ஆம் தேதியன்று 36 புத்தகங்களை இடைவிடாமல் 105 நிமிடங்களில் படித்ததற்காக 'குழந்தை மேதை' என்று இலண்டன் உலக சாதனை நூல் கியாரா கவுரை பாராட்டி உள்ளது.

---

**1.** BRICS உறுப்பு நாடுகளின் நிதியமைச்சர்களும் மத்திய வங்கி ஆளுநர்களும் பங்கேற்ற நடப்பாண்டு (2021) கூட்டத்தை நடத்திய நாடு எது?

அ) பிரேசில்

**ஆ) ரஷியா ☑**

இ) இந்தியா

ஈ) சீனா

✓ அண்மையில் இந்தியா BRICS உறுப்பு நாடுகளின் நிதியமைச்சர்களும் மத்திய வங்கி ஆளுநர்களும் பங்கேற்ற நடப்பாண்டு (2021) கூட்டத்தை நடத்தியது. இதற்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்தி காந்த தாஸ் ஆகியோர் தலைமை தாங்கினர். இந்தக் கூட்டத்தில், நிதியமைச்சர் புது தில்லியில் இருந்து மெய்நிகராக உரையாற்றினார்.

✓ புதிய வளர்ச்சி வங்கி, சமூக உட்கட்டமைப்பு, பன்னாட்டுச் செலவாணி நிதிய சீர்திருத்தங்கள், SME'க்கான நிதியியல் தொழில்நுட்ப மற்றும் நிதி உள்ளடக்கம், சுங்க ஒத்துழைப்பு தொடர்பான பிரச்சனைகள் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

---

**2.** PMAY–கிராமப்புற திட்டத்தின் முதல் கட்டத்தில் கட்டப்படவுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனை?

**அ) 1 கோடி ☑**

ஆ) 75 இலட்சம்

இ) 60 இலட்சம்

ஈ) 50 இலட்சம்

✓ பிரதமர் ஆவாஸ் யோஜனா – கிராமப்புற (PMAY–G)'இன்கீழ், திட்டத்தின் முதல் கட்டத்தில் 92% இலக்கு எட்டப்பட்டுள்ளது. 2016–17 முதல் 2018–19 வரை திட்டத்தின் முதல் கட்டத்தில் 1 கோடி வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 2021–22ஆம் ஆண்டுக்குள் அனைத்து அடிப்படை வசதிகளுடன் 2.95 கோடி PMAY–G வீடுகளை நிர்மாணிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**3.** அனைத்திந்திய நிதி நிறுவனங்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கி எந்த அளவுக்கு மறுநிதியளிப்பு உதவி வழங்கவுள்ளது?

அ) ரூ.5,000 கோடி

**ஆ) ரூ.50,000 கோடி ☑**

இ) ரூ.5,00,000 கோடி

ஈ) ரூ.50,00,000 கோடி

✓ அனைத்திந்திய நிதி நிறுவனங்களுக்கு அதாவது NABARD, SIDBI மற்றும் NHB ஆகிய நிறுவனங்களுக்கு ₹50,000 கோடி வழங்க இந்திய ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது. NABARD'க்கு ₹25,000 கோடியும், SIDBI'க்கு ₹15,000 கோடியும், தேசிய வீட்டு வசதி வங்கிக்கு ₹10,000 கோடியும் மறுநிதியளிப்பு கடன் வசதி பெறும்.

---

**4.** அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "IH2A" என்றால் என்ன?



அ) COVID–19 தடுப்பூசி

ஆ) விண்கல்

இ) புதிய தாவர இனம்

**ஈ) இந்தியா H2 கூட்டணி ☑**

✓ 'IH2A' என்பது இந்தியா H2 கூட்டணியைக் குறிக்கிறது. எரிசக்தி மற்றும் தொழிற்துறையில் முக்கிய உலகளாவிய பங்காளர்கள் ஒன்றிணைந்து இந்தியா H2 கூட்டணி (IH2A) என்ற புதிய ஆற்றல் மாற்ற கூட்டணியை உருவாக்கினர். இந்தக் கூட்டணி இந்தியாவில் ஹைட்ரஜன் தொழில்நு–ட்பங்களை வணிகமயமாக்குவதில் கவனம் செலுத்துகிறது. இது நிகர சுழிய கரியமில உமிழ்ப்பாளராக இந்தியாவை மாற்றும்.

✓ இந்தியாவில் ஹைட்ரஜன் பொருளாதாரத்தையும் விநியோகச்சங்கிலி–யையும் உருவாக்க இந்தக் கூட்டணி செயல்படும்.

---

**5.** சமீபத்தில் காலமான நோபல் விருதாளர் இசாமு அகசாகி யார்?



**அ) அறிவியலாளர் ☑**

ஆ) பாடலாசிரியர்

இ) நாவலாசிரியர்

ஈ) கவிஞர்

✓ நீல ஒளிமுனைகளை (LED) கண்டுபிடித்ததற்காக இயற்பியலுக்கான நோபல் பரிசைப் பகிர்ந்து கொண்ட மூத்த ஜப்பானிய அறிவியலாளர் இசாமு அகசாகி அண்மையில் காலமானார். ஜப்பானிய நாட்டைச் சார்ந்த மூன்று ஆராய்ச்சியாளர்களுள் ஒருவரான அகசாகி, இயற்பியலுக்கான 2014ஆம் ஆண்டின் நோபல் பரிசைப் பெற்றார்.

✓ நவீன தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்களை அங்கீகரிக்கும் ஜப்பானி–ன் மிகவுயர்ந்த கௌரவமான 2009ஆம் ஆண்டுக்கான கியோட்டோ பரிசையும் அவர் பெற்றார்.

---

**6.** கொழும்பு துறைமுகத்தில் அமையவுள்ள மேற்கு சரக்கு கையா–ளும் முனையத்தை, பின்வரும் எவ்விரு நாடுகளுடன் இணைந்து இலங்கை உருவாக்கவுள்ளது?



**அ) இந்தியா மற்றும் ஜப்பான் ☑**

ஆ) சீனா மற்றும் இந்தோனேசியா

இ) மியான்மர் மற்றும் சிங்கப்பூர்

ஈ) இந்தியா மற்றும் சிங்கப்பூர்

✓ இந்தியா மற்றும் ஜப்பானுடன் இணைந்து கொழும்பு துறைமுகத்தில் மேற்கு சரக்கு கையாளும் முனையத்தை இலங்கை உருவாக்கும். அதானி துறைமுகங்கள் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டல லிமிடெட் ஆகியவற்றை இந்தியா இதற்காக பரிந்துரைத்துள்ளது. ஜப்பான் இன்னும் எதையும் பரிந்துரைக்கவில்லை. இந்தத் திட்டத்தில், இந்தியா மற்றும் ஜப்பான் 75% பங்குகளை கொண்டுள்ளன.

---

**7.** அடல் புத்தாக்க இயக்கத்தின் (AIM) இயக்குநராக நியமிக்கப்பட்டு–ள்ளவர் யார்?



அ) ராஜீவ் குமார்

ஆ) அமிதாப் காந்த்

இ) நரேந்திர மோடி

**ஈ) சிந்தன் வைஷ்ணவ் ☑**

✓ NITI ஆயோக்கின் முதன்மை முன்னெடுப்பான அடல் புத்தாக்க இயக்கத்–தின் (AIM) இயக்குநராக Dr சிந்தன் வைஷ்ணவ் நியமிக்கப்பட்டுள்ளார். 2017 ஜூன் முதல் AIM'ஐ அதன் முதல் திட்ட இயக்குநராக இருந்து வழிந–டத்தி வந்த இராமநாதன் இரமணனிடமிருந்து அவர் இந்தப் பொறுப்பை பேற்பார். சமூக தொழில்நுட்பவியலாளரான சிந்தன் வைஷ்ணவ், தற்போது அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கழகத்தில் (MIT) பணியாற்றி வருகிறார்.

---

**8.** கூட்டாக நீரியல் வரைவு அளக்கையை மேற்கொள்வதற்காக INS சர்வேக்ஷக் பயன்படுத்தப்பட்ட நாடு எது?



அ) மாலத்தீவு

**ஆ) மொரீஷியஸ் ☑**

இ) ஜப்பான்

ஈ) வியட்நாம்

✓ நீரியல் வரைவு அளக்கை கப்பலான INS சர்வேக்ஷக், மொரீஷிய கப்பல்க–ளுடன் இணைந்து கூட்டாக நீரியல் வரைவு அளக்கைகளை மேற்கொ–ள்வதற்காக மொரீஷியசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தக் கப்பல் மொரீஷியஸின் லூயி துறைமுகத்துக்கு சென்று, 'லூயி துறைமுகத்தின் ஆழ்கடல்பகுதி' குறித்த நீரியல் வரைவளக்கையைத் தொடங்கியுள்ளது.

✓ நவீன நீரியல் வரைவளக்கை உபகரணங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்து மொரிஷிய பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பதும் இந்த ஆய்வில் அடங்கும்.

---

**9.** SIDBI'இன் புதிய தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ) ரஜ்னிஷ் குமார்

**ஆ) S இராமன் ☑**

இ) அருந்ததி பட்டாச்சார்யா

ஈ) R காந்தி

✓ சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியின் (SIDBI) புதிய தலைவராகவும் நிர்வாக இயக்குநராகவும் S இராமனை அரசு நியமித்துள்ளது. இந்தப் பதவிக்கு அவரது பெயரை வங்கி வாரிய பணியகம் பரிந்துரைத்திருந்தது. மூன்று ஆண்டு காலத்திற்கு அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

✓ இந்திய தணிக்கை மற்றும் கணக்கு சேவை அதிகாரியான இராமன், தற்போது தேசிய மின்னாளுகை சேவைகள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக உள்ளார்.

---

**10.** கால்நடைத்துறையில் ஆயுர்வேதத்தை பயன்படுத்துவதற்கான ஒழுங்குமுறை பொறிமுறையை உருவாக்க, AYUSH அமைச்சகம் பின்வரும் எந்த அமைச்சகத்துடன் கையெழுத்திட்டுள்ளது?

அ) வேளாண் அமைச்சகம்

**ஆ) மீன்வளம், கால்நடை பராமரிப்பு & பால்வள அமைச்சகம் ☑**

இ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ) பஞ்சாயத்து அமைச்சகம் இராஜ்

✓ மீன்வளம், கால்நடை பராமரிப்பு & பால்வள அமைச்சகமானது AYUSH அமைச்சகத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இது, ஆயுர்வேதத்தின் கருத்தையும் அதனுடன் தொடர்புடைய துறைகளையும் கால்நடை அறிவியலில் அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ கால்நடை மருந்துகளில் புதிய சூத்திரங்கள்குறித்த ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

### 1. புதிய தலைமை தேர்தல் ஆணையராக சுஷீல் சந்திரா நியமனம்

இந்திய தேர்தல் ஆணையத்தின் அடுத்த தலைமை தேர்தலாணையராக சுஷீல் சந்திரா நியமிக்கப்பட்டுள்ளார். தலைமை தேர்தல் ஆணையர் சுனில் அரோரா ஏப்.13 ஓய்வுபெறுகிறார். அதையடுத்து, தேர்தல் ஆணையராக உள்ள சுஷீல் சந்திராவை அடுத்த தலைமை தேர்தல் ஆணையராக நியமித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. 2022 மே 14 வரை சுஷீல் சந்திரா அப்பொறுப்பில் நீடிப்பார். அவரது பதவிக்காலத்தில் கோவா, மணிப்பூர், உத்தரகண்ட், பஞ்சாப், உத்தர பிரதேச மாநிலங்களின் சட்டப்பேரவைத்தேர்தல்கள் நடைபெறும்.

1980ஆம் ஆண்டு இந்திய வருவாய்ப் பணி அதிகாரியான சுஷீல் சந்திரா, 38 ஆண்டுகள் வருவாய்த்துறையில் பணியாற்றிய அனுபவமுள்ளவர். தேர்தல் ஆணையராக நியமிக்கப்படுவதற்கு முன்பாக மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் தலைவராகப் பணியாற்றி வந்தார்.

---

### 2. அண்ணா பல்கலை. நிர்வகிக்க வழிகாட்டுதல் குழு நியமனம்

அண்ணா பல்கலையை நிர்வகிக்க மூவர்கொண்ட ஒருங்கிணைப்பு குழுவை நியமித்து ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் உத்தரவிட்டுள்ளார். அண்ணா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக இருந்த சூரப்பா ஓய்வுபெற்றதை அடுத்து புதிய துணை வேந்தர் நியமனம் செய்யும் வரை பல்கலையை நிர்வகிக்க ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

அந்த ஒருங்கிணைப்புக் குழுவில், பதிவாளர் கருணாமூர்த்தி, உயர்கல்வி செயலாளர் அபூர்வா மற்றும் பேராசிரியர் ரஞ்சனி பார்த்தசாரதி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

---

### 3. இந்தியாவில் ஆண்டுக்கு 85 கோடி 'ஸ்புட்னிக்-வி' தடுப்பூசிகள் உற்பத்தி

இந்தியாவில் ஆண்டுக்கு 85 கோடி 'ஸ்புட்னிக்-வி' கரோனா தடுப்பூசி டோஸ்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளதாக ரஷிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தியாவில் 'ஸ்புட்னிக்-வி' கரோனா தடுப்பூசியின் அவசரகால பயன்பாட்டுக்கு இந்திய மருந்துப் பொருள்கள் கட்டுப்பாட்டு இயக்குநரகம் ஒப்புதல் வழங்கியுள்ளது. ரஷியாவில் நடத்தப்பட்ட பரிசோதனைகள், இந்தியாவில் நடத்தப்பட்ட மூன்றாம்கட்ட பரிசோதனைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அந்தத் தடுப்பூசிக்கு அனுமதி வழங்கப்பட்டதாக கட்டுப்பாட்டு இயக்குநரகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து, கோவேக்ஸின், கோவிஷீல்ட் தடுப்பூசிகளுடன் சேர்த்து 'ஸ்புட்னிக்-வி' கரோனா தடுப்பூசியும் மக்களுக்கு விரைவில் செலுத்தப்படவுள்ளது. இந்நிலையில், ரஷிய நேரடி முதலீட்டு நிதி அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், 'ஸ்புட்னிக்-வி தடுப்பூசிக்கு அனுமதி அளித்த 60ஆவது நாடாக இந்தியா உள்ளது.

இந்தியாவில் அத்தடுப்பூசி பயன்பாட்டுக்கு வருவதோடு மட்டுமல்லாமல் உற்பத்தி செய்யப்படவும் உள்ளது. ஸ்புட்னிக்-வி தடுப்பூசியை உற்பத்தி செய்வதற்காக கிளாண்ட் ஃபார்மா, ஹெட்ரோ பயோஃபார்மா, பனாசியா பயோடெக் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ரஷிய நேரடி முதலீட்டு நிதி அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரி கிரில் டிமிட்ரிவ் கூறுகையில், "ஸ்புட்னிக்-வி கரோனா தடுப்பூசியின் பயன்பாட்டுக்கு இந்தியா அனுமதி அளித்துள்ளது முக்கியமான மைல்கல்.

அத்தடுப்பூசியின் பரிசோதனையில் இந்தியாவும் ரஷியாவும் ஒன்றிணைந்து செயல்பட்டன. ஸ்புட்னிக்-வி தடுப்பூசியின் உற்பத்தியிலும் இரு நாடுகளும் ஒன்றிணைந்து செயல்பட உள்ளன. இந்தியாவில் ஆண்டுக்கு 85 கோடி எண்ணிக்கையிலான தடுப்பூசி டோஸ்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன. தடுப்பூசிகள் உற்பத்தியில் உலகளவில் இந்தியா முன்னணி வகித்துவருகிறது. ஸ்புட்னிக்-வி தடுப்பூசியை உற்பத்தி செய்வதற்காக இந்தியாவில் உள்ள பல்வேறு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் கரோனா தடுப்பூசிகளானது, இந்தியாவில் மட்டுமல்லாமல் மற்ற நாடுகளிலும் பயன்படுத்தப்பட உள்ளது" என்றார்.

ஆர்ஜெண்டீனா, பொலிவியா, ஹங்கேரி, ஈரான், மெக்ஸிகோ, பாகிஸ்தான், இலங்கை உள்ளிட்ட நாடுகள் ஸ்புட்னிக்-வி கரோனா தடுப்பூசியின் பயன்பாட்டுக்கு ஏற்கெனவே அனுமதி வழங்கியுள்ளன.

---

### 4. மறைமுக வரி வருவாய் 12% வளர்ச்சி

2020-21-ஆம் நிதியாண்டில் மறைமுக வரி (GST மற்றும் இதர வரிகள்) வசூல் 12.3 சதவிகிதம் வளர்ச்சி கண்டுள்ளது என மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளதாவது: கடந்த 2019-20ஆம் நிதியாண்டில் மறைமுக வரி வசூல் ₹9.54 இலட்சம் கோடியாக இருந்தது. இதைத்தொடர்ந்து, 2020-21ஆம் நிதியாண்டில் திருத்தப்பட்ட மறுமதிப்பீட்டின்படி, நிகர மறைமுக வரி ₹10.71 லட்சம் கோடி வசூலாகியுள்ளது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 12 சதவீதம் அதிகமாகும்.

இதில், சுங்கவரி 21% அதிகரித்து ₹1.32 இலட்சம் கோடி வசூலாகியுள்ளது. முந்தைய 2019-20'இல் சுங்க வரி ₹1.09 இலட்சம் கோடி வசூலானது. இதேபோன்று மத்திய கலால், சேவை வரி வசூல் 59% அதிகரித்துள்ளது. கரோனா தொற்றுக்கிடையே, இந்தச் சாதனை படைக்கப்பட்டுள்ளது. இந்த 2020-21ஆம் நிதியாண்டில் கலால் சேவை வரி ₹3.91 இலட்சம் கோடி வசூலானது. முந்தைய ஆண்டில் இது ₹2.45 லட்சம் கோடியாக இருந்தது.

மத்திய சரக்கு சேவை வரி (CGST), ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி (IGST) போன்றவை மூலம் 2021-21ஆம் நிதியாண்டில் ₹5.48 இலட்சம் கோடி வசூலாகியுள்ளது. கரோனா தொற்று பரவல் காரணமாக வரி வசூலில் 8% வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. முந்தைய ஆண்டில் இது ₹5.99 லட்சம் கோடியாக இருந்தது. கரோனா பாதிப்பு காரணமாக முதல் அரையாண்டில் GST வரி வசூல் கடுமையாக பாதிக்கப்பட்டது. ஆனால், அரசின் பல்வேறு முயற்சிகளினால் பிந்தைய அரையாண்டில் GST வரி வசூலில் ₹1 லட்சம் கோடியை தாண்டி முன்னேற்றம் ஏற்பட்டது.

இதற்கிடையே, கடந்த மார்ச் மாதம் GST வரி ₹1.24 இலட்சம் கோடி வசூலாகியுள்ளது என்று நிதிமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

**5. கடல் உணவுப்பொருள் விற்பனைக்காக 'இ–சான்டா' வலைதளம் தொடக்கம்**

கடல் உணவுப்பொருள் விற்பனைக்கான 'இ–சான்டா' வலைதள பயன்பாட்டை வர்த்தக & தொழில்துறையின் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தொடக்கிவைத்தார். விவசாயிகளின் மேம்பாட்டை கருத்தில் கொண்டு 'இ–சான்டா' வலைதளம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், அவர்களுக்கு கூடுதல் அதிகாரம் கிடைக்கும். விவசாயிகள் தங்களது கடல் உணவுப்பொருள்களை இணைய வர்த்தக வலைதளத்தில் சந்தைப்படுத்துவதன்மூலம் ஒரு சொடுக்கில் அவற்றை விற்பனை செய்ய முடியும்.

'இ–சான்டா' வலைதளம் விவசாயிகளுக்கு கடல் உணவுப்பொருள்களை ஒரே இடத்தில் பட்டியலிட உதவுவதுடன் அவற்றின் விற்பனையும் கணிசமாக அதிகரிக்க உதவும். இந்த வலைதளம் விவசாயிகளுக்கு கூடுதல் சுதந்திரத்தை வழங்கும் என்பதுடன் மிகச்சிறந்த டிஜிட்டல் தீர்வுகளையும் அளிக்கும். இதன் வாயிலாக அவர்கள் வாழ்வு மேம்படும்.

தற்போதைய நிலையில், நாட்டின் கடல் உணவுப்பொருள்கள் ஏற்றுமதியில் 18,000 விவசாயிகள் தங்களது பங்களிப்பை வழங்கி வருகின்றனர். நவீன கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் இறால் உற்பத்தியை தற்போதைய 40,000 டன்னிலிருந்து 6–7 இலட்சம் டன்னாக அதிகரிக்க முடியும். தமிழ், ஹிந்தி, ஆங்கிலம், வங்காளம், தெலுங்கு, ஒடியா ஆகிய மொழிகளில் இந்த வலைதளம் தற்போது பயன்பாட்டில் உள்ளது. கூடிய விரைவில் இதர மொழிகளிலும் இந்த வலைதளத்தின் சேவை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது.

---

**6. சேதி தெரியுமா?**

**ஏப்.3:** பல்லடுக்குகொண்ட முகக்கவசங்களை அணிவதால், நுண்துகள் பரவல் 96% குறையும் என்று அமெரிக்காவின் ஜார்ஜியா தொழில்நுட்ப மையம் நடத்திய ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

**ஏப்.4:** இந்திய மகளிர் கால்பந்து அணியின் கேப்டனாகத் தமிழகத்தைச் சேர்ந்த இந்துமதி கதிரேசன் நியமிக்கப்பட்டார்.

**ஏப்.5:** ரஷிய அதிபர் விளாடிமிர் புதின் அடுத்து இரண்டு முறை பதவியில் நீடிப்பதற்கான மசோதாவில் கையெழுத்திட்டுள்ளார். இதன்படி தலா ஆறு ஆண்டுகள் என 2 முறை பதவியில் நீடிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2036ஆம் ஆண்டு வரை புதின் அதிகாரத்தில் இருக்க முடியும்.

**ஏப்.6:** தமிழகத்தில் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் சராசரியாக 72.78 சதவீத வாக்குகள் பதிவாகின. புதுச்சேரியில் 30 தொகுதிகளுக்கு நடந்த தேர்தலில் 81.88% வாக்குகள் பதிவாகின.

**ஏப்.7:** உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக N V ரமணா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இந்தியாவின் 48ஆவது தலைமை நீதிபதி. தற்போதைய தலைமை நீதிபதி S A போப்டேவின் பதவிக்காலம் ஏப். 23'இல் நிறைவடைகிறது.

**ஏப்.7:** தமிழ்நாடு கால்நடை மருத்துவப்பல்கலைக்கழக புதிய துணை வேந்தராகப் பேராசிரியர் K N செல்வகுமார் நியமிக்கப்பட்டார்.

**ஏப்.8:** டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கான 15 பேர்கொண்ட இந்திய துப்பாக்கிச்சுடுதல் அணி அறிவிக்கப்பட்டது. இதில் தமிழகத்தைச் சேர்ந்த இளவேனில் வாலறிவன் இடம்பிடித்தார்.

**ஏப்.10:** கரோனா இரண்டாம் அலை வேகமாகப் பரவிவரும் நிலையில் தமிழ்நாட்டில் புதிய கரோனா பொதுமுடக்கக் கட்டுப்பாடுகள் மீண்டும் நடைமுறைக்கு வந்தன.

---

**7. துருக்கியில் நடைபெற உள்ள பாராலிம்பிக்ஸ் தகுதிச்சுற்றுக்கு தமிழகத்தின் மனோகரன் தேர்வு:**

திருவள்ளூர் மாவட்டம் சோழவரத்தைச் சேர்ந்தவர் மனோகரன் (31). பார்வைக்குறைபாடுள்ள மனோகரன், ஜூடோ விளையாட்டு வீரர் ஆவார். இவர் பாராலிம்பிக்ஸ் போட்டிக்கான தகுதிச்சுற்றுக்குத் தேர்வாகி உள்ளார். பாராலிம்பிக்ஸ் போட்டிக்கான தகுதிச்சுற்று வரும் மே 23 அன்று, துருக்கி நாட்டில் உள்ள அந்தல்யா நகரத்தில் நடைபெற உள்ளது.

பாராலிம்பிக்ஸ் போட்டியானது ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் வரும் ஆக.24 முதல் செப்.5 வரை நடைபெறவுள்ளது. அதற்கான தகுதிச்சுற்றுக்கு ஜூடோ பிரிவில் இந்திய அளவில் நால்வர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். அதில் தமிழ்நாட்டிளிருந்து மனோகரன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பிறவியிலேயே பார்வைக்குறைபாடு உடையவரான மனோகரன் தன்னுடைய இருபதாவது வயதிலிருந்து ஜூடோ விளையாடி வருகிறார். தேசிய அளவிலான போட்டிகளில் 7 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளார். 2014ஆம் ஆண்டு தென்கொரியாவில் நடைபெற்ற ஆசிய அளவிலான பாரா விளையாட்டுப் போட்டியில் வெண்கலப்பதக்கம், 2016ஆம் ஆண்டு தென் ஆப்ரிக்காவில் நடைபெற்ற காமென்வெல்த் போட்டியில் வெண்கலப்பதக்கம், 2019ஆம் ஆண்டு இலண்டனில் நடந்த காமென்வெல்த் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

---

**1. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'பதிப்புரிமை (திருத்த) விதிகள், 2021'ஐ அறிவித்துள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ) நிதி அமைச்சகம்

**ஆ) வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் ☑**

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம்

✓ பதிப்புரிமை (சட்டதிருத்த) விதிகள், 2021'ஐ, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இந்தியாவில் பதிப்புரிமை, பதிப்புரிமை சட்டம், 1957 மற்றும் பதிப்புரிமை விதிமுறைகள், 2013'இன் கீழ் நிர்வகிக்கப்படுகிறது. பதிப்புரிமை விதிமுறைகள், 2013 கடைசியாக கடந்த 2016ஆம் ஆண்டு திருத்தப்பட்டது.

✓ பதிப்புரிமை இதழை வெளியிடுவது தொடர்பான புதிய விதிமுறை சேர்க்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அரசிதழில் வெளியிடவேண்டிய தேவை நீக்கப்படுகிறது. இனி அந்த இதழ் பதிப்புரிமை அலுவலகத்தின் இணைய தளத்தில் கிடைக்கும்.

---

**2. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'SARTHAQ' என்பது பின்வரும் எந்தக் கொள்கை தொடர்பான அமலபடுத்தல் திட்டமாகும்?**

அ) வேளாண் சட்டங்கள்



**ஆ) புதிய கல்விக்கொள்கை ☑**

இ) பொதுத்துறை நிறுவனங்களின் கொள்கை

ஈ) சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு

✓ தேசிய கல்விக்கொள்கை, 2020'ஐ அமல்படுத்துவது தொடர்பான உயர் மட்ட கூட்டத்திற்கு மத்திய கல்வியமைச்சர் இரமேஷ் பொக்ரியால் தலைமை தாங்கினார். 'மாணாக்கர்கள் & ஆசிரியர்கள்' தரமான கல்வி மூலம் முழுமையான முன்னேற்றம் (SARTHAQ) என்ற பெயரில் பள்ளி கல்விக்கான பரிந்துரைப்பு அமலாக்கத் திட்டமும் வெளியிடப்பட்டது.

---

**3. வானியல்குறித்து, சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற, 'ஒசைரிஸ்' என்றால் என்ன?**

அ) விண்கல்



ஆ) கருந்துளை

**இ) புறக்கோள் ☑**

ஈ) சிறுகோள்

✓ HD 209458 b என்று அதிகாரப்பூர்வமாக அழைக்கப்படும் 'ஒசைரிஸ்', புவியின் சூரிய மண்டலத்திற்கு அப்பால் வானியலாளர்கள் கண்டறிந்த முதல் கோளாகும். நேச்சர் இதழில் வெளியிடப்பட்ட புதிய ஆய்வின்படி, ஒசைரிஸின் வளிமண்டலத்தில் 6 வேதிப்பொருட்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. வேதியியல் பொருட்களின் கலவை, அந்தப் புறக்கோள் அதன் தற்போதைய நிலையை விட 100 மடங்கு தொலைவில் உள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது.

---

**4. 'PS சோரோஸ்டர்' என்ற பெயரில் ₹100 கோடி மதிப்புள்ள விரைவு ரோந்துக்கப்பலை, இந்தியா, எந்த நாட்டிடம் ஒப்படைத்துள்ளது?**

அ) ஜெர்மனி



ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**இ) சீஷெல்ஸ் ☑**

ஈ) பிரான்ஸ்

✓ இந்தியா, 'PS சோரோஸ்டர்' என்ற விரைவு ரோந்துக்கப்பலை முறையாக சீஷெல்ஸிடம் ஒப்படைத்தது. சீஷெல்ஸ் அதிபர் வேவெல் ராம்கலவனுடனான மெய்நிகர் சந்திப்பில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார்.

✓ இது, 2005ஆம் ஆண்டு முதல் சீஷெல்ஸுக்கு பரிசளிக்கப்படுகிற இந்திய தயாரிப்பினாலான நான்காவது ரோந்துக் கப்பலாகும். இது, கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்கள் நிறுவனத்தால் கட்டப்பட்டது ஆகும். ரோந்து, கடத்தல் மற்றும் வேட்டை எதிர்ப்பு நடவடிக்கைகள், தேடல் மற்றும் மீட்பு ஆகியவற்றிற்கு இந்தக் கப்பல் பயன்படுத்தப்படும்.

---

**5. "பயங்கரவாதத்திற்கு எதிரான ஐநா அறக்கட்டளை நிதியம்" நிறுவப்பட்ட ஆண்டு எது?**

அ) 1945

ஆ) 1992

**இ) 2009 ☑**

ஈ) 2020

**2009**

✓ பயங்கரவாதத்திற்கு எதிரான ஐநா அறக்கட்டளை நிதியம், கடந்த 2009 ஆம் ஆண்டில் அதன் பொதுச்செயலாளரால் நிறுவப்பட்டது. ஐநா பயங்கரவாதத்திற்கு எதிரான மையம் மற்றும் சிறப்பு திட்டங்கள் & புத்தாக்கக் கிளைமூலம் உறுப்பு நாடுகளுக்கு திறன் மேம்பாட்டு ஆதரவை வழங்க இந்த நிதியம் பயன்படுத்தப்படுகிறது.

✓ பயங்கரவாதத்திற்கு எதிரான ஐநா அறக்கட்டளை நிதியத்துக்கு, இந்தியா, அண்மையில் $500,000 டாலர்களை கூடுதலாக வழங்கியுள்ளது. இதன்மூலம், இந்த நிதியத்துக்கு இந்தியாவின் மொத்த பங்களிப்பு $1.05 மில்லியன் டாலர்களாக ஆகியுள்ளது.

---

**6. இந்தியாவில், 'Women will' என்ற வலைதளத்தை அறிமுகப்படுத்தியுள்ள தொழில்நுட்ப நிறுவனம் எது?**

**அ) கூகிள் ☑**

**women will**

ஆ) சாம்சங்

இ) மைக்ரோசாப்ட்

ஈ) LG

✓ கூகிள், இந்தியாவில் 'Women will' என்ற ஒரு புதிய வலைதளத்தை அறிமுகப்படுத்தியது.

✓ இத்திட்டம், தொழில்முனைவோராக விரும்பும் பெண்களுக்கு வழிகாட்டுதலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கடந்த 2015ஆம் ஆண்டில், 'கூகிள் ஃபார் இந்தியா' நிகழ்வில் தொடங்கப்பட்ட இணைய சாதி முயற்சியை நிறுத்துவதாகவும் கூகிள் அறிவித்துள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளில், இந்த முயற்சி, கிராமப்புற இந்தியா முழுவதும் 30 மில்லியனுக்கும் அதிகமான பெண்களுக்கு பயிற்சியளித்துள்ளது.

---

**7. உயிரி-பல்வகைமையைக்குறித்து, சமீப செய்திகளில் இடம்பெற்ற "ஆர்ரெதெரியம் சென் – Orretherium tzen" என்றால் என்ன?**

அ) தாவர இனம்



**ஆ) விலங்கினம் ☑**

இ) பறவையினம்

ஈ) பாக்டீரியா

✓ தொன்மாக்கள் காலத்தில் வாழ்ந்த ஒரு பாலூட்டியின் புதைபடிவம் தென் அமெரிக்காவின் சிலியின் படகோனியா பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. '5 பற்களுடைய விலங்கு' என்று பொருள்படும், "ஆர்ரெதெரியம் சென்" என பெயரிடப்பட்ட இது, 72 முதல் 74 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

✓ இது ஒரு தாவர உண்ணி என்றும், இடையூழியின் முடிவில் தென்னமெரிக்காவில் வாழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

---

**8. சமீபசெய்திகளில் இடம்பெற்ற, "அதின்" என்ற பழங்கால நகரம் கண்டுபிடிக்கப்பட்ட நாடு எது?**

அ) இத்தாலி



**ஆ) எகிப்து ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) கிரீஸ்

✓ தொல்பொருள் ஆய்வாளர்கள் குழுவானது அண்மையில் எகிப்தில் ஒரு மிகப்பெரிய பண்டைய நகரத்தைக் கண்டறிந்துள்ளது. இந்த நகரத்திற்கு "தி ரைஸ் ஆப் அதின்" என்று பெயரிடப்பட்டுள்ளது. இது 3,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நகரம் ஆகும். இது, லக்சரின் மேற்குக்கரையில் மணலடியில் கண்டுபிடிக்கப்பட்டது.

✓ பொ ஆ மு 1391 மற்றும் 1353'க்கு இடையில் எகிப்தை ஆண்ட மூன்றாம் அமன்ஹோடெப் மன்னரின் ஆட்சிக்காலத்தைச் சார்ந்ததாகும் இந்நகரம்.

எகிப்திய சாம்ராஜ்யத்தின் காலத்தில் இந்த நகரம் மிகப்பெரிய நிர்வாக மற்றும் தொழில்துறை குடியேற்றமாக இருந்துள்ளது.

---

**9. சமீபத்தில் வெடிப்புக்குள்ளான லா சோபாரியர் எரிமலை அமைந்–துள்ள நாடு எது?**



அ) பிலிப்பைன்ஸ்

**ஆ) புனித வின்சென்ட் மற்றும் கிரெனடைன்ஸ் ☑**

இ) இந்தோனேசியா

ஈ) ஜப்பான்

✓ கிழக்கு கரீபியன் தீவான புனித வின்சென்ட்டில் அமைந்துள்ள லா சோபா–ரியர் எரிமலை பல்லாண்டுகளாக செயலற்றநிலையிலிருந்து தற்போது வெடித்துச் சிதறியுள்ளது. 1979ஆம் ஆண்டு முதல் செயலற்ற நிலையில் இருந்த இந்த எரிமலை, கடந்த ஆண்டு டிசம்பரில் செயல்படுவதற்கான அறிகுறிகளைக் காட்டியது. வெடித்துச் சிதறியதை அடுத்து அப்பகுதியில் உள்ள மக்களை வெளியேற்றுமாறு அத்தீவின் பிரதமர் உத்தரவிட்டார்.

---

**10. பெருங்கடல்களில் சுற்றுப்புற மனித ஒலிகள் குறைப்பின் தாக்க–த்தை அளவிடுவதை நோக்கமாகக் கொண்ட உலகளாவிய பரிசோ–தனையின் பெயர் என்ன?**

அ) International Human–Ocean Experiment

ஆ) International Ocean Sound Experiment

இ) International Ambient Sound Experiment

**ஈ) International Quiet Ocean Experiment ☑**

✓ சர்வதேச அமைதியான பெருங்கடல் பரிசோதனையானது முதலில் 2011 ஆம் ஆண்டில், வெவ்வேறு பெருங்கடற்புறங்களில் சுற்றுப்புற ஒலியின் அளவீடுகளின் நேர–வரிசையை உருவாக்குவதற்காக உருவாக்கப்பட்–டது. சமீபத்தில், சர்வதேச அமைதியான பெருங்கடல் பரிசோதனையின் அறிவியலாளர்கள் குழு, COVID–19 பொது முடக்கம் காரணமாக பெருங்க–டல்களில், சுற்றுப்புற மனித செயல்பாடுகளின் குறைப்பின் தாக்கத்தைப் புரிந்துகொள்வதற்கும் அளவிடுவதற்கும் சோதனைகளை மேற்கொண்–டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் வேளாண் அமைச்சகம் ஒப்பந்தம்**

உழவர்களின் வருவாயை அதிகரிப்பதற்கான மாதிரி திட்டத்தைச் செயல்ப–டுத்துவதற்காக மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் மத்திய வேளாண் அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

விவசாயத்துக்கான உள்ளீட்டுப் பொருள்களுக்கான செலவை குறைத்தும் அறுவடைக்குப்பிறகான செலவைக்குறைத்தும் விவசாயிகளின் வருவா–யை அதிகரிக்கும் வகையிலான மாதிரி திட்டத்தைச்செயல்படுத்த மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. அதற்காக மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் மத்தி–ய வேளாண் அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. அந்த விழாவில் மத்திய வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் பங்கேற்றார். இந்த மாதிரி திட்டமானது ஆறு மாநிலங்களில் உள்ள 100 கிராமங்களில் ஓராண்டுக்கு செயல்படுத்தப்படவுள்ளது.

---



## கிரசென்ட் உயர்கல்வி நிறுவனத்துக்கு அகில இந்திய அளவில் சிறப்பிடம்

**தாம்பரம்,ஏப் 14:** அகில இந்திய அளவில் சிறந்த தொழில்நுட்பக் கல்வி நிறுவன வரிசையில் வண்டலூர் பி.எஸ்.அப்துர் ரகுமான் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் 5–ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

டேட்டா கொஸ்ட் ஆங்கில தகவல் தொழில்நுட்பப் பத்திரிகை அகில இந்திய அளவில் சிறந்து விளங்கும் உயர்தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களைத் தரவரிசைப்படுத்தித் தேர்வு செய்துள்ளது.

அகில இந்திய அளவில் அரசு மற்றும் தனியார் உயர்தொழில்நுட்பக்கல்விநிறுவனத் தர வரிசைப் பட்டியலில் கான்பூர் ஐ.ஐ.டி. முதலிடத்தையும், ஹைதராபாத் ஐ.ஐ.ஐ.டி. 2–ஆம் இடத்தையும், நேதாஜி சுபாஷ் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் 3– ஆவது இடத்தையும், தில்லி இந்திர பிரஸ்தா அறிவியல் தொழில்நுட்பக் கல்லூரி 4–ஆவது இடத்தையும், வண்டலூர் பி.எஸ்.அப்துர் ரகுமான் கிரசென்ட் உயர் கல்வி நிறுவனம் 5–ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

அகில இந்திய அளவில் சிறந்த தனியார் உயர்கல்வி நிறுவனத் தர வரிசைப் பட்டியலில் முதலிடத்தையும், தென்னிந்திய அளவிலான அரசு, தனியார் உயர் கல்வி நிறுவனத் தர வரிசைப்பட்டியலில் 2–ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.

**3. இந்திய கடற்படை கப்பல் இலங்கைக்கு நல்லிணக்க பயணம்**

இந்தியா– இலங்கை நாடுகளுக்கிடையிலான நெருக்கமான கடல் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரித்துக் கொள்வதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்திய கடற்படைக்குச் சொந்தமான INS ரான்விஜய் நீர் மூழ்கிக்கப்பல், இலங்கைக்கு மூன்று நாள்கள் நல்லிணக்க பயணமாக சென்றடைந்தது. இதுகுறித்து இந்திய தூதரகம் சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: சிங்கள மற்றும் தமிழ்ப்புத்தாண்டின் புனித நிகழ்வான "அவருடு" தினத்தையொட்டி, இந்திய கடற்படைக் கப்பல் கொழும்புவுக்கு வருவதன் மூலம், இலங்கை மக்களுக்கு ஒற்றுமை, நல்லி–ணக்கத்துக்கான செய்தியைத் தாங்கி வருகிறது.

இந்தியாவும் இலங்கையும் பாரம்பரியமாக ராணுவம் மற்றும் பாதுகாப்பில் நெருக்கமான ஒத்துழைப்பைப் பகிர்ந்து கொண்டுள்ளன. இந்த நாடுகளின் கடற்படைகள் கூட்டுப் பயிற்சி மற்றும் திறன்மேம்பாட்டில் தீவிரமாக ஈடுபட்டு, பரஸ்பரம் ஒத்துழைப்பு வழங்குவதன்மூலம் பல்வேறு நன்மைக–ளைப் பெற்று வருகின்றன. தற்போது இந்தக் கப்பலின் வருகையால் இரு நாடுகளுக்கிடையிலான நட்பில் மேலும் நெருக்கமும், கடல் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான மற்றொரு படியாகவும் இது விளங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராஜபுத்திர வம்சத்தினரின் நினைவாக பெயர் சூட்டப்பட்ட இந்தியாவின் ஐந்தாவது நீர்மூழ்கிக்கப்பலான INS ரான்விஜய்யில், ஏவுகணைகளை அழிக்கும் கருவிகளும், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட பிரமோஸ் சூப்பர்சானிக் ஏவுகணையும் பொருத்தப்பட்டுள்ளது.

இந்திய–இலங்கை உடன்படிக்கையின் ஒருபகுதியாக 1987 முதல் 1990 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் நடைபெற்ற இலங்கை உள்நாட்டுப் போரில் IPKF பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

---

**1.** **சமீபத்தில் AYUSH அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட, "HCCR" வலைதளத்துடன் தொடர்புடைய துறை எது?**



அ) ஆயுர்வேதம்

ஆ) யுனானி

**இ) ஹோமியோபதி ☑**

ஈ) யோகா

✓ மத்திய ஹோமியோபதி ஆராய்ச்சிக் கவுன்சில் என்பது மத்திய AYUSH அமைச்சகத்தின் கீழ் இயங்கிவரும் ஒரு தன்னாட்சி ஆராய்ச்சி நிறுவனம் ஆகும். இது, சமீபத்தில், உலக ஹோமியோபதி நாளான ஏப்ரல்.10 அன்று ஹோமியோபதி பிணியாளர் களஞ்சிய வலைதளம் என்றவொரு தனித்துவமான டிஜிட்டல் முன்முயற்சியை அறிமுகப்படுத்தியுள்ளது.

✓ ஹோமியோபதி மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள், மருத்துவ மாணவ –ர்கள் பிணியாளர்களுக்கான சிகிச்சையில் நுழைய ஒரு நிலையான தளத்தை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**2.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற, "நவீன பழைமைச் சின்னங்கள் மேலாண்மை அமைப்பு" தொடங்கப்பட்ட மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

**இ) கோவா ☑**

ஈ) மத்திய பிரதேசம்

✓ கோவாவின் காப்பகங்கள் மற்றும் தொல்பொருள் இயக்குநரகமானது நவீன பழைமைச் சின்னங்கள் மேலாண்மை அமைப்பை (AAMS) திறந்து வைத்தது. பழைமைச் சின்னங்களை சேமித்து வைப்பதற்கான முதல் அமைப்பு இதுவாகும் என்று கூறப்படுகிறது. AAMS என்பது ஒரு மென்பொருளால் இயக்கப்படும் தானியங்கி சேமிப்பகமாகும். இது, பல்வேறு பொருட்களின் சேமிப்பிற்கு பயன்படுத்தப்படுகிறது.

✓ இந்த அமைப்பு ஒரு தொல்பொருள்பற்றிய தகவல்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல் அவற்றின் பாதுகாப்பையும் உறுதிசெய்கிறது.

---

**3.** **நிதியமைச்சகத்தின் அண்மைய அறிவிப்பின்படி, கீழ்காணும் எந்நிறுவனத்தில், அடிப்படை சேமிப்பு வங்கிக்கணக்கைத் தொடங்க முடியும்?**

அ) கட்டணஞ்செலுத்து வங்கி

ஆ) அயல்நாட்டு வங்கி

**இ) அஞ்சல் அலுவலகம் ☑**

ஈ) சிறு நிதி வங்கி

✓ 2019ஆம் ஆண்டு அஞ்சல் அலுவலக சேமிப்பு கணக்குத் திட்டத்தில் நிதி அமைச்சகம் மாற்றங்களை அறிவித்துள்ளது. அறிவிப்பின்படி, அரசு நலத் திட்டத்தின் பயனாளி, ஓர் அஞ்சல் அலுவலகத்துடன் அடிப்படை சேமிப்பு வங்கி கணக்கைத் தொடங்க முடியும். இந்த அறிவிப்பின்படி, அத்தகைய கணக்கைத் தொடங்க குறைந்தபட்ச வைப்பிருக்க வேண்டிய அவசியம் இல்லை. குறைந்தபட்ச இருப்பை பராமரிக்க வேண்டிய அவசியமுமில் –லை. சேமிப்புக்கணக்கில் நிலுவைத்தொகையை பராமரிக்காததற்கா –ன கட்டணத்தையும் அமைச்சகம் குறைத்துள்ளது.

---

**4.** **நாட்டிலேயே முதன்முறையாக 'பசுமை பத்திரங்களை' வெளியி –ட்ட மாநகராட்சி எது?**




அ) சென்னை

ஆ) கிரேட்டர் நொய்டா

**இ) காசியாபாத் ☑**

ஈ) ஆமதாபாத்

✓ இந்தியாவிலேயே முதன்முறையாக பசுமை பத்திரங்களை காசியாபாத் மாநகராட்சி வழங்கியுள்ளது. காசியாபாத் மாநகராட்சியானது இப்பசுமை பத்திரத்தின்மூலம் ₹150 கோடி நிதி திரட்டியுள்ளது. இந்தப் பத்திரத்தின் மூலம் பெறப்பட்ட வருமானம், நகரத்தில், மூன்றாம்நிலை நீர் சுத்திகரிப்பு உட்கட்டமைப்பை உருவாக்க பயன்படுத்தப்படுகிறது. இந்தப்பத்திரங்கள் சமீபத்தில் BSE இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

---

**5.** **'வேளாண் ஹாக்கத்தானுக்காக AI'ஐ நடத்துவதற்காக ஹிந்துஸ் –தான் யூனிலீவர் மற்றும் கூகிள் நிறுவனத்துடன் ஒத்துழைத்துள்ள அமைப்பு எது?**

அ) UNESCO

ஆ) NITI ஆயோக்

இ) AIM

**ஈ) மைகௌ இந்தியா ☑**

✓ ஹிந்துஸ்தான் யூனிலீவர், கூகிள் மற்றும் மைகௌ இந்தியா ஆகியவை இணைந்து வேளாண் துறையில் ஒரு ஹாக்கத்தானை நடத்துதற்காக ஒத்துழைத்துள்ளன. விவசாயத்தில் நீர் பாதுகாப்பிற்கான புதுமையான தீர்வுகளைக்கண்டறிவதற்கும், உழவர்களுக்கு நிலையான தீர்வுகளை வடிவமைப்பதில் துளிர்நிறுவனங்களை உருவாக்குவதற்காகவுமாக இம்மூன்று நிறுவனங்கள் ஒன்றிணைந்துள்ளன.

---

**6.** **18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தங்களுக்கு விருப்பமான மதத்தைத் தேர்வு செய்ய சுதந்திரம் இருப்பதாக சமீபத்தில் கூறிய அரசியலமைப்பு ரீதியான அமைப்பு எது?**



அ) தேசிய மனிதவுரிமைகள் ஆணையம்

ஆ) தேசிய நிர்வாக தீர்ப்பாயம்

**இ) இந்திய உச்சநீதிமன்றம் ☑**

ஈ) பிற்படுத்தப்பட்டோருக்கான தேசிய ஆணையம்

✓ இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள "பரப்புரை" என்ற சொல் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தங்களுக்கு விருப்பமான மதத்தை சுதந்திரமாக தேர்வுசெய்வதற்கு அனுமதிக்கிறது என்று உச்சநீதிமன்றம் சமீபத்தில் கூறியது. மேற்கூறியவற்றை மேற்கோள் காட்டி, இந்தியாவில் மோசடியான மதமாற்றங்களை தடுப்பதற்கு நீதிமன்ற தலையீட்டைக் கோரிய பொதுநல வழக்கை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

---

**7.** **இணையவழி தகராறு தீர்வுக்கான ஒரு கையேட்டை வெளியிட –வுள்ள நிறுவனம் எது?**

அ) SEBI

ஆ) RBI

**இ) NITI ஆயோக் ☑**

ஈ) IRDAI

✓ இந்திய அரசாங்கத்தின் மதியுரையகமான NITI ஆயோக், இணையவழி தகராறு தீர்வுக்கான ஒரு கையேட்டை வெளியிட திட்டமிட்டுள்ளது. இந்தக்கையேடு, இந்தியாவில், இணையவழி தகராறு தீர்வை வணிக நிறுவனங்களின் தலைவர்கள் பின்பற்றுவதற்கான ஓர் அழைப்பிதழாக அமையும். அகாமி மற்றும் ஒமிடியார் நெட்வொர்க் இந்தியா, ICICI வங்கி, பொதுமக்களுக்கான அசோகா கண்டுபிடிப்பாளர்கள் போன்ற அமைப்புக –ளுடன் இணைந்து இந்தக் கையேடு வெளியிடப்படும்.

---

**8.** **ஜூலியஸ் பேயர் வாழ்க்கை முறைக் குறியீட்டின்படி, உலகில் வாழ்வதற்கு அதிகம் செலவு பிடிக்கும் இடம் எது?**

அ) மும்பை

**ஆ) ஷாங்காய் ☑**

இ) மெல்பர்ன்

ஈ) மாஸ்கோ

✓ 2028ஆம் ஆண்டுக்குள் சீனா உலகின் மிகப்பெரிய பொருளாதாரமாக மாறவுள்ளது. மேலும் அதன் வணிக தலைநகரான ஷாங்காய் உலகின் வாழ்வதற்கு அதிகம் செலவு பிடிக்கும் இடமாக மாறியுள்ளது. சமீபத்தில் வெளியிடப்பட்ட ஜூலியஸ் பேயர் வாழ்க்கை முறைக் குறியீட்டின்படி, சீனாவின் ஷாங்காய் உலகின் வாழ்வதற்கு அதிகம் செலவு பிடிக்கும் நகரமாகும். இந்தப் பட்டியலில், ஷாங்காயைத் தொடர்ந்து டோக்கியோ மற்றும் ஹாங்காங் ஆகிய நகரங்கள் 2 & 3ஆவது இடத்தில் உள்ளன.

---

**9. அண்மையில் ஹெலிகாப்டர் விபத்தில் இறந்த ஆலிவர் டசால்ட் என்பவர், எந்த நாட்டின் அரசியல்வாதியும் கோடீஸ்வரருமாவார்?**

அ) பிலிப்பைன்ஸ்

**ஆ) பிரான்ஸ் ☑**

இ) இந்தோனேசியா

ஈ) ஜப்பான்



✓ பிரெஞ்சு கோடீஸ்வர அரசியல்வாதி ஆலிவர் டசால்ட் அண்மையில் வட மேற்கு பிரான்சில் ஏற்பட்ட ஹெலிகாப்டர் விபத்தில் காலமானார். அவர், பிரான்ஸின் தேசிய சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார். அவர் டசால் –ட் வானூர்தி தயாரிக்கும் குடும்பத்தின் வாரிசாவார். 'டசால்ட்' என்பது ஒரு முன்னணி பிரெஞ்சு வானூர்தி உற்பத்தி நிறுவனமாகும். அவர், உலகின் 361ஆவது பணக்காரர் என்று மதிப்பிடப்பட்டுள்ளார்.

---

**10. இந்தியாவின் முதல் உலக திறன் மையத்தை (World Skill Centre) திறந்துள்ள மாநில அரசு எது?**

**அ) ஒடிஸா ☑**

ஆ) மத்திய பிரதேசம்

இ) இராஜஸ்தான்

ஈ) நாகாலாந்து



✓ ஒடிஸா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் சமீபத்தில் மஞ்சேஸ்வரில் உலக திறன் மையத்தை (WSC) திறந்துவைத்தார். இந்தியாவின் முதல் திறன் மையமான WSC, ஒடிஸா திறன்மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ஆசிய வளர்ச்சி வங்கியின் ஆதரவுடன் ₹1,342 கோடி செலவில் உருவாக்கப்பட் –டுள்ளது. இது, மாநிலத்தில் உள்ள இளைஞர்களுக்கு மேம்பட்ட மற்றும் வேலைவாய்ப்புக்கு உதவக்கூடிய திறன்களை வழங்குவதை நோக்க –மாகக் கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'ககன்யான்' திட்டம்: இந்தியா–பிரான்ஸ் ஒப்பந்தம்**

மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ISRO'இன் 'ககன்யான்' திட்டத்தில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்காக இந்தியா–பிரான்ஸ் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்திய மண்ணிலிருந்து மனிதர்களை முதன்முதலாக விண்வெளிக்கு அனுப்புவதற்கான பணிகளை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (ISRO) மேற்கொண்டு வருகிறது.

நாடு சுதந்திரமடைந்த 75ஆவது ஆண்டான 2022'இல் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், COVID–19 நோய்த் தொற்றுப்பரவல் காரணமாக ஏற்பட்ட இடையூறுகளால் இந்தத் திட்டத்தின் பணிகள் தாமதமடைந்துள்ளன. இந்நிலையில், 'ககன்யான்' திட்டத்தில் இந்தியாவும் பிரான்ஸும் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் ஜான் ஈவ் லெடிரியன், ISRO தலைவர் சிவன் ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

அதன்படி, இந்திய விண்வெளி வீரர்களுக்கு பிரான்ஸில் பயிற்சியளிக்கப்ப –டவுள்ளது. 'ககன்யான்' திட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அமைப்பில் பணிபுரிபவர்களும் பிரான்ஸில் பயிற்சிபெறவுள்ளனர். திட்டம் தொடர்பான தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும், விண்வெளி வீரர்களுக்கான உண –வு உள்ளிட்டவற்றைத் தயார் செய்வதில் ஒத்துழைப்பு அளிக்கவும் இந்த ஒப்பந்தம் வழிவகுக்கிறது.

**கருவிகளைப் பயன்படுத்த அனுமதி:** பிரான்ஸ் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள கருவிகள் உள்ளிட்டவற்றை இந்திய விண்வெளி வீரர் –கள் பயன்படுத்திக் கொள்ளவும் ஒப்பந்தம் வழிவகுக்கிறது. பன்னாட்டு விண்வெளி நிலையத்தில் பிரான்ஸ் சார்பில் பொருத்தப்பட்டுள்ள கருவிகளை இந்திய வீரர்கள் பயன்படுத்திக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டு –ள்ளது. பல்வேறு பாதுகாப்புக் கருவிகளும் இந்திய வீரர்களுக்கு வழங்கப் –படவுள்ளன. விண்வெளி வீரர்கள் பயிற்சிமேற்கொள்வதற்கான சிறப்பு மையத்தை பெங்களூரில் கட்டமைக்க பிரான்ஸ் உதவி செய்யவுள்ளது.

---

**2. இந்திய விமானப் படை தளபதிகள் மாநாடு தொடக்கம்**

இந்திய விமானப்படை தளபதிகள் பங்கேற்கும் மூன்று நாள் மாநாடு ஏப்.15 அன்று தொடங்கியது. நாட்டில் நிலவும் பாதுகாப்பு சூழல் குறித்து இந்த மாநாட்டின்போது ஆய்வு செய்யப்படவுள்ளது. விமானப்படை தளபதிகளின் மாநாடு ஆண்டுக்கு இருமுறை நடைபெறுவது வழக்கம். நடப்பாண்டின் முதலாவது மாநாடு தில்லியில் உள்ள விமானப்படை தலைமையகத்தில் தொடங்கியது. அந்த மாநாட்டை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடக்கிவைத்தார்.

மாநாட்டின்போது, கிழக்கு லடாக் உள்ளிட்ட பகுதிகளில் காணப்படும் பாதுகாப்பு சூழல் குறித்து ஆய்வுமேற்கொள்ளப்பட்டது. எதிர்கால சவால்க –ளை எதிர்கொள்ளும் வகையில் இந்திய வான்படையின் செயல்திறனை மேம்படுத்துவது உள்ளிட்டவை தொடர்பாகவும் ஆலோசிக்கப்படவுள்ளது. விமானப்படையைச் சேர்ந்த தளபதிகளும், முக்கிய அதிகாரிகளும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

---

**3. எந்தவித அழுத்தத்துக்கும் இந்தியா பணிந்துவிடாது: கிழக்கு லடாக் விவகாரம் குறித்து விபின் ராவத் கருத்து**

"இந்தியா எந்தவித அழுத்தத்துக்கும் பணிந்துவிடாது" என சீனாவுடனான கிழக்கு லடாக் மோதல் போக்கு குறித்து முப்படைத் தளபதி விபின் ராவத் கூறினார். மத்திய வெளியுறவு அமைச்சகத்துடன் அப்சர்வர் ரிசர்ச் பவுண் –டேஷன் என்ற அமைப்பு இணைந்து பன்னாட்டு அரசியல் மற்றும் பொரு –ளாதாரம் குறித்த 'ரெய்சினா பேச்சுவார்த்தை' என்ற மாநாட்டை கடந்த 13 முதல் 16ஆம் தேதி வரை நடத்தி வருகிறது. இதில் காணொலி வழியில் பங்கேற்ற விபின் ராவத் பேசியதாவது:

சீனா தனது இராணுவபலம் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பம்மூலமாக பிற நாடுகளுக்கு அழுத்தம் கொடுத்து, தனது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று எண்ணுகிறது. ஆனால், வடக்கு எல்லை விவகாரத்தி –ல் இந்தியா உறுதிப்பாட்டுடன் உள்ளது. எந்தவித அழுத்தத்துக்கும் இந்தியா பணிந்துவிடாது. வடக்கு எல்லையில் இப்போது கடைப்படிக்கப்ப –டும் நிலைப்பாட்டை மாற்ற முயற்சிப்பதை தடுப்பதில் உறுதியுடன் இருப்ப –தன்மூலம், பன்னாட்டு சமூகத்தின் ஆதரவையும் இந்தியா பெற முடியும். ஏனெனில், எல்லை நிலைப்பாட்டை கடைப்படிப்பது தொடர்பாக சர்வதேச சட்ட நடைமுறைகள் உள்ளன. அதை ஒவ்வொரு நாடும் பின்பற்றியாக வேண்டும்" என்றார் அவர்.

மேலும், ராணுவத்தை நவீனமயமாக்குதல் குறித்துப் பேசிய விபின் ராவத், அமெரிக்காவின் F35 போர் விமானம் நவீன தொழில்நுட்பங்களுடன் வடிவமைக்கப்பட்டிருப்பது குறித்து விவரித்தார். அதே நேரம், இந்த F35 போர் விமானம் தயாரிப்பு தொழில்நுட்பத்தை அமெரிக்கா இந்தியாவுடன் பகிர்ந்துகொள்ளும் என்பதை உறுதியுடன் கூறமுடியாது. F35 விமானத் –தைவிட குறைந்த தொழில்நுட்பத்துடன் கூடிய 'F' இரக போர் விமான தொழில்நுட்பத்தை மட்டுமே இந்தியாவுடன் இப்போது பகிர்ந்துகொள்ள அமெரிக்கா முன்வந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

---

**4. அமெரிக்காவில் இணை அரசு வழக்குரைஞர் பதவியில் இந்திய– அமெரிக்க பெண் நியமனத்துக்கு அங்கீகாரம்: செனட் சபையில் வாக்கெடுப்பு**

அமெரிக்க நீதித்துறையில் இணை அரசு வழக்குரைஞர் பதவிக்கு நியமிக் –கப்பட்டிருக்கும் இந்திய–அமெரிக்க பெண் வழக்குரைஞர் வனிதா குப்தா –வின் நியமனத்துக்கு ஒப்புதல் அளிப்பதற்கான வாக்கெடுப்பு அமெரிக்க செனட் சபையில் நடைபெற உள்ளது. இதில் அவருடைய நியமனம் உறுதி செய்யப்பட்டால், அமெரிக்க நீதித்துறையில் சக்திவாய்ந்த மூன்றாவது நிலை அதிகாரியாக நியமிக்கப்படும் வெள்ளையரல்லாத முதல் பெண் என்ற பெருமையை வனிதா குப்தா (46) பெறுவார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றிபெற்ற ஜோ பைடன், இந்திய வம்சாவ –ளியைச் சேர்ந்த வனிதா குப்தாவை, இணை அரசு வழக்குரைஞர் பதவிக்கு நியமித்தார். அவருடைய நியமனத்துக்கு அங்கீகாரம் பெறும் வகையில், செனட் சபையில் நீதிக்குழுவில் கடந்த மார்ச் 25 அன்று நடந்த வாக்கெடுப்பில் பெரும்பான்மை பெற்றதன்மூலம், அவருடைய நியமனம் செனட் சபைக்கு பரிந்துரைக்கப்பட்டது. செனட் பெரும்பான்மை தலைவர் சுக் ஸ்கூமர் அவருடைய பெயரை செனட் சபை வாக்கெடுப்புக்கு அறிமுகம் செய்தார்.

---

### 5. தனியார்மயமாக்கப்படும் வங்கிகள்: நிதித்துறை அமைச்சகத்துடன் NITI ஆயோக் ஆலோசனை

நடப்பு நிதியாண்டில் தனியார்மயமாக்கப்படவுள்ள இரு பொதுத்துறை வங்கிகளின் பெயர்களை இறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசின் கொள்கை வகுக்கும் குழுவான NITI ஆயோக் தொடங்கியு–ள்ளது. இதுதொடர்பாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தது:

2021–22ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டபடி இரு பொதுத்துறை வங்கிகள், ஒரு பொதுத்துறை காப்பீட்டு நிறுவனம் ஆகியவை தனியார்மயமாக்கப்படவுள்ளன. இந்த வங்கிகள், காப்பீட்டு நிறு–வனத்தை தேர்வுசெய்வது தொடர்பாக நிதித்துறை அமைச்சகத்துடன் NITI ஆயோக் ஆலோசித்து வருகிறது. இதுதொடர்பாக இறுதி முடிவுக்கு வருவதற்கு முன்னர் சட்ட விதிமுறைகள், பணியாளர் நிர்வாகம், நிதி நிலைமை உள்ளிட்ட அம்சங்களை ஆராய வேண்டியுள்ளது. இதற்காக சில கூட்டங்களையும் NITI ஆயோக் நடத்தியுள்ளது.

NITI ஆயோக் தனது பரிந்துரைகளைத் தெரிவித்ததும், அதுகுறித்து பங்கு விலக்கல் தொடர்பான செயலர்கள் குழு ஆய்வு செய்யும். செயலர்கள் குழுவின் முடிவுக்குப்பின்னர், இறுதி செய்யப்பட்ட பெயர்கள் இறுதி ஒப்புதலுக்காக பிரதமர் தலைமையிலான அமைச்சர் குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும். அமைச்சர்கள் குழு மற்றும் மத்திய அமைச்சரவையின் அனுமதிக்குப் பின்னர் தனியார்மயமாக்கல் நடவடிக்கை தொடங்கும் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. 'தனியார்மயமாக்கப்படும் வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும்' என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கடந்த மாதம் தெரிவித்திருந்தார்.

இரு பொதுத்துறை வங்கிகள், ஒரு காப்பீட்டு நிறுவனத்தில் பங்கு விலக்க–ல் நடவடிக்கைமூலமாக நடப்பு நிதியாண்டில் ₹1.75 லட்சம் கோடி திரட்ட அரசு திட்டமிட்டுள்ளது.

### 6. ஆசிய மல்யுத்தம்: சரிதாவுக்கு தங்கம்

ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் சரிதா தொடர்ந்து 2ஆவது முறையாக தங்கம் வென்றார். கஜகஸ்தானின் அல்மேட்டி நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் 59 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்ற இந்திய வீராங்கனை சரிதா, தனது முதல் சுற்றில் 4–5 என்ற கணக்கில் மங்கோலிய வீராங்கனை ஷூவ்தர் பாட்டர்ஜாவிடம் தோல்விகண்டார். எனினும், மறுவாய்ப்பை (ரெபிசேஜ் ரவுண்டு) சரியாகப் பயன்படுத்திக் கொண்ட சரிதா, அபாரமாக ஆடி அரையிறுதிக்கு முன்னேறினார். சரிதா தனது அரையிறுதியில் கிர்கிஸ்தானின் நுராய்டா அனார்குலோவாவை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

பின்னர் நடைபெற்ற இறுதிச்சுற்றில் சரிதா 10–7 என்ற கணக்கில் மங்கோ–லிய வீராங்கனை ஷூவ்தர் பாட்டர்ஜாவை வீழ்த்தினார். இதன்மூலம் முதல் சுற்றில் அவரிடம் கண்ட தோல்விக்கு பதிலடி கொடுத்ததோடு, சாம்பியன் பட்டத்தையும் தக்கவைத்துக் கொண்டார் சரிதா. மகளிர் 50 கிகி எடைப்பிரிவில் பங்கேற்ற இந்தியாவின் சீமா வெண்கலம் வென்றார். அவர் வெண்கலப்பதக்கத்துக்கான ஆட்டத்தில் தைபேவின் யங் ஷன் லின்னை வீழ்த்தினார்.

மகளிர் 76 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்ற இந்திய வீராங்கனை பூஜா, வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் 2–0 என்ற கணக்கில் தென் கொரியாவின் சியோன் ஜியோங்கை வீழ்த்தினார்.

### 7.2010'களின் தலைசிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரர் கோலி: விஸ்டன் இதழ் கௌரவம்

2010'களின் தலைசிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரராக இந்திய கேப்டன் விராட் கோலியை தேர்வு செய்துள்ளது விஸ்டன் இதழ். 'கிரிக்கெட்டின் பைபிள்' என்று வர்ணிக்கப்படும் விஸ்டன் வருடாந்திர இதழானது ஆண்டுதோறும் தலைசிறந்த கிரிக்கெட் வீரர்கள் அடங்கிய பதிப்பை வெளியிட்டு வருகிறது. இந்த நிலையில் ஒருநாள் கிரிக்கெட் போட்டி அறிமுகப்படுத்தப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி 1971 முதல் 2021 வரையிலான காலங்களில் ஒவ்வொரு பத்தாண்டுகளிலும் தலைசிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரர்களாக திகழ்ந்தவர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

அதன்படி, 1970'களின் சிறந்த வீரராக மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் கேப்டன் விவியன் ரிச்சர்ட்ஸையும், 1980'களின் தலைசிறந்த வீரராக முன்னாள் இந்திய கேப்டன் கபில்தேவையும், 1990'களின் தலைசிறந்த வீரராக சச்சின் டெண்டுல்கரையும், 2000'களின் சிறந்த வீரராக லங்கையின் முன்னாள் சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளீதரனையும், 2010'களின் சிறந்த வீரராக தற்போதைய இந்திய கேப்டனான விராட் கோலியையும் தேர்வு செய்துள்ளது விஸ்டன் இதழ்.

2008'இல் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான விராட் கோலி, இதுவரை 254 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 12,169 ரன்கள் குவித்துள்ளார். இதுதவிர, 2011'இல் உலகக்கோப்பையை வென்ற இந்திய அணியிலும் கோலி இடம்பெற்றிருந்தார். கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் கோலி 42 சதங்களுடன் 11 ஆயிரத்துக்கும் அதிகமான ரன்களை குவித்துள்ளார்.

அதேநேரத்தில் உலகின் தற்போதைய முன்னணி கிரிக்கெட் வீரராக இங்கிலாந்து ஆல்ரவுண்டர் பென் ஸ்டோக்ஸை தேர்வு செய்துள்ளது விஸ்டன் இதழ். அவர் தொடர்ந்து 2ஆவது ஆண்டாக இந்த விருதைப் பெற்றுள்ளார். பென் ஸ்டோக்ஸ் கடந்த சீசனில் டெஸ்ட் போட்டியில் 641 ரன்களை குவித்துள்ளதோடு, 19 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

### 8. இந்தியாவில் வங்கிச் சேவையிலிருந்து வெளியேறுகிறது சிட்டிபேங்க்

அமெரிக்காவைச் சேர்ந்த சிட்டிபேங்க் இந்தியாவில் நுகர்வோர் வங்கிச் சேவையிலிருந்து வெளியேறவுள்ளதாக அறிவித்துள்ளது. சிட்டிபேங்க், இந்தியாவில் கடனட்டை, சில்லறை வங்கியியல், வீட்டுக்கடன் மற்றும் சொத்து மேலாண்மை உள்ளிட்ட வர்த்தக பிரிவுகளில் ஈடுபட்டு வருகிறது. இந்த வங்கிக்கு இந்தியாவில் 35 கிளைகள் உள்ளன. ஏறக்குறைய 4,000 பணியாளர்கள் சிட்டிபேங்கின் நுகர்வோர் வங்கிச் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், எதிர்பார்த்த வளர்ச்சியை எட்ட இயலாததன் காரணமாக, 13 நாடுகளில் நுகர்வோர் வங்கிச்சேவையிலிருந்து வெளியேற சிட்டிபேங்கின் சர்வதேச தலைமைச் செயல் அதிகாரி ஜான் பிரேஸர் முடிவெடுத்துள்ளதாக அந்த வங்கி தெரிவித்துள்ளது.

### 9. நாட்டின் ஏற்றுமதி 60% அதிகரிப்பு

நாட்டின் ஏற்றுமதி சென்ற மார்ச் மாதத்தில் 60% வளர்ச்சியடைந்துள்ளது என மத்திய அரசு வெளியிட்ட புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது. இது குறித்து மத்திய அரசு புள்ளிவிவரத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது: நாட்டின் ஏற்றுமதி கடந்த மார்ச் மாதத்தில் 60.29 சதவீதம் வளர்ச்சி கண்டு 3,445 கோடி டாலரை எட்டியது. இருப்பினும், கடந்த 2020–21ஆம் முழு நிதியாண்டில் இந்தியாவின் ஏற்றுமதியானது 7.26% பின்னடைவைக் கண்டு 29,063 கோடி டாலராக சரிந்துள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் இறக்குமதி 53.74% அதிகரித்து 4,838 கோடி டாலராக காணப்பட்டது. அதேசமயம், 2020–21 ஏப்ரல்–மார்ச் வரையிலான காலத்தில் இறக்குமதியானது 18% குறைந்து 38,918 கோடி டாலராக இருந்தது. நடப்பாண்டு மார்ச்சில் வர்த்தக பற்றாக்குறை கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் 998 கோடி டாலரிலிருந்து 1,393 கோடி டாலராக உயர்ந்து உள்ளது. கடந்த முழு நிதியாண்டில் வர்த்தக பற்றாக்குறையானது 16,135 கோடி டாலரிலிருந்து 9,856 கோடி டாலராக குறைந்துள்ளது.

நடப்பாண்டு மார்ச்சில் பிண்ணாக்கு (230.4%), இரும்புத்தாது (194.89%), சணல் (105.26%), மின்னணுப் பொருள்கள் (91.98%), தரைவிரிப்புகள் (89.84%), நவரத்தினங்கள்–ஆபரணங்கள் (78.93%), பொறியியல் சாதனங்கள் (71.3%), அரிசி (66.77%), நறுமணப்பொருள்கள் (60.42%), இறைச்சி, பால் பொருள்கள் (52.79%) உள்ளிட்ட பொருள்களின் ஏற்றுமதி கணிசமான ஏற்றத்தைச் சந்தித்தன. அதேசமயம், எண்ணெய்வித்துகள் (–6.45%), முந்திரி (–1.99%) ஆகியவற்றின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தன.

இறக்குமதியைப் பொருத்தவரையில், வெள்ளி, போக்குவரத்து உபகரணங்–கள், பருப்பு வகைகள் மற்றும் உரங்கள் ஆகிய துறைகள் எதிர்மறை வளர்ச்சியை பதிவுசெய்துள்ளன. மார்ச்சில் கச்சா எண்ணெய் இறக்குமதி 2.23% அதிகரித்து 1,027 கோடி டாலராக இருந்தது. கடந்த நிதியாண்டில் இதன் இறக்குமதி 36.92% குறைந்து 8,235 கோடி டாலராக இருந்தது. அதேபோன்று, தங்கம் இறக்குமதியும் மார்ச்சில் 122 கோடி டாலரிலிருந்து 849 கோடி டாலராக அதிகரித்துள்ளதாக மத்திய அரசு புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.

### 10. வானில் பறக்கும் இ–டாக்ஸி சென்னை IIT வடிவமைப்பு: ஜூலையில் சோதனை ஓட்டம்

மின்கலத்தில் இயங்கக்கூடிய பறக்கும் இ–டாக்ஸியை சென்னை IIT வடிவமைத்துள்ளது. போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், பறக்கும் டாக்ஸியை வடிவமைக்க சென்னை IIT திட்டமிட்டது. அதற்காக 'தி இ–பிளேன் கம்பெனி' என்ற புதிய நிறுவனத்தை கடந்த ஆண்டு

நிறுவியது. இந்நிலையில், மின்கலம்மூலம் இயங்கும் பறக்கும் இ–டாக்ஸி –யை IIT வடிவமைத்துள்ளது.

இதில் இரண்டு பேர் பயணிக்க முடியும். இந்த இ–டாக்ஸி சுமார் 200 கிகி அளவிலான எடையை சுமந்தபடி மணிக்கு 200 கிமீ வேகத்தில் பறக்கும். இ–டாக்ஸி சோதனை ஓட்டம் வரும் ஜூலையில் நடக்கவுள்ளது. அதைத் தொடர்ந்து 2022ஆம் ஆண்டில் முழு வடிவம் பெற்று பயணிகளை ஏற்றிச் செல்லதயாராகிவிடும். இது நடைமுறைக்கு வரும்போது, வழக்கமான கால் டாக்ஸியைவிட 2 மடங்கு மட்டுமே வாடகை அதிகம் இருக்கும்.

**1. "வரலாற்றுச்சார்பான நீலிஸ்டுகள்" மேற்கொண்ட இணையவழி அவதூறுகளைப் புகாரளிப்பதற்காக தொலைபேசி எண்ணை அறிமு -கப்படுத்தியுள்ள நாடு எது?**

அ) வட கொரியா

**ஆ) சீனா ☑**

இ) பிரேஸில்

ஈ) கியூபா



✓ "வரலாற்றுச் சார்புடைய நீலிசம்" என்பது சீனாவில் பயன்படுத்தப்படும் ஒரு சொற்றொடராகும். அது, சீன பொதுவுடைமை கட்சியின் கடந்த கால நிகழ்வுகளின் விளக்கத்தின் மீதான பொதுமக்களின் ஐயத்தை விவரிக் -கிறது. அண்மையில், சீனாவின் இணையவெளி ஒழுங்காற்று அமைப்பு ஆளும் பொதுவுடைமை கட்சியையும் அதன் வரலாற்றையும் இழிவுபடுத் -தும் இணையவெளி அவதூறுகளைப் புகாரளிப்பதற்காக ஒரு தொலை பேசி எண்ணை அறிமுகப்படுத்தியது. அக்கட்சியின் நூறாவது ஆண்டு விழா இவ்வாண்டு ஜூலை மாதம் வருகிறது.

---


**2. பிரிட்டிஷ் திரைப்பட மற்றும் தொலைக்காட்சிக் கலைகள் அகாடமி (BAFTA)'இன் 'சிறந்த திரைப்பட' விருதை வென்ற படம் எது?**

**அ) நோமட்லேண்ட் ☑**

ஆ) சோல்

இ) அனதர் ரவுண்ட்

ஈ) ஜூடாஸ்




✓ "நோமட்லேண்ட்", பிரிட்டிஷ் திரைப்பட & தொலைக்காட்சிக் கலைகள் அகாடமியான BAFTA'இன் சிறந்த திரைப்படத்திற்கான விருது உட்பட 4 பரிசுகளை வென்றது. சோலி ஜாவோ, "நோமட்லேண்ட்" திரைப்படத் -திற்கான சிறந்த இயக்குநருக்கான BAFTA'இன் விருதினை வென்ற இரண்டாவது பெண்மணி ஆனார். சிறந்த நடிகருக்கான விருது 83 வயதான அந்தோனி ஹாப்கின்ஸுக்கும், சிறந்த நடிகைக்கான விருது பிரான்சிஸ் மெக்டார்மண்டிற்கும் வழங்கப்பட்டது.

---

**3. இந்திய வல்லுநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட COVID-19 தடுப்பூசியான ஸ்புட்னிக்-வி, எந்த நாட்டுடையதாகும்?**

அ) சீனா

**ஆ) ரஷியா ☑**

இ) ஜெர்மனி

ஈ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

✓ இந்தியாவில் ரஷியாவின் ஸ்புட்னிக்-வி தடுப்பூசியை அவசரமாக பயன் -படுத்த வல்லுநர்கள் குழு பரிந்துரைத்தது. இந்தியாவில் 'ஸ்புட்னிக்-வி' கரோனா தடுப்பூசியின் அவசரகால பயன்பாட்டுக்கு இந்திய மருந்துப் பொருள்கள் கட்டுப்பாட்டு இயக்குநரகம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

✓ மற்ற இரண்டு தடுப்பூசிகள் சீரம் நிறுவனத்தின் 'கோவிஷீல்ட்' மற்றும் பாரத் பயோடெக்கின் 'கோவாக்சின்' ஆகும். ஸ்புட்னிக்-வி, இந்தியாவில் உள்ள பல நிறுவனங்களால் இந்தியாவிலேயே தயாரிக்கப்படவுள்ளது.

---

**4.சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற, அண்டார்டிகாவின் 'டூம்ஸ்டே பனிப்பாறை'யின் மெய்யான பெயர் என்ன?**

**அ) திவைட்ஸ் பனிப்பாறை ☑**

ஆ) பைன் தீவு பனிப்பாறை

இ) ஜாகோப்சவ்ன் பனிப்பாறை

ஈ) ஹெல்ஹெய்ம் பனிப்பாறை



✓ "டூம்ஸ்டே பனிப்பாறை" என்றும் அழைக்கப்படுகிற திவைட்ஸ் பனிப்பா -றையானது, அண்டார்டிகாவில் உள்ளது. இது கடந்தசில ஆண்டுகளாக வேகமாக உருகிவருகிறது. 1.9 லட்சம் ச கி மீ., என்ற பேரளவிலான இப் பனிப்பாறையில், உலகின் கடல் மட்டத்தை ½ மீட்டருக்கு மேல் உயர்த்த போதுமான நீர் உள்ளது. அண்மையில், சுவீடனின் கோத்தன்பர்க் பல்க -லைக்கழக ஆராய்ச்சியாளர்கள், இந்தப் பனிப்பாறை கணித்ததைவிட மிக வேகமாக உருகுவதைக் கண்டறிந்துள்ளனர்.

---


**5. உழவர்களுக்கான நேரடி கட்டணம் செலுத்தும் பணியில் "அர்தி -யாக்களை" ஈடுபடுத்தவுள்ள மாநிலம் எது?**

அ) இராஜஸ்தான்

**ஆ) பஞ்சாப் ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) உத்தர பிரதேசம்



✓ குறைந்தபட்ச ஆதரவு விலையை நேரடியாக உழவர்களின் கணக்குக -ளில் செலுத்துவதாக பஞ்சாப் அரசு மத்திய அரசிடம் தெரிவித்துள்ளது. முன்னதாக, அர்தியாக்கள் (தரகு முகவர்கள்) உழவர்களுக்கு பணம் செலுத்துவார்கள். பஞ்சாப் மாநில முதலமைச்சர் கேப்டன் அமரீந்தர் சிங், கொள்முதல் மென்பொருளை மாநில உணவுத் துறை திருத்தியுள்ளதாக அறிவித்தார், இதனால் நேரடி பணம் செலுத்தும் பணியில் அர்தியாக்கள் தொடர்ந்து ஈடுபடுத்தப்படுவார்கள்.

---

**6. தடுப்பூசி செயல்முறை குறித்து செய்திகளில் அடிக்கடி காணப்பட்ட 'AEFI' என்பதன் விரிவாக்கம் என்ன?**

அ) Adequate events following immunisation

**ஆ) Adverse events following immunisation ☑**

இ) Appropriate events following immunisation

ஈ) Affected events following immunisation



✓ AEFI என்பது "நோய்த்தடுப்புக்குப்பின் ஏற்படும் மோசமான நிகழ்வுக ளை" குறிக்கிறது. இந்தியா இதற்கு முன்னர் AEFI தொடர்பான தேசிய குழுவை அமைத்திருந்தது. சுமார் 617 கடுமையான மற்றும் தீவிரமான AEFI (இறப்புகள் உட்பட) மற்றும் 180 இறப்புகள் பதிவாகியுள்ளன. AEFI தொடர்பான தேசியக் குழுவின் உறுப்பினர் ஒருவர், நிலைமையைக் கண்காணிக்க, விரிவான எந்திரங்களை இந்தியா கொண்டுள்ளதாக எடுத்துரைத்துள்ளார்.

---

**7. வர்த்தக & தொழிற்துறை அமைச்சரானவர் எந்த அலுவலகத்தின் 'வர்த்தக வசதி திறன்பேசி செயலி'யை அறிமுகப்படுத்தினார்?**

**அ) DGFT ☑**

ஆ) DGTR

இ) MPEDA

ஈ) APEDA




✓ வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சரான பியூஷ் கோயல் சமீபத்தில் வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகத்தின், 'வர்த்தக வசதி திறன்பேசி செயலி'யை அறிமுகப்படுத்தினார். இச்செயலி அதிநவீன அமைப்பைக் கொண்டுள்ளதோடு மட்டுமல்லாமல் நிகழ்நேர வர்த்தக கொள்கை புதுப் -பிப்புகள், பயன்பாடுகள் மற்றும் நிகழ்நேர தரவையும் வழங்குகிறது.

✓ இது செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான 24x7 உதவியையும் DGFT'இன் அனைத்து சேவைகளையும் வழங்கும்.

---

**8. ஊட்டச்சத்து சீரான உணவை வலியுறுத்தி சுகாதார அமைச்சரால் தொடங்கப்படவுள்ள இயக்கத்தின் பெயர் என்ன?**

அ) போஷான் கிரந்தி

**ஆ) ஆகார் கிரந்தி ☑**

இ) உணவு இந்தியா இயக்கம்

ஈ) உணவு கழிவில்லா இயக்கம்

✓ ஊட்டச்சத்து சீரான உணவின் அவசியத்தை வலியுறுத்தி, "ஆகார் கிரந் -தி" என்ற இயக்கத்தை மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ் வர்தன் தொடங்கவுள்ளார். "நல்ல உணவு-நல்ல அறிவாற்றல்" என்ற தாரக மந் -திரத்துடன் விஞ்ஞான பாரதி மற்றும் உலகளாவிய இந்திய அறிவியலா ளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் மன்றம் (GIST) ஆகியவை இணைந்து இதனை தொடங்கின.

✓ இந்தத் திட்டம் மாணவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும்.

---

**9.** **ஓர் அண்மைய தரவுகளின்படி, சிலிக்கா ஏரியில், பின்வரும் எந்த உயிரினத்தின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது?**



**அ) ஓங்கில்கள் ☑**

ஆ) முதலைகள்

இ) கெளுத்தி மீன்கள்

ஈ) ஆமைகள்

✓ சிலிக்கா ஏரியானது இந்தியாவின் மிகப்பெரிய உப்பு நீர் ஏரியாகும்; இது, ஒடிஸா மாநிலத்தின் பூரி, குர்தா மற்றும் கஞ்சம் ஆகிய மாவட்டங்களில் பரவியுள்ளது. மாநில வன மற்றும் சுற்றுச்சூழல் துறையின் சுமீபத்திய தரவு வெளியீட்டின்படி, இந்த ஏரியில் வாழ்ந்து வரும் ஓங்கில்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு இருமடங்காக அதிக –ரித்துள்ளது. சிலிக்கா ஏரி அதன் ஐராவதி ஓங்கில்களுக்கு பெரும் பெயர் பெற்றதாகும்.

---

**10.** **ஆர்ட்டெமிஸ் திட்டத்தை மேற்கொள்ளும் அமைப்பு எது?**

அ) DRDO

ஆ) ISRO

**இ) NASA ☑**

ஈ) உலக வங்கி

✓ ஆர்ட்டெமிஸ் திட்டம் என்பது NASA'இன் மனிதனை நிலவுக்கு அனுப்பும் திட்டமாகும். 2024ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. 2024'இல் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் ஒருபகுதியாக, அண் –மையில், நிலவில் கால்பதிக்கவுள்ள முதல் வெள்ளையரல்லாத பெண்ணையும் NASA அறிவித்துள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மு க ஸ்டாலினுக்கு விருது**

சமூக நலத்திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தியதற்காக 'இன்டராக்டிவ் போரம் ஆன் இந்தியன் எகானமி' அமைப்பு சார்பில் திமு கழக தலைவர் மு க ஸ்டாலினுக்கு விருது வழங்கப்பட்டது. 'இன்டராக்டிவ் போரம் ஆன் இந்தியன் எகானமி' என்ற அமைப்பு சார்பில் திமு கழக தலைவர் மு க ஸ்டாலினுக்கு சமூக நலத் திட்டங்களுக்கான 'சேம்பியன்ஸ் ஆப் சேஞ்ச்' விருது கோவா மாநிலம் தாஜ் ரெசார்ட் மற்றும் கன்வென்ஷன் சென்டரில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு மகாராஷ்டிர மாநில ஆளுநர் பகத் சிங் கோஷியாரி தலைமைவகித்தார்.

---

**2. 5 மாநிலத் தேர்தலில் ரூ. 1,000 கோடி பறிமுதல்: தமிழகம் முதலிடம்**

5 மாநில பேரவைத் தேர்தல்களில் இதுவரை இல்லாத அளவுக்கு ₹1,000 கோடிக்கு ரொக்கம், மதுபானம், இலவச பொருள்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இது கடந்த 2016'இல் பறிமுதல் செய்யப்பட்டதைவிட நான்கு மடங்கு அதிகமாகும்.

இதில் தேர்தல் முடிவடைந்த தமிழ்நாட்டில் அதிகபட்சமாக ₹446.28 கோடியும், நான்கு கட்டத் தேர்தல் முடிவடைந்த மேற்கு வங்கத்தில் ₹300.11 கோடியும், அஸ்ஸாமில் ₹122.35 கோடியும், கேரளத்தில் ₹84.91 கோடியும், புதுச்சேரியில் ₹36.95 கோடியும் அடங்கும். இதுவரை மொத்தம் ₹1001.44 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், கடந்த 2016'இல் இது ₹225.77 கோடியாக இருந்ததாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

தேர்தலில் கட்சிக்கு ஆதரவாக வாக்களிக்க வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா, இலவச பொருள்கள், மதுபானப் பொருள்கள் ஆகியவை வழங்குவதைத் தடுக்க வாக்குப் பதிவு நடைபெறும் வரை தேர்தல் ஆணையம் காவல்துறை, வருமான வரித்துறையினருடன் சேர்ந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறது. அதன்படி, தமிழ்நாட்டில் பிடிபட்ட ₹446.28 கோடி பணத்தில் ₹236.69 கோடி வாக்காளர்களுக்கு விநியோ –கிக்கப்பட இருந்தது. தமிழகத்தில் பெரும்பாலும் வாக்காளர்களுக்கு பணப் பட்டுவாடா செய்யப்படுகிறது.

புதுவையில் வாக்காளர்களைக் கவர விலை உயர்ந்த பொருள்கள் வழங்கப்படுகின்றன. அங்கு பறிமுதல் செய்யப்பட்ட ₹36.95 கோடியில் ₹27.42 கோடியில் விலை உயர்ந்த பொருள்களாக உள்ளன.

மேற்கு வங்கத்தில் இதுவரை ₹118.33 கோடிக்கு போதைப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கேரளத்தில் வாக்காளர்களை கவர தங்க நகைகள் உள்ளிட்ட விலை உயர்ந்த பொருள்கள் வழங்கப்படுகின்றன. அங்கு பறிமுதல் செய்யப்பட்ட ₹84.91 கோடியில் ₹50.86 கோடிக்கு விலை உயர்ந்த பொருள்களாகும். அஸ்ஸாமில் வாக்காளர்களுக்கு இலவசமாக மதுபானங்கள் வழங்கப்படுகின்றன. அதன்படி ₹41.97 கோடிக்கு மது பானங்கள் அங்கு பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

5 மாநில பேரவைத் தேர்தலில் 1,000 கோடி வரையில் பறிமுதல் செய்யப் –பட்டுள்ளது தேர்தல் ஆணையத்தின் வரலாற்றில் மைல்கல் என்றும், வருமான வரி உள்ளிட்ட பல்வேறு துறைகளுடன் சேர்ந்து நடத்திய சோதனையில்தான் இது சாத்தியமானது என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தமிழ்நாடு, கேரளம், அஸ்ஸாம், புதுச்சேரி ஆகிய நான்கு மாநிலங்களில் பேரவைத் தேர்தல்கள் முடிவடைந்துள்ளன. மேற்கு வங்கத்துக்கு இன்னும் மூன்றுகட்டத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. வாக்கு எண்ணிக்கை மே.2 அன்று நடைபெறுகிறது.

---

**3. பொருளாதார விவகாரத் துறை செயலராக அஜய் சேத் பொறுப்பேற்பு**

மத்திய நிதி அமைச்சகத்தில் பொருளாதார விவகாரத் துறை செயலராக அஜய் சேத் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். இதுகுறித்து நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள சுட்டுரை செய்தியில் தெரிவித்துள்ளதாவது: மத்திய நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரத் துறையின் புதிய செயலராக அஜய் சேத் பொறுப்பேற்றுக்கொண்டார்.

பொருளாதார விவகாரத் துறையின் செயலராக இருந்த தருண் பஜாஜ் மத்திய நிதி அமைச்சகத்தின் வருவாய்த்துறை செயலராக நியமிக்கப்பட்ட –தைத் தொடர்ந்து அஜய் சேத் இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளதாக அந்தச் சுட்டுரைப் பதிவில் நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. 1987ஆம் ஆண்டு கர்நாடக மாநிலத்திலிருந்து IAS பணிக்கு தேர்வானவர் அஜய் சேத். பிரதமர் தலைமையிலான அமைச்சரவையின் நியமனக் குழு ஏப்.6 அன்று அஜய் சேத்தை பொருளாதார விவகாரங்களுக்கான செயலராக நியமனம் செய்வதாக அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

---

**4. ஆசிய மல்யுத்தம்: வினேஷ், அன்ஷுவுக்கு தங்கம்**

ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் வினேஷ் போகத், அன்ஷு மாலிக் ஆகியோர் தங்கம் வென்றனர். கஜகஸ்தானின் அல்மேட்டி நகரில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் மகளிர் 53 கிலோ எடைப் பிரிவில் பங்கேற்ற வினேஷ் போகத், ஒரு புள்ளியைக்கூட இழக்காமல் தங்கம் வென்றுள்ளார். சீனா மற்றும் ஜப்பானைச்சேர்ந்த வீராங்கனைகள் பங்கேற்காததால் வினேஷ் போகத்தின் வெற்றி எளிதானது. மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் 19 வயதான அன்ஷு மாலிக் தங்கம் வென்றார்.

வினேஷ் போகத், அன்ஷு மாலிக் ஆகியோர் ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷி –ப்பில் தங்கம் வெல்வது இதுவே முதல்முறையாகும். வினேஷ் போகத் இதற்கு முன்பு நடைபெற்ற ஆசிய சாம்பியன்ஷிப் போட்டிகளில் 3 வெள்ளி உள்பட 7 பதக்கங்கள் வென்றிருந்தபோதிலும், இப்போதுதான் முதல் முறையாக தங்கம் வென்றுள்ளார். இதேபோல் இந்தியாவின் திவ்யா காக்ரன் (72 கிலோ எடைப் பிரிவு) தங்கமும், சாக்ஷி மாலிக் (65 கிலோ எடைப் பிரிவு) வெள்ளிப்பதக்கமும் வென்றனர்.

ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா இதுவரை 4 தங்கம், 1 வெள்ளி, இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது. முன்னதாக நடைபெற்ற ஆட்டங்களில் சரிதா (59 கிலோ எடைப்பிரிவு) தங்கமும், சீமா பிஸ்லா (50 கிகி எடைப்பிரிவு), பூஜா (76 கிலோ எடைப்பிரிவு) ஆகியோர் வெண்கலமும் வென்றது குறிப்பிடத்தக்கது.

---

**5. 60% யுரேனியம் செறிவூட்டலை தொடங்கியது ஈரான்**

வல்லரசு நாடுகளுடன் மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்தை மீறி, அணுசக்தி எரிபொருளான யுரேனியத்தை 60% வரை சுத்திகரிக்கும் பணியைத் தொடங்கியுள்ளதாக ஈரான் அறிவித்துள்ளது. நடான்ஸ் நகரத்தில் அமைந்து உள்ள தங்கள் நாட்டின் முக்கிய யுரேனியம் செறிவூட்டும் மையத்தில் இஸ்ரேலின் சதிச்செயலால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டி வரும் ஈரான், அதற்குப் பதிலடியாக இந்த நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதைத் தடுக்கும் வகையில் அந்த நாடு மீது ஐநா'இன் சர்வதேசப் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஈரானின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. இந்த நிலையில், அமெரிக்கா, பிரிட்டன், ரஷியா, பிரான்ஸ், சீனா ஆகிய ஐநா பாதுகாப்பு கவுன்சில் நிரந்தர உறுப்பு நாடுகள், ஐரோப்பிய யூனியன் மற்றும்

ஜெர்மனியுடன் ஈரான் கடந்த 2015ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொண்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த ஒப்பந்தத்தில், தனது அணுசக்தி திட்டங்கள் அணுவாயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஈரான் ஒப்புக்கொண்டது.

அதற்குப்பதிலாக, ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை விலக்கிக் கொள்ள வல்லரசு நாடுகளும் சம்மதித்தன. ஒப்பந்தத்தின் ஒருபகுதியாக, யுரேனியம் எரிபொருளை 3.67 சதவீதத்துக்கும் மேல் செறிவூட்ட மாட்டோம் என ஈரான் உறுதியளித்தது. யுரேனியத்தை 90% செறிவூட்டினால்தான் அதனை அணுவாயுதங்களில் பயன்படுத்த முடியும் என்பதால் ஒப்பந்தத்தில் இந்த அம்சம் இடம்பெற்றிருந்தது.

இச்சூழலில், அமெரிக்க அதிபராக ஒபாமா இருந்தபோது உருவாக்கப்பட்ட இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக, அடுத்த வந்த முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் கடந்த 2017ஆம் ஆண்டு அறிவித்தார். அதன் தொடர்ச்சியாக, அந்த ஒப்பந்தத்தின்கீழ் விலக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை ஈரான் மீது அவர் மீண்டும் விதித்தார். இதற்கு, அணுசக்தி ஒப்பந்த நிபந்தனைகளை மீறுவதன்மூலம் ஈரான் பதிலடி கொடுத்து வருகிறது. அதன் ஒருபகுதியாக, ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்த 3.67 சதவீதத்துக்கு பதிலாக 20% வரை யுரேனியத்தை ஈரான் செறிவூட்டி வந்தது.

இதற்கிடையே, அணுசக்தி ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதற்காக ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் ஈரானுக்கும் வல்லரசு நாடுகளுக்கும் இடையே கடந்த வாரம் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில், அந்த ஒப்பந்தத்தில் மீண்டும் இணைய விருப்பம் தெரிவித்துள்ள புதிய அதிபர் ஜோ பைடன் தலைமையிலான அரசும் பங்கேற்றது.

இந்த நிலையில், ஈரானின் முக்கியத்துவம் வாய்ந்த நடான்ஸ் செறிவூட்டு மையத்தில் திடீர் மின்தடை ஏற்பட்டு, அதன் செறிவூட்டு கருவிகள் பாதிக்கப்பட்டன. இஸ்ரேலின் சதிச்செயல் காரணமாகவே அந்த பாதிப்பு ஏற்பட்டதாக ஈரான் குற்றஞ்சாட்டி வருகிறது. அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், ஈரான் தற்போது யுரேனியத்தை 60% செறிவூட்டத் தொடங்கியிருப்பது, அணுசக்தி ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதற்காக நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தையில் பின்னடைவை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது.

---

### 6. அசோக் லேலண்ட் தயாரித்த குண்டு துளைக்காத வாகனம்: இந்திய விமானப் படையிடம் ஒப்படைப்பு

அசோக் லேலண்ட் நிறுவனம் லாக்கீட் மார்ட்டினுடன் இணைந்து தயாரித்த குண்டு துளைக்காத இலகு இரக வாகனம் இந்திய விமானப் படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து அசோக் லேலண்ட் நிறுவனம் பங்குச் சந்தையிடம் தெரிவித்துள்ளதாவது: இந்திய விமானப் படைக்கு தேவையான இலகுரக குண்டு துளைக்காத வாகனத்தை தயாரிக்கும் ஒப்பந்தத்தைப் அசோக் லேலண்ட் பெற்றது. இதையடுத்து, லாக்கீட் மார்ட்டின் நிறுவனத்திடமிருந்து தொழில்நுட்ப பரிமாற்ற ஒப்பந்தத்தின்கீழ் இந்த வாகனத்தை அசோக் லேலண்ட் உருவாக்கியுள்ளது.

முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த வாகனம் லாக்கீட் மார்ட்டின் 'CVNG' வாகனத்தின் மேம்படுத்தப்பட்ட பதிப்பாகும். இந்த வாகனம் முதல் கட்டமாக ஏப்.13ஆம் தேதி விமானப்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. LPPV வாகனம் சேறு, மண், பாறை, தண்ணீர் உள்ளிட அனைத்திலும் இயங்கக்கூடியது. இதில், தாக்குதலுக்கு தேவையான கணிசமான உபகரணங்களை கொண்டு செல்லலாம் என்பதுடன், 6 பேர் அடங்கிய குழுவும் இவ்வாகனத்தில் பயணிக்கலாம் என அசோக்லேலண்ட் தெரிவித்துள்ளது.

---

### 7. 'ஹீமோபிலியா நோயால் 1,800 குழந்தைகள் பாதிப்பு'

தமிழ்நாட்டில் 1800 ஆண் குழந்தைகள் 'ஹீமோபிலியா' நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக எழும்பூர் குழந்தைகள்நல மருத்துவர் தெரிவித்தார். உலக 'ஹீமோபிலியா' நாள் ஒவ்வோர் ஆண்டும் ஏப்.17 அன்று கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து குழந்தைகள் நலப்பிரிவு ஹீமட்டாலஜி துறை பேராசியர் Dr. இரவிச்சந்திரன் கூறியதாவது: காயத்தால் ஏற்படும் ரத்தக்கசிவு, ரத்தத்தில் உள்ள உறையும் தன்மையால், மனிதர்களுக்குச் சிறிது நேரத்தில் ரத்தம் வடிவது நின்றுவிடும். இந்த ரத்தம் உறைவதற்கு என நமது உடலில் 13 வகையான இரத்த உறைபொருள்கள் உள்ளன. ஆனால், இரத்த உறைபொருளின் குறைபாட்டால் இரத்தக்கசிவு சிலருக்கு எளிதில் நிற்பதில்லை. இதுவே 'ஹீமோபிலியா' எனப்படுகிறது.

உலகளவில் 'ஹீமோபிலியா' நோய் 10 ஆயிரத்தில் ஒருவருக்கு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்நோய்க்கு சிகிச்சையளிப்பதற்காக தமிழகத்தில், எழும்பூர் குழந்தைகள்நல மருத்துவமனை, தேனி, தருமபுரி, மதுரை, சேலம் என 5 அரசு மருத்துவமனைகளில் பிரத்யேக சிகிச்சை மையங்கள் உள்ளன. இது பரம்பரை நோய் ஆகும். ஆண்களை மட்டும் தாக்கும் நோய். தமிழ்நாட்டில் இதுவரை 1,800 ஆண் குழந்தைகள் ஹீமோபிலியா நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

---

### 8. நிலவில் தரையிறங்குவதற்கான NASA விண்கலம்: உருவாக்குகிறது ஸ்பேஸ்–எக்ஸ்

நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் தனது திட்டத்துக்காக, தரையிறங்கும் கலத்தை உருவாக்கும் பொறுப்பை தனியார் நிறுவனமான ஸ்பேஸ்–எக்ஸுக்கு அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் NASA வழங்கியுள்ளது. இதுகுறித்து அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளதாவது: வரும் 2024ஆம் ஆண்டில் நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்ப NASA ஆய்வுமையம் திட்டமிட்டுள்ளது. அந்தத்திட்டத்தின்கீழ், நிலவுக்கு முதல்முறையாக ஒரு பெண் விண்வெளி வீராங்களை செல்லவிருக்கிறார்.

அத்திட்டத்தின்கீழ், நிலவில் தரையிறங்குவதற்கான கலத்தை உருவாக்கும் பணியை தனியார்நிறுவனத்துக்கு வழங்க NASA முடிவுசெய்தது. 289 கோடி டாலர் (சுமார் ₹21,542 கோடி) மதிப்புடைய இந்த ஒப்பந்தத்துக்காக, அமேஸான் நிறுவனர் ஜெஃப்ரி பேஸோஸின் நிறுவனம், அலாபாமாவைச் சேர்ந்த டைனடிக்ஸ், எலான் மஸ்கின் ஸ்பேஸ்–எக்ஸ் ஆகிய நிறுனங்கள் போட்டியிட்டன. இதில் ஸ்பேஸ்–எக்ஸ் நிறுவனம் வெற்றிபெற்றுள்ளது.

அந்த நிறுவனத்தின் ஸ்டார்ஷிப் கலத்தை அடிப்படையாகக் கொண்டு நிலவில் தரையிறங்குவதற்கான கலம் வடிவமைக்கபடவுள்ளது. தற்போது தெற்கு டெக்ஸாக்ஸ் பகுதியில் ஸ்பேஸ்–எக்ஸின் ஸ்டார்ஷிப் சோதித்துப் பார்க்கப்பட்டு வருகிறது என்று ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

---

### 9. கரோனா தடுப்பூசி போட்டால் கூடுதல் வட்டி: சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா புதிய திட்டம்:

இதுகுறித்து சென்ட்ரல் பாங்க் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தற்போதைய பேரிடர் காலத்தை கருத்தில்கொண்டு, நோயற்ற சமுதாயத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா 'நோயெதிர்ப்பு இந்தியா வைப்புத் திட்டம்' என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி, தடுப்பூசி போட்டுக்கொண்ட வாடிக்கையாளர்கள், 1,111 நாட்களுக்கு குறிப்பிட்ட தொகையை வைப்புத்தொகையாக செலுத்தினால், அவர்களுக்கு வழக்கமாக வழங்கப்படும் வட்டி வருவாயை விட 0.25% கூடுதலாக வழங்கப்படும். எனவே, அனைத்து வாடிக்கையாளர்களும் தடுப்பூசி போட்டுக்கொண்டு, குறைந்த காலமே அமலில் இருக்கும் இந்தச் சிறப்பு சலுகை திட்டத்தை பயன்படுத்தி பயன்பெற வேண்டுகிறோம். மூத்த குடிமக்களுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

---

### 10. அருந்தானிய ஆண்டு

ஐநா பொதுக்குழு 2023ஆம் ஆண்டை அருந்தானிய ஆண்டாக (Year of Millets) அறிவித்துள்ளது. 193 நாடுகளை உறுப்பினர்களாகக்கொண்ட பொதுக்குழுவில் இந்தியா முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தைக் கென்யா, நைஜீரியா, நேபாளம், ரஷியா, வங்காளதேசம், செனகல் உள்ளிட்ட எழுபது நாடுகள் ஆதரித்தன. இந்த அறிவிப்பால், அருந்தானிய உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**1. 2020–21 நிதியாண்டுக்கான 37 பெரிய CPSE'கள் மற்றும் அரசு துறைகளின் ஒட்டுமொத்த மூலதன செலவு என்ன?**

**அ) ₹4.6 இலட்சம் கோடி ☑**



ஆ) ₹10.6 இலட்சம் கோடி

இ) ₹40.6 இலட்சம் கோடி

ஈ) ₹100.6 இலட்சம் கோடி

✓ இந்திய அரசாங்கம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, 37 பெரிய CPSE'கள் மற்றும் துறைசார் நிறுவனங்களின் மொத்த மூலதன செலவுகள் 2020–21ஆம் நிதியாண்டில் ₹4.6 இலட்சம் கோடியாக உள்ளது. 2020–21 நிதி ஆண்டிற்கான மூலதன செலவின் இலக்கு ₹5 இலட்சம் கோடி வரை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதில், 92% வரை எட்டப்பட்டுள்ளது.

---

**2. 'லிட்டில் குரு' செயலியை அறிமுகப்படுத்தியுள்ள நிறுவனம் எது?**

அ) ISRO



**ஆ) ICCR ☑**

இ) BHEL

ஈ) BARC

✓ இந்திய கலாச்சார உறவுகளுக்கான கவுன்சில் (ICCR) தனது 71ஆவது நிறுவு நாளை அண்மையில் கொண்டாடியது. பீஜிங்கில் உள்ள இந்திய தூதரகத்தில், சுவாமி விவேகானந்தர் கலாச்சார மையத்தில் நடத்தப்பட்ட கொண்டாட்டங்களில், நிறுவுநாள் கொண்டாட்டங்களுடன் 'லிட்டில் குரு' செயலியும் அறிமுகப்படுத்தப்பட்டது. இது, உலகின் முதல் விளையாட்டு மையமாக்கப்பட்ட சமற்கிருத கற்றல் செயலியாகும்.

---

**3. எந்த மாநிலத்தின் 3 கிளர்ச்சிக் குழுக்களுடனான போர்நிறுத்த ஒப்பந்தத்தை, இந்தியா, மேலும் ஓராண்டுக்கு நீட்டித்துள்ளது?**

அ) அஸ்ஸாம்



ஆ) சிக்கிம்

**இ) நாகாலாந்து ☑**

ஈ) அருணாச்சல பிரதேசம்


✓ நாகாலாந்து மாநிலத்தின் 3 கிளர்ச்சிக் குழுக்களுடனான போர்நிறுத்த ஒப்பந்தத்தை இந்திய அரசாங்கம் மேலும் ஓராண்டுக்கு நீட்டித்துள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தங்கள் 2022 ஏப்ரல் வரை நீட்டிக்கப்பட்டுள்ளன.

✓ மத்திய உள்துறை அமைச்சகத்தின்படி, இந்திய அரசாங்கத்திற்கும், NSCN NSCN/NK, NSCN/R மற்றும் NSCN/K–காங்கோ ஆகிய மூன்று குழுக்களுக்கும் இடையே போர்நிறுத்த ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகின்றன.

---

**4.மேலை ஆஸ்திரேலியாவில் நிலச்சரிவுகளை ஏற்படுத்திய வெப்ப மண்டல சூறாவளியின் பெயர் என்ன?**

**அ) செரோஜா ☑**



ஆ) பாப்

இ) நிவர்

ஈ) பானி

✓ வெப்பமண்டல சூறாவளியான செரோஜா அண்மையில் மேலை ஆஸ்திரேலியாவின் 1,000 கிமீ நீள நிலப்பரப்பை தாக்கி சேதப்படுத்தியது. மணிக்கு 170 கிலோ மீட்டர் வேகத்துக்கு வீசிய மூன்றாம் வகை புயல், அங்கு நிலச்சரிவுகளை ஏற்படுத்தியது. ஆஸி., நாட்டின் வானிலை ஆய்வு மையத்தின்படி, இந்தப் புயல் பலவீனமடைந்த போதிலும், அது, மணிக்கு 110 கிமீ வேகத்தில் புயல் காற்றை வீசும்.

---

**5. அண்மையில் தொடங்கப்பட்ட டிஜிட்டல் தளமான, "இ–சாண்டா" என்பதுடன் தொடர்புடைய தயாரிப்பு எது?**

அ) மருந்துகள்



**ஆ) மீன்வளர்ப்பு தயாரிப்புகள் ☑**

இ) மின்னனு தயாரிப்புகள்

ஈ) ஜவுளி தயாரிப்புகள்

✓ மீன் விவசாயிகளையும் வாங்குபவர்களையும் இணைக்கும் மின்னணு சந்தையான, 'இ–சாண்டா'வை மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல் திறந்து வைத்தார். 'eSanta' என்பது electronic Solution for Augmenting National centre for sustainable aquaculture (NaCSA) farmers' Trade in Aquaculture" என்பதாகும். NaCSA என்பது கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (MPEDA) ஒரு விரிவாக்கப்பட்ட குழுமமாகும்.

---

**6. ஹிடெக்கி மாட்சுயாமா என்பவர் பின்வரும் எந்த விளையாட்டின் சாம்பியன்ஷிப்பான முதல் ஜப்பானிய வீரராக மாறியுள்ளார்?**

அ) டென்னிஸ்



**ஆ) கால்ப் ☑**

இ) சதுரங்கம்

ஈ) பூப்பந்து

✓ அகஸ்டா நேஷனல் கால்ப் கிளப்பில் மாஸ்டர்ஸ் வென்ற ஹிடெக்கி மாட்சுயாமா, ஆடவர் மேஜர் சாம்பியன்ஷிப்பைப் பெற்ற முதல் ஜப்பானிய வீரர் என்ற பெருமையைப் பெற்றார். 29 வயதான இவர் உலகளவில் 15 வெற்றிகளையும், எட்டு சாம்பியன்ஷிப் போட்டிகளில் முதல் பத்து இடங்க–ளையும் பெற்றுள்ளதோடு 4 பிரெஸிடென்ட் கோப்பை போட்டிகளிலும் பங்கேற்றுள்ளார். கடந்த 2012ஆம் ஆண்டில், உலக அமெச்சூர் கால்ப் தரவரிசையில் மாட்சுயாமா முதலிடத்தைப் பிடித்தார்.

---

**7. நிதித்துறைக்கான காலநிலை மாற்ற சட்டத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்திய நாடு எது?**

அ) பிரேஸில்



ஆ) ஜெர்மனி

**இ) நியூசிலாந்து ☑**

ஈ) பிரான்ஸ்

✓ நிதித்துறைக்கான காலநிலை மாற்ற சட்டத்தை அறிமுகப்படுத்திய உல–கின் முதல்நாடாக நியூசிலாந்து திகழ்கிறது. வங்கிகள், காப்பீட்டாளர்கள் மற்றும் முதலீட்டு மேலாளர்கள் தங்கள் வணிகத்தில் காலநிலை மாற்ற–த்தின் தாக்கங்களை தெரிவிக்க இச்சட்டம் தேவைப்படுகிறது.

✓ காலநிலை தொடர்பான அபாயங்கள் மற்றும் வாய்ப்புகளை நிதி நிறுவ–னங்கள் எவ்வாறு நிர்வகிக்கும் என்பதை விளக்க இச்சட்டம் அவற்றை கேட்டுக்கொள்கிறது.

---

**8. இந்திய இராணுவம், MEGHDOOT நடவடிக்கையை தொடங்கிய நாளை, பின்வரும் எந்தச் சிறப்பு நாளாக அனுசரிக்கிறது?**

அ) விஜய் திவாஸ்



ஆ) கார்கில் திவாஸ்

**இ) சியாச்சின் நாள் ☑**

ஈ) ரக்ஷா திவாஸ்

✓ 1984 ஏப்.13 அன்று, சால்டோரோ முகட்டு வரையில் உள்ள பிலாபாண்ட்லா மற்றும் பிற கணவாய்களைப் பாதுகாப்பதற்காக இந்திய இராணுவம் 'ஆபரேஷன் மேகதூத்' என்றவொன்றைத் தொடங்கியது. சியாச்சின் நாளானது ஒவ்வோர் ஆண்டும் இந்திய இராணுவத்தின் படைகள், உலகின் உயரம் மிகுந்த மற்றும் குளிரான போர்க்களமான சியாச்சின் பனிப்பாறையை பாதுகாப்பதில் காட்டிய வீரத்தை நினைவுகூர்கிறது.

---

**9. உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்துகுறித்த தேசிய டிஜிட்டல் களஞ்சி–யமான 'போஷன் கியான்' என்பதை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?**

அ) பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

**ஆ) NITI ஆயோக் ☑**

இ) தேசிய பெண்கள் ஆணையம்

ஈ) நிதி ஆணையம்

✓ NITI ஆயோக் ஆனது பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் அசோகா பல்கலைக்கழகத்தின் சமூக & நடத்தை மாற்ற மையத்துடன் இணைந்து, 'போஷன் கியானை' அறிமுகப்படுத்தியது.

- ✓ இது, உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து குறித்த தேசிய டிஜிட்டல் களஞ்சிய –மாகும். இது ஊட்டச்சத்து துறையில் விழிப்புணர்வு உருவாக்கம் மற்றும் நடத்தை மாற்றத்திற்காக அரசு நிறுவனங்கள் மற்றும் பிற மேம்பாட்டு அமைப்புகளால் உருவாக்கப்பட்ட தகவல் தொடர்பு குறிப்புகளின் தொகுப் –பாகும்.

---

**10. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது (NHAI) சிறந்த சாலைகளை வழங்குவதற்காக, 'NSV'ஐ பயன்படுத்தவுள்ளது. இங்கு, 'NSV' என்பது எதைக் குறிக்கிறது?**

அ) National Standard Vehicle

**ஆ) Network Survey Vehicle ☑**

இ) National Signal Variance

ஈ) New Standard Vehicle

- ✓ இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது பயணிகளுக்கு சிறந்த சாலைகளை வழங்குதற்காக, Network Survey Vehicle (NSV) என்பதை பயன்படுத்தவுள்ளது.
- ✓ NSV'ஐப் பயன்படுத்தி திட்டம் நிறைவுவடையும் போதும், அதன்பிறகு ஒவ்வோர் 6 மாதத்திற்கும் ஒருமுறை சாலையின் நிலையை ஆய்வுசெய் –வதை NHAI கட்டாயமாக்கியுள்ளது. ஆலோசனை சேவைகளின் நிலை –யான ஏல ஆவணத்தின் ஒருபகுதியாக இது சேர்க்கப்பட்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உதவி சொலிசிட்டர் ஜெனரலாக R ராஜேஷ் விவேகானந்தன் பதவி ஏற்பு**

சென்னை உயர்நீதிமன்றத்தில், மத்திய அரசு சார்பில் வழக்குகளில் ஆஜ ராவதற்கு, உதவி சொலிசிட்டர் ஜெனரலாக R இராஜேஷ் விவேகானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை மத்திய அரசு அண்மையில் பிறப்பித்தது. இதனையடுத்து, உதவி சொலிசிட்டர் ஜெனரலாக வழக்குரை –ஞர் இராஜேஷ் விவேகானந்தன், கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் சங்கர நாராயணன் முன்னிலையில் பதவி ஏற்றுக்கொண்டார்.

---

**2. 162 மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி ஆலைகளுக்கு அனுமதி**

நாடு முழுவதும் 162 மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி ஆலைகளை அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சு வெளியிட்ட சுட்டுரைப் பதிவுகளில், "இந்த ஆலைகள் மூலமாக 154.19 மெட்ரிக் டன் மருத்துவ ஆக்சிஜன் கூடுதலாக உற்பத்தி செய்யப்படவுள்ளது. 33 ஆலைகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டன.

அதிகபட்சமாக மத்திய பிரதேச மாநிலத்தில் ஐந்து ஆலைகளும், ஹிமாசல பிரதேசத்தில் நான்கு ஆலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. குஜராத், பிகார், கர்நாடகம், கேரளம், மகாராஷ்டிரம், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களிலும் ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாத இறுதிக்குள் மேலும் 54 ஆலை –களும், அடுத்த மாத இறுதிக்குள் கூடுதலாக எண்பது ஆலைகளும் அரசு மருத்துவமனைகளில் விரைவில் அமைக்கப்படும்.

ஆலைகளை அமைப்பதற்கும் பராமரிப்பதற்கும் ₹201.58 கோடி நிதியை மத்திய அரசு செலவிடவுள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**3. இந்தியாவில் மின்சார பயன்பாடு 45% உயர்வு**

நடப்பு ஏப்ரல் மாதத்தின் இருவார காலத்தில் உள்நாட்டில் மின்சாரத்தின் பயன்பாடு ஏறக்குறைய 45% அளவுக்கு அதிகரித்து 60.62 பில்லியன் யூனிட்டுகளை எட்டியுள்ளது. இதுகுறித்து மத்திய எரிசக்தி துறை அமைச்ச –கத்தின் புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளதாவது: கடந்த 2020ஆம் ஆண்டு ஏப்.1–15 வரையிலான காலகட்டத்தில் உள்நாட்டில் மின்சார பயன்பாடு 41.91 பில்லியன் யூனிட்டுகளாக இருந்தது. இந்த நிலையில், நடப்பாண்டு ஏப்.1–15 தேதிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மின்சார பயன்பாடு 60.62 பில்லியன் யூனிட்டுகளாக கணிசமாக உயர்ந்துள்ளது. ஆக, கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது நடப்பு மாதத்தின் இருவார காலத்தில் மின் நுகர்வு 45% உயர்ந்துள்ளது.

இது, தொழிலக மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் வலுவான நிலையில் மீண்டு வருவதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

நடப்பு ஏப்ரலின் முதல் இருவார காலத்தில் உச்சபட்ச மின்தேவையான 182.55 GW 8ஆம் தேதியன்று எட்டப்பட்டது என அந்தப் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**4. வளர்ச்சித் திட்டங்களில் மரபுசாரா எரிசக்திக்கு முக்கியத்துவம்**

மத்திய அரசு செயல்படுத்தி வரும் வளர்ச்சித் திட்டங்களில் மரபுசாரா எரிசக்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் தெரிவித்துள்ளார்.

அமேசான் இணையவழி வர்த்தக நிறுவனம் சார்பில் தொழில்முனை –வோருக்காக நடத்தப்பட்ட பிரத்யேக நிகழ்ச்சியில் அமைச்சர் ஜாவடேகர் காணொலி வாயிலாக உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

தற்போதைய சூழலில், மொத்த கரியமில வாயு வெளியேற்றத்தில் 7% மட்டுமே இந்தியாவின் பங்களிப்பாக உள்ளது. எனினும், சுற்றுச்சூழல் பாதிப்பைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டுவருகிறது. கடந்த 6 ஆண்டுகளில் சூரிய ஆற்றல் வாயிலாக மின்சாரம் உற்பத்தி செய்வது 14 மடங்கு அதிகரித்துள்ளது.

கரியமில வாயு வெளியேற்றம் 26 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. மொத்த எரிசக்தி பயன்பாட்டில் மரபுசாரா எரிசக்தியின் பங்களிப்பு 38 சதவீதமாக அதிகரித்துள்ளது. மரபுசாரா எரிசக்தி வாயிலாக தற்போது 136 கிகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதை அடுத்த ஆண்டுக்குள் 175 கிகா வாட்டாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் 450 கிகா வாட் மின்சாரத்தை மரபுசாரா எரிசக்தி வாயிலாக உற்பத்தி செய்வதற்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 65 நகரங்களில் 6,500 மின்–வாகனங்களை செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதற்காக ₹10,000 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்டவை ஆண்டுதோறும் தனிநபரு –க்கு 12,000 கிலோ வாட்டுக்கு அதிகமான மின்சாரத்தைப் பயன்படுத்தி வருகின்றன. இந்தியாவில் அது 1,200 கிலோ வாட்டாக மட்டுமே உள்ளது. என்றார் அமைச்சர் ஜாவடேகர்.

---

**5. நாட்டின் தங்கம் இறக்குமதி 23% அதிகரிப்பு**

நாட்டின் தங்கம் இறக்குமதி கடந்த 2020–21ஆம் நிதியாண்டில் 22.58% அதிகரித்துள்ளதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைச்சகம் புள்ளிவிவரத்தில் மேலும் கூறியுள்ளதாவது: உள்நாட்டில் தேவை அதிகரித்ததையடுத்து தங்கம் இறக்குமதி 2020–21ஆம் நிதி ஆண்டில் 3,460 கோடி டாலராக (இந்திய மதிப்பில் சுமார் ₹2.54 இலட்சம் கோடி) அதிகரித்துள்ளது. இது, முந்தைய 2019–2020ஆம் நிதியாண்டில் இறக்குமதியான 2,823 கோடி டாலர் (₹2 இலட்சம் கோடி) தங்கத்துடன் ஒப்பிடுகையில் 22.58% அதிகமாகும்.

கடந்த நிதியாண்டில் வெள்ளி இறக்குமதி 71% குறைந்து 79.1 கோடி டாலர் என்ற அளவிலேயே காணப்பட்டது. தங்கம் இறக்குமதி அதிகரித்த போதிலு –ம் நாட்டின் வர்த்தக பற்றாக்குறை கடந்த நிதியாண்டில் 9,856 கோடி டாலராக குறைந்துள்ளது. இது, 2019–20'இல் 16,130 கோடி டாலராக அதி –கரித்திருந்தது என வர்த்தக அமைச்சகம் அந்தப் புள்ளிவிவரத்தில் தெரிவி –த்துள்ளது. ஆபரணங்களுக்கான தேவை அதிகரித்து காணப்படுவதைய –டுத்து நம் நாட்டில் ஆண்டுக்கு 800 முதல் 900 டன் தங்கத்தை இறக்குமதி செய்யப்படுகிறது.

மத்திய அரசு பட்ஜெட்டில் தங்கத்துக்கான இறக்குமதி வரியை 12.5 சதவீத –த்திலிருந்து குறைத்து 10 சதவீதமாக (7.5% சுங்கவரி + 2.5% வேளாண் உள்கட்டமைப்பு மேம்பாட்டு வரி) நிர்ணயித்துள்ளது.

---



ஆசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்

**தங்கம் வென்றார் ஜில்லி தலாபெஹரா**

தாஷ்கண்ட், ஏப். 18: உஸ்பெகிஸ்தானில் நடைபெறும் ஆசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீராங்கனை ஜில்லி தலாபெஹரா தனது பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார்.

45 கிலோ பிரிவில் பங்கேற்ற ஜில்லி தலாபெஹரா, ஸ்னாட்ச் பிரிவில் 69 கிலோ, கிளீன் அண்ட் ஜெர்க் பிரிவில் 88 கிலோ என மொத்தமாக 157 கிலோ எடையை தூக்கி தங்கப் பதக்கம் வென்றார். இப்போட்டியில் கடந்த 2019-ஆம் ஆண்டில் பங்கேற்றபோது இதே பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்த ஜில்லி, தற்போது தங்கப் பதக்கத்துக்கு முன்னேறியுள்ளார்.

ஜில்லி

**சானுவுக்கு வெண்கலம்:** அதேபோல், மகளிருக்கான 49 கிலோ பிரிவில் இந்தியாவின் மீராபாய் சானு வெண்கலப் பதக்கம் வென்றார். அவர் ஸ்னாட்ச் பிரிவில் 86 கிலோ, கிளீன் அண்ட் ஜெர்க் பிரிவில் 119 கிலோ என மொத்தமாக 205 கிலோ எடையைத் தூக்கி 3-ஆம் இடம் பிடித்தார். இந்த 205 கிலோ எடையானது புதிய தேசிய சாதனையாகும். அதேபோல் கிளீன் அண்ட் ஜெர்க் பிரிவில் அவர் தூக்கிய 119 கிலோ எடை புதிய உலக சாதனை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் தவிர மகளிருக்கான 55 கிலோ பிரிவில் 'குரூப் பி'-இல் பங்கேற்றிருந்த இந்திய வீராங்கனை ஸ்னேகா சோரன் 3-ஆம் இடம் பிடித்தார். அவர் ஸ்னாட்ச் பிரிவில் 71 கிலோ, கிளீன் அண்ட் ஜெர்க் பிரிவில் 93 கிலோ என மொத்தமாக 164 கிலோ எடையைத் தூக்கியிருந்தார். 'குரூப் ஏ'-இல் உள்ள வீராங்கனைகளின் முடிவுகள் தெரியவந்த பின்னரே, ஸ்னேகாவுக்கான இறுதி இடம் குறித்து தெரியவரும்.

**7. மான்டி கார்லோ: சிட்சிபாஸ் சாம்பியன்**

மான்டி கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் கிரீஸின் ஸ்டெபா–னோஸ் சிட்சிபாஸ் சாம்பியன் ஆனார். போட்டித்தரவரிசையில் நான்காம் இடத்திலிருந்த சிட்சிபாஸ் இறுதிச்சுற்றில், போட்டித்தரவரிசையில் ஆறாம் இடத்திலிருந்த ரஷியாவின் ஆன்ட்ரே ருபலேவை 6–3, 6–3 என்ற நேர் செட்களில் வீழ்த்தினார். 'மாஸ்டர்ஸ் 1000' பிரிவில் சிட்சிபாஸ் வெல்லும் முதல் பட்டம் இது. ATP டூர் போட்டிகளில் இது அவரது ஆறாவது பட்டம்.

**பாவிச்/மெக்டிச் சாம்பியன்:** மான்டி கார்லோ மாஸ்டர்ஸ் போட்டியில் இரட்–டையர் பிரிவில் குரோஷியாவின் மேட் பாவிச்/நிகோலா மெக்டிச் இணை 6–3, 4–6, 10–7 என்ற செட்களில் பிரிட்டனின் நீல் ஸ்குப்ஸ்கி / டேன் இவான்ஸ் இணையை வென்று சாம்பியன் ஆனது.

---

**8. உயர்கல்வி விருப்பப் பாடப்பிரிவில் NCC சேர்ப்பு:**

**பல்கலைக்கழக மானியக்குழுவின் செயலர் ரஜினிஷ் ஜெயின், அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கை:** புதிய கல்விக் கொள்கையில் உயர் கல்விக்கான விருப்பப் பாடப்பிரிவு தேர்வு முறையில் தளர்வுகளை வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. NCC பயிற்சியை விருப்பப் பாடப்பிரிவில் சேர்க்கவும் அதன் இயக்குநரகம் பரிந்துரை செய்துள்ளது. அதையேற்று, உயர்கல்விக்கான விருப்பப்பாடப்பிரிவில் NCC சேர்க்கப்படு–கிறது. இதை அனைத்து கல்வி நிறுவனங்களும் உடனே அமல்படுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**9. தேசிய, ஆசிய மாதிரி நீதிமன்ற போட்டியில் தமிழ்நாடு சட்ட பல்கலை. அணி முதலிடம்:**

தேசிய, ஆசிய மாதிரி நீதிமன்ற போட்டியில் தமிழ்நாடு சட்டப் பல்கலை மாணவர்கள் முதலிடம் பெற்றுள்ளனர். சர்வதேச புகழ்பெற்ற பிலிப் சி ஜீசப் சர்வதேச மாதிரி நீதிமன்ற போட்டியின் தேசிய மற்றும் ஆசிய சுற்றுப் போட்டிகள் கடந்த பிப்ரவரியில் நடைபெற்றன. இதில் பல்வேறு நாடுகளில் இருந்தும், ஐம்பது சட்டக்கல்லூரி மற்றும் பல்கலை மாணவர் அணியினர் பங்கேற்றனர்.

இப்போட்டியில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சிறப்பு சட்டக் கல்லூரி மாணவர்கள் ஹுடா சயீது, ஹரிகிருஷ்ணன் பழனியப்பன், மீனாட்சி அண்ணாமலை, சோனு மேத்தா, சுவேதன் ஆகிய ஐவர் அடங்கிய அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு தென்னிந்தியாவில் தேசிய சட்டக்கல்லூரி மாணவர்கள் சாராத அணியினர் இச்சாதனையை படைத்துள்ளது குறிப்பி–டத்தக்கது. இத்தகவலை தமிழ்நாடு Dr அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

---

**1. சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வெகுதொலைவில் உள்ள காமா–கதிரை உமிழும் பேரடையின் பெயர் என்ன?**

**அ) நேரோ–லைன் செபெர்ட் 1 ☑**



ஆ) ஆண்ட்ரோமெடா

இ) ஸ்கை வே

ஈ) மில்க் லைன்

✓ அண்மையில், விண்வெளி அறிவியலாளர்கள் ஒரு புதிய செயற்பாட்டில் உள்ள பேரடையைக்கண்டுபிடித்தனர். இது, இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட காமா–கதிரை உமிழும் பேரடைகளிலேயே வெகுதொலைவில் உள்ளது என்று கருதப்படுகிறது. இந்தப் பேரடைக்கு, Narrow–Line Seyfert 1 (NLS1) பேரடை என்று பெயரிடப்பட்டுள்ளது. இது, பூமியிலிருந்து சுமார் 31 பில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது. இது ஓர் அரிய வான்பொருள் என்று விவரிக்கப்பட்டுள்ளது.

---

**2. 2020-21ஆம் ஆண்டில், முந்தைய ஆண்டை விடவும் எத்தனை சதவீதத்திற்கு நிகர மறைமுக வரி வசூல் அதிகரித்துள்ளது?**

அ) 1%

ஆ) 10%

12.3%

**இ) 12.3% ☑**

ஈ) 15%

✓ மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, 2020–21ஆம் ஆண்டில் நிகர மறைமுக வரி வசூல் முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 12.3% அதிகரித்துள்ளது. மொத்த வசூல் ₹10.71 இலட்சமாக உள்ளது. இதன்மூலம் 2020–21ஆம் நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட மறைமுக வரி வசூல் இலக்கான ₹9.89 இலட்சத்தை அது தாண்டியது.

---

**3. வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான, 'மத்திய ஆசிய' மையம் கட்டப்பட்டு வருகிற நாடுகள் எவை?**

**அ) உஸ்பெகிஸ்தான் மற்றும் கஜகஸ்தான் ☑**




ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் இந்தியா

இ) சீனா மற்றும் ஜப்பான்

ஈ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஐக்கியப் பேரரசு

✓ 'மத்திய ஆசியா' என்பது வர்த்தகம் & பொருளாதார ஒத்துழைப்புக்கான ஒரு பன்னாட்டு மையத்தின் பெயராகும். இது, உஸ்பெகிஸ்தான் மற்றும் கஜகஸ்தான் ஆகிய இருநாடுகளின் எல்லைகளில் கட்டப்பட்டு வருகிறது. இந்த மையத்தில் நாளொன்றுக்கு இருதிசைகளிலும் இருந்து வரும் 35,000 பேர்வரை தங்கவைக்க முடியும். மேலும், 5,000 பொதியுந்துகள் வரை நிறுத்தமுடியும். இது, இரு நாடுகளுக்குமான ஒரு பெரிய தொழிற்துறை, வர்த்தகம் மற்றும் போக்குவரவு தளமாக செயல்படும்.

---

**4. தலைமைத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**அ) சுஷில் சந்திரா ☑**



ஆ) பிரசன்ன சந்திரா

இ) அஜய் குமார் பல்லா

ஈ) இஞ்செட்டி சீனிவாஸ்

✓ இந்தியாவின் அடுத்த தலைமைத் தேர்தல் ஆணையராக சுஷில் சந்திரா அவர்களை இந்திய அரசு நியமித்துள்ளது. அவர், 2021 ஏப்.13ஆம் தேதி ஓய்வுபெற்ற சுனில் அரோராவைத் தொடர்ந்து இப்பதவிக்கு வந்துள்ளார். மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் முன்னாள் தலைவரான சுஷில் சந்திரா, 2019 பிப்.14 அன்று தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டார்.

---

**5. பின்வரும் எந்த நாட்டில், ஒரு கொலைகார ஆல்காவால் 4200 டன் சால்மன் கொல்லப்பட்டது?**

அ) ஐக்கியப் பேரரசு



ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

இ) கனடா

**ஈ) சிலி ☑**

✓ தென்னமெரிக்க நாடான சிலியில், 4200 டன்களுக்கும் அதிகமான சால்மன்களைக்கொன்ற ஒரு கொலைகார ஆல்கா பரவுவது கண்டறியப்பட்டுள்ளது. இப்பாசித்திரள்கள், நீரிருப்பை குறைக்க வழிவகுத்தது; அது, சால்மன் மீன்களை மூச்சுத்திணறலுக்கு உள்ளாக்கியது. இது, உலகின் இரண்டாவது மிகப்பெரிய சால்மன் உற்பத்தியாளரான சிலியில் பதிவு செய்யப்பட்ட, அண்மைய ஒரு பேரிறப்பு நிகழ்வாக கருதப்படுகிறது.

---

**6. ஐரோப்பிய ஆணையம் அதன் பொருளாதாரத்தை பசுமையாகவும் டிஜிட்டலாகவும் மாற்றுவதற்கு 2026ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் எவ்வளவு நிதியைத் திரட்ட திட்டமிட்டுள்ளது?**

**அ) 150 பில்லியன் யூரோக்கள் ☑**



ஆ) 1000 மில்லியன் அமெரிக்க டாலர்

இ) ₹1000 கோடி

ஈ) பூப்பந்து

✓ 2026ஆம் ஆண்டு வரை 150 பில்லியன் யூரோக்கள் கடன் வாங்க ஐரோப்பிய ஆணையம் திட்டமிட்டுள்ளது. இக்கடன் ஐரோப்பிய ஆணையம் அதன் பொருளாதாரத்தை பசுமையாகவும் டிஜிட்டல் மயமாகவும் மாற்ற பயன்படுத்தப்படும். முதன்மை ஒப்பந்த வலையமைப்புமூலம் ஏலம் மற்றும் ஆட்சிக்குழு மூலம் நிதி திரட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

---

**7. விராட் கோலியை விஞ்சி ICC ஆண்கள் ஒருநாள் பேட்டிங் தரவரிசையில் முதலிடம் வகிக்கும் பாகிஸ்தான் வீரர் யார்?**

**அ) பாபர் ஆசாம் ☑**



ஆ) ஹசன் அலி

இ) முகமது அமீர்

ஈ) பக்கர் ஜமான்

✓ ICC ஆண்கள் ஒருநாள் பேட்டிங் தரவரிசையில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் பாபர் ஆசாம் முதலிடம் பிடித்தார். கடந்த 2003ஆம் ஆண்டுக்குப் பிறகு பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ஒருவர் முதலிடம் பிடிப்பது இதுவே முதல்முறையாகும். பாகிஸ்தான்–தென்னாப்பிரிக்க தொடரில் 13 புள்ளிகளைப் பெற்றதை அடுத்து இந்திய கேப்டன் மற்றும் பேட்ஸ்மேன் விராட் கோலியை பாபர் ஆசாம் விஞ்சினார்.

---

**8. நாட்டில் செயல்படும் வங்கிகள், காப்பீட்டாளர்கள் மற்றும் முதலீட்டு மேலாளர்கள் தங்கள் வணிகத்தால் நிகழும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் குறித்து தெரிவிப்பதை கட்டாயமாக்கியுள்ள நாடு எது?**

அ) இந்தியா



**ஆ) நியூசிலாந்து ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) சுவிச்சர்லாந்து

✓ நியூசிலாந்து அரசு ஒரு புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது; இதன் மூலம் நாட்டில் செயல்படும் வங்கிகள், காப்பீட்டாளர்கள் மற்றும் முதலீட்டு மேலாளர்கள் தங்கள் வணிகத்தால் நிகழும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை தெரிவிக்க வேண்டும். இத்தகைய சட்டத்தைக் கொண்டு வந்த முதல் நாடு நியூசிலாந்து. இப்புதிய சட்டத்தின்படி, NZ$ 1 பில்லியனுக்கும் அதிகமான சொத்துக்களைக் கொண்ட வங்கிகளும், காப்பீட்டாளர்களும் இதனை தெரிவித்தல் வேண்டும்.

---

**9. NEGVAC'இல் உள்ள 'C' என்பது எதைக் குறிக்கிறது?**

அ) Commission



ஆ) Collection

இ) Corruption

**ஈ) COVID–19 ☑**

✓ தடுப்பூசி கொள்முதல், இருப்புநிலை மேலாண்மை, தடுப்பூசி தெரிவுசெய்தல், தடுப்பூசி விநியோகம் மற்றும் கண்காணிப்பு பொறிமுறைக்காக இந்திய அரசாங்கத்தால் COVID–19'க்கான தடுப்பூசி நிர்வாகம் குறித்த தேசிய வல்லுநர் குழு (National Expert Group on Vaccine Administration for COVID–19 (NEGVAC)) அமைக்கப்பட்டது.

✓ அண்மையில், அந்நிபுணர் குழு, வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐரோப்பா, இங்கிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளின் அதிகாரிகளால் அவசர ஒப்புதல் வழங்கப்பட்ட COVID–19 தடுப்பூசிகளை பரிந்துரை செய்துள்ளது. உலக நலவாழ்வு அமைப்பின் அவசரகால பயன்பாட்டு பட்டியலில் பட்டியலிடப்பட்ட COVID–19 தடுப்பூசிகளுக்கும் இந்தியாவில் அவசரகால பயன்பாட்டுக்கு ஒப்புதல் வழங்கப்படலாம் எனக் கருதப்படுகிறது.

---

**10.** **தேசிய நாற்றுப்பண்ணை வலைத்தளத்தைத் தொடங்கியுள்ள வாரியம் அல்லது அமைப்பு எது?**

அ) தேசிய வீட்டுவசதி வாரியம்

**ஆ) தேசிய தோட்டக்கலை வாரியம் ☑**

இ) தேசிய தேயிலை வாரியம்

ஈ) NITI ஆயோக்

✓ தேசிய நாற்றுப்பண்ணை வலைத்தளத்தை தேசிய தோட்டக்கலை வாரியம் தொடங்கியுள்ளது. இது ஒரு வலைத்தளம் மற்றும் திறன்பேசி வடிவத்தில் கிடைக்கப்பெறும் ஒரு இணையதளமாகும். நாற்றுப்பண்ணைகளும் வாங்குவோரும் தாவரங்களின் விற்பனை தொடர்பாக தொடர்புகொள்ளக்கூடிய இணையவழி சந்தைப்புறத்தை உருவாக்க இந்த வலைத்தளம் நோக்கங்கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. செவ்வாய் கிரகத்தில் பறந்த முதல் ஹெலிகாப்டர்!**

அமெரிக்க விண்வெளி நிறுவனமான NASA, செவ்வாய் கிரகத்துக்கு பெர்சிவரன்ஸ் விண்கலத்துடன் இணைத்து அனுப்பியுள்ள ஹெலிகாப்டர் வெற்றிகரமாகப் பறந்தது. இதன்மூலம் வேற்றுக்கிரகத்தில் பறந்த முதல் ஹெலிகாப்டர் என்ற பெருமையை அதுபெற்றது.

செவ்வாய் கிரகத்தில் இன்ஜெனிட்டி ஹெலிகாப்டர் வெற்றிகரமாகப் பறந்ததை 'ரைட் சகோதரர்கள்' தருணம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். 1903ஆம் ஆண்டு ரைட் சகோதரர்களின் முதல் விமானம் வெற்றிகரமாகப் பறந்தது. உலகிலேயே முதல் விமானமான அதன் இறக்கையில் இடம்பெற்றிருந்த துணியின் ஒரு சிறிய பகுதி இன்ஜெனியூட்டி ஹெலிகாப்டரில் பொருத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவின் வடக்கு கரோலினாவில் ரைட் சகோதரர்களின் முதல் விமானம் படைத்த சாதனையை செவ்வாய் கிரகத்தில் படைத்துள்ளது இன்ஜெனியூட்டி ஹெலிகாப்டர்.

---

**2. கரோனா முன்களப் பணியாளர்களுக்குப் புதிய காப்பீட்டுத் திட்டம்**

கரோனா நோய்த்தொற்றுக்கு எதிராகப் போராடி வரும் முன்களப் பணியாளர்களுக்குப் புதிய காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக, அந்த அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'பிரதமரின் ஏழைகள் நலன் தொகுப்புத் திட்டத்தின்கீழ் கரோனா முன்களப் பணியாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. அத்திட்டத்தின் கீழ் 287 பேர் காப்பீட்டுத் தொகையைப் பெற்றுள்ளனர்.

கரோனா நோய்த்தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் முன்னின்று பணியாற்றிவரும் முன்களப் பணியாளர்களின் மனவலிமையை இந்தக் காப்பீட்டுத் திட்டம் மேம்படுத்தியுள்ளது. வரும் 24ஆம் தேதி வரை இந்தக் காப்பீட்டுத் திட்டம் நடைமுறையில் இருக்கும். அதுவரை இத்திட்டத்தின் கீழ் காப்பீட்டுத் தொகையைக் கோரமுடியும்.

அதன்பிறகு கரோனா முன்களப் பணியாளர்களுக்கென புதிய காப்பீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதமரின் ஏழைகள் நலன் தொகுப்புத்திட்டமானது கடந்தாண்டு மார்ச்சில் அறிவிக்கப்பட்டது. பின்னர் அத்திட்டமானது மூன்றுமுறை நீட்டிக்கப்பட்டது. அத்திட்டத்தின்கீழ் ₹50 இலட்சம் காப்பீடு பெற முடியும்.

கரோனா நோய்த்தொற்றுக்கு எதிராகப் போராடி வரும் முன்களப் பணியாளர்கள் உயிரிழக்க நேரிட்டால், அவர்களின் குடும்பத்தினர் பலனடையும் நோக்கில் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

---

**3. SIDBI வங்கியின் தலைவராக எஸ். இராமன் பொறுப்பேற்பு**

SIDBI வங்கி என்று சுருக்கமாக அழைக்கப்படும் இந்திய சிறுதொழில் மேம்பாட்டு வங்கியின் தலைவராக சிவசுப்ரமணியன் இராமன் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதுகுறித்து அந்த வங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: SIDBI வங்கியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக சிவசுப்ரமணியன் இராமன் பொறுப்பேற்றுள்ளார். இவர், மூன்று ஆண்டுகளுக்கு அந்தப் பொறுப்பை வகிப்பார் என SIDBI வங்கி தெரிவித்துள்ளது. கடந்த 1991ஆம் ஆண்டு இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள் பணிக்கு (IA&AS) தேர்வான இராமன், இதற்கு முன் தேசிய மின்னாளுகை சேவைகள் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக பணியாற்றியவர்.

---

**4. ஒலிம்பிக்கில் சென்னை மாணவி**

சென்னையைச் சேர்ந்த மாணவி நேத்ரா குமணன், ஒலிம்பிக் பாய்மரப் படகுப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளார். ஒலிம்பிக் படகுப் போட்டிக்குத் தகுதிபெறும் முதல் இந்தியப் பெண் இவர். 2020 உலகக் கோப்பை பாய்மரப் படகுப் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றவர் இவர்.

---

**1.** **இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்தில் ஈடுபடவுள்ள தொழில்நுட்ப நிறுவனம் எது?**

அ) அமேஸான்

**ஆ) பேஸ்புக் ☑**

இ) மைக்ரோசாப்ட்

ஈ) சாம்சங்

✓ தொழில்நுட்ப மற்றும் சமூக ஊடக நிறுவனமான பேஸ்புக், இந்தியாவில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்தில் ஈடுபடுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்தியாவில் இதுபோன்ற ஓர் ஒப்பந்தத்தில் பேஸ்புக் ஈடுபடுவது இது முதல் முறையாகும். இந்தியாவின் மின்சார கட்டமைப்பில் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை வழங்குவதற்காக பேஸ்புக் மற்றும் கிளீன்மேக்ஸ் இணைந்து செயல்படவுள்ளன. 32 மெகாவாட் காற்றாலை மின்னுற்பத்தி திட்டமானது கர்நாடகவில் அமைந்துள்ளது.

---

**2.** **"EatSmart Cities" சவால் மற்றும் "Transport 4 All" சவால் என இரு சவால்களை அறிமுகப்படுத்தியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ) உள்துறை அமைச்சகம்

**ஆ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**

இ) சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம்

ஈ) பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

✓ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது "EatSmart Cities Challenge மற்றும் Transport 4 All Challenge" ஆகிய இரு சவால்களை அறிமுகப்படுத்தியுள்ளது. 'EatSmart Cities' சவாலானது இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) மற்றும் சீர்மிகு நகரங்கள் திட்டத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டு –ள்ளது. சீர்மிகு நகரங்கள் நிலையான உணவுச் சூழலை வளர்ப்பதை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ 'Transport 4 All' என்ற சவால் பொதுப்போக்குவரத்தை மேம்படுத்துவதற் –காக போக்குவரத்து மற்றும் மேம்பாட்டுக்கொள்கை நிறுவனத்துடன் இணைந்து தொடங்கப்பட்டுள்ளது.

---

**3.** **பயங்கரவாதிகளால் இணையம் தவறாகப் பயன்படுத்தப்படுவது குறித்த BRICS கருத்தரங்கை நடத்திய அமைப்பு எது?**

அ) NITI ஆயோக்

ஆ) இந்திய இராணுவம்

**இ) தேசிய புலனாய்வு முகமை ☑**

ஈ) CDAC

✓ தேசிய புலனாய்வு முகமை ஏற்பாடுசெய்த "பயங்கரவாத நோக்கங்களுக் –காக இணையத்தை தவறாக பயன்படுத்துதல் மற்றும் பயங்கரவாத புலனாய்வுகளில் டிஜிட்டல் தடயவியலின் பங்கு" என்ற BRICS கருத்தரங் –கை இந்தியா நடத்தியது. இது, மெய்நிகர் வடிவத்தில் ஏற்பாடு செய்யப்ப –ட்ட 2 நாள் நிகழ்வாகும். இது, சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் இணைய பயங்கரவாதத்தை கையாள்வதில் நன்னடைமுறைகளை தடையின்றி பகிர்ந்துகொள்வது ஆகியவற்றை வலியுறுத்தியது.

---

**4.** **செப்.11'க்குள் பின்வரும் எந்நாட்டிலிருந்து அமெரிக்க துருப்புகளை திரும்பப்பெற ஐக்கிய அமெரிக்க நாடுகள் முடிவு செய்துள்ளது?**

அ) ஈரான்

ஆ) ஈராக்



இ) உக்ரைன்

**ஈ) ஆப்கானிஸ்தான் ☑**

✓ அதிபர் பைடன் தலைமையிலான அமெரிக்கா, அடுத்த சில மாதங்களில் ஆப்கானிஸ்தானில் இருந்து அனைத்து அமெரிக்க துருப்புக்களையும் திரும்பப்பெற முடிவுசெய்துள்ளது. 2021 செப்.11'க்குள் இது நிறைவடைய உள்ளது. இத்தேதி, தாலிபான்கள், அமெரிக்காவின் இரட்டை கோபுரத்தி –ன் மீது தாக்குதல் நடத்திய 20ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

---

**5.** **ஆறு மாநிலங்களில் உள்ள நூறு கிராமங்களில் ஒரு சோதனை திட்டத்தை மேற்கொள்வதற்காக, மத்திய வேளாண் அமைச்சகத்துட –னான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட அமைப்பு எது?**

அ) அமேசான்

**ஆ) மைக்ரோசாப்ட் ☑**

இ) NSDC

ஈ) ONGC

✓ உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத், ஹரியானா, இராஜஸ்தான் மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய ஆறு மாநிலங்களின் உள்ள நூறு கிராம –ங்களில் சோதனை அடிப்படையிலான திட்டத்தை செயல்படுத்த மத்திய வேளாண் அமைச்சகம் மைக்ரோசாப்ட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், சீரான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட விவசாயத்திற்கான உழவர் இடைமுகத்தை மைக்ரோசாப்ட் உருவாக்கு –ம். இதில், அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை மற்றும் விநியோகம் ஆகியவை அடங்கும்.

---

**6.** **எந்த அமைச்சகத்தின் ஆதரவின்கீழ், "ஹைட்ரஜன் பொருளாதாரம் – இந்திய பேச்சுவார்த்தை – 2021" ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?**

**அ) பெட்ரோலிய & இயற்கை எரிவாயு அமைச்சகம் ☑**

ஆ) புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

இ) எரிசக்தி அமைச்சகம்

ஈ) பாதுகாப்பு அமைச்சகம்

✓ மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கீழ், எரிசக்தி மன்றமும் இந்திய பெட்ரோலிய தொழிற்துறை கூட்டமைப்பும் இணைந்து "ஹைட்ரஜன் பொருளாதாரம்–இந்திய உரையாடல்–2021" என்ற தலைப்பில் ஒரு வட்டமேசை மாநாட்டை ஏற்பாடு செய்தன.

✓ இந்த வட்டமேசை மாநாடு, 2021 ஏப்.15 அன்று ஒரு மெய்நிகர் முறையில் நடத்தப்பட்டது. வளர்ந்துவரும் ஹைட்ரஜன் சூழல் அமைப்புகள் பற்றிய விவாதங்கள் மற்றும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை ஆராய்வது இம்மாநாட்டின் நிகழ்ச்சி நிரலாகும்.

---

**7.** **"My Body My Own" என்ற தலைப்பிலான அறிக்கையொன்றை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) உலக வங்கி

**ஆ) UNFPA ☑**

இ) பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை

ஈ) ஐநா பெண்கள் அமைப்பு

✓ ஐநா மக்கள்தொகை நிதியத்தின் (UNFPA) உலக மக்கள்தொகை அறிக் –கை 2021 ஆனது அண்மையில் வெளியிடப்பட்டது.


✓ "My Body My Own" என்ற தலைப்பிலான இந்த அறிக்கை, 55% பெண்கள் மட்டுமே தங்களின் முடிவை தாங்களே எடுத்துக்கொள்ள மு– ழு அதிகாரம் பெற்றவர்களாக உள்ளனர். 57 வளரும் நாடுகளைச் சார்– ந்த பாதி பெண்கள், அவர்களின் உடல்குறித்து முடிவெடுப்பதற்கும், கரு– த்தடை சாதனங்களைப்பயன்படுத்துவதற்கும், நலத்தைப்பேணுவதற்– கும் / அவர்களின் பாலுணர்வு எண்ணம்குறித்து முடிவெடுப்பதற்கும்கூட உரிமையற்றவர்களாக உள்ளனர்.

---

**8.** **ஜான்சன் மற்றும் ஜான்சன் மற்றும் அஸ்ட்ராஜெனெகா தயாரித்த COVID–19 தடுப்பூசிகள், கீழ்காணும் எந்த வைரசை அடிப்படையாகப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டன?**

**அ) அடினோ வைரஸ் ☑**

ஆ) பப்பாவா வைரஸ்



இ) ஹெர்பெஸ் வைரஸ்

ஈ) பாக்ஸ் வைரஸ்

✓ அடினோவைரஸ்கள் என்பது மனிதர்களில் கோழை, இரைப்பை / குடல் தொற்று, இளஞ்சிவப்புக்கண் நோய் போன்ற பலவிதமான நோய்களை ஏற்படுத்தும் வைரஸ்களின் ஒரு குடும்பமாகும்.

✓ மனிதர்களைப் பாதிக்கும் 88 வகையான அடினோவைரஸ் உள்ளன, இவை A–G என ஏழு வெவ்வேறு இனங்களாக தொகுக்கப்பட்டுள்ளன.

சமீபத்தில், ஜான்சன் & ஜான்சன் மற்றும் அஸ்ட்ராஜெனெகா உள்ளிட்ட பல்வேறு COVID-19 தடுப்பூசிகளின் உற்பத்திக்கு இந்த வைரஸ் அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

---

**9. காடுகளைப் பொறுத்தவரை, குளிர்காலம் மற்றும் பருவமழைக் காலம் ஆகியவற்றுக்கு இடையேயான பருவம் என்ன?**

அ) மழைக்காலம்

**ஆ) காட்டுத்தீ காலம் ☑**

இ) பின்பனிக்காலம்

ஈ) வசந்த காலம்



✓ 'காட்டுத்தீ காலம்' என்று குறிப்பிடப்படும் குளிர்காலம் & பருவமழைக் காலத்துக்கு இடையிலான பருவம், இந்தியாவில், காலநிலை மாற்றம் மற்றும் இமயமலைப் பகுதிகளில் பொழிந்த பெருமழையின் காரணமாக அதிகரித்து வருகிறது. உத்தரகாண்ட் காடுகள், கடந்த ஆறு மாதங்களாக காட்டுத்தீக்கு உள்ளாகி வருகின்றன. உத்தரகாண்ட் காடுகளில் நவம்பர் 2020 முதல் ஜனவரி 2021 வரை 470 தீ விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த ஆண்டில் இந்த எண்ணிக்கை 39 ஆக இருந்தது.

---

**10.'பழங்குடி மக்கள் பதிவேட்டை' தயாரிப்பதற்காக குழுவொன்றை அமைக்கவுள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

ஆ) அருணாச்சல பிரதேசம்

இ) கேரளா

**ஈ) நாகாலாந்து ☑**

✓ நாகாலாந்து மாநில அரசாங்கம் அம்மாநிலத்தில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கான ஒரு பதிவேட்டை உருவாக்குவதற்காக ஒரு கூட்டு ஆலோசனை குழுவை அமைக்க முடிவுசெய்துள்ளது. 2019 ஜூலையில், நாகாலாந்து அரசாங்கம் RIIN'ஐ அறிமுகப்படுத்தியது. அது, அஸ்ஸாம் மாநிலத்தின் தேசிய குடிமக்களின் பதிவேட்டின் ஒரு வகையாகும். இந்தக் குழு, நாகாலாந்து மாநில பழங்குடி மக்களின் பதிவேட்டைத் (Register of Indigenous Inhabitants of Nagaland (RIIN)) தயாரிக்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இறக்குமதி செய்யப்படும் கரோனா தடுப்பூசிகளுக்கு சுங்க வரி தள்ளுபடி**

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள கரோனா தடுப்பூசிகளுக்கு சுங்கவரியில் 10% தள்ளுபடி வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. நாட்டில் 45 வயதைக்கடந்தோருக்கு கரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. தற்போதைய சூழலில், உள்நாட்டுத்தயாரிப்பான கோவேக்ஸின், கோவிஷீல்ட் ஆகிய தடுப்பூசிகள் மட்டுமே மக்களுக்கு செலுத்தப்பட்டு வருகின்றன.

ரஷியாவில் தயாரிக்கப்பட்ட ஸ்புட்னிக்-வி தடுப்பூசியின் பயன்பாட்டுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளபோதிலும், அது மக்களுக்கு இன்னும் செலுத்தப்படவில்லை. தொடக்கத்தில் அத்தடுப்பூசி ரஷியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு மக்களுக்கு அளிக்கப்படவுள்ளது. பின்னர் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படவுள்ளது. அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் நாடுகளில் அனுமதி அளிக்கப்பட்டுள்ள COVID தடுப்பூசிகளை இந்தியாவிலும் பயன்பாட்டுக்கு கொண்டுவருவதற்கு அனுமதி அளிப்பது தொடர்பாக மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.

18 வயதைக் கடந்த அனைவரும் மே 1ஆம் தேதிமுதல் கரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான சூழலில், கரோனா தடுப்பூசிக்குத் தட்டுப்பாடு நிலவாமல் இருப்பதை உறுதி செய்ய வெளிநாடுகளில் இருந்து கரோனா தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கரோனா தடுப்பூசிகளுக்கு 10 சதவீத சுங்கவரித் தள்ளுபடி அளிக்கப்படவுள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இறக்குமதி செய்யப்படும் தடுப்பூசிகளின் விலை, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தடுப்பூசிகளின் விலைக்கு இணையாக இருப்பதை உறுதி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தடுப்பூசிகளுக்குத் தற்போதைய சூழலில், 10% சுங்கவரியும், 16.5% சரக்கு-சேவை வரியும் விதிக்கப்படுகிறது. சுங்கவரிக்கு தள்ளுபடி அளிப்பது தொடர்பான முடிவை மத்திய அரசு விரைவில் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**2. 57 லட்சம் வழக்குகள் தேக்கம்: ஓய்வு பெற்ற நீதிபதிகளை நியமிக்க உச்சநீதிமன்றம் புதிய வழிமுறைகள்**

உயர்நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் சுமார் 57 லட்சம் வழக்குகளை விரைந்து விசாரித்து தீர்வுகாண ஓய்வுபெற்ற நீதிபதிகளை தற்காலிக முறையில் நியமிக்க ஏதுவாக புதிய வழிமுறைகளை உச்சநீதிமன்றம் வகுத்துள்ளது. இதன்மூலம் மிகவும் அரிதான வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 224A பிரிவைப் பயன்படுத்தி, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகள் எந்த நேரத்திலும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று 2 அல்லது மூன்று ஆண்டு காலத்துக்கு ஓய்வுபெற்ற நீதிபதிகளை நியமனம் செய்ய வழிவகுக்கிறது.

'லோக் பிரஹரி' என்ற தன்னார்வத் தொண்டு அமைப்பு தாக்கல் செய்த மனு மீது தலைமை நீதிபதி SA போப்டே, நீதிபதிகள் S K கௌல், சூர்ய காந்த் ஆகியோர் அடங்கிய அமர்வு 37 பக்கங்களைக்கொண்ட உத்தரவை வழங்கியது.

**'நாட்டிலேயே சென்னை உயர்நீதிமன்றத்தில் அதிக நிலுவை வழக்குகள்'**

நாட்டில் உள்ள 25 உயர்நீதிமன்றங்களில் சென்னை உயர்நீதிமன்றத்தில்தான் அதிகபட்சமாக 5.8 இலட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகளின் காலிப்பணியிடங்கள் வெறும் ஏழு சதவீதமாக இருந்தாலும், நிலுவை வழக்குகளின் அடிப்படையில் அனுபவம்மிக்க ஓய்வு பெற்ற நீதிபதிகளை நியமிக்கும் தேவை எழுந்துள்ளது என்று தலைமை நீதிபதி உள்ள அமர்வு தெரிவித்தது.

சென்னை, மும்பை, இராஜஸ்தான், அலாகாபாத், பஞ்சாப் & ஹரியானா ஆகிய ஐந்து நீதிமன்றங்களில் மட்டும் 57,51,312 இலட்சம் வழங்குகள் நிலுவையில் உள்ளன என்றும் தலைமை நீதிபதி அமர்வு குறிப்பிட்டது.

---

**3. G7 வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு: இந்தியாவுக்கு பிரிட்டன் அழைப்பு**

G7 வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்க இந்தியாவுக்கு பிரிட்டன் அரசு அழைப்புவிடுத்துள்ளது. இதுகுறித்து பிரிட்டன் வெளியுறவு, காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: G7 வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு, இலண்டனில் வரும் மே.3 முதல் 5 வரை நடக்கவுள்ளது. அமைச்சர்கள் நேரில் பங்கேற்கும் இம்மாநாட்டில் கனடா, பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய 7 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களும், ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

இந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்குமாறு இந்தியா, ஆஸ்திரேலியா, தென்கொரியா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களுக்கும் ASEAN (தென்கிழக்காசிய நாடுகள்) அமைப்பின் பொதுச்செயலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் இந்தியா சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் S ஜெய்சங்கர் பங்கேற்பார் என்று தெரிகிறது.

---

**4. அன்னபூர்ணா சிகரத்தில் ஏறி இந்தியப் பெண் சாதனை**

உலகின் பாத்தாவது உயரமான சிகரமான அன்னபூர்ணா சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த 28 வயது பெண் பிரியங்கா மோஹிதே. இந்தச் சாதனையை நிகழ்த்திய முதல் இந்தியப் பெண் அவர். இமயமலைத்தொடரில் நேபாளத்தில் அமைந்துள்ள சிகரம் அன்னபூர்ணா. இது 8,091 மீட்டர் உயரம் கொண்டது. ஏறுவதற்கு மிகக் கடினமான மலைகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

மேற்கு மகாராஷ்டிரத்தின் சதாரா பகுதியைச் சார்ந்த அவர், மருந்து உற்பத்தி நிறுவனமான பயோகான் நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவில் பணியாற்றி வருகிறார். கடந்த 2013இல் உலகின் மிகவுயரமான எவரெஸ்ட் சிகரத்திலும் (8,849 மீட்டர்), 2018இல் லோட்ஸே சிகரத்திலும் (8,516 மீட்டர்), 2016இல் மக்காலு சிகரம் (8,485 மீட்டர்), கிளிமஞ்சாரோ சிகரம் (5,895 மீட்டர்) ஆகியவற்றிலும் பிரியங்கா ஏறியுள்ளார்.

கடந்த 2017-2018இல் சாகச விளையாட்டுகளுக்காக மகாராஷ்டிர அரசின் "சிவ சத்ரபதி" விருது பெற்றுள்ளார் பிரியங்கா.

---

**5. துளிகள்**

ஆசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவருக்கான 73 கிலோ 'குரூப் பி'–இல் இந்தியாவின் அச்சிந்தா ஷியுலி 7–ஆம் இடமும், 67 கிலோ பிரிவில் ஜெரிமி லால்ரினுங்கா 8–ஆம் இடமும் பிடித்தனர்.

இங்கிலீஷ் பிரீமியர் லீக் கால்பந்து போட்டியில் லிவர்பூல்–லீட்ஸ் அணிகள் மோதிய ஆட்டம் 1–1 என்ற கோல்கணக்கில் டிரா ஆனது. லிவர்பூல் தரப்பில் சாடியோ மனே, லீட்ஸ் தரப்பில் டியேகோ லாரென்டே ஆகியோர் கோலடித்தனர்.

இலங்கை–வங்கதேச அணிகள் மோதும் இரண்டு டெஸ்டுகள்கொண்ட தொடரின் முதல் டெஸ்ட் பல்லகேலேவில் தொடங்குகிறது.

இந்தியாவில் முதன்முறையாக வரும் மே.1 அன்று நடத்தப்படும் டபிள்யூபிசி இந்திய சாம்பியன்ஷிப் குத்துச்சண்டை போட்டியில் சாந்தினி மெஹரா – சுமன் குமாரி லைட்வெயிட் பிரிவில் மோதுகின்றனர்.

---

**6. கங்கைகொண்ட சோழபுரத்தில் அகழாய்வுப் பணிகள் தொடக்கம்**

அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரம், மாளிகைமேட்டில் முதற்கட்ட அகழாய்வுப்பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. கீழடி, ஆதிச்சநல்லூர் மற்றும் அரியலூர் மாவட்டம் கங்கைகொண்டசோழபுரம் உள்ளிட்ட பகுதிகளில் அகழாய்வுப்பணிகள் தொடங்கப்படும் என தமிழக அரசு அறிவித்திருந்தது.

அதன்படி கங்கைகொண்ட சோழபுரம் மற்றும் அதனைச்சுற்றியுள்ள பகுதிக –ளில் தமிழ்நாடு தொல்லியல் துறைமூலம் அகழாய்வுக்கான இடம்தேர்வு செய்யும் பணிகள் கடந்த ஜனவரியில் தொடங்கியது. அப்போது முதற்கட்ட –மாக கங்கைகொண்ட சோழபுரம் மற்றும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகளி –ல் ஆளில்லா விமானம்கொண்டு நிழற்படக்கருவிமூலம் நிழற்படம் எடுத் –து மத்திய தொல்லியல் துறைக்கு தமிழ்நாடு அரசு அனுப்பிவைத்தது.

இதைத்தொடர்ந்து, தற்போது கங்கைகொண்ட சோழபுரத்தில் மாளிகைமே –டு என்ற இடத்தில் அகழாய்வுப்பணிகள் தொடங்கி தீவிரமாக நடைபெற்று வருகிறது. 'மாமன்னன்' இராஜேந்திர சோழன் வாழ்ந்த அரண்மனை, செப் –பேடுகள், பயன்படுத்தப்பட்ட பொருள்கள்போன்ற வரலாற்று பொக்கிஷங் –களைக் கண்டறியும் வகையில் அகழாய்வுப்பணிகள் தற்போது முடுக்கி விடப்பட்டுள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு தொல்லியல் துறையினர் கூறுகை –யில், தமிழ்நாடு முழுவதும் ஏழு மாவட்டங்களில் அகழாய்வுப்பணிகள் தொடங்கப்பட இருக்கிறது. ஏற்கனவே கீழடி, ஆதிச்சநல்லூர்போன்ற இடங்களில் அகழாய்வுப்பணிகள் தொடங்கிவிட்டன. கங்கைகொண்ட சோ –ழபுரத்தில் அகழாய்வுப்பணிகள் நடைபெறுவதற்கான இடங்கள் ஏற்கன –வே முதல்நிலை ஆய்வுசெய்து முடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி முதற்கட்ட அகழாய்வை தற்போது மாளிகைமேடு என்ற பகுதியி –ல் தொடங்கியுள்ளோம். தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில் நால்வர் கொண்ட குழுவினர் தலைமையில் 35 தொழிலாளர்களைக் கொண்டு அகழாய்வு நடைபெற்று வருகிறது. மேற்கண்ட ஆய்வில் பழங்கால கூரை ஓடுகள், பானை ஓடுகள், இரும்பினால் ஆன பொருள்கள், செம்புக்காசுகள் ஆகியவை கிடைக்கப்பெற்றுள்ளன. செப்டம்பர் மாதம் வரை இந்த ஆய்வு நடைபெறும்.

---

**1. அத்தியாவசிய சேவைகளில் பணியாற்ற மறுப்பது எச்சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளது?**

**அ) அத்தியாவசிய சேவைகள் பராமரிப்பு சட்டம் (ESMA) ☑**

ஆ) பேரிடர் மேலாண்மை சட்டம்

இ) தொற்று நோய்கள் சட்டம்

ஈ) கொள்ளை நோய் நிலைகள் சட்டம்

Essential Services Maintenance Act

✓ சில அத்தியாவசிய சேவைகளையும் சமூகத்தின் இயல்பு நிலையையும் பராமரிப்பதற்காக, கடந்த 1968'இல் அத்தியாவசிய சேவைகள் பராமரிப்பு சட்டமானது (ESMA) இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் அதன் சாசனத்தில் அத்தியாவசிய சேவைகளின் பட்டியலை கொண்டுள்ளது. COVID-19 பாதிப்புகள் விரைவாக அதிகரித்ததை அடுத்து, சத்தீஸ்கர் மாநில அரசு அத்தியாவசிய சேவைகள் பராமரிப்பு சட்டத்தை செயல்படுத்தியுள்ளது.

✓ அத்தியாவசிய சேவைகளில் பணியாற்ற மறுப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. இதில் சுகாதார ஊழியர்கள், தூய்மைப் பணியாளர்கள், நீர் மற்றும் மின்சாரம் விநியோகிக்கும் சேவைகளில் பணியாற்றும் பனியாளர்கள் உள்ளனர்.

---

**2. "IP குரு" என்ற வல்லுநர் குழுவை தொடக்கிய நிறுவனம் எது?**

அ) மின்னணு & தகவல் தொடர்பு அமைச்சகம்

ஆ) NITI ஆயோக்

**இ) NIXI ☑**

ஈ) NASSCOM

✓ இந்தியாவின் தேசிய இணைய பரிமாற்றகம் (NIXI), இந்தியாவில் IPv6 நெறிமுறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த சில புதிய முயற்சிகளை அறிவித்தது. கடந்தாண்டு பிப்ரவரி மாதத்தில், 2020 மார்ச் மாதத்துக்குள் அனைத்து அரசாங்க நிறுவனங்களையும் IPv6'க்கு மாற்றுமாறு தொலை தொடர்புத்துறை ஆணையிட்டது.

✓ IPv6 முறைகளுக்கு மாறுவதை ஆதரிப்பதற்காக 'IP குரு' என்ற நிபுணர் குழுவை NIXI அறிமுகப்படுத்தியது. NIXI, IPv6'க்கான கல்வி தளத்தையும் உருவாக்குகிறது. அது, NIXI அகாதமி மற்றும் ஒரு NISI IP-Index என அழைக்கப்படுகிறது.

---

**3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பெனின் வெண்கலங்கள் காணப்பட்ட நாடு எது?**



அ) தென்னாப்பிரிக்கா

**ஆ) நைஜீரியா ☑**

இ) கிரேக்கம்

ஈ) எகிப்து

✓ பெனின் வெண்கலங்கள் என்பவை பெனின் இராச்சியத்தின் அரச அரண்மனையில் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட உலோக தகடுகள் மற்றும் சிற்பங்களின் ஒரு தொகுப்பாகும். பெனின் நகரம், நவீன தெற்கு நைஜீரியாவில் அமைந்துள்ளது. வரலாற்று மற்றும் கலாச்சார முக்கியத்துவம்வாய்ந்த படைப்புகளை உருவாக்கிய திறமையான கைவினைஞர்களுக்கு இது புகழ்பெற்றதாகும்.

✓ 1897ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் வீரர்கள் பெனின் நகரத்தை சூறையாடி, உலோக சிற்பங்களின் தொகுப்பைத்திருடினர். அண்மையில், அந்த உலோக சிற்பங்கள் அனைத்தையும் இங்கிலாந்து அதன் தற்போதைய ஐரோப்பிய சுங்க அதிகாரிகளால் மூன்று ஆண்டுகளுக்குள் வழங்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டது.

---

**4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற INS நிரீக்ஷக், கீழ்காணும் எந்த வகை கப்பலின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது?**



அ) நீர்மூழ்கிக்கப்பல்

**ஆ) நீர்மூழ்கு ஆதரவு கலம் ☑**

இ) கடலோர ரோந்து கலம்

ஈ) அழித்தொழிப்பான்

✓ காணாமல்போன மீனவர்களை தேடி மீட்பதற்காக இந்திய கடற்படை தனது சிறப்பு நீர்மூழ்கு ஆதரவு கலமான INS நிரீக்ஷக்கை மங்களூரு கடற்கரையில் நிறுத்தியுள்ளது.

✓ அண்மையில், கேரளாவில் பதிவு செய்யப்பட்ட எந்திர மீன்பிடி படகில் சென்ற ஒன்பது மீனவர்கள் காணாமல்போயினர். இந்தப்பிரச்சனையின் காரணமாக, இந்திய கடற்படை சிறப்பு உபகரணங்கள் மற்றும் கடற்படை மூழ்காளர்களைப் பயன்படுத்தி ஆழ்கடல் மூழ்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

---

**5. லாக்ஹீட் மார்டினுடன் இணைந்து இந்திய விமானப்படைக்கு முதலாவது லேசான குண்டு துளைக்காத வாகனங்களை வழங்கிய நிறுவனம் எது?**

அ) BEL

ஆ) DRDO

**இ) அசோக் லேலண்ட் ☑**

ஈ) TATA மோட்டார்ஸ்

✓ ஹிந்துஜா குழுமத்தின் முதன்மை நிறுவனமான அசோக் லேலண்ட், முதல் லேசான குண்டு துளைக்காத வாகனங்களை இந்திய வான் படைக்கு வழங்கியுள்ளது. இந்த வாகனங்கள் அமெரிக்காவைச் சார்ந்த விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்ப நிறுவனமான லாக்ஹீட் மார்டினுடன் இணைந்து வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளன.

---

**6. சமீப செய்திகளில் இடம்பெற்ற, "MK-4482" என்றால் என்ன?**



அ) ஏவுகணை துவக்கி

**ஆ) வைரஸ் எதிர்ப்பு மருந்து ☑**

இ) நீர்மூழ்கி கப்பல்

ஈ) ஆளில்லா வான்வழி வாகனம்

✓ ஓர் அண்மைய ஆய்வின்படி, ஒரு சோதனை வைரஸ் தடுப்பு மருந்தான MK-4482, SARS-CoV-2 நோய்த்தொற்றுக்கு சிகிச்சையளிக்கப்பட்ட வெள்ளெலிகளின் நுரையீரலில் வைரஸின் அளவை குறைத்துள்ளதாக கூறப்படுகிறது. அமெரிக்க தேசிய சுகாதார நிறுவனத்தின் அறிவியலாளர்கள் நேச்சர் கம்யூனிகேஷன்ஸ் இதழில் இந்த ஆய்வை வெளியிட்டனர்.

✓ MK-4482, தற்போது மனிதர்களில் பரிசோதிக்கப்பட்டு வருகிறது. இது வாய்வழி மருந்தாக வழங்கப்படுகிறது. இத்தகவல்கள்மூலம் MK-4482 சிகிச்சையானது, கொரோனா வைரசால் அதிக ஆபத்து ஏற்படுவதைக் குறைக்கக்கூடும் என்று தெரிகிறது.

---

**7. தேசிய அளவிலான பருவநிலை பாதிப்பு குறித்து விரிவான மதிப்பீட்டு அறிக்கையை வெளியிடுகிற துறை எது?**



அ) சுற்றுச்சூழல் துறை

**ஆ) அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை ☑**

இ) அணுவாற்றல் துறை

ஈ) விண்வெளித் துறை

✓ "தேசிய அளவிலான பருவநிலை பாதிப்பு குறித்து விரிவான மதிப்பீட்டு அறிக்கை" என்ற தலைப்பிலான அறிக்கையொன்று அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் வெளியிடப்படவுள்ளது. இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்கள் & மாவட்டங்களின் காலநிலைமாற்ற பாதிப்பு குறித்த விரிவான தேசிய அளவிலான மதிப்பீட்டை இவ்வறிக்கை வழங்குகிறது.

✓ அறிவியல் தொழில்நுட்பத் துறை, வளர்ச்சி & ஒத்துழைப்புக்கான சுவிஸ் முகமை ஆகியவற்றின் உதவியுடன் இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டது.

---

**8. சுற்றுச்சூழல் பாதிப்பு குற்றச்செயல்களுக்கு தண்டனை வழங்குவதற்காக 'ஈகோசைட்' மசோதாவை உருவாக்கியுள்ள நாடு எது?**

அ) ஜெர்மனி

**ஆ) பிரான்ஸ் ☑**

இ) நியூசிலாந்து

ஈ) பிரேசில்

✓ சுற்றுச்சூழல் பாதிப்புச் செயல்களைத் தண்டிக்க முற்படும் "சுற்றுச்சூழல் குற்றத்தை" அமல்படுத்தும் மசோதவை உருவாக்க பிரான்ஸின் தேசிய சட்டமன்றம் அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. ஆறொன்றை மாசுபடுத்துதல்போன்ற தேசிய அளவில் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் மிகமோசமான நிகழ்வுகளுக்கு இந்த மசோதா பயன்படுத்தப்படும்.

- ✓ சுற்றுச்சூழலுக்கு கேடுவிளைவிக்கும் ஒரு குற்றம் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் தண்டனைக்குரியதாகும்.

---

**9. மூளையின் அளவை அதிகரிக்கவும் குறைக்கவும் திறன்கொண்ட முதல் உயிரினம் எது?**

**அ) இந்திய குதிக்கும் எறும்பு ☑**

ஆ) சிங்கவால் குரங்கு



இ) இந்திய கானமயில்

ஈ) ஆலிவ் ரிட்லி ஆமை

- ✓ இந்திய குதிக்கும் எறும்புகள் அதன் மூளையை கிட்டத்தட்ட 20 சதவீத அளவுக்கு சுருக்கி அதன் உடலை இனப்பெருக்கம் செய்ய தயார் செய்கிறது என அண்மையில் அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த ஆய்வின்படி, எறும்பு அதன் மூளையின் அளவை அதற்கடுத்த வாரங்களில் மீண்டும் அதிகரிக்கக்கூடும்.
- ✓ மூளையின் அளவை அதிகரிக்கும் மற்றும் குறைக்கும் திறன்கொண்ட முதல் பூச்சியினம் இதுவாகும். தேனீ உள்ளிட்ட பிற பூச்சிகள் அவற்றின் மூளையின் அளவை அதிகரிக்கும் திறன் கொண்டதாகும்.

---

**10. உலகின் முதல் மலிவான மற்றும் நீடித்து உழைக்கக்கூடிய நலவாழ்வு தயாரிப்பை, 'டியூரோகீ சீரிஸ்' என்ற பெயரில் உருவாக்கி உள்ள நிறுவனம் எது?**

அ) IISc, பெங்களூர்

**ஆ) IIT ஹைதராபாத் ☑**

இ) IIT மெட்ராஸ்

ஈ) NIT வாரங்கல்

- ✓ மத்திய கல்வி அமைச்சர் இரமேஷ் பொக்ரியால் 'நிஷாங்க்', உலகின் முதல் மலிவான மற்றும் நீடித்து உழைக்கக்கூடிய நலவாழ்வு தயாரிப்பை, 'டியூரோகீ சீரிஸ்' என்ற பெயரில் அறிமுகப்படுத்தினார்.
- ✓ IIT ஹைதராபாத் ஆராய்ச்சியாளர்களால் இந்த நலவாழ்வு தயாரிப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இப்புதுமையான மற்றும் நீடித்து உழைக்கக்கூடிய தொழில்நுட்பங்கள் COVID-19 பரவலை எதிர்த்து உருவாக்கப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 70 கோடி ஸ்புட்னிக்-வி தடுப்பூசிகள்: 6 இந்திய நிறுவனங்கள் தயாரிப்பு**

ஆண்டுதோறும் எழுபது கோடி ஸ்புட்னிக்-வி தடுப்பூசிகளை ஆறு இந்திய நிறுவனங்கள் தயாரிக்கவுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்படும் உயிரிதொழில்நுட்பத் துறை செயலர் ரேணு ஸ்வரூப் கூறியது:

தற்போது மூன்று கரோனா தடுப்பூசிகள் இந்தியாவில் அவசரகால பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. இவைதவிர பாரத்பயோடெக்கின் மூக்கு வழியாக செலுத்தும் தடுப்புமருந்து, ஸைடஸ் கடிலா, பயோஇ, ஜெனோவா நிறுவனங்களின் தடுப்பூசிகள் பல்வேறு கட்ட பரிசோதனைகளில் உள்ளன. அவற்றை உருவாக்கும் ஆரம்பகட்டப்பணிகளின்போது அந்த நிறுவனங்களுக்கு மத்திய உயிரிதொழில்நுட்பத்துறை ஆலோசனைகள், தொழில்நுட்பம் மற்றும் நிதியுதவி வழங்கியது. அந்தத் தடுப்பூசி மருந்துகளின் தற்போதைய பணிகளுக்கு சுமார் ₹400 கோடி நிதியுதவியை மத்திய அரசு வழங்குகிறது.

அந்தத் தடுப்பூசி மருந்துகளை மாதந்தோறும் 1.5 கோடி முதல் 2 கோடி அளவில் தயாரிக்கும் விதமாக ஏற்கனவே உற்பத்தித்திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது. அவற்றுக்கு ஒப்புதல் கிடைத்தவுடன், அந்தத் தடுப்பூசி மருந்துகளை பயன்பாட்டுக்கு கொண்டுவரமுடியும். ரஷியா உருவாக்கியுள்ள ஸ்புட்னிக்-வி கரோனா தடுப்பூசியை ஆண்டுதோறும் 70 கோடி அளவில் 6 இந்திய நிறுவனங்கள் தயாரிக்கவுள்ளன என்று தெரிவித்தார்.

---

**2. இந்தியாவில் தினசரி 7,500 மெட்ரிக் டன் ஆக்சிஜன் உற்பத்தி: மத்திய அரசு**

இந்தியாவில் தினசரி 7,500 மெட்ரிக் டன் ஆக்சிஜன் உற்பத்தி செய்யப்படுவதாகவும், அதில் 6,600 மெட்ரிக் டன் ஆக்சிஜன் மருத்துவப் பயன்பாட்டுக்காக மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. தில்லியில் மத்திய சுகாதாரத் துறை செயலர் இராஜேஷ் பூஷன், NITI ஆயோக் உறுப்பினர் (சுகாதாரம்) VK பால் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது சுகாதாரச் செயலர் இராஜேஷ் பூஷன் கூறியது:

தொழிற்துறைகளில் ஒன்பது துறைகளைத்தவிர இதர துறைகளின் பயன்பாட்டுக்காக ஆக்சிசன் விநியோகிக்க தற்போது தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மருத்துவபயன்பாட்டுக்கு கூடுதலாக ஆக்சிசன் விநியோகிக்க முடியும். இந்தியாவில் தினசரி 7,500 மெட்ரிக் டன் ஆக்சிஜன் தயாரிக்கப்படுகிறது. இதில் 6,600 மெட்ரிக் டன் ஆக்சிஜன் மருத்துவப் பயன்பாட்டுக்காக மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று தெரிவித்தார்.

---

**3. பிரான்ஸிலிருந்து இந்தியா வரும் மேலும் 4 ரபேல் போர் விமானங்கள்: விமானப்படைத் தளபதி பதௌரியா கொடியசைத்து அனுப்பி வைப்பு**

பிரான்ஸ் நாட்டிலிருந்து ஐந்தாவது தவணையாக நான்கு ரபேல் போர் விமானங்கள் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பிரான்ஸின் மெரிக்னேக்-போர்டியாக்ஸ் விமானப்படைத்தளத்தில் நடந்த நிகழ்ச்சியில், அங்கு ஐந்து நாள் பயணமாக சென்றுள்ள இந்திய விமானப்படைத்தளபதி RKS பதௌரியா பங்கேற்று விமானங்களை கொடியசைத்து இந்தியா அனுப்பிவைத்தார்.

பிரான்ஸ் நாட்டின் டஸ்ஸால்ட் ஏவியேஷன் நிறுவனத்திடம் இருந்து 36 அதிநவீன ரபேல் போர் விமானங்களை வாங்க கடந்த 2016ஆம் ஆண்டு இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டது. ₹59,000 கோடியில் இந்த விமானங்களை வாங்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி, இதுவரை 14 ரபேல் போர் விமானங்களை அந்த நிறுவனம் இந்தியாவிடம் ஒப்படைத்துள்ளது. இப்போது மேலும் நான்கு விமானங்கள் வழங்கப்பட்டுள்ளன.

---

**4. வேளாண் பொருள்கள் ஏற்றுமதி 16.88 சதவீதம் அதிகரிப்பு**

கடந்த 2020-21ஆம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை, இந்தியாவின் வேளாண் உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி 16.88% அதிகரித்துள்ளதாக, மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்தது: கடந்த 2020ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நடப்பாண்டு பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் ₹2.74 இலட்சம் கோடி மதிப்பிலான வேளாண் உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் ₹2.31 இலட்சம் கோடி மதிப்பிலான பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அதாவது, வேளாண் உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதி 16.88% அதிகரித்துள்ளது.

இதேபோன்று, அதே காலகட்டத்தில் வேளாண் உற்பத்திப் பொருள்களின் இறக்குமதி 3 சதவீதம் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு ₹1,37,014 கோடி மதிப்பிலான வேளாண் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டில் ₹1,41,034 கோடியாக அதிகரித்துள்ளது. கரோனா தொற்று பரவலால் பல்வேறு துறைகள் பாதிக்கப்பட்ட போதிலும், வேளாண் துறை வர்த்தகம் ₹93,097.76 கோடியிலிருந்து ₹1,32,579.69 கோடியாக அதிகரித்துள்ளது.

பல ஆண்டுகளாக அதிக அளவிலான வேளாண் உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்து, வர்த்தக உபரி நிலையை இந்தியா தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டு வருகிறது. கரோனா தொற்று பரவல் காலகட்டத்தில் கூட, உணவுப்பொருள்கள் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக, இந்தியா தொடர்ந்து உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்து வந்தது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**5. பைங்குடில் வாயு வெளியேற்றத்தை 55% குறைக்க ஐரோப்பிய யூனியன் ஒப்புதல்**

வரும் 2030ஆம் ஆண்டுக்குள் பைங்குடில் வாயுக்களின் வெளியேற்றத்தை 55% குறைக்க ஐரோப்பிய யூனியன் நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன. இதுகுறித்து ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வோன்டெர் லேயன் கூறியதாவது: வரும் 2050ஆம் ஆண்டுக்குள் காற்றிலிருந்து அகற்றப்படும் பைங்குடில் வாயுக்களின் அளவுக்கும் காற்றில் கலக்கப்படும்

அந்த வகை வாயுக்களின் அளவுக்கும் இடையே வேறுபாடில்லாமல் செய்வதற்கான எங்களது வாக்குறுதி, தற்போது சட்டப்பூர்வமாகியுள்ளது.

இந்த இலக்கை எட்டுவதற்கு ஐரோப்பிய யூனியன் உறுப்புநாடுகளும் ஐரோப்பிய நாடாளுமன்றமும் ஒப்புதல் அளித்துள்ளன. முதற்கட்டமாக, வரும் 2030ஆம் ஆண்டுக்குள் காற்றில் பைங்குடில் வாயுக்களின் அளவை கடந்த 1990ஆம் ஆண்டில் இருந்ததைவிட 55 சதவீதம் குறைப்பதற்கும் உறுப்புநாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன என்றார் அவர்.

பூமி கடுங்குளிரில் உறைந்து போகாமல், அதில் பசுமைத் தாவரங்களும் பிற உயிரினங்களும் வாழ்வதற்கேற்ற வெப்பத்தை ஏற்படுத்தித் தரும் கரியமில வாயு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன் வாயு ஆகியவை பைங்குடில் வாயுக்கள் என்றழைக்கப்படுகின்றன. இந்த வாயுக்களின் விகிதம், தொழிற்புரட்சி காரணமாக வளிமண்டலத்தில் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக புவியின் வெப்பம் அதிகரித்து, வளிமண்டலத்தின் சுழற்சிப் போக்கில் மாற்றம் ஏற்பட்டு வறட்சி, அனல்காற்று, காட்டுத்தீ, பனிப்பாறைகள் உருகி கடல்மட்டம் அதிகரித்தல், அதீத மழை, புயல், வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்கள் அதிகரித்து வருகின்றன.

'பருவநிலை மாற்றம்' என்றழைக்கப்படும் இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக சர்வதேச நாடுகள் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் கடந்த 2015ஆம் ஆண்டு ஒப்பந்தம் மேற்கொண்டன. அதில், இந்தப் பிரச்சனைக்குக் காரணமான கரியமிலவாயு வெளியேற்றத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டிய அவசியத்தை உலக நாடுகள் ஒப்புக்கொண்டன. இதுதொடர்பான சர்வேதச முயற்சியின் ஒருபகுதியாக, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தலைமையில் சுமார் 40 நாடுகள் பங்கேற்கும் சர்வதேச பருவநிலை மாநாடு வரும் ஏப். 22 மற்றும் 23'இல் நடைபெறவிருக்கிறது. அதற்கு முன்னதாக, ஐரோப்பிய யூனியன் நாடுகள் இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன.

---

**6. ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்துக்கு விருது:**

ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனத்தின் அரியலூர் ஆலைக்கு இந்தியா உச்ச தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு விருதுகள்–2020 சார்பில் 'தங்கரகம்' விருது வழங்கப்பட்டுள்ளது.

---

**7. பெண்கள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கு: கல்லூரிகளில் நடத்த UGC உத்தரவு**

பல்கலைக்கழக மானியக்குழு (UGC) செயலர் ரஜ்னிஸ் ஜைன், அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கை விவரம்: மத்திய நாடாளுமன்ற நிலைக்குழுவின் 230ஆவது அறிக்கையில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதற்காக பல்வேறு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வழிகாட்டுதல்களை நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் அவசியம் பின்பற்ற வேண்டும். பாலின சமத்துவம், பெண்கள் உடல்நலன், அதிகாரப்பகிர்வு, பாதுகாப்பு, தலைமைப்பண்பு உள்ளிட்ட அம்சங்களை பாடத்திட்டத்தில் கூடுதலாக இணைக்க வேண்டும்.

அதேபோல, பெண்களிடம் மரியாதையாகவும், கண்ணியத்துடனும் நடந்து கொள்வது குறித்து 'பெண்கள் பாதுகாப்பு' என்ற தலைப்பில் இணையவழியில் கருத்தரங்குகளை நடத்தவேண்டும். இதுதொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அறிக்கையாக தயாரித்து UGC'க்கு அனுப்பிவைக்க வேண்டும். இவ்வாறு சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

**8. கரோனா வைரஸ் தொற்றுக்கான தடுப்பூசியை அதிகம் வீணாக்கும் மாநிலங்கள்: தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளதாக RTI மூலம் அம்பலம்**

தடுப்பூசியை மாநிலங்கள் அதிக அளவில் வீணாக்கி வருவதாக தகவல் அறியும் உரிமைச் சட்டம் (RTI) மூலம் தெரியவந்துள்ளது. இதில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. உலக நாடுகளில் கரோனா வைரஸ் பாதிப்பு இந்தியாவில்தான் மிகமோசமாக உள்ளது. நாள்தோறும் சுமார் 2 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு கரோனா பாதிப்பு உறுதிசெய்யப்படுகிறது.

**கரோனா பாதிப்பில் நான்காம் இடம்:** இந்நிலையில் கரோனா பாதிப்பில் தமிழ்நாடு 4ஆவது இடத்தில் உள்ளது. பல மாநிலங்களில் கரோனா கால கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. சில மாநிலங்களில் இரவு நேர ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. மகாராஷ்டிராவில் பதினைந்து நாட்கள் முழு ஊரடங்கும், தில்லியில் ஆறு நாட்களுக்கு ஊரடங்கும் அமல்படுத்தப்பட்டுள்ளது. கரோனா அதிகம் உள்ள மாநிலங்களில் கரோனா வைரஸ் தடுப்பூசிகளும் அதிக அளவில் போடப்பட்டு வருகின்றன.

ஆனால் பல்வேறு மாநிலங்களில் கரோனா தடுப்பூசிகளுக்கு பற்றாக்குறை இருப்பதாகவும் புகார்கள் எழுந்துள்ளன. இந்நிலையில் மாநிலங்கள் அதிக அளவில் கரோனா தடுப்பூசிகளை வீணாக்கி வருவதாக RTIமூலம் தெரியவந்துள்ளது. குறிப்பாக இவ்வரிசையில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

சுமார் 12 கோடி தடுப்பூசி டோஸ்கள் மாநிலங்களில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இதில் 44 லட்சம் டோஸ்கள் மாநிலங்களால் வீணாக்கப்பட்டுள்ளன. வீணாக்கப்பட்ட டோஸ்களில் தமிழ்நாடு 12.10 சதவீதத்துடன் முதலிடத்தில் உள்ளது.

ஹரியாணா 9.74 சதவீதத்துடன் இரண்டாவது இடத்திலும், பஞ்சாப் 8.12 சதவீதத்துடன் 3ஆவது இடத்திலும், மணிப்பூர் 7.8 சதவீதத்துடன் 4ஆவது இடத்திலும், தெலங்கானா 7.5 சதவீதத்துடன் 5ஆம் இடத்திலும் உள்ளன. கடந்த 11ஆம் தேதியுடன் முடிவடைந்த காலத்தில் இவ்வளவு தடுப்பூசி டோஸ்கள் வீணாக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கேரளா, மேற்கு வங்கம், ஹிமாச்சல பிரதேசம், மிசோரம், கோவா, டாமன் & டையூ, அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள், லட்சத்தீவுகளில் தடுப்பூசிகள் குறைந்த அளவில் வீணாக்கப்பட்டுள்ளன. இதனிடையே தடுப்பூசி மருந்து உற்பத்திக்காக சீரம் நிறுவனத்துக்கு ₹3,000 கோடியும், பாரத் பயோடெக் நிறுவனத்துக்கு ₹1,500 கோடியும் மத்திய அரசு வழங்கியுள்ளது.

---

**1.** **அண்டார்டிகாவுக்கு நாற்பதாவது அறிவியல் பயணத்தை மேற்கொண்ட அமைச்சகம் எது?**

அ) கப்பல் வாணிப அமைச்சகம்

**ஆ) புவி அறிவியல் அமைச்சகம் ☑**


இ) வெளியுறவு அமைச்சகம்

ஈ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

- ✓ மத்திய புவி அறிவியல் அமைச்சகம் அண்டார்டிகாவிற்கு நாற்பதாவது அறிவியல் பயணத்தை மேற்கொண்டது. இந்தப் பயணம், 2021 ஏப்.10 அன்று வெற்றிகரமாக கேப்டவுனுக்குத் திரும்பியுள்ளது.
- ✓ வெறும் 94 நாட்களில் சுமார் 12,000 கடல் மைல் நீள பயணத்தை முடித்த பின்னர் இந்தக் குழு திரும்பியது. MV வாசிலி கோலோவ்னின் கப்பலில் இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சாதனை, அண்டார்டிகாவில் இந்தியாவின் நாற்பதாண்டுகால அறிவியல்பூர்வ முன்னெடுப்பை நிறைவு செய்துள்ளது.

---

**2.** **'லூனா 25' என்பது நிலவு ஆராய்ச்சி குறித்த எந்த நாட்டு திட்டத்தின் பெயராகும்?**



**அ) ரஷியா ☑**

ஆ) ஜப்பான்

இ) சீனா

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

- ✓ நிலவு ஆராய்ச்சி குறித்த ஒரு புதிய தொடர் திட்டங்களை ரஷியா அறிவித்துள்ளது. "லூனா 25" எனப் பெயரிடப்பட்ட அந்த திட்டங்களில் முதலாவது திட்டம் வரும் அக்டோபரில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.
- ✓ 45 ஆண்டுகளாக ரஷியா இதுபோன்ற நிலவு ஆராய்ச்சி திட்டங்களில் ஈடுபடாமல் இருந்தது. நிலவின் மேற்பரப்பிற்குக்கீழே நிரந்தரமாக உறைந்திருக்கும் பனியை ஆராயும் விதமாக இந்தத் தரையிறங்கி வடிவமைக்கப்பட்டுள்ளது. நிலவு சூழ் புழுதியின் கூர்மையான துண்டுகளால் ஏற்படும் இடர்களையும் அறிவியலாளர்கள் மதிப்பீடு செய்வார்கள்.

---

**3.** **"Complex Pasts: Diverse Futures" என்பது ஏப்ரல்.18 அன்று கொண்டாடப்படும் எந்தச் சிறப்பு நாளின் கருப்பொருளாகும்?**




அ) உலக கலாச்சார நாள்

**ஆ) உலக பாரம்பரிய நாள் ☑**

இ) உலக தொல்லியல் நாள்

ஈ) உலக சுற்றுலா நாள்

- ✓ ஆண்டுதோறும் ஏப்18 அன்று உலக பாரம்பரிய நாள் அல்லது நினைவுச் சின்னங்கள் மற்றும் பாரம்பரிய தலங்களுக்கான பன்னாட்டு நாளாக கொண்டாடப்படுகிறது. "Complex Pasts: Diverse Futures" என்பது இந்த ஆண்டு (2021), உலக பாரம்பரிய நாளுக்கான கருப்பொருளாகும்.
- ✓ இந்தியாவில், இராமாயணம்குறித்த முதல் ஆன்லைன் கண்காட்சியை சுற்றுலா & கலாச்சார அமைச்சர் தொடங்கினார். இந்தக் கண்காட்சியில், புது தில்லியிலுள்ள தேசிய அருங்காட்சியகத்தின் 49 சிற்றோவியங்கள் தொகுப்புகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

---

**4.** **அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற டேபிள் மவுண்டைன் தேசிய பூங்கா அமைந்துள்ள நாடு எது?**



அ) ஆஸ்திரேலியா

**ஆ) தென்னாப்பிரிக்கா ☑**

இ) நியூசிலாந்து

ஈ) பிலிப்பைன்ஸ்

- ✓ தென்னாப்பிரிக்காவின் மேசை மலை தேசிய பூங்காவில் எரிந்து வரும் காட்டுத்தீ, கட்டடங்களை சேதப்படுத்தும் என்று கூறப்படுகிறது.
- ✓ இந்தத்தீயை கட்டுக்குள் கொண்டுவருவதற்காக சுமார் 200 தீயணைப்பு வீரர்களும் 4 உலங்கூர்திகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 1796 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட கேப்டவுன் பல்கலைக்கு அருகிலுள்ள மோஸ்டெர்ட்ஸ் மில் என்ற வரலாற்று கால காற்றாலையும் இந்தத் தீவிபத்தில் சேதமடைந்துள்ளது.

---

**5.** **குஜராத்தின் பனிதரில் இந்தியாவில் தனது முதல் மெகா உணவு பூங்கா திட்டத்தை தொடங்கியுள்ள நாடு எது?**



அ) பிரான்ஸ்

ஆ) இஸ்ரேல்

**இ) இத்தாலி ☑**

ஈ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

- ✓ அண்மையில், உணவு பதப்படுத்தும் வசதிகளை உள்ளடக்கிய தனது முதல் மெகா உணவு பூங்கா திட்டத்தை, இத்தாலி, இந்தியாவில் அறிமுகப்படுத்தியது. "தி மெகா புட் பார்க்" என்ற சோதனை அடிப்படையிலான இந்தத் திட்டம், மெய்நிகர் முறையில் தொடங்கப்பட்டது.
- ✓ மும்பையில் உள்ள ICE அலுவலகத்திற்கும் குஜராத்தின் பனிதர் மெகா உணவு பூங்காவிற்கும் இடையே ஒரு விருப்பகடிதம் கையெழுத்தானது.

---

**6.** **சாகச விளையாட்டு நிறுவனம் திறக்கப்பட்டுள்ள தேரி ஏரி உள்ள மாநிலம் எது?**



அ) மகாராஷ்டிரா

**ஆ) உத்தரகண்ட் ☑**

இ) ஒடிஸா

ஈ) மேற்கு வங்கம்

- ✓ தேரி ஏரியின் கரையில் நீர் விளையாட்டு மற்றும் சாகச நிறுவனத்தை உத்தரகண்ட் மாநில முதலமைச்சர் தீரத் சிங் ராவத் மற்றும் மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ ஆகியோர் திறந்துவைத்தனர். இந்தோ–திபெத்திய எல்லைப்புற காவல்துறையால் நடத்தப்படு இந்த நிறுவனம், ₹20 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

---

**7.** **எந்த நாட்டுடனான தனது மிகப்பெரிய இராணுவ கொள்முதல் ஒப்பந்தத்தில், அண்மையில், இஸ்ரேல் கையெழுத்திட்டது?**



அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஆ) சீனா

இ) ஜெர்மனி

**ஈ) கிரேக்கம் ☑**

- ✓ இஸ்ரேலும் கிரேக்கமும் தங்களது மிகப்பெரிய பாதுகாப்பு கொள்முதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இஸ்ரேலிய இராணுவ ஒப்பந்தக்காரரால் ஹெலெனிக் வான்படைக்கு (கிரேக்கம்) ஒரு பயிற்சி மையத்தை நிறுவுவதற்கும் செயல்படுத்துவதற்கும் 1.65 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஓர் ஒப்பந்தமும் இதிலடங்கும்.
- ✓ இந்த ஒப்பந்தம் நாடுகளுக்கு இடையிலான அரசியல் & பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருநாடுகளின் வான்படைகளும் ஒரு கூட்டுப் பயிற்சியைத் தொடங்கியுள்ளன.

---

**8.** **அண்மையில் கூகிள் டூடுலில் இடம்பெற்ற வேரா கெட்ராய்ட்ஸ் என்பவர் எந்த நாட்டின் முதல் பெண் இராணுவ அறுவை சிகிச்சை நிபுணராவார்?**



அ) ஜெர்மனி

**ஆ) ரஷியா ☑**

இ) இத்தாலி

ஈ) பிரான்ஸ்

- ✓ ரஷிய அறுவை சிகிச்சை நிபுணர், பேராசிரியர், கவிஞர் மற்றும் எழுத்தாளருமான Dr வேரா கெட்ராய்ட்ஸின் 151ஆவது பிறந்தநாளை கூகிள் கொண்டாடியது. அவர், அந்நாட்டின் முதல் பெண் இராணுவ அறுவை சிகிச்சை நிபுணராகவும், உலகின் முதல் பெண் பேராசிரியர்களுள் ஒருவராகவும் கருதப்படுகிறார். கடந்த 1904'இல், ருஸ்ஸோ–ஜப்பானிய போரின்போது ஓர் அறுவை சிகிச்சை நிபுணராக டாக்டர் கெட்ராய்ட்ஸ் தாமாக முன்வந்து பணியாற்றினார்.

---

**9.** **மனித உடலில், திசு மட்டத்தில் போதுமான அளவு உயிர்வளி ($O_2$) பெறாத நிலைக்கு பெயர் என்ன?**



அ) மையாக்ஸியா

**ஆ) ஹைபாக்ஸியா ☑**

இ) ஹைபராக்ஸியா

ஈ) டைபாக்ஸியா

- ✓ ஹைபாக்ஸியா என்பது மனித உடலில், திசு மட்டத்தில் போதுமான அளவு உயிர்வளி பெறாத ஒரு நிலையாகும். வைரஸ் தொற்று காரணமா–க COVID–19 நோயாளிக்கு இந்த நிலை மீண்டும் மீண்டும் வருகிறது.
- ✓ கொரோனா வைரஸ் பாதிப்புகள் அதிகரிப்பதால் நாட்டில் உயிர்வளி உருளைகளின் பெரும் பற்றாக்குறைக்கு மத்தியில், இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) $SpO_2$ (குருதி உயிர்வளி செறிவு) கூடுதல் உயிர்வளி வழங்கல் முறையை உருவாக்கியுள்ளது. இது, ஒரு நபரை, ஹைபாக்ஸியா நிலைக்கு ஆளாகாமல் காப்பாற்றுகிறது.

---

**10.** **'கடல் சூழலுக்குள் நுழையும் நெகிழியை எதிர்த்து நகரங்கள்' குறித்த எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது?**




அ) பின்லாந்து

**ஆ) ஜெர்மனி ☑**

இ) சுவிச்சர்லாந்து

ஈ) பிரான்ஸ்

- ✓ இந்திய அரசின் வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமும் ஜெர்மானிய சுற்றுச்சூழல், இயற்கை பாதுகாப்பு மற்றும் அணுவாற்றல் அமைச்சகத்தின் சார்பாக GIZ GmbH இந்தியாவும் தொழில்நுட்ப ஒத்து–ழைப்பு தொடர்பான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- ✓ இத்திட்டத்தின் விளைவுகள் நகர்ப்புற தூய்மை இந்தியா இயக்கத்தின் நோக்கங்களான நீடித்த திடக்கழிவு மேலாண்மை மற்றும் 2022'க்குள் ஒற்றை பயன்பாட்டு நெகிழியை ஒழிப்பதற்கான இலக்கு ஆகியவற்றை மையமாகக் கொண்டுள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மே 1 முதல் இலவச தடுப்பூசி முகாம்: தமிழ்நாடு அரசு**

மே 1 முதல் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு இலவசமாக கரோனா தடுப்பூசி போடப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. மத்திய அரசின் வழிகாட்–டுதலின்படி, தமிழ்நாட்டில் 2020 மார்ச் 25 முதல் தேசிய பேரிடர் மேலா–ண்மைச் சட்டத்தின்கீழ், ஊரடங்கு உத்தரவு பல்வேறு கட்டுப்பாடுகளுட–னும், தளர்வுகளுடனும் அமலில் இருந்துவருகிறது.

---

**2. குத்துச்சண்டை: இந்தியாவுக்கு 5 தங்கம்**

போலந்தில் நடைபெறும் இளையோர் உலக குத்துச்சண்டை போட்டியில் இந்திய மகளிர் 4 பேர் தங்கப்பதக்கம் வென்றனர். இறுதிச்சுற்றுகளில், 48 கிலோ பிரிவில் கீதிகா – போலாந்தின் நடாலியா குஷெவ்ஸ்காவை 5–0 என்ற கணக்கில் வென்றார். 51 கிலோ பிரிவில் பேபிரோஜிசனா சானு – ரஷியாவின் வாலெரியா லின்கோவாவை அதே புள்ளிகள் கணக்கில் தோ–ற்கடித்தார். 57 கிலோ பிரிவில் பூனம் 5–0 என்ற கணக்கில் பிரான்ஸின் ஸ்தெலின் கிராசியையும், 60 கிலோ பிரிவில் வின்கா – கஜகஸ்தானின் ஜுல்டைஸ் ஷயாக்மீடோவாவையும் வீழ்த்தினர். இப்போட்டியில் இன்னும் 3 மகளிரும், ஓர் ஆடவரும் இறுதிச்சுற்றில் விளையாட உள்ளனர்.

---

**1. சுவையூட்டப்பட்ட நறுமணப்பால் தயாரிப்புகளுக்கு சரக்கு மற்றும் சேவை வரியின்கீழ் 12 சதவீத வரி விதிக்கப்படும் என்று சமீபத்தில் தீர்ப்பளித்த ஆணையம் எது?**



அ) நிதி அமைச்சகம்

**ஆ) மேம்பட்ட ஆளும் ஆணையம் (AAR) ☑**

இ) நிதி ஆணையம்

ஈ) மத்திய மறைமுக வரிகள் வாரியம்

✓ சுவையூட்டப்பட்ட நறுமணப்பால் தயாரிப்புகளுக்கு சரக்கு & சேவை வரியின்கீழ் 12% வரி விதிக்கப்படும் என்று குஜராத் மாநிலத்தின் GST வழக்குகளை விசாரிக்கும் AAR ஆணையம் தெரிவித்துள்ளது. அமுல் பிராண்டின்கீழ் பால் தயாரிப்புகளை சந்தைப்படுத்தும் குஜராத் கூட்டுறவு பால் சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பு நிறுவனம், அமுல் கூல்/அமுல் கூல் கபே என்ற பெயரில் விற்பனை செய்யும் நறுமண பாலுக்கு GST வரி விதிப்பது குறித்து AAR ஆணையத்தை அணுகியது.

---

**2. பின்வரும் எந்த நாடு யுரேனியத்தை 60% வரை செறிவூட்ட தொடங்கியுள்ளது என்பதை பன்னாட்டு அணுவாற்றல் முகமை உறு–திப்படுத்தியுள்ளது?**

அ) இஸ்ரேல்

**ஆ) ஈரான் ☑**

இ) ஆப்கானிஸ்தான்

ஈ) நைஜீரியா

IAEA

✓ ஈரான் 60 சதவீதம் வரை யுரேனியம் செறிவூட்டலை தொடங்கிவிட்டது என பன்னாட்டு அணுவாற்றல் முகமை உறுதிசெய்துள்ளது. இதுவே அதிகபட்ச செறிவூட்டல் நிலையாகும். அண்மையில் நடந்த சம்பவத்தால் நடான்சில் உள்ள மின்விநியோக வலையமைப்பு சேதப்படுத்தப்பட்டதை அடுத்து, யுரேனியம் செறிவூட்டலை உயர்த்துவதற்கும், நவீனமயமாக்கப்–பட்ட மையவிலக்கிகளை நடான்ஸ் அணுவாற்றல் நிலையத்தில் நிறு–வுவதற்கும் ஈரான் முடிவுசெய்துள்ளது.

---

**3. பாதுகாப்பு குறித்து, அண்மையில் பணியமர்த்தப்பட்ட "INAS 323" என்றால் என்ன?**



அ) ஆளில்லா வானூர்தி

**ஆ) வான்படையணி ☑**

இ) நீர்மூழ்கிக்கப்பல்

ஈ) ஏவுகணை துவக்கி

✓ இந்திய கடற்படையின் உள்நாட்டில் கட்டப்பட்ட நவீன இலகு இரக உலங்கு வானூர்தி Mk III, இந்திய கடற்படையின் INAS 323 வான்படை அணி ஆகியவை கோவாவின் INS ஹன்சாவிலிருந்து பணியில் சேர்க்க–ப்பட்டன. நவீன இலகு இரக உலங்கு வானூர்தியான Mk III, தேடல் & மீட்பு, சிறப்பு நடவடிக்கைகள் மற்றும் கடலோர கண்காணிப்புக்கு ஆகிய–வற்றுக்கு பயன்படுத்தப்படும்.

✓ இப்படையணி, மூன்று நவீன இலகு ரக Mk III உலங்கு வானூர்திகளை இயக்கும், சக்தி எந்திரத்துடன்கூடிய இந்த உலங்கு வானூர்தியை, ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.

---

**4. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற சிவசுப்பிரமணியன் ராமன், கீழ்காணும் எந்த அமைப்பின் தலைவர் & நிர்வாக இயக்குநராக பொறுப்பேற்றார்?**



அ) SEBI

**ஆ) SIDBI ☑**

இ) ISRO

ஈ) DRDO

✓ சிவசுப்பிரமணியன் ராமன் SIDBI வங்கியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக பொறுப்பேற்றுள்ளதாக சிறு தொழிற்துறை மேம்பாட்டு வங்கி (SIDBI) அறிவித்தது. மூன்றாண்டு காலத்துக்கு அவர் இப்பதவியை வகிப்பார். இந்த நியமனத்திற்கு முன்பு, ராமன், தேசிய மின்னாளுகை சேவைகள் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக பணியாற்றி வந்தார்.

✓ இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SBI) நிர்வாக இயக்குநர் பதவியையும் வகித்துள்ளார்.

---

**5. ஆண்டுதோறும் ஏப்ரல்.19 அன்று கொண்டாடப்படும் ஒரு சிறப்பு நாளோடு தொடர்புடைய மனித உடலின் இரண்டாவது மிகப்பெரிய உறுப்பு எது?**



அ) தோல்

**ஆ) கல்லீரல் ☑**

இ) நுரையீரல்

ஈ) மூளை

✓ கல்லீரல் தொடர்பான நோய்கள் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக உலக கல்லீரல் நாள் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்.19 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. கல்லீரல், மனிதவுடலின் இரண்டாவது பெரிய உறுப்பு மற்றும் செரிமான அமைப்பின் ஒரு முக்கிய பகுதியாகும்.

✓ இது தோலுக்கடுத்து இரண்டாவது மிகப்பெரிய உறுப்பாகும். 2018ஆம் ஆண்டில், சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் தேசிய நச்சுயிரியால் கல்லீரல் அழற்சி நோய் கட்டுப்பாட்டு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இது இந்தியாவில் நச்சுயிரியால் கல்லீரல் அழற்சி நோயைத் தடுப்பதை–யும் கட்டுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**6. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, "புளு நேச்சர் அலையன்ஸ்" என்பதுடன் தொடர்புடையது எது?**

அ) விண்வெளி பாதுகாப்பு

**ஆ) பெருங்கடல் பாதுகாப்பு ☑**

இ) வேளாண் பாதுகாப்பு

ஈ) மயில்கள் பாதுகாப்பு

BLUE NATURE ALLIANCE

✓ அடுத்த ஐந்து ஆண்டுகளில், 18 மில்லியன் சதுர கிமீட்டர் பெருங்கடல் பரப்பைப் பாதுகாப்பதற்காக ஒரு புத்தம் புதிய உலகளாவிய கடல்சார் முன்னெடுப்பு தொடங்கப்பட்டுள்ளது. இந்த முன்னெடுப்பு, "புளு நேச்சர் அலையன்ஸ்" என்று அழைக்கப்படுகிறது. இது தேசிய அரசாங்கங்கள், உள்ளூர் சமூகங்கள், பழங்குடி மக்கள், அறிவியலாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் மற்றும் நன்கொடையாளர்களால் வழிநடத்தப்படுகிறது.

---

**7. உலக பத்திரிகை சுதந்திர குறியீடு – 2021'இல் இந்தியாவின் தரநிலை என்ன?**

**அ) 142 ☑**

ஆ) 152

இ) 162

ஈ) 172

142

✓ 'எல்லைகளற்ற நிருபர்கள்' என்ற அமைப்பு வெளியிட்டுள்ள உலக பத்தி–ரிகை சுதந்திர குறியீட்டில், இந்தியா, 142ஆவது இடத்தை இந்தாண்டும் தக்கவைத்து மோசமான நிலையில் தொடர்வதாக கூறப்பட்டுள்ளது.

✓ பத்திரிகை சுதந்திரம்பற்றி வெளியிடப்பட்ட 180 நாடுகள்கொண்ட இந்தப் பட்டியலில் நார்வே முதலிடத்தில் உள்ளது. அதனைத்தொடர்ந்து பின்லா–ந்து, டென்மார்க் ஆகியவை 2 மற்றும் 3ஆம் இடங்கள் பிடித்துள்ளன. பத்திரிகையாளர்களுக்கு மிகவும் ஆபத்தான நாடாக இந்தியா உள்ளது என அக்குறியீடு தெரிவித்துள்ளது.

---

**8. ஐக்கியப்பேரரசால் வெளியிடப்படும் புதிய டிஜிட்டல் நாணயத்தின் பெயர் என்ன?**



அ) UK நாணயம்

**ஆ) பிரிட்காயின் ☑**

இ) டிஜி பிரிட்

ஈ) பிரிட் நாணயம்

✓ ஐக்கியப்பேரரசு (UK) ஒரு புதிய டிஜிட்டல் நாணயத்தை உருவாக்குவதற்–கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகிறது. இது, "பிரிட்காயின்" என்று அழைக்கப்படுகிறது. மத்திய வங்கியின் இந்த டிஜிட்டல் நாணயம் குறித்த நன்மைகளை மதிப்பிடுவதற்காக, இங்கிலாந்து வங்கியும் கருவூ–லமும் இணைந்து செயல்படவுள்ளன.

✓ வீட்டுச் செலவுகள் மற்றும் வணிகங்களின் பயன்பாட்டிற்கான டிஜிட்டல் நாணயத்தின் புதிய வடிவமாக இந்தப் புதிய நாணயம் இருக்கும் என அவ்வங்கி கூறியுள்ளது.

---

**9. அண்மையில் காலமான இட்ரிஸ் டெபி இட்னோ, முப்பதாண்டுக–ளுக்கும் மேலாக, பின்வரும் எந்த மத்திய ஆப்பிரிக்க தேசத்தின் ஆட்சியாளராக இருந்தார்?**



அ) சூடான்

**ஆ) சாட் ☑**

இ) எகிப்து

ஈ) நைஜீரியா

✓ மத்திய ஆப்பிரிக்க தேசமான சாட் நாட்டை முப்பதாண்டுகளுக்கும் மே–லாக ஆட்சிபுரிந்த சதிபர் இட்ரிஸ் டெபி இட்னோ, அண்மையில் கிளர்ச்சி–யாளர்களுடனான போரின்போது இறந்தார். அவர் மரணிப்பதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னதாக, ஏப்.11 அன்று அதிபர் தேர்தலில் டெபி வெற்றிபெற்றதாக தேர்தல் அதிகாரிகள் அறிவித்திருந்தனர்.

---

**10. பிரதமர் கரிப் கல்யாண் தொகுப்பின்கீழ் நலவாழ்வுப் பணியாள–ர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை எவ்வளவு?**




அ) ₹5 இலட்சம்

ஆ) ₹10 இலட்சம்

இ) ₹25 இலட்சம்

**ஈ) ₹50 இலட்சம் ☑**

✓ பிரதமர் கரிப் கல்யாண் தொகுப்பின்கீழ், சுகாதாரப் பணியாளர்களுக்கா–ன காப்பீட்டுத்திட்டத்தை இந்திய அரசு ஓராண்டுகாலத்திற்கு நீட்டித்து–ள்ளது. COVID–19 காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டாலோ அல்லது COVID–19 தொடர்பான பணியின் காரணமாக தற்செயலாக உயிரிழப்பு ஏற்பட்டாலோ இந்தக் காப்பீட்டுத் திட்டம் பொருந்தும். காப்பீடு செய்யப்பட்ட நபரின் உரிமைகோருபவருக்கு ₹50 இலட்சம் வழங்கப்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. COVID சிகிச்சைக்கு 'விரஃபின்' ஊசி மருந்து: அவசரகால பயன்பாட்டுக்கு DGCI அனுமதி**

COVID நோயாளிகளின் அவசரகால சிகிச்சைக்கு 'விரஃபின்' ஊசி மருந்தை பயன்படுத்த இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநரகம் (DGCI) அனுமதியளித்தது. கரோனா தொற்றால் மிதமாக பாதிக்கப்பட்டுள்ள நோ–யாளிகளின் சிகிச்சைக்கு அந்த மருந்தை அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு–ள்ளது. இந்திய மருந்து உற்பத்தி நிறுவனமான ஸைடஸ் கடிலா இந்த ஊசிமருந்தை உற்பத்தி செய்கிறது. நாட்டில் கரோனா தொற்றின் 2ஆவது அலை தீவிரமாகியுள்ளது. இந்நிலையில் அவசரகால பயன்பாட்டுக்கு 'விரஃபின்' மருந்து அனுமதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**2. உயர்கல்வி விருப்பப் பாடப்பிரிவில் NCC இணைப்பு: UGC தகவல்**

உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கான விருப்பப் பாடப்பிரிவில் தேசிய மாணவர் படை (NCC) சேர்க்கப்பட்டுள்ளதாக UGC தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் உள்ள பள்ளி, கல்லூரி மாணவர்களிடம் தேசப்பற்று மற்றும் ஒற்றுமை உணர்வுகளை வளர்க்கும் விதமாக 'தேசிய மாணவர் படை' இளம் வயதுகளிலேயே வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு ராணுவம், காவல்துறை சார்ந்த வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

---

**3. யூ–டியூப் வழியே குடிமைப்பணித் தேர்வு பயிற்சி: தமிழக அரசு அறிவிப்பு**

சமூக ஊடகமான யூ–டியூப் வழியே குடிமைப் பணித் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும் என்று அண்ணா மேலாண்மை நிலையம் அறிவி–த்துள்ளது. இதுகுறித்து, அந்த நிலையத்தின் இயக்குநர் வெ இறையன்பு வெளியிட்ட அறிவிப்பு: கரோனா இரண்டாவது அலை பரவலைக் கருத்தில் கொண்டு அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் நேர்முகமாக நடைபெறும் அனைத்து வகையான பயிற்சிகளும் நிறுத்தி வைக்கப்பட்டு–ள்ளன. இந்தத் தடை காரணமாக பயிற்சி நிலையத்தில் பயின்று வந்த மாணவர்கள் சொந்த ஊர்களுக்குச் சென்றுள்ளனர்.

இதைத் தொடர்ந்து, சமூக ஊடகமான யூ–டியூப் வழியே குடிமைப்பணித் தேர்வுக்கான பயிற்சிகள் அளிக்கப்படும். யூ–டியூப் குறியீடுகள் அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தின் சார்பில் இயக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் வழியே குடிமைப் பணித் தேர்வு மாணவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படும். தேர்வுக்குரிய காணொளிகள் அதில் பதிவேற்றப்படும். மேலும், அரசு ஊழியர்களுக்கான மேலாண்மை பயிற்சியும் அதன் வழியே அளிக்கப்படும்.

---

**4. கோடை காலப் பயிர்கள் சாகுபடி பரப்பளவு 21.50 சதவீதம் அதிகரிப்பு! பருப்பு வகை சாகுபடியில் தமிழ்நாடு முன்னிலை**

நாட்டில் கோடைகாலப்பயிர்கள் சாகுபடி பரப்பளவு 21.5% அதிகரித்துள்ளது என்று மத்திய வேளாண், உழவர்கள் நலத்துறை தெரிவித்துள்ளது. இதில், அதிக அளவில் பருப்பு வகைகள் சாகுபடி செய்யும் மாநிலங்களில் தமிழகம் முன்னிலையில் உள்ளது என்றும் வேளாண்துறை தெரிவித்துள்ளது.

கரோனா தொற்றையொட்டி நாட்டின் வளர்ச்சி விகிதம் பல்வேறு துறைகளில் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால், வேளாண் துறை வளர்ச்சியில் பின்னடைவு ஏதும் ஏற்படவில்லை. விவசாயிகளின் கடின உழைப்போடு மத்திய – மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த முயற்சிகளால் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக கோடைகாலப்பயிர்கள் சாகுபடிப் பரப்பளவு அதிகரித்துள்ளதாக மத்திய வேளாண் துறை தெரிவித்துள்ளது.

**இது தொடர்பாக மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை கூறியுள்ளதாவது:** நாட்டில் கோடைகாலப்பயிர்களான பருப்பு வகைகள், தானியங்கள், எண்ணெய் வித்துகள் போன்றவற்றை அறிவியல் ரீதியாக சாகுபடி செய்வதற்கான நடவடிக்கைகளை மத்திய வேளாண்துறை எடுத்தது. இதன் விளைவாக ஏப்.23ஆம் தேதி வரையில் நாட்டில் 73.76 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் கோடைகாலப்பயிர்கள் சாகுபடி செய்யப்ப–ட்டுள்ளன. இது சுமார் 21.5 சதவீதம் அதிகமாகும். கடந்த ஆண்டு இது 60.67 இலட்சம் ஹெக்டேராக இருந்தது.

**பருப்பு வகைகள்:** இதில், பருப்பு வகைகள் சாகுபடிப் பரப்பு இரு மடங்காக உயர்ந்துள்ளது. பருப்பு வகைகள் சுமார் 6.45 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. இது இந்த ஆண்டு 12.75 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இதில் தமிழகம் முன்னிலையில் உள்ளது. தமிழகம் 2.12 லட்சம் ஹெக்டேருக்கு மேலாக பருப்பு வகைகளை சாகுபடி செய்து முன்னனி மாநிலமாக திகழ்கிறது. மேலும், மத்திய பிரதேசம், மேற்கு வங்கம், உத்தர பிரதேசம், குஜராத் உள்பட 8 மாநிலங்களில் அதிக அளவில் பருப்பு வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன.

**எண்ணெய் வித்துகள்:** நாட்டில் எண்ணெய் வித்துகள் சாகுபடி 9.03 இலட்சம் ஹெக்டேரிலிருந்து 10.45 இலட்சம் ஹெக்டேராக (16 சதவீதம்) அதிகரித்துள்ளது. இதில் முன்னிலை பட்டியலில் உள்ள 8 மாநிலங்களில் தமிழகம் ஆறாவது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு 33.82 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இது இந்த ஆண்டு 39.10 இலட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. குறுவை நெல் சாகுபடியில் மேற்கு வங்கம், தெலங்கானா, கர்நாடகம் ஆகியவை முன்னிலையில் உள்ளது. இந்த வகையில் தமிழகம் ஏழாவது இடத்தில் உள்ளது.

கோடைகாலப்பயிர்கள் சாகுபடி பரப்பளவு அதிகரிப்பால் கூடுதல் வருவாயு–ம், வேலைவாய்ப்புகளும் கிடைக்கின்றன. மேலும், விவசாயிகளுக்கு வேளாண்துறை சார்பில் கோடைகாலப்பயிர்கள் சாகுபடிக்கான பயிற்சிக–ளும் அளிக்கப்படுகின்றன. இந்தப்பயிற்சி ஜனவரி மாதம் நடைபெறுகிறது.

பயிர்சாகுடி பரப்பளவு அதிரிக்கப்படுவதால், உணவு தானியங்களின் கூடுத–ல் தேவையும், கால்நடைகளுக்கான உணவுத்தேவையும் பூர்த்தி செய்ய–ப்படுகின்றன. பயிர் சாகுபடியில் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவதற்–கும் விவசாயிகளுக்கு போதிய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது என்றும் மத்திய வேளாண் துறை தெரிவித்துள்ளது.

**ஏற்றுமதி அதிகரிப்பு**

நாட்டில் தற்போது நிலவும் நோய்த்தொற்று காலகட்டத்தில், வேளாண் பொருள்களின் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. 2020 ஏப்ரல் முதல் 2021 பிப்ரவரி வரையிலான காலத்தில் ₹2.74 லட்ச கோடியளவுக்கு வேளாண் மற்றும் வேளாண்சார்ந்த பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

சென்ற ஆண்டில் வேளாண் பொருள்கள் ஏற்றுமதி ₹2.31 லட்ச கோடியாக இருந்தது. கோதுமை, தானியங்கள், அரிசி, சோயா, சர்க்கரை, பருத்தி போ–ன்றவை ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களில் முக்கியமானவையாகும். 2020–21'இல் கோதுமை ₹3,283 கோடி, தானிய வகைகள் ₹4,542 கோடி, அரிசி ₹30,277 கோடி அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கு 50,000 மெட்ரிக் டன், லெபனானுக்கு 40,000 மெட் –ரிக் டன் கோதுமையை NABARD நிறுவனம் ஏற்றுமதி செய்தது என்று வேளாண் துறை தெரிவித்துள்ளது.

---

**5. NASAஉடன் இணைந்து 4 விண்வெளி வீரர்களை விண்ணுக்கு அனுப்பும் ஸ்பேஸ் X**

அமெரிக்கா, ரஷியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை அமைத்து உள்ளன. அங்கு அமெரிக்கா மற்றும் ரஷியாவைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் தங்கியிருந்து ஆய்வு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

6 மாதத்துக்கு ஒருமுறை என்கிற வகையில் சுழற்சிமுறையில் விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்பப்படுகிறார்கள். விண்வெளி வீரர்களை சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்புவதற் –காக அமெரிக்காவின் அரசு விண்வெளி ஆய்வு நிறுவனமான NASA, ஸ்பேஸ் X என்னும் தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

இதற்காக ஸ்பேஸ் X நிறுவனம் குரூ டிராகன் விண்கலத்துடன் கூடிய பால்கன் 9 இரக ஏவுகலத்தை தயாரித்துள்ளது. கடந்த ஆண்டு மே மாதம் 2 வீரர்களும், நவம்பர் மாதம் 4 வீரர்களும் ஸ்பேஸ் X ஏவுகலம்மூலம் சர்வதேச விண்வெளி ஆய்வு மையம் சென்றனர். நாசாவும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமும் இணைந்து மூன்றாவது முறையாக விண்வெளி வீரர்களை சர்வதேச விண்வெளி மையத்திற்கு அனுப்பவுள்ளது.

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தில் பயிற்சி பெற்ற தாமஸ் பெஸ்கெட், மேகன் மெக் ஆர்தர், NASA காமண்டர் ஷேன் கிம்பரோ மற்றும் ஜப்பானை சேர்ந்த விண்வெளி வீரரான அகிஹிகோ ஹோஷைட் ஆகிய 4 பேரும் ஏப்.22ஆம் தேதி புளோரிடா மாகாணத்திலுள்ள கென்னடி விண்வெளி ஆய்வு மையத் –திலிருந்து ஏவப்படும் பால்கன் 9 ஏவுகலத்தில் பறக்கவுள்ளனர். இவர்கள் ஆறுமாதகாலம் அங்கிருந்து ஆய்வுகளை மேற்கொள்வர்.

---

**1. "மரண தண்டனை குறித்த உலகளாவிய ஆய்வு" அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ) ILO

**ஆ) பன்னாட்டு மன்னிப்பு அவை ☑**

இ) NHRC

ஈ) பன்னாட்டு நீதிமன்றம்

✓ பன்னாட்டு மன்னிப்பு அவை தனது வருடாந்திர அறிக்கையான "மரண தண்டனை குறித்த உலகளாவிய ஆய்வு" என்பதை வெளியிட்டுள்ளது.

✓ இந்த அறிக்கையின்படி, கடந்த 2020ஆம் ஆண்டில் உலகளாவிய மரண தண்டனைகளின் எண்ணிக்கையில் ஒட்டுமொத்தமாக சரிவு காணப்படுகிறது. ஆனால் சில நாடுகள் மரணதண்டனைகளை அதிகரித்துள்ளன. இந்த அறிக்கையின்படி, சீனா, உலகில் அதிகம் மரணதண்டனை விதிக்கும் நாடாக கருதப்படுகிறது.

---

**2. தொடங்கிடு இந்தியா விதை நிதியத்துக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?**

அ) ₹145 கோடி

ஆ) ₹500 கோடி

**இ) ₹945 கோடி ☑**

ஈ) ₹2000 கோடி

✓ தொடங்கிடு இந்தியா விதை நிதியத்தை மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் அதிகாரப்பூர்வமாக வெளியிட்டார். இந்த நிதியத்துக்காக ₹945 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✓ இதன்மூலம், நாட்டில், 3600'க்கும் மேற்பட்ட துளிர் நிறுவனங்களுக்கு நன்மை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இது, அடுக்கு-2 மற்றும் 3 நகரங்களில் துளிர் நிறுவன சூழலமைப்பை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**3. ஜெகனண்ணா வித்யா தீவேனா திட்டம் செயல்படுத்தப்படுகிற மாநிலம் எது?**

அ) தெலங்கானா



**ஆ) ஆந்திர பிரதேசம் ☑**

இ) ஒடிஸா

ஈ) கர்நாடகா

✓ ஆந்திர பிரதேச மாநில அரசு ஜெகனண்ணா வித்யா தீவேனா திட்டம் என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன்கீழ், மாணவர்களுக்கு உயர்கல்வியைத் தொடர நிதியுதவி வழங்கப்படுகிறது. அண்மையில், அம்மாநில முதலமைச்சர் YS ஜெகன் மோகன் ரெட்டி, 10.88 இலட்சம் தாய்மார்களின் வங்கிக் கணக்குகளுக்கு, இந்தத் திட்டத்தின்கீழ் முதல் தவணை கல்வி கட்டணத்தை வைப்பு வைத்தார்.

---

**4. பன்னாட்டு எரிசக்தி முகமையின் தலைமையிடம் அமைந்துள்ள இடம் எது?**

அ) வாஷிங்டன்

ஆ) ஜெனீவா

**இ) பாரிஸ் ☑**

ஈ) புது தில்லி

✓ பிரான்ஸின் பாரிஸை தலைமையிடமாகக்கொண்ட பன்னாட்டு எரிசக்தி முகமை, அண்மையில் அறிக்கையொன்றை வெளியிட்டது. அது, உலகெங்கிலும் எரிசக்தி தொடர்பான கரியமிலவாயு ($CO_2$) உமிழ்வு, 2021ஆம் ஆண்டில் சுமார் 1.5 பில்லியன் டன் அளவிற்கு உயர்ந்துள்ளதாக கூறுகிறது. 2010ஆம் ஆண்டிற்குப்பிறகு கரியமிலவாயு உமிழ்வின் மிகப்பெரிய அதிகரிப்பாக இது கருதப்படுகிறது.

---

**5. இந்தியாவின் முதல் 'ஆக்ஸிஜன் எக்ஸ்பிரஸ்', எந்த மாநிலத்திற்கு ஆக்ஸிஜனைக் கொண்டுசென்றது?**

அ) உத்தர பிரதேசம்

**ஆ) மகாராஷ்டிரா ☑**

இ) அஸ்ஸாம்

ஈ) ஹரியானா



✓ நாட்டின் முதல் 'ஆக்ஸிஜன் எக்ஸ்பிரஸ்', மகாராஷ்டிரா மாநிலத்திற்கு ஆக்ஸிஜனை வழங்குவதற்காக ஆந்திர மாநிலத்திலிருந்து புறப்பட்டுச் சென்றது. COVID தொற்றுநோயால் மகாராஷ்டிர மாநிலத்தில் திடீரென ஆக்ஸிஜன் தேவை அதிகரித்ததை தொடர்ந்து மத்திய இரயில்வேயால் இயக்கப்படும் Ro-Ro (roll-on, roll-off) சேவை, விசாகப்பட்டினம் எஃகு ஆலையிலிருந்து ஆக்ஸிஜனை எடுத்துச்சென்றது.

---

**6. "2020ஆம் ஆண்டில் உலகளாவிய காலநிலையின் நிலை" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ) உலக வங்கி

ஆ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

இ) ஆசிய வளர்ச்சி வங்கி

**ஈ) ஐக்கிய நாடுகள் அவை ☑**

✓ ஐநா அவை, கடந்த 2020ஆம் ஆண்டிற்கான உலகளாவிய காலநிலை அறிக்கையை வெளியிட்டுள்ளது. கடந்த ஆண்டு இந்தியா-வங்கதேசம் எல்லையில் நிலச்சரிவை ஏற்படுத்திய ஆம்பன் சூறாவளி, வட இந்தியப் பெருங்கடலில் பதிவான மதிப்புமிக்க வெப்பமண்டல சூறாவளி என்று அவ்வறிக்கை கூறியுள்ளது. இது பாதிக்கப்பட்ட நாடுகளில் 14 பில்லியன் டாலர் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது.

---

**7. உலக பொருளாதார மன்றத்தின் உலகளாவிய 'ஆற்றல் மாற்றம் குறியீட்டில்' இந்தியாவின் தரநிலை என்ன?**

**அ) 74 ☑**

ஆ) 84

இ) 94

ஈ) 104

✓ உலக பொருளாதார மன்றம் சமீபத்தில் உலகளாவிய 'ஆற்றல் மாற்றம் குறியீட்டை' வெளியிட்டது. நாடுகளின் எரிசக்தி அமைப்புகளின் தற்போதைய செயல்திறன் மற்றும் பாதுகாப்பான மற்றும் நிலையான எரிசக்தி அமைப்புகளுக்கு மாறுவதற்கான அவற்றின் தயார்நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தக்குறியீடு 115 பொருளாதாரங்களை தரவரிசைப்படுத்தியுள்ளது. முந்தைய ஆண்டைவிட இந்தியா இரு இடங்கள் முன்னேறி 74ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. மேலும், அனைத்து முக்கிய அளவுருக்களிலும் இந்தியா முன்னேறியுள்ளது.

✓ ஆற்றல் மாற்றம் குறியீட்டில் தொடர்ச்சியாக 3ஆவது ஆண்டாக சுவீடன் முதலிடத்தில் உள்ளது. அடுத்தடுத்த இடங்களில் சுவிச்சர்லாந்து மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

---

**8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, FACT கிளர்ச்சிக் குழுவுடன் தொடர்புடைய நாடு எது?**

அ) சூடான்



**ஆ) சாட் ☑**

இ) ஆப்கானிஸ்தான்

ஈ) நைஜீரியா

✓ FACT கிளர்ச்சிக் குழுவானது 2016ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அதிபர் இட்ரிஸ் டெபியை பதவியிலிருந்து தூக்கியெறியும் நோக்கத்துடன் இந்தக்குழு சமீபத்தில் சாட் நகருக்குள் நுழைந்ததாகக் கூறப்படுகிறது. டெபி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட ஒருநாள் கழித்து, கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போரின்போது ஏற்பட்ட காயங்களால் டெபி இறந்துவிட்டதாக அந்நாட்டு இராணுவம் அறிவித்தது.

---

**9. 'காஸ்மிக் ரோஸ்' வடிவத்திலான அளவளாவும் விண்மீன் திரள் 'Arp 273'இன் படத்தை வெளியிட்ட விண்வெளி நிறுவனம் எது?**

அ) ISRO



ஆ) JAXA

இ) ROSCOSMOS

**ஈ) NASA ☑**

✓ அண்மையில் NASA, 'காஸ்மிக் ரோஸ்' வடிவத்திலான அளவளாவும் விண்மீன் திரளான 'Arp 273'இன் நிழற்படத்தை வெளியிட்டுள்ளது.

- ✓ இந்த நிழற்படம், NASA'இன் ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியின் அதிகாரப்பூர்வ இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிரப்பட்டுள்ளது. இந்த நிழற் படத்தில், சுருள் வடிவ விண்மீன் திரள்களின் குழு, ரோஜாவை ஒத்த வடிவத்தை உருவாக்குகிறது. விண்மீன் திரள்களாலான இந்த அமைப்பு ஆண்ட்ரோமெடா பேரடையிலிருந்து சுமார் 300 மில்லியன் ஒளியாண் -டுகள் தொலைவில் அமைந்துள்ளது.

---

**10.** **நடப்பாண்டு (2021) புவி நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Covid and Climate Change

**ஆ) Restore Our Earth ☑**

இ) One Earth

ஈ) Earth is our asset




- ✓ ஏப்.22 அன்று உலகம் முழுவதும் புவி நாள் அனுசரிக்கப்படுகிறது. சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு ஆதரவாக உலகம் முழுவதும் கொண்டாடப்படும் ஒரு பன்னாட்டு நிகழ்வாகும் இந்தச் சிறப்பு நாள். நடப்பாண்டு (2021) வரும் இந்நாள், இந்நாளின் 51ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- ✓ "Restore Our Earth" என்பது நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். ஐநா அவை ஏப்ரல்.22'ஐ 'சர்வதேச தாய்பூமி நாள்' என்று அறிவித்துள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மாநில மொழிகளில் புதிய கல்விக் கொள்கை: தமிழ் புறக்கணிப்பு**

தேசிய கல்விக்கொள்கையின் உள்ளூர் மொழிகளுக்கான மொழிபெயர்ப் -பை 17 மொழிகளில் மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இதில் தமிழ்மொழிபெயர்ப்பு இடம்பெறவில்லை. தேசிய கல்விக்கொள்கை 1968ஆம் ஆண்டு முதன்முதலில் உருவாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 1976ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தின் 42ஆவது திருத்தத்தின்படி கல்வி பொதுப்பட்டியலில் சேர்க்கப்பட்டது. இதையடுத்து 1986, 1992ஆம் ஆண்டுகளில் கல்விக்கொள்கை திருத்தப்பட்டது.

அதன்பின்னர் கடந்த 2016ஆம் ஆண்டில் TSR சுப்பிரமணியன் குழு கல்விக் கொள்கையில் சில திருத்தங்கள் செய்து தாக்கல் செய்தது. இதற்கிடையே 2019ஆம் ஆண்டு கஸ்தூரி ரங்கன் கல்விக் குழு தாக்கல் செய்த கல்விக் கொள்கையை அடிப்படையாக வைத்து கடந்த 2020ஆம் ஆண்டில் புதிய கல்விக்கொள்கை உருவாக்கப்பட்டது. இதற்கு மத்திய அமைச்சரவை, கடந்த ஆண்டு ஜூலை 29ஆம் தேதி ஒப்புதல் அளித்தது. இது தற்போது நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

புதிய கல்விக்கொள்கையின்படி 10+2 என்ற பள்ளிப்பாடமுறை மாற்றப்பட் -டு, 5+3+3+4 என்ற அடிப்படையில் 3 முதல் 8 வயது, 8 முதல் 11 வயது, 11 முதல் 14 வயது, மற்றும் 14–18 வயது ஆகிய மாணவர்களுக்காக பாடமு -றை மாற்றப்படும். மாணவர்களுக்குக் குறைந்தபட்சம் ஐந்தாம் வகுப்பு வரையில், தாய்மொழி, உள்ளூர் மொழி, பிராந்திய மொழி, பயிற்று மொழியாக இருக்க வேண்டும்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி பயில விரும்பும் மாணவர்களுக் -கு பொதுவான நுழைவுத்தேர்வு நடத்தப்படும். மாணவர்களின் பள்ளிப் பாடங்கள் அளவு குறைக்கப்படும். ஆறாம் வகுப்பிலிருந்து மாணவர்கள் தொழிற்கல்வி கற்க ஊக்கப்படுத்தப்படுவார்கள் என்பன உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இதில் கூறப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் ஆங்கிலம் மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளில் மட்டுமே தேசிய கல்விக்கொள்கை வெளியிடப்பட்டது. இதற்கான பிராந்திய மொழிபெயர்ப்பு -கள் வெளியிடப்படும் என்று மத்திய அரசு தெரிவித்திருந்த நிலையில், தற்போது 17 பிராந்திய மொழிகளில் கல்விக்கொள்கை மொழிபெயர்ப்பு வெளியாகியுள்ளது. கன்னடம், மலையாளம், தெலுங்கு, கொங்கணி, குஜராத்தி, காஷ்மீரி, நேபாளி, ஒடியா, அசாமி, பெங்காலி, போடோ, மராத்தி, பஞ்சாபி, டோக்ரி, மைதிலி, மணிப்புரி, சந்தாலி ஆகிய 17 மொழிகளில் தேசிய கல்விக்கொள்கை மொழிபெயர்க்கப்பட்டு – 2020 என்ற இணையதளத்தில் வெளியாகியுள்ளது. எனினும் இதில் தமிழ் மொழிக்கா -ன மொழிபெயர்ப்பு இடம்பெறவில்லை.

புதிய தேசிய கல்விக்கொள்கையை அமல்படுத்த தமிழகத்தில் கடுமையா -ன எதிர்ப்புகள் இருந்துவரும் சூழலில் தற்போது அதன் மொழிபெயர்ப்பில் கூட தமிழ்மொழி இடம்பெறாதது சர்ச்சையை ஏற்படுத்துவதாக அமைந்துள் -ளது. இதற்கு தமிழ் ஆர்வலா'கள், கல்வியாளர்கள் கண்டனம் தெரிவித்து -ள்ளனர். இதுகுறித்து மத்திய கல்வி அமைச்சகம் உரிய நடவடிக்கை எடுத்து தமிழ் மொழியிலும் தேசிய கல்விக்கொள்கை வெளியிடப்பட வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

---

**2. உச்சநீதிமன்ற புதிய தலைமை நீதிபதியாக NV ரமணா பதவியேற்பு**

உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக N V ரமணா பொறுப்பேற்றுக் கொண்டார். உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த போப்டேவின் பதவிக்காலம் முடிவடைந்த நிலையில், N V ரமணா பொறுப்பேற்றார்.

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ரமணா, ஆந்திர உயர்நீதிமன்றம், மத்திய மற்றும் மாநில நிர்வாக தீர்ப்பாயங்களில் பணியாற்றியுள்ளார். மேலும், கடந்த 2000ஆம் ஆண்டில் ஆந்திர உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டார். இவருக்கு குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். அடுத்தாண்டு ஆக.26 வரை ரமணா உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாகச் செயல்படுவார்.

---

**3. கரோனா தடுப்பூசி, ஆக்சிஜனுக்கு சுங்க வரி விலக்கு: மத்திய அரசு**

நாட்டில் கரோனா பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், கரோனா தடுப்பூசி, மருத்துவ ஆக்சிஜன் மற்றும் கரோனா சிகிச்சை தொடர்பான உபகரணங்களுக்கு சுங்க வரி விதிப்பிலிருந்து மத்திய அரசு விலக்களித்தது. நாட்டில் ஆக்சிஜன் கையிருப்பை அதிகரிப்பது தொடர்பாக பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**இதுகுறித்து அரசு செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:** அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ஆக்சிஜன் மற்றும் ஆக்சிஜன் தொடர்பான உபகரணங்களுக்கு மும்மாத காலத்துக்கு அடிப்படை சுங்க வரி மற்றும் சுகாதார வரியிலிருந்து முழு விலக்கு அளிப்பது என பிரதமர் தலைமையிலான கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இம்முடிவு உடனடியா -க நடைமுறைக்கு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுபோல, இறக்குமதி செய்யப்படும் கரோனா தடுப்பூசிக்கான சுங்க வரி -யையும் மும்மாத காலத்துக்கு ரத்து செய்வது என்று முடிவெடுக்கப்பட்டு, அந்த நடைமுறையும் உடனடியாக அமலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, மீட்டருடன் கூடிய ஆக்சிஜன் செலுத்தும் கருவி, டியூப் மற்றும் இணைப்பு உபகரணங்கள், ஆக்சிஜன் குப்பி, வாயு நிரப்பும் உபகரணம், சேமிப்பு டேங்குகள், சிலிண்டர்கள், கிரையோஜெனிக் சிலிண்டர் மற்றும் டேங்குகள் உள்பட ஆக்சிஜன் தொட -ர்பான 16 உபகரணங்களுக்கு சுங்க வரி மற்றும் சுகாதார வரி விதிப்பில் இருந்து 3 மாதங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் செயற்கை சுவாசக் கருவி (வென்டிலேட்டர்) மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற உபகரணங்களுக்கு இறக்குமதி வரி மற்றும் சுகாதார வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்படும் தடுப்பூசிகளுக்கு தற்போது 10% சுங்க வரி அல்லது இறக்குமதி வரியை மத்திய அரசு விதித்து வருகிறது. வரும் மே.1 தேதி முதல் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்தப்படவுள்ள நிலையில், மத்திய அரசு அறிவித்திருக்கும் இந்த வரி விலக்கு வெளிநாட்டு தடுப்பூசிகள் குறைந்த விலையில் கிடைப்பதையும் தட்டுப்பாடின்றி தடுப்பூசி கிடைப்பதையும் உறுதிப்படுத்தும்.

அண்மையில், மத்திய அரசு அவசர கால பயன்பாட்டுக்கு அனுமதி அளித்த ரஷியாவின் ஸ்புட்னிக்–வி தடுப்பூசிகள் இம்மாத இறுதியில் அல்லது அடுத்தமாதம் இந்தியா வந்தடையவுள்ளன. அதுபோல மாடர்னா, ஜான்சன் & ஜான்சன் உள்ளிட்ட தடுப்பூசி நிறுவனங்களும் அவற்றின் கரோனா தடுப்பூசிகளை இந்தியாவில் அவசரகால பயன்பாட்டுக்கு அனுமதிக்க கோரிக்கை விடுத்துள்ளன. இத்தகையச் சூழலில் மத்திய அரசு இந்த வரி விலக்கை அறிவித்திருக்கிறது.

முன்னதாக, கரோனா பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சைக்கு அத்தியா -வசியமான ரெம்டெசிவிர் மருந்துக்கு இறக்குமதி வரி விலக்கை மத்திய அரசு அளித்தது. அந்த மருந்து ஏற்றுமதிக்கும் தடை விதித்தது.

---

**4. இந்தியா–ஸ்வீடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டத்தில் இணைந்தது அமெரிக்கா**

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக இந்தியாவும் ஸ்வீடனும் ஒருங்கிணை -ந்து செயல்படுத்திவரும் திட்டத்தில் அமெரிக்கா இணைந்தது.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் 'தொழிற்துறை மாற்றத்துக்கான தலைமைத்துவ குழு' (லீட் இட்) என்ற திட்டத்தை இந்தியாவும் ஸ்வீடனும்

இணைந்து செயல்படுத்தி வருகின்றன. அண்மையில் அமெரிக்கா சார்பில் நடைபெற்ற பருவகாலமாற்ற மாநாட்டில், லீட் இட் திட்டத்தில் இணைவதற்கு அந்நாட்டு அதிபர் ஜோ பைடன் விருப்பம் தெரிவித்திருந்தார். இந்தத் திட்டத்தின் வாயிலாக, சுற்றுச்சூழல் பாதுகாப்பு விவகாரத்தில் இந்தியாவுடன் இணைந்து செயல்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

**5. பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களின் ஏற்றுமதி 26% அதிகரிப்பு: மத்திய அரசு**

இந்தியாவின் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி 2020-21 நிதியாண்டின் ஏப்ரல்-பிப்ரவரிக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் 26.51% அதிகரித்துள்ளது என மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதுகுறித்து வர்த்தக அமைச்சகம் வெளியிட்ட புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளதாவது: கரோனா பேரிடர் தொடா்பான பல்வேறு சவால்களுக்கிடையிலும் 2020-21ஆம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான 11 மாத காலகட்டத்தில் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களின் ஏற்றுமதி 26.51% அதிகரித்து ₹43,798 கோடியை எட்டியுள்ளது.

குறிப்பாக, பதப்படுத்தப்பட்ட காய்கறிகள், பருப்பு வகைகள், பழங்கள், பழச்சாறுகள், நிலக்கடலை, ஆல்கஹால் பானங்கள், பிண்ணாக்கு, அரவைப் பொருள்கள் உள்ளிட்டவற்றின் ஏற்றுமதி சிறப்பான அளவில் மேம்பட்டது. பதப்படுத்தப்பட்ட காய்கறி மற்றும் ஆல்கஹால் பானங்கள் போன்ற மதிப்பு கூட்டப்பட்ட பொருள்களின் ஏற்றுமதி ஏப்ரல்-பிப்ரவரி காலகட்டத்தில் 40 சதவீதத்துக்கும் மேல் வளர்ச்சி கண்டுள்ளது என அந்தப் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**6. ஆக்சிஜன் தேவைக்கு 104-ஐ தொடர்பு கொள்ளலாம் - தமிழ்நாடு அரசு அறிவிப்பு!**

தமிழ்நாட்டு மருத்துவமனைகள் ஆக்சிஜன் தேவைக்கு 104 என்ற அவசர எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. மருத்துவ ஆக்சிஜன் வழங்கல் தொடர்பான சிக்கல்களைத் தீர்க்க, மருந்து கட்டுப்பாட்டு இயக்குநரின்கீழ் 24 மணி நேரமும் இயங்கும் அழைப்பு மையத்தை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது.

**7. புதிதாக 551 ஆக்ஸிஜன் உற்பத்தி மையம் அமைக்க பிரதமர் உத்தரவு**

நாடு முழுவதும் புதிதாக 551 ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையங்களை அமைக்க பிரதமர் உத்தரவிட்டுள்ளார். நாட்டில் கரோனா இரண்டாமலை வேகமாக பரவிவரும் நிலையில், ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் பலர் உயிரிழந்து வருகின்றனர். இந்நிலையில், PM கேர்ஸ் நிதியிலிருந்து நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகளிலும் மொத்தம் 551 ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையம் அமைக்க மோடி உத்தரவிட்டுள்ளார். மேலும், இந்த நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் ஆக்ஸிஜன் அந்த மாவட்டத்தில் உள்ள பிற மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

**8.'அஸ்ட்ரோசாட்' செயற்கைக்கோள் தரவுகளைப்பெற விண்ணப்பிக்கலாம்**

நாடு முழுவதும் உள்ள வானியலாளர்கள், ஆர்வலர்கள் 'அஸ்ட்ரோசாட்' செயற்கைக்கோளின் தரவுகளைப் பெற மே.31'க்குள் விண்ணப்பிக்கலாம் என்றும் தேர்வாகும் நபர்களுக்கு தகவல்களுடன் உரிய நிதியுதவியும் வழங்கப்படும் என்றும் ISRO அறிவித்துள்ளது. ISRO சார்பில் வானியல் ஆய்வுக்காக PSLV ஏவுகலம்மூலம் அஸ்ட்ரோசாட் செயற்கைக்கோள் ஆந்திர பிரதேச மாநிலத்துக்குட்பட்ட ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து 2015ஆம் ஆண்டு செப்.28'இல் விண்ணில் செலுத்தப்பட்டது. விண்வெளியில் உள்ள புற ஊதாக் கதிர்கள், அங்கு பரவும் X கதிர்கள் இயக்கம், நட்சத்திரங்களின் செயல்பாடு ஆகியவற்றை ஆய்வுசெய்ய அஸ்ட்ரோசாட் பயன்படுத்தப்படுகிறது. 2018ஆம் ஆண்டு முதல் அஸ்ட்ரோசாட் அனுப்பிய படங்கள், தரவுகள் உள்ளிட்ட விவரங்களை பொதுவெளியில் ISRO வெளியிட்டு வருகிறது.

இவை பல்வேறு முக்கிய அறிவியல் ஆய்வுகளுக்குப் பயனுள்ளதாக அமைந்தது. அஸ்ட்ரோசாட் அனுப்பிய படங்கள் மூலம், பூமியில் இருந்து 9.3 பில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் நட்சத்திரக் கூட்டங்கள் இருப்பது கடந்த ஆண்டு கண்டறியப்பட்டது. இந்த நிலையில் அஸ்ட்ரோசாட்டின் தரவுகளைப் பயன்படுத்தி ஆய்வு செய்வதற்கு ISRO மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது. இது தொடர்பாக ISRO வெளியிட்டுள்ள அறிவிப்பில், 'நாடு முழுவதும் உள்ள வானியல் ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் அஸ்ட்ரோசாட் செயற்கைக்கோளின் தரவுகளைக்கொண்டு ஆய்வுகளை மேற்கொள்ளலாம். விருப்பம் உள்ளவர்கள் தங்கள் திட்ட ஆய்வறிக்கை விவரங்களை மே 31'க்குள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். இதில் தேர்வாகும் நபா்களுக்கு தகவல்களுடன் உரிய நிதியுதவியும் வழங்கப்படும்.

**9. கோத்தகிரியிலிருந்து ஐக்கிய நாடுகள் சபையில் ஒலித்த சிறுவன் குரல்**

கோத்தகிரியிலுள்ள குழந்தை உரிமை ஆர்வலர் பி ராகுல், ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகளின் உரிமைகள் மாநாட்டின் முதல் இணையவழி கருத்தரங்கில் பங்கேற்று பெருமை சேர்த்துள்ளார். கோத்தகிரி அருகேயுள்ள காக்காசோலை கிராமத்தில் வசித்து வருபவர் ராகுல் (13).

இவர் கோத்தகிரி அருகேயுள்ள கேர்கொம்பை அரசு உயர்நிலைப்பள்ளியில் ஏழாம் வகுப்பு படித்து வருகிறார். தனது ஏழாவது வயதிலிருந்தே சுற்றுச்சூழல், குழந்தைகளின் உரிமை உள்ளிட்டவற்றின்மீது அதிக அக்கறை கொண்டவராவார். இதன் காரணமாக கேர் அறக்கட்டளையின் சார்பில் காக்காசோலை கிராமத்தில் நடத்தப்படும் குழந்தைகள் செயல்பாட்டு மையத்தில் இணைந்து வாழ்வியல் கல்வி, குழந்தைகளின் உரிமை கல்வி மற்றும் சுற்றுச்சூழல் கல்வி ஆகிய பிரிவுகளில் இவருக்கு பல்வேறு சிறப்பு பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

இதில் சிறப்பாகப் பங்கேற்ற ராகுல் கேர் அறக்கட்டளையுடன் இணைந்து மரக்கன்றுகள் நடுவது, விதைப்பந்துகள் தயாரிப்பது, நெகிழி பைகளுக்கு எதிரான பிரசாரம் உள்ளிட்டவற்றில் தன்னை ஈடுபடுத்தி வந்துள்ளார். இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபை சார்பில் அண்மையில் நடத்தப்பட்ட இணையவழி கருத்தரங்கில் இந்தியாவின் சார்பில் இவர் பங்கேற்றுள்ளார். தன்னை 'வனங்களின் சகோதரர்' என அழைத்துக்கொள்ளும் இவர், சுற்றுச்சூழல் மற்றும் குழந்தை உரிமைகள் என்ற தலைப்பில் இந்தியாவிலிருந்து பங்கேற்ற ஒரே சிறுவன் ஆவார்.

இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் சுற்றுச்சூழல் உரிமைகள் குறித்த குழந்தைகளின் கோரிக்கைகளை அவர் முன்வைத்துள்ளார். இந்தக் கருத்தரங்கில் ஐநா சபையின் குழந்தைகள் நல உரிமைக்குரல் உறுப்பினர்கள், குழுவின் முந்தைய தலைவர்கள், சர்வதேச குழந்தைகள் உரிமை நல அமைப்புகள் பங்கேற்று, பருவநிலை மாற்றம் குழந்தைகளின் வாழ்க்கையை எவ்வாறு கடுமையாக பாதிக்கிறது என்பது குறித்தும் விவாதித்துள்ளனர். இக்கருத்தரங்கில் அரசுகளும், சமூகங்களும் தூய்மையான சூழலுக்கான உரிமையை வழங்கவும், அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பாகவும் மாற்ற வேண்டிய நேரம் இதுவென ராகுல் வலியுறுத்தியுள்ளார்.

**10. பத்திரிகையாளர்கள் இழந்த சுதந்திரம்!**

சமூக நிகழ்வுகளை மக்களிடம் எடுத்துச் செல்வதில் பத்திரிகையாளர்களுக்கு முக்கிய பங்குண்டு. உண்மை நிகழ்ச்சிகளை மக்களுக்குக்கொண்டு செல்லவேண்டும் என்ற நோக்கில் பத்திரிகைகள் செயல்பட்டு வருகின்றன. பத்திரிகைகள், பத்திரிகையாளர்களின் செயல்பாட்டுக்கு சுதந்திரம் மிகவும் முக்கியமானது. எந்தவிதத் தலையீடும் இல்லாமல் அவர்கள் செயல்பட்டால்தான் உண்மையான தகவல்களை மக்கள் அறிந்துகொள்ள முடியும். பத்திரிகையாளர்களின் சுதந்திரமான செயல்பாட்டுக்கு இந்திய அரசமைப்புச் சட்டமே வழிகோலுகிறது.

அரசமைப்புச் சட்டத்தின் 19 (1) (ஏ) பிரிவானது, சுதந்திரமாகக் கருத்து வெளியிடும் உரிமையை வழங்குகிறது. அதுவே, பத்திரிகையாளர்களின் சுதந்திரமான செயல்பாட்டுக்கு அடிப்படையாக உள்ளது.

தற்போதைய காலகட்டத்தில் பத்திரிகையாளர்கள் மீதும் பத்திரிகை நிறுவனங்கள் மீதுமான வன்முறை அதிகரித்துள்ளது. அவர்கள் சுதந்திரமாகச் செயல்படுவதை பயங்கரவாத அமைப்புகள், தீவிரவாத அமைப்புகள் உள்ளிட்டவை தடுக்க முயற்சிக்கின்றன. சில நாட்டு அரசுகளே பத்திரிகை சுதந்திரத்தைக் கேள்விக்குறியாக்கி வருகின்றன. சில நாடுகளில் பத்திரிகையாளர்கள் கொல்லப்படுவதும் நிகழ்கிறது.

இந்தியாவின் கௌரி லங்கேஷ், சவூதி அரேபியாவின் ஜமால் கஷோகி என அந்தப் பட்டியல் தொடர்ந்து நீண்டு கொண்டே இருக்கிறது. உலக அளவில் கடந்த 2020ஆம் ஆண்டில் மட்டுமே சுமார் 50 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதாக 'எல்லைகளற்ற நிருபர்கள்' அமைப்பு தெரிவிக்கிறது.

நடப்பு ஆண்டுக்கான பத்திரிகை சுதந்திரக் குறியீட்டை 'எல்லைகளற்ற நிருபர்கள்' அமைப்பு வெளியிட்டுள்ளது. அதில் மொத்தமுள்ள 180 நாடுகளில் நார்வே முதலிடத்தில் உள்ளது. முதல் 4 இடங்களை ஸ்கான்டிநேவியா என்று அறியப்படும் நாடுகள் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியா 142ஆவது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டும் இந்தியா இதே இடத்தில்தான் இருந்தது. கடந்த 2016ஆம் ஆண்டில் 133ஆவது இடத்தில்

இருந்தது. பத்திரிகையாளர்களுக்கு மிகவும் ஆபத்து நிறைந்த நாடுகளில் ஒன்றாக இந்தியாவை அந்த அமைப்பு பட்டியலிட்டுள்ளது.

காவல்துறையினர், அரசியல் செல்வாக்கு கொண்டோர், சில அமைப்புக –ளைச் சேர்ந்தோர் உள்ளிட்டோரிடமிருந்து பத்திரிகையாளர்கள் திட்டமிட் –ட தாக்குதலை அதிகம் எதிர்கொண்டு வருவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஜனநாயகம் தழைப்பதற்கும் நாட்டின் சுதந்திரம் நிலைப்ப –தற்கும் பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களும் எந்தவிதத் தலையீடுமி –ன்றி சுதந்திரமாகச் செயல்படுவது அவசியம் என்பதை அறிஞர்களும் நிபு ணர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

**பத்திரிகை சுதந்திரம் – முதல் ஐந்து நாடுகள்**

1–நார்வே

2–பின்லாந்து

3–ஸ்வீடன்

4–டென்மார்க்

5–கோஸ்டா ரிகா

**பத்திரிகை சுதந்திரம் – கடைசி ஐந்து நாடுகள்**

176–ஜிபூட்டி

177–சீனா

178–துர்க்மெனிஸ்தான்

179–வட கொரியா

180–எரித்ரியா

**1.** **சமீபத்தில் 2021 ஏப்ரலில், S&P குளோபல் மதிப்பீடுகள் வெளியிட்ட அறிக்கையின்படி, நடப்பு 2021ஆம் ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சி முன்கணிப்பு சதவீதம் என்ன?**

அ) 6 சதவீதம்

ஆ) 8 சதவீதம்

**இ) 11 சதவீதம் ☑**

ஈ) 14 சதவீதம்




✓ S & P குளோபல் மதிப்பீடுகள், ஆசிய–பசிபிக் நிதி நிறுவனங்கள் குறித்த தனது அறிக்கையில், நடப்பு நிதியாண்டில் இந்திய பொருளாதாரம் 11 சதவீதமாக வளர்ச்சியடையும் என்று கணித்துள்ளது. அதிகாரப்பூர்வ மதிப்பீடுகளின்படி, 2020–21ஆம் நிதியாண்டில், இந்திய பொருளாதாரம் 8 சதவீத அளவுக்கு சுருங்கும்.

---

**2.** **'COVIRAP' தொழில்நுட்பத்தை உருவாக்கிய நிறுவனம் எது?**

அ) NIT திருச்சிராப்பள்ளி

ஆ) AIIMS

இ) MIT

**ஈ) IIT கரக்பூர் ☑**

✓ கரக்பூர் – இந்திய தொழில்நுட்ப நிறுவனம் தனது சுகாதார தயாரிப்பான 'COVIRAP'ஐ வணிகமயமாக்கியுள்ளது. இது, COVID நோய்த்தொற்றை கண்டறியும் தொழில்நுட்பமாகும். எளிய முறையில், மலிவு கட்டணத்தில் மேற்கொள்ளப்படும் இப்பரிசோதனையின் முடிவுகளை, 45 நிமிடத்தில் திறன்பேசியின் செயலியின் வாயிலாக பெற்றுக்கொள்ளலாம்.

---

**3.** **ஏப்ரல்.1 அன்று எந்த மாநிலத்தின் உதய நாள், 'உத்கல் திவாஸ்' எனக் கொண்டாடப்படுகிறது?**

அ) தெலங்கானா

ஆ) ஆந்திர பிரதேசம்

**இ) ஒடிஸா ☑**

ஈ) கர்நாடகா




✓ இந்திய மாநிலமான ஒடிஸா, 1936 ஏப்ரல்.1 அன்று உருவாக்கப்பட்டது. அதன் மாநில நாள், 'உத்கல் திவாஸ்' என அழைக்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. முந்தைய பீகார் மற்றும் ஒடிஸா மாகாணத்திலிருந்து ஒடிஸா ஒரு தனி மாநிலமாக உருவான நினைவாக, அந்த நாள் கொண்டாடப்படுகிறது.

---

**4.** **உலக ஹோமியோபதி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) ஏப்ரல் 10 ☑**

ஆ) ஏப்ரல் 11

இ) ஏப்ரல் 12

ஈ) ஏப்ரல் 13



✓ ஆண்டுதோறும் ஏப்.10 உலக ஹோமியோபதி நாள் கொண்டாடப்பாடுகி–றது. "Homeopathy– Roadmap for Integrative Medicine" என்பது நடப்பு ஆண்டில் (2021) வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும். ஹோமியோபதி மருத்துவ முறையின் தந்தை என்று அழைக்கப்படும் மருத்துவர் சாமுவேல் ஹேன்மேனின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

---

**5.** **தேசிய பாதுகாப்பான தாய்மைப்பருவ நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) ஏப்ரல் 10

**ஆ) ஏப்ரல் 11 ☑**

இ) ஏப்ரல் 12

ஈ) ஏப்ரல் 13



✓ கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு மகப்பேறு பராமரிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தேசிய பாதுகாப்பான தாய்மைப் பருவ நாள் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்.11 அன்று அனுசரிக்கப்படுகிறது.

✓ இந்தியாவின் பாதுகாப்பான தாய்மைப்பருவத்துக்கான வெண்ணாடா கூட்டணியின் (White Ribbon Alliance for Safe Motherhood, India) ஒரு முன்னெடுப்பாக இந்நாள் கொண்டாடப்பாடுகிறது. "Stay at Home during Coronavirus, keep Mother and Newborn Safe from Coronavirus" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**6.** **ஜாலியன்வாலா பாக் படுகொலை நடந்த ஆண்டு எது?**

**அ) 1919 ☑**

ஆ) 1820

இ) 1819

ஈ) 1857



✓ ஜாலியன்வாலா பாக் படுகொலை (1919): பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அடக்–குமுறைக் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நிராயுதபாணியான மக்கள் அமிர்தசரஸில் உள்ள ஜாலியன்வாலா பாக் என்ற இடத்தில் 1919 ஏப்ரல் 13 அன்று கூடியிருந்தனர். மக்கள் கிளர்ச்சியை அடக்குவதற்காக, ஜெனரல் டயர் தனது துருப்புக்களை முன்னறிவிப்பு ஏதுமின்றி அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்த உத்தரவிட்டான்.

✓ அத்தோட்டத்தில் பிரிட்டிஷ்காரர்களால் நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்த–னமான செயல், வரலாற்றில், ஜலியன்வாலா பாக் படுகொலை (அல்லது அமிர்தசரஸ் படுகொலை) என்று அறியப்பட்டது.

---

**7.** **தேசிய குடிமைப் பணிகள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) ஏப்ரல் 20

**ஆ) ஏப்ரல் 21 ☑**

இ) ஏப்ரல் 22

ஈ) ஏப்ரல் 23




✓ 1947 ஏப்.21 அன்று இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேல், தகுதிகாண் பருவத்திலிருந்த நிர்வாக சேவை அதிகாரிகளின் மத்தியில் உரையாற்றினார். தில்லியின் மெட்கால்ப் மாளிகையில் நடந்தேறிய அவ்வரலாற்றுச் சிறப்புமிக்க உரைநிகழ்த்தலி–ன்போது, அரசு ஊழியர்களை "இந்தியாவின் எஃகு சட்டகம்" என அவர் விவரித்தார். இந்நிகழ்வை நினைவுகூரும் வகையில், நாடு முழுவதும் ஏப்.21 அன்று குடிமைப்பணிகள் நாள் அனுசரிக்கப்படுகிறது.

---

**8.** **தேசிய பஞ்சாயத்து ராஜ் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) ஏப்ரல் 23

**ஆ) ஏப்ரல் 24 ☑**

இ) ஏப்ரல் 25

ஈ) ஏப்ரல் 26




✓ ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல்.24 அன்று பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் தேசிய பஞ்சாயத்து ராஜ் நாள் கொண்டாடப்படுகிறது. உள்ளாட்சிகளை சட்டரீதியாக வலுப்படுத்த 1993ஆம் ஆண்டு இதே நாளில், அரசியலமைப்பு (73ஆவது சட்டதிருத்தம்) சட்டம், 1992 அமலுக்கு கொண்டுவரப்பட்டது.

---


**9.** **உலக நூல் & பதிப்புரிமை நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) ஏப்ரல் 22

**ஆ) ஏப்ரல் 23 ☑**

இ) ஏப்ரல் 24

ஈ) ஏப்ரல் 25




✓ உலக நூல் மற்றும் பதிப்புரிமை நாள் (World Book and Copyright Day) அல்லது உலக நூல் நாள் என்பது வாசித்தல், பதிப்பித்தல் மற்றும் பதிப்புரி–மையூடாக அறிவுசார் சொத்துக்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றை வளர்க்கும் நோக்குடன் ஐநா கல்வி, அறிவியல் & பண்பாட்டு நிறுவனம் ஆண்டுதோறும் ஏப்.23 அன்று நடத்தும் ஒரு நிகழ்வாகும்.

✓ உலக இலக்கியத்துக்கான ஒரு குறியீடாகவே இந்நாள் தேர்வு செய்யப்ப–ட்டதாக UNESCO அறிவித்துள்ளது. 1616ஆம் ஆண்டு இந்நாளிலேயே மிகுவேல் டி செர்வண்டேஸ், வில்லியம் ஷேக்ஸ்பியர், இன்கா டி லா வேகா ஆகியோர் காலமானார்கள்.

- ✓ ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு வசதிகளைக்கொண்ட, அனைத்து நூல்களும் கிடைக்கும் வகையில் ஒரு நூல் தலைநகரத்தை உருவாக்கும் திட்டத்தை கடந்த 2001'இல் UNESCO தொடங்கியது. மேலும் ஒவ்வோர் ஆண்டும் ஒரு நகரத்தை நூல்களின் தலைநகரமாகத் தேர்வு செய்யும். 2021ஆம் ஆண்டுக்கான நூல்களின் தலைநகரமாக ஜார்ஜியா நாட்டின் தலைநகரமான திபிலீசி நகரம் தெரிவாகியுள்ளது.

---

**10. உலக மலேரியா நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) ஏப்ரல் 24

**ஆ) ஏப்ரல் 25 ☑**

இ) ஏப்ரல் 26

ஈ) ஏப்ரல் 27




- ✓ ஆண்டுதோறும் ஏப்.25 அன்று உலக மலேரியா நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "Reaching the 0-malaria target" என்பது நடப்பாண்டில் (2021) வரும் உலக மலேரியா நாளுக்கானக் கருப்பொருளாகும்.
- ✓ உலக நலவாழ்வு அமைப்பின் 2019ஆம் ஆண்டுக்கான அறிக்கையின்படி, இந்தியா, உலகளாவிய மலேரியா பாதிப்புகளில் மூன்று சதவீத பாதிப்புக்கு காரணமாக அமைகிறது. மேலும், 2017ஆம் ஆண்டின் சூழலை ஒப்பிடும்போது, இந்தியா, 49% அளவுக்கு மலேரிய பாதிப்புகளை குறைத்ததோடு அதுசார்ந்த இறப்புகளையும் 50.5% அளவுக்கு குறைத்துள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கொடுமணல் அகழ்வாராய்ச்சியில் இரும்பு உருக்கும் கட்டமைப்பு கண்டுபிடிப்பு**

கொடுமணல் அகழ்வாராய்ச்சியில் மண் அடுப்புகளால் செய்யப்பட்ட இரும்பு உருக்கும் கட்டமைப்பு இருந்ததற்கான தரவுகள் கண்டறியப்பட்டுள்ளன. ஈரோடு மாவட்டம், கொடுமணல் நொய்யல் ஆற்றின் கரையோரம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடத்தில் தமிழக தொல்லியல் துறை மூலம் பத்தாவது முறையாக அகழ்வாராய்ச்சி கடந்த பிப்ரவரி 26ஆம் தேதி தொடங்கியது. தொல்லியல் துறை அகழாய்வுத் திட்ட இயக்குநர் ஜெ ரஞ்சித் தலைமையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**இதுகுறித்து தொல்லியல் நிபுணர்கள் கூறியதாவது:** இப்பகுதியில் 2,400 ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு குடியிருப்புகள், பயன்பாட்டுப் பொருள்கள், நாணயம், மண்பானை ஓடுகள், குறிப்புகள் போன்ற தரவுகள் கிடைத்து வருகின்றன. பல்வேறு பகுதிகளில் நடந்த அகழாய்வில் 1,999 தமிழ் பிராமி எழுத்து ஆவணங்கள் கிடைத்துள்ளன. அதில் 1,000க்கும் மேற்பட்டவை இங்கு கிடைத்தவை. இதன்மூலம் இப்பகுதியில் பொ ஆ மு 400'க்கு முன்பே பண்டமாற்றுகள், அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்கள் கையாளப்பட்டது தெரியவருகிறது.

தற்போதைய அகழாய்வில் கருப்பு, செம்மண் அடர்ந்த இப்பகுதியில் இரும்புக்கான மூலப்பொருள்கள் கிடைத்துள்ளன. அவற்றை எடுத்து கரையோரம் 10'க்கும் மேற்பட்ட மண் அடுப்புகளில் 1,800° செல்சியசுக்கு மேல் சூடுபடுத்தி இரும்பை பிரித்து எடுத்துள்ளனர். இரும்பை உருக்கி, மண் பாத்திரத்தில் சேகரித்து, கத்தி, ஈட்டி உள்ளிட்ட ஆயுதங்கள், ஆணி, கம்பி போன்ற பயன்பாட்டுப் பொருள்கள் செய்ததற்கான அடையாளங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இங்கு தோண்டப்பட்ட 30 குழிகளில் 12'க்கும் மேற்பட்ட குழிகளில் அடுப்பு மூலம் ஆலை போன்று இரும்பு உருக்கியதற்கான அடையாளமும், பிரித்து எடுத்தபின் விட்டுச்செல்லப்பட்ட இரும்புக்கழிவுகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆய்வுதொடரும்போது மேலும் பல தகவல்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும் செம்பு நாணயங்கள், தமிழ் பிராமி எழுத்துகள், பானை ஓடுகள், கல்லறைகள், இரும்பு மூலப்பொருள், கழிவுகள் கிடைத்துள்ளன.

இங்கு வசித்த மக்கள் ஆரம்பத்தில் ஆற்றங்கரையை ஒட்டியும், அதன்பின் பேரழிவுக்குப்பின் உயரமான பகுதிகளிலும் வசித்துள்ளனர். அவா்கள் குடியிருப்புக்கு கிழக்கே கல்லறைகள் அமைத்துள்ளனர். இங்குள்ள கல்லறைகள் பலகை கற்களால் அறை ஏற்படுத்தப்பட்டு, அதில் பெரிய மண் பானைக்குள் உடல்கள் வைக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் நேரடியாக பானைக்குள் எலும்புகள் கிடைத்துள்ளன.

புதைக்கப்பட்டவாறு எலும்பு அமைப்புகள் கிடைக்கவில்லை. இருப்பினும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துக்கு இவற்றை அனுப்பி எந்த காலத்தைச் சேர்ந்த எலும்புகள் எனக் கேட்டுள்ளோம். இந்த அகழாய்வு வரும் ஜூலை வரை தொடர வாய்ப்புள்ளது என்றனர்.

---

**2. மணலூரில் இன்று அகழாய்வு தொடக்கம்**

கீழடியில் நடந்துவரும் ஏழாம்கட்ட அகழாய்வின் ஒருபகுதியாக மணலூரில் அகழாய்வுப்பணிகள் தொடங்குகின்றன. சிவங்கை மாவட்டம் திருபுவனம் அருகேயுள்ள கீழடியில் கடந்த பிப்ரவரி மாதம் 13ஆம் தேதி ஏழாம்கட்ட அகழாய்வுப் பணிகள் தொடங்கின. கீழடி, அகரம், கொந்தகை ஆகிய மூன்று இடங்களில் அகழாய்வு நடந்துவருகிறது. ஆறாம்கட்ட அகழாய்வுப்பணிகள் கீழடி, அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய நான்கு இடங்களிலும் நடந்தன.

ஏழாம்கட்ட அகழாய்வும் மேற்கண்ட நான்கு இடங்களிலும் நடைபெறும் என தொல்லியல்துறை சார்பில் அறிவிக்கப்பட்டது. பணிகள் தொடங்கி இரு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் மணலூரில் மட்டும் அகழாய்வுப் பணிகள் தொடங்கப்படாமல் இருந்தது.

மணலூரில் இடம் தேர்வுசெய்வதில் ஏற்பட்ட குளறுபடி காரணமாக பணிகள் தொடங்கப்படவில்லை. ஆறாம்கட்ட அகழாய்வில் மணலூரில் ஏழு குழிகள் தோண்டப்பட்டு 39 பொருள்கள் மட்டுமே கண்டறியப்பட்டதால் 7 ஆம் கட்ட அகழாய்வில் சரியான இடத்தை தேர்வு செய்வதில் அதிகாரிகள் கவனமாக இருந்தனர். தற்போது மணலூரைச் சேர்ந்த ஜானகி அம்மாள் என்பவரின் 1 ஏக்கர் நிலத்தை அகழாய்வுக்காக தொல்லியல்துறையினர் தேர்வு செய்துள்ளனர்.

மணலூர், அகரம், கழுகேர்கடை உள்ளிட்ட கிராமங்களில் முளைப்பாரி உற்சவம் உள்ளிட்டவைகள் நடைபெறும் போது நிறைவாக மணலூர் முனியாண்டி கோயிலில் முடிவடையும். தற்போது வரை இந்த நிகழ்வு தொடர்வதால் பண்டையகாலத்திற்கும் இம்முளைப்பாரி உற்சவத்துக்கும் தொடர்பு இருக்கலாம் எனக்கருதி மணலூரில் அந்த இடத்தில் அகழாய்வுப் பணியைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

செப்டம்பர் மாதம் மழைக்காலம் தொடங்கிவிடும் என்பதால் அதற்குள் விரைவாக அகழாய்வுப் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கீழடியில் இதுவரை 3 குழிகள் மட்டும் தோண்டப்பட்டு சுடுமண்ணால் செய்யப்பட்ட தாயகட்டை, கல் உழவு கருவி, பானை ஓடுகள் உள்ளிட்டவைகள் கண்டறியப்பட்டுள்ளன. தற்போது மேலும் இரு குழிகள் தோண்டும் பணி தொடங்கியுள்ளது. கொந்தகை, அகரம் ஆகிய இடங்களில் தலா மூன்று குழிகள் தோண்டப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.

---

**3. தமிழில் புதிய கல்விக் கொள்கை வெளியானது**

புதிய கல்விக் கொள்கையின் உள்ளூர் மொழிபெயாப்பு 17 மொழிகளில் வெளியாகி, தமிழில் மட்டும் வெளியிடப்படவில்லை. இதற்கு பல்வேறு தரப்பிலும் கடும் எதிர்ப்பு எழுந்த நிலையில் தமிழ்மொழிபெயர்ப்பை மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ளது. மத்திய அரசின் சார்பில் 2019ஆம் ஆண்டு கஸ்தூரி இரங்கன் கல்விக்குழு தாக்கல்செய்த கல்விக்கொள்கையை அடிப்படையாகக்கொண்டு 2020ஆம் ஆண்டில் புதிய கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டது. இதற்கு மத்திய அமைச்சரவை, கடந்த ஆண்டு ஜூலை 29'இல் ஒப்புதல் அளித்தது.

10+2 என்ற பள்ளிப்பாடமுறை மாற்றப்பட்டு, 5+3+3+4 என்ற அடிப்படையில் 3 முதல் 8 வயது, 8 முதல் 11 வயது, 11 முதல் 14 வயது, 14–18 வயது ஆகிய மாணவர்களுக்காகப் பாடமுறை மாற்றப்படும், மாணவர்களுக்குக் குறைந்தபட்சம் ஐந்தாம் வகுப்பு வரையில், தாய்மொழி, உள்ளூர் மொழி, பிராந்திய மொழி, பயிற்றுமொழியாக இருக்கவேண்டும், பல்கலைகள், உயர்கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்கு பொதுவான நுழைவுத் தேர்வு நடத்தப்படும், மாணவர்களின் பள்ளிப்பாட அளவு குறைக்கப்படும். ஆறாம் வகுப்பிலிருந்து மாணவர்கள் தொழிற்கல்வி கற்க ஊக்கப்படுத்தப்படுவார்கள் என்பன உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இதில் கூறப்பட்டன.

ஆரம்பத்தில் ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகளில் மட்டுமே தேசிய கல்விக்கொள்கை வெளியிடப்பட்டது. பிராந்திய மொழிகளில் மொழிபெயர்ப்புகள் வெளியிடப்படும் என்று மத்திய அரசு தெரிவித்திருந்த நிலையில், 17 பிராந்திய மொழிகளில் கல்விக் கொள்கையின் மொழிபெயர்ப்பு கடந்த ஏப். 24 வெளியாகி இருந்தது. கன்னடம், மலையாளம், தெலுங்கு உள்ளிட்ட 17 மொழிகளில் தேசிய கல்விக்கொள்கை மொழிபெயர்க்கப்பட்டு வெளியான நிலையில், தமிழ் மொழிக்கான மொழிபெயர்ப்பு இடம்பெறவில்லை.

இந்த நிலையில் தேசிய கல்விக் கொள்கையின் தமிழ் மொழிக்கான மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது. மொத்தம் 155 பக்கங்களுடன் கூடிய மொழிபெயர்ப்பை இணையதள முகவரியில் மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

**4. ஆஸ்கர் விருதுகள் 2021: சிறந்த திரைப்படமாக 'நோமேட்லேண்ட்' தேர்வு**

93ஆவது ஆஸ்கர் விருது வழங்கும் விழா லாஸ் ஏஞ்சல்ஸ், கலிபோர்னியா –வில் இருக்கும் ஹாலிவுட்டின் டால்பி தியேட்டரில் மட்டுமல்லாமல் லாஸ் ஏஞ்சல்ஸின் யூனியன் ஸ்டேஷன் அரங்கிலும் இம்முறை நடைபெற்றது. இதில் குளோயி ஸாவோ இயக்கிய 'நோமேட்லேண்ட்' சிறந்த திரைப்பட –மாகவும், ஸாவோ சிறந்த இயக்குநராகவும் வெற்றிபெற்றனர்.

சிறந்த இயக்குநர் என்கிற ஆஸ்கரை வெல்லும் இரண்டாவது பெண் ஸாவோ என்பது குறிப்பிடத்தக்கது.

**விருது வென்றவர்கள் பட்டியல்**

**சிறந்த இயக்குநர்** – குளோயீ ஸாவோ

**சிறந்த திரைப்படம்** – நோமேட்லேண்ட்

**சிறந்த நடிகை** – பிரான்சிஸ் மெக்டார்மண்ட் (நோமேட்லேண்ட்)

**சிறந்த நடிகர்** – ஆந்தனி ஹாப்கின்ஸ் (தி பாதர்)

**சிறந்த உறுதுணை நடிகர்** – டேனியல் கலூயா (Judas and the Black Messiah)

**சிறந்த உறுதுணை நடிகை** – யூ ஜங் யூன் (மினாரி)

**சிறந்த சர்வதேசத் திரைப்படம்** – அனதர் ரவுண்ட் (டென்மார்க்)

**சிறந்த தழுவல் திரைக்கதை** – தி பாதர்

**சிறந்த திரைக்கதை** – பிராமிஸிங் யங் வுமன்

**சிறந்த அனிமேஷன் திரைப்படம்** – ஸோல்

**சிறந்த பாடல்** – பைட் பார் யூ (Judas and the Black Messiah)

**சிறந்த இசை** – ஸோல்

**சிறந்த படத்தொகுப்பு** – சவுண்ட் ஆஃப் மெடல்

**சிறந்த ஒளிப்பதிவு** – மேங்க்

**சிறந்த தயாரிப்பு வடிவமைப்பு** – மேங்க்

**சிறந்த வரைகலை** – டெனட்

**சிறந்த ஆவணப்படம்** – மை ஆக்டோபஸ் டீச்சர்

**சிறந்த ஆவணக் குறும்படம்** – கோலெட்

**சிறந்த அனிமேஷன் குறும்படம்** – இஃப் எனிதிங் ஹேப்பன்ஸ் ஐ லவ் யூ

**சிறந்த குறும்படம்** – டூ டிஸ்டண்ட் ஸ்ட்ரேஞ்சர்ஸ்

**சிறந்த ஒலி** – சவுண்ட் ஆஃப் மெடல்

**சிறந்த ஒப்பனை, சிகை அலங்காரம்** – மா ரெய்னீஸ் ப்ளாக் பாட்டம்

**சிறந்த ஆடை வடிவமைப்பு** – மா ரெய்னீஸ் ப்ளாக் பாட்டம்


**1.உலக அறிவுசார் சொத்து நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) ஏப்ரல் 25

**ஆ) ஏப்ரல் 26 ☑**

இ) ஏப்ரல் 27

ஈ) ஏப்ரல் 28




✓ உலக அறிவுசார் சொத்து நாளானது ஆண்டுதோறும் ஏப்ரல்.26 அன்று அனுசரிக்கப்படுகிறது.

✓ உலக அறிவுசார் சொத்து அமைப்பானது (WIPO) கடந்த 2000ஆம் ஆண்டில் "காப்புரிமைகள், பதிப்புரிமை, வணிக முத்திரைகள் மற்றும் வடிவமைப்புகள் ஆகியவை அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், "படைப்பாற்றலையும் உலகெங்குமுள்ள சமூகங்களின் வளர்ச்சிக்கு படைப்பாளிகள் மற்றும் புத்தாக்குநர்கள் அளித்த பங்களிப்புகளை கொண்டாடுவதற்காகவும்" இந்நாளை உருவாக்கியது. நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள் – "IP and SMEs: Taking your ideas to market".

---


**2.அண்மைய NASA திட்டம் குறித்து, 'MOXIE'இல் உள்ள 'M' எதைக் குறிக்கின்றது?**

அ) Maintained

ஆ) Minimum

இ) Maximum

**ஈ) Mars ☑**



✓ NASA'இன் பெர்ஸிவெரன்ஸ் ஊர்தி அதன் MOXIE (Mars Oxygen In-Situ Resource Utilization Experiment) சாதானத்தைப் பயன்படுத்தி செவ்வாய் கிரகத்தில் ஆக்ஸிஜனை பிரித்தெடுத்துள்ளது. செவ்வாய் கோளின் வளிமண்டலத்திலிருந்த கரியமிலவாயுவிலிருந்து ஐந்து கிராம் ஆக்ஸிஜனை MOXIE உற்பத்தி செய்துள்ளது. 5 கிராம் என்பது மனிதன் சராசரியாக 10 நிமிடங்களில் சுவாசிக்கும் ஆக்ஸிஜன் அளவு.

✓ செவ்வாயின் வளிமண்டலம் 96 சதவீதம் கரியமிலவாயுவாலேயே நிறைந்துள்ளது. ஆக்சிஜன் 0.13% மட்டுமே உள்ளது. கரியமிலவாயுவை உட்கவர்ந்து அதிலிருந்து உயிர்வளியை உருவாக்குவதே MOXIE'இன் வேலையாகும்.

---

**3. IEA அறிக்கையின்படி, நடப்பு 2021ஆம் ஆண்டில், இந்தியாவில், $CO_2$ உமிழ்வின் சதவீதம், கடந்த 2020ஆம் ஆண்டை ஒப்பிடும்போது எத்தனை சதவீதம் அதிகமாக இருக்கும்?**

**அ) 1.4% ☑**

ஆ) 5.4%

இ) 10.4%

ஈ) 20%




✓ பன்னாட்டு எரிசக்தி முகமை (IEA) தனது சமீபத்திய அறிக்கையில், நடப்பு 2021ஆம் ஆண்டில், இந்தியாவில், கரியமில வாயு ($CO_2$) உமிழ்வு 1.4% அதிகமாக இருக்கும் என்று கூறியுள்ளது. அது, 2020ஆம் ஆண்டில் உமிழப்பட்ட 30 மில்லியன் டன் கரியமில வாயுவை விட 1.4% அதிகமாகும். மேலும், நிலக்கரி அடிப்படையிலான மின்னுற்பத்தியில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு மற்ற மூலங்களிலிருந்து கிடைக்கும் உற்பத்தியை விட 3 மடங்கு அதிகமாக இருக்கும் என்றும் அவ்வறிக்கை கூறியுள்ளது.

---

**4. COVID-19'இன் தாக்கத்திற்கு எதிரான இளையோரின் யோசனைகளுக்கு நிதியளிப்பதை நோக்கமாகக்கொண்ட, WHO'ஆல் ஆதரிக்கப்படும் திட்டத்தின் பெயர் என்ன?**

**அ) Global Youth Mobilization ☑**

ஆ) World COVID Response Program

இ) World Health Programme

ஈ) Global Economy Recover Programme




✓ "Global Youth Mobilization" என்பது COVID-19 தொற்றுநோயின் தாக்கத்திற்கு எதிரான இளையோர்களின் யோசனைகளுக்கு நிதியளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கு உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐநா அறக்கட்டளை ஆகியவை துணைபுரிகின்றன.

✓ இதற்கு UNICEF, USAID, UNFPA, ஐரோப்பிய ஆணையம், சேல்ஸ் போர்ஸ், FIFA மற்றும் உலக நாடுகளின் தலைவர்களும் அரசாங்கங்களும் ஆதரிக்கின்றன.

---

**5. ஆக்ஸிஜன் தணிக்கைக் குழுவை உருவாக்கியுள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ) கேரளா

ஆ) மகாராஷ்டிரா

இ) கோவா

**ஈ) தில்லி ☑**




✓ தில்லி முழுவதுமுள்ள மருத்துவமனைகளில் மருத்துவ ஆக்ஸிஜனின் கடுமையான பற்றாக்குறையை அடுத்து, தில்லி அரசு 24 பேர்கொண்ட ஆக்ஸிஜன் தணிக்கைக் குழுவை அமைத்துள்ளது. இக்குழு, ஆக்ஸிஜன் இருப்பு மற்றும் அவற்றின் பயன்பாடு ஆகியவற்றை தொடர்ந்து கண்காணிக்கும். ஆக்ஸிஜன் அனைவருக்கும் உகந்த முறையில் கிடைப்பதையும் இந்தக் குழு உறுதிசெய்யும்.

---

**6. SHIELDS என்ற பெயரில் திட்டமொன்றை தொடங்கியுள்ள விண்வெளி நிறுவனம் எது?**

**அ) NASA ☑**

ஆ) ISRO

இ) ESA

ஈ) ROSCOSMOS



✓ அமெரிக்க விண்வெளி முகமையான NASA, அண்மையில் SHIELDS (Spatial Heterodyne Interferometric Emission Line Dynamics Spectrometer) என்ற பெயரில் ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது. சூரிய மண்டலத்திற்குள் நகர்ந்து வந்த விண்மீனிடை துகள்களின் ஒளியை ஆராய்வதே இதன் நோக்கமாகும். மெக்ஸிகோவிலிருந்து NASA பிளாக் பிராண்ட் IX ஆய்வு ஏவுகலத்தைப் பயன்படுத்தி இத்திட்டம் ஏவப்பட்டது.

---

**7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "CODEX ALIMENTARIUS" என்பதுடன் தொடர்புடைய துறை எது?**

அ) இராணுவ கொள்முதல்

ஆ) பருவநிலை மாற்றம்

**இ) உணவு தரநிலைகள் ☑**

ஈ) செயற்கை நுண்ணறிவு



✓ "CODEX ALIMENTARIUS" பன்னாட்டு உணவுத் தரநிலைகளும் வழிகாட்டுதல்களும் சர்வதேச உணவு வர்த்தகத்தின் பாதுகாப்பு மற்றும் தரத்திற்கு பங்களிக்கின்றன. 1963'இல் நிறுவப்பட்ட இத்தரநிலைகளை, இடர் மதிப்பீட்டு அமைப்புகள் அல்லது FAO மற்றும் WHOஆல் ஏற்பாடு செய்யப்பட்ட ஆலோசனை நிறுவனங்கள் வழங்கின.

✓ அண்மையில், "CODEX ALIMENTARIUS" ஆணையத்தின்கீழ் நிறுவப்பட்ட மசாலா மற்றும் சமையல் மூலிகைகள்பற்றிய CODEX குழுவின் ஐந்தாவது அமர்வு மெய்நிகராக நடத்தப்பட்டது. ஏப்.20 முதல் ஏப்ரல்.29 வரை இது நடைபெறுகிறது.

---

**8. டிராக்கோமாவை ஒழித்ததற்காக உலக நல்வாழ்வு அமைப்பிடம் இருந்து சான்றுபெற்ற நாடு எது?**

**அ) காம்பியா ☑**

ஆ) ஜிம்பாப்வே

இ) தென்னாப்பிரிக்கா

ஈ) சாட்



✓ பொதுநலச்சிக்கலான கண்ணிமை நோயை ஒழித்ததற்காக உலக நல வாழ்வு அமைப்பிடம் இருந்து அண்மையில் காம்பியா சான்றிதழ் பெற்றது. இதன்மூலம், இந்த மைல்கல்லை எட்டிய உலக நல வாழ்வு அமைப்பின் ஆப்பிரிக்க பிராந்தியத்தில் உள்ள 2ஆவது நாடாக காம்பியா ஆனது.

- ✓ புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களுக்காக 2021 முதல் 2030 வரையிலான செயல்திட்டத்தை WHO அறிமுகப்படுத்தியது. கோட் டி ஐவோயர் நாடு இந்தச் சாதனையை அடைந்த முதல் நாடாகும்.

---

**9. KRI நங்கலா–402 என்னும் எந்த நாட்டின் நீர்மூழ்கிக்கப்பலைத் தேடும்பணியில் இந்திய கடற்படை இணைந்துள்ளது?**

அ) நேபாளம்

ஆ) இலங்கை

**இ) இந்தோனேசியா ☑**

ஈ) ஜப்பான்



- ✓ இந்தோனேசிய நீர்மூழ்கிக்கப்பலான KRI நங்கலா–402 அதன் 53 பேர் கொண்ட குழுவினருடன் அண்மையில் திடீரென காணாமல் போனது, அதனை தேடி மீட்கும் நடவடிக்கையில் இந்திய கடற்படை அண்மையில் இணைந்துள்ளது. பாலி தீவுக்கு வடக்கே இந்நீர்மூழ்கி காணாமல்போன பிறகு, இந்தோனேசியா இந்தியாவின் உதவியைக் கோரியது.
- ✓ மீட்பு நடவடிக்கையின் ஒருபகுதியாக இந்திய கடற்படையின் ஆழ்கடல் நீர்மூழ்கு மீட்புக்கப்பல் விசாகப்பட்டினத்திலிருந்து புறப்பட்டது.

---

**10. இந்திய பெண்கள் ஏழு தங்கங்களை வென்ற உலக இளைஞர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டிகள் நடத்தப்பட்ட நாடு எது?**

அ) ரஷியா

**ஆ) போலந்து ☑**

இ) உக்ரைன்

ஈ) பிரான்ஸ்



- ✓ போலந்தின் கீல்ஸில் நடைபெற்ற உலக இளையோர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பில், இந்திய குத்துச்சண்டை வீராங்கனைகள் 7 தங்கப் பதக்கங்களை வென்று வரலாற்றுச் சாதனையை உருவாக்கினர்.
- ✓ இறுதிப்போட்டியாளர்களான கிதிகா, நெளரம் பாபிரோஜிசனா சானு, பூனம், விங்கா, அருந்ததி செளத்ரி, டி சனாமாச்சா சானு மற்றும் அல்பியா பதான் ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றனர். மேலும் மூன்று இந்திய குத்துச்சண்டை வீரர்களும் வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தொலைத்தொடர்பு சேவை வழங்குவது தொடர்பாக BSNL–இந்தியன் வங்கி புரிந்துணர்வு ஒப்பந்தம்**

தொலைத்தொடர்பு சேவை வழங்குவது தொடர்பாக பாரத் சஞ்சார் நிகம் நிறுவனம் (BSNL) மற்றும் இந்தியன் வங்கி ஆகியவற்றுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியன் வங்கிக்கு குறைந்த விலையில் தொலைத்தொடர்பு இணையதள சேவையை வழங்குவதற்காக, அந்த வங்கியுடன் BSNL நிறுவனம் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.

---

**2. இந்தியப்பெண் அறிவியலாளருக்கு சர்வதேச சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு விருது**

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறப்பாக செயல்பட்ட இந்தியப் பெண் விஞ்ஞானி கிரிதி கரந்த், சர்வதேச அமைப்பால் கெளரவிக்கப்பட்டுள்ளார்.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் உள்ள பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்ப–தற்காக சர்வதேச விஞ்ஞானிகளுடன் இணைந்து 'வைல்ட் எலமண்ட்ஸ்' அறக்கட்டளை அமைப்பு செயல்பட்டு வருகிறது. மனித உலகம், தாவர உலகம், விலங்குலகம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பாதுகாப்பதற்கு இந்த அமைப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

அந்த அமைப்பு கிரிதி கரந்துக்கு 'வன புத்தாக்க அறிவியலாளர்' விருதை வழங்கியுள்ளது. இந்த விருதைப் பெறும் முதல் இந்தியப் பெண் கிரிதி கரந்த் என்பது குறிப்பிடத்தக்கது. பெங்களூரைச் சேர்ந்த உயிரியல் அறிவியலாளரான கிரிதி கரந்த், வனப் பாதுகாப்பு ஆய்வு மையத்தின் தலைமை அறிவியலாளராகவும் உள்ளார். அமெரிக்கா, பிரிட்டன், கென்யா, கொலம்பியா, ஆஸ்திரேலியா நாடுகளைச் சேர்ந்த அறிவியலாளர்கள் சிலருக்கும் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருதைப் பெறுவோருக்கு ஆராய்ச்சிப்பணிகளுக்காக ஈராண்டுகட்கு ₹75 இலட்சத்தை அந்த அமைப்பு வழங்கவுள்ளது. வனப்பாதுகாப்பு தொடர்–பான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு இந்த விருது உதவும் என்று கிரிதி கரந்த் தெரிவித்துள்ளார்.

---

**3. அமெரிக்க நீதி துறையில் இந்திய பெண்மணி!**

இந்தியாவை பூர்வீகமாக கொண்ட வனிதா குப்தாவை அமெரிக்காவின் இணை அட்டர்னி ஜெனரலாக நியமிக்க, பார்லிமென்டின் செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது. வனிதா குப்தா, சமூக உரிமைகள் தொடர்பான விஷயத்தில், அமெரிக்காவில் தலைச்சிறந்த வழக்கறிஞராக இருந்து வருகிறார். ஒபாமா அதிபராக இருந்தபோது, உதவி அட்டர்னி ஜெனரலாக பணியாற்றியும் உள்ளார். தற்போது, ஜனநாயக கட்சியைச் சேர்ந்த ஜோ பைடன் அதிபராக பதவியேற்ற பின், நீதித் துறையில் மூன்றாவது உயரிய பதவியான, இணை அட்டர்னி ஜெனரலாக, வனிதா குப்தா பதவி ஏற்கிறார்.

அவரது நியமனத்தை உறுதிசெய்வதற்காக, பார்லிமென்டின் செனட் சபை–யில் ஓட்டெடுப்பு நடந்தது. மொத்தம், 100 உறுப்பினர்கள் உள்ள செனட் சபையில், ஜனநாயகக்கட்சி மற்றும் குடியரசு கட்சிக்கு தலா, 50 உறுப்பினர்–கள் உள்ளனர். குடியரசு கட்சியின் லிசா முர்கோவ்ஸி ஆதரித்து ஓட்டளித்–ததால், 51 – 49 என்ற ஓட்டு விகிதத்தில், வனிதா குப்தா நியமனத்துக்கு, செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது.

---

**1. இந்தியா, கீழ்காணும் எந்த நாட்டுடன் இணைந்து 'காலநிலை & தூய ஆற்றல் நிகழ்ச்சிநிரல் 2030 கூட்டணி'யை தொடங்கியுள்ளது?**



அ) ஆஸ்திரேலியா

ஆ) ஜெர்மனி

இ) பிரான்ஸ்

**ஈ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

✓ ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அதிபர் ஜோ பைடன் கூட்டிய காலநிலை மாற்றம் குறித்த மெய்நிகரான உச்சிமாநாட்டின்போது, இந்தியாவும் ஐக்கிய அமெரிக்க நாடுகளும் இணைந்து பசுமை ஒத்துழைப்பு குறித்த "நிகழ்ச்சி நிரல் 2030" கூட்டணியைத் தொடங்குவதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

✓ "இந்தியா–அமெரிக்கா காலநிலை மற்றும் தூய ஆற்றல் நிகழ்ச்சி நிரல் 2030 கூட்டாண்மை", காலநிலை மாற்றத்தை எதிர்த்து விரைவாகவும், உலக அளவில் பெருமளவிலும் நடவடிக்கைகளை செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த உச்சிமாநாட்டில், சீன அதிபர் ஜி ஜின்பிங், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் போன்ற பல்வேறு நாட்டுத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

---

**2. வேதி ஆயுதங்களை தடை செய்வதற்கான அமைப்பின் வெளியக தணிக்கையாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?**



அ) வெங்கையா

**ஆ) G C முர்மு ☑**

இ) இராஜேஷ் குமார்

ஈ) S A பாப்டே

✓ வேதி ஆயுதங்களை தடைசெய்வதற்கான அமைப்பின் வெளியக தணிக்–கையாளராக தலைமை கணக்கு தணிக்கை அதிகாரி G C முர்மு தேர்வுசெய்யப்பட்டுள்ளார். அவர் மூன்றாண்டு காலத்திற்கு இப்பதவியில் பணியாற்றுவார். வெளியக தணிக்கையாளராக அவரது பதவிக்காலம் நடப்பு 2021ஆம் ஆண்டிலிருந்து தொடங்குகிறது.

✓ வேதி ஆயுதங்களின் தடைக்கான அமைப்பு என்பது நெதர்லாந்தின் தி ஹேக் நகரத்தில் அமைந்துள்ள பன்னாட்டு அரசுகளுக்கிடையேயான அமைப்பு ஆகும்.

---

**3. பின்வரும் எந்தத் திட்டத்தின்கீழ், மே மற்றும் ஜூன் மாதங்களில் ஏழைகளுக்கு, இந்திய அரசாங்கம், இலவச உணவு தானியங்களை வழங்கவுள்ளது?**



அ) பிரதமர் ஜன் தன் யோஜனா

**ஆ) பிரதமர் கரிப் கல்யாண் அன்ன யோஜனா ☑**

இ) பிரதமர் முத்ரா யோஜனா

ஈ) பிரதமர் ஆத்மா நிர்பார் கல்யாண் யோஜனா

✓ மே மற்றும் ஜூன் மாதங்களில் ஏழை எளியோருக்கு இலவச உணவு தானியங்களை வழங்குவதை மீண்டும் தொடங்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது. PDS பயனாளிகளுக்கு ஐந்து கிலோ கூடுதல் உணவு தானியங்கள், PMGKAY'இன்கீழ் மே & ஜூன் ஆகிய இரு மாதங்களுக்கு வழங்கப்படவுள்ளன. ஆனால், இம்முறை, பருப்புவகைகள் ஏழைகளுக்–கு வழங்கப்படமாட்டாது. ஏழை எளிய மக்கள், தொற்றுநோய் காலத்தை கையாளுவதற்காக, PMGKAY திட்டம் அறிவிக்கப்பட்டது.

---

**4. ITUஆல் நடப்பாண்டுக்கான (2021) "பன்னாட்டு தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தில் பெண்கள்" நாள் அனுசரிக்கப்–பட்ட தேதி எது?**




அ) ஏப்ரல் 21

**ஆ) ஏப்ரல் 22 ☑**

இ) ஏப்ரல் 23

ஈ) ஏப்ரல் 24

✓ பன்னாட்டு தொலைத்தொடர்பு ஒன்றியமானது (ITU) ஆண்டுதோறும் ஏப்ரல் மாதத்தில் வரும் நான்காவது வியாழக்கிழமை அன்று பன்னாட்டு தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழினுட்பத்தில் பெண்கள்" நாளை கொண்டாடுகிறது. இந்த ஆண்டு, ஏப்ரல்.22 அன்று, அந்நாளின் 10ஆவது ஆண்டு நிறைவை "Connected Girls; Creating Brighter Futures" என்ற கருப்பொருளுடன் அது கொண்டாடியது.

✓ பன்னாட்டு தொலைத்தொடர்பு ஒன்றியமானது ஐநா அமைப்பின் சிறப்பு நிறுவனமாகும். அது ஜெனீவாவை தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

---

**5. சீனாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக, பின்வரும் எந்த இரு நாடுக–ளுடன் இணைந்து ஜப்பான் தனது முதல் கூட்டு இராணுவப் பயிற்–சியை மேற்கொள்ளவுள்ளது?**



அ) இந்தியா மற்றும் அமெரிக்கா

**ஆ) அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ☑**


இ) ரஷியா அமெரிக்கா

ஈ) ரஷியா மற்றும் பிரான்ஸ்

✓ மண்டல நீரில் சீனாவின் எல்லைமீறிய நடவடிக்கைகளுக்கு மத்தியில், அமெரிக்கா (US) மற்றும் பிரெஞ்சு துருப்புக்களுடன் இணைந்து ஜப்பான் தனது முதல் கூட்டு இராணுவப்பயிற்சியை நடத்தவுள்ளது. இந்தப்பயிற்சி மே 11–17 வரை நடைபெறும். இது மூன்று நாடுகளின் தரைப்படைகளை உள்ளடக்கிய முதல் மிகப்பெரிய அளவிலான பயிற்சியாகும். இப்பயிற்சி, 3 நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை ஆழப்படுத்தும்.

---

**6. வளரும் நாடுகளின் காலநிலை நிதியை இரட்டிப்பாக்க, 'சர்வதேச காலநிலை நிதித் திட்டத்தை' அறிவித்த நாடு எது?**



அ) சீனா

**ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ) ஜெர்மனி

ஈ) பிரான்ஸ்

✓ அமெரிக்க அதிபர் ஜோ பைடன், "அமெரிக்க சர்வதேச காலநிலை நிதி திட்டத்தை" வெளியிட்டார். பைங்குடில் வாயு உமிழ்வைக் குறைப்பதற்கு ஏழை நாடுகளுக்கு உதவும் வகையில். நாட்டின் காலநிலை நிதியை இரட்டிப்பாக்கும் என்று அவர் அறிவித்தார். புதிய காலநிலை நிதி திட்டம், 2005ஆம் ஆண்டின் வாயு உமிழ்வை ஒப்பிடும்போது அதிலிருந்து 50% –52% பைங்குடில் வாயு உமிழ்வை குறைக்கும் புதிய குறிக்கோளுடன் வெளியிடப்பட்டுள்ளது.

---

**7. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, அன்னபூர்ணா மலைச்சிகரம் அமைந்துள்ள நாடு எது?**



அ) இந்தியா

**ஆ) நேபாளம் ☑**

இ) வங்காளதேசம்

ஈ) சீனா

✓ இமயமலையில் உள்ள அன்னபூர்ணா மலைத்தொடர் வடக்கு மத்திய நேபாளத்தில் அமைந்துள்ளது. இது உலகின் பத்தாவது மிகவுயரமான (8000 மீ) மலைச்சிகரமாகும். சமீபத்தில், மகாராஷ்டிராவின் சதாராவைச் சேர்ந்த பிரியங்கா மோகித், இம்மலைச்சிகரத்தை அடைந்த முதல் இந்தி–யப்பெண்மணி என்ற பெருமையைப்பெற்றார். அவர், ஏற்கனவே எவரெஸ்ட் மலைச்சிகரம் உட்பட பல சிகரங்களை அடைந்துள்ளார்.

**8. கைவிடப்பட்ட சிறார்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக, 'ஹரிஹர்' என்ற கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ள மாநிலம் எது?**

அ) பீகார்

ஆ) உத்தர பிரதேசம்

**இ) ஹரியானா ☑**

ஈ) பஞ்சாப்

✓ ஹரியானா மாநில அமைச்சரவையானது 'ஹரிஹர்' – வீடற்ற கைவிடப்–பட்ட மற்றும் சரணாகதி அடைந்த சிறார்களுக்கு புனர்வாழ்வளிக்கும் முன்னெடுப்புக்கு ஹரியானா கொள்கைக்கு ஒப்புதல் அளித்தது.

✓ ஐந்து அகவைக்குக்கீழ் கைவிடப்பட்டிருந்தாலோ அல்லது ஒரு அகவை முடியும் முன்னரோ சரணாகதி அடைந்த சிறார்களுக்கு அவர்களின் 25 அகவை வரை கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் நிதியுதவி அளிக்கப்படும். திருமணத்திற்கும் உதவி வழங்கப்படும்.

**9.** **மனித உடலின் ஒத்த மாதிரியாக செயல்படும் பல்வேறு உயிரணு வகைகளைக்கொண்ட மனித உறுப்புகளின் சிறிய மாதிரிகளுக்கு கொடுக்கப்பட்ட பெயர் என்ன?**



அ) உடல் மாதிரிகள்

**ஆ) திசு சில்லுகள் ☑**


இ) செல் மாதிரிகள்

ஈ) திசு மரபணுக்கள்

✓ 'திசு சில்லுகள்' மனித உறுப்புகளின் சிறிய மாதிரிகள் ஆகும்; அவை, மனிதவுடலுக்கு ஒத்ததாக செயல்படும் பல்வேறு உயிரணு வகைகளை கொண்டுள்ளன. வர்த்தக குழு திட்டத்தின்கீழ், NASA மற்றும் ஸ்பேஸ் X இடையேயான ஒத்துழைப்பின் ஒருபகுதியாக 4 விண்வெளி வீரர்கள் சமீபத்தில் பன்னாட்டு விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப்பட்டனர். விண்வெளி ஆய்வுகளில் திசு சில்லுகளின் பயன்பாடு குறித்து ஆராய்வ–தில் அவர்கள் கவனம் செலுத்துவர்.

---

**10.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'இ–2025 முன்னெடுப்பு' என்பதுடன் தொடர்புடைய துறை எது?**



அ) பருவநிலை மாற்றம்

**ஆ) மலேரியாவை ஒழித்தல் ☑**

இ) நிதியியல் தொழில்நுட்பம்

ஈ) ஊட்டச்சத்து

✓ உலக நலவாழ்வு அமைப்பு (WHO) தனது 'E–2025 முன்னெடுப்பின்'கீழ் வரும் 2025ஆம் ஆண்டுக்குள் மலேரியாவை ஒழிக்கும் திறனுடன் 25 நாடுகளை அடையாளம் கண்டுள்ளது. மலேரியா ஒழிப்பு தொடர்பான WHO–ஜீரோயிங்கின் புதிய அறிக்கையின்படி, ஆப்பிரிக்காவைச் சேர்ந்த மூன்று நாடுகள் உட்பட இந்த 25 நாடுகளும், மலேரியா மற்றும் COVID–19 ஆகிய இரட்டை அச்சுறுத்தலுக்காகவும் செயல்பட வேண்டியிருக்கும்.

✓ இந்த நாடுகளுக்கு உலக நலவாழ்வு அமைப்பு தனது ஆதரவு மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. போர் தேவையில்லை!**

COVID பெருந்தொற்றை வீழ்த்த போர் எதையும் நடத்தத் தேவையில்லை. மாறாக, முகக்கவசம் – சமூக இடைவெளி – கை தூய்மை ஆகியவற்றை மக்கள் கடைப்பிடித்தாலே போதுமானது. கரோனா தீநுண்மியிடம் மட்டும் தீண்டாமை கொண்டால் மனிதகுலம் மகிழ்ச்சியாக வாழ வழி கிடைக்கும். அதற்கு வீட்டிலிருந்தாலும் வெளியில் சென்றாலும் முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளியை எப்போதும் எச்சரிக்கை உணர்வுடன் கடைப்பிடிப்ப–து, அடிக்கடி கைகளைக் கழுவுதல் ஆகியவற்றைப் பின்பற்றினால் COVID தீநுண்மி மனிதகுலத்தை நெருங்காது.

குறிப்பாக, ஏதேனும் பொருளையோ (அ) இடத்தையோ தொடநேர்ந்தால், உடனே சோப்பினால் கைகளைக் கழுவிக்கொள்ளவேண்டும். வெளியிட–ங்களில் இருக்கும்போது சானிடைசர் பயன்படுத்தி கைகளை சுத்தம் செய்துகொள்ளலாம். சானிடைசர் இல்லையென்றாலும், சாதாரண சோப்பி–ன்மூலம் கைகளைக் கழுவினாலே கரோனாவை விரட்டியடிக்க முடியும்.

மனிதனிடமிருந்து பிரிக்க முடியாத ஓர் உறுப்பாகவே தற்போது திறன்பேசி மாறியுள்ளது. அதனைப் பயன்படுத்துவதில் தவறில்லை. ஆனால், அதுவே கரோனாவைப் பரப்பும் காரணியாக மாறக்கூடும் என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே, கடைகளுக்கும், பிற இடங்களுக்கும் செல்ல நேர்ந்தால், திறன்பேசியைத் தவிர்ப்பது நல்லது.

நல்ல காற்றோட்டம் கரோனா பரவலைத் தடுக்கும்; குறைக்கும். அதனால், வீடுகளில் ஜன்னல்களைத் திறந்து வையுங்கள். சூரிய ஒளியும், சுத்தமான காற்றும் வீட்டுக்குள் வரவேண்டியது அவசியம். குடும்ப உறுப்பினர்களாக–வே இருந்தாலும் அரட்டை, நெருக்கம், நெரிசல் பாராட்டுவது நமக்குப் பகை. கவசம், காற்று, தொலைவு, தூய்மை ஆகியவை மட்டுமே நமக்கு நன்மைதரும். COVID தீநுண்மி குறித்த விழிப்புணர்வே நோய்த்தடுப்பின் முதல் ஆயுதம் என்பதை மறந்து விடாதீர்கள்.

**நமது உயிர்க்கவசம்**

முகக்கவசத்தை முறையாக அணிய வேண்டும். மூக்கையும் வாயையும் மூடவேண்டும். இறுக்கமாக இல்லாமல் முகக்கவசம் சற்றே தளர்வாக இருப்பது நல்லது.

---

**2. பெண் காவலர்களுக்கு 'குறைதீர்க்கும் மனுபெட்டி' திட்டம் தொடக்கம்**

சென்னை காவல்துறையில் பணிபுரியும் பெண்காவலர்களுக்காக, 'குறை தீர்க்கும் மனுபெட்டி' என்ற திட்டத்தை காவல் ஆணையர் மகேஷ்குமார் அகர்வால் தொடக்கிவைத்தார்.

---

**3. தேஜஸ் போர் விமானத்தில் 'பைத்தான்–5' ஏவுகணை இணைப்பு**

முழுவதும் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட தேஜஸ் இலகு இரக போர் விமா–னத்தில் வானிலிருந்தபடி வானிலக்கை துல்லியமாகத் தாக்கியழிக்கும் அதிநவீன ஐந்தாம் தலைமுறை ஏவுகணையான 'பைத்தான்–5' ஏவுக–ணையை ஏந்திச்செல்ல ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

'பைத்தான்–5' ஏவுகணையுடன் போர் விமானத்தின் செயல்பாட்டை மதிப்–பீடு செய்யும் வகையில் தொடா்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை–களின் முடிவில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரி–வித்தனர். இதுகுறித்து பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

உள்நாட்டு தயாரிப்பான தேஜஸ் போர் விமானத்தில் ஏற்கனவே 'டெர்பி' ஏவுகணை இணைத்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில், பார்வைக்கு அப்பால் உள்ள வான் இலக்கையும் மிக வேகமாகச்சென்று துல்லியமாகத் தாக்கியது. அதனைத் தொடர்ந்து ஐந்தாம் தலைமுறை தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட பைத்தான்–5 ஏவுகணையும் அதில் இணைக்கப்பட்டு கோவாவில் பரிசோதிக்கப்பட்டது. மிகவும் கடினமான சூழல்களை எதிர்கொள்ளக் கூடிய வகையில் தொடர்ச்சியாக மேற்கொள்–ளப்பட்ட பரிசோதனைகளில், தேஜஸ் போர் விமானம் வானிலிருந்தபடி அனைத்து இலக்குகளையும் 100 சதவீதம் துல்லியமாக வான் இலக்கை தாக்கி அழித்தது. அதனடிப்படையில், பைத்தான்–5 ஏவுகணையும் தேஜஸ் விமானத்தில் இணைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கோவாவில் நடத்தப்பட்ட இப்பரிசோதனைக்கு முன்பாக, போர் விமானம் 'பைத்தான்–5' ஏவுகணையை தாங்கிச்செல்லும் திறன்குறித்து பெங்களூ–ரில் சோதனை செய்யப்பட்டது.

வானில் ஏற்படும் உயர் அச்சுறுத்தலை திறம்பட எதிர்கொள்ளும் திறன் படைத்த தேஜஸ் போர் விமானம் இந்தியாவைச் சேர்ந்த ஹிந்துஸ்தான் விமானம் தொழில்நுட்ப நிறுவனம் சார்பில் தயாரிக்கப்பட்டதாகும். கடந்த பிப்ரவரியில் ஹெச்ஏஎல் நிறுவனத்திடமிருந்து ₹48,000 கோடியில் 83 தேஜஸ் இலகு இரக போர் விமானங்களை வாங்க மத்திய அரசு ஒப்பந்தம் மேற்கொண்டது.

---

**4. 17 நாடுகளில் இந்திய வகை கரோனா கண்டுபிடிப்பு: உலக சுகாதார அமைப்பு**

இந்திய வகையைச் சேர்ந்த இருமுறை உருமாறிய கரோனா தீநுண்மி, பதினேழு நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளதாக உலக நலவாழ்வு அமைப்பு தெரிவித்துள்ளது. உலகம் முழுவதும் கடந்த வாரம் மேலும் 57 இலட்சம் பேருக்கு கரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. இந்தியாவிலும் பல இலட்சம் பேருக்கு கரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கு B.1.617 என்ற வகையைச் சேர்ந்த இந்திய வகை கரோனா தீநுண்மி காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்நிலையில், உலக நலவாழ்வு அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்ட–து. அதில் கூறப்பட்டிருப்பதாவது:

ஏப்.27 வரை, 17 நாடுகளில் இருந்து 1,200 முறை B.1.617 வகை கரோனா தீநுண்மி கண்டறியப்பட்டுள்ளது. இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து அதிகம் இந்த வகை கரோனா தீநுண்மி கண்டறியப்பட்டுள்ளது. இந்தியாவில் பரவும் மற்ற வகை கரோனா தீநுண்மிகளைவிட B.1.617 வகை தீநுண்மி வேகமாக வளர்ந்து பரவும் தன்மைகொண்டது.

இதனால்தான் இந்தியாவில் முதல் அலையைக் காட்டிலும் இரண்டாவது அலை வேகமாகப் பரவி வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன. மேலும், பொதுசுகாதார விதிகளைப்பின்பற்றாமல் இருப்பது, கரோனா நெறிமுறைக–ளைப் பின்பற்றாமல் தேர்தல், திருவிழா, கலாசார நிகழ்ச்சிகளுக்கு மக்கள் ஒன்றாகக் கூடுவதும் கரோனா பரவலுக்கு காரணமாக இருக்கலாம். இவை தொடர்பாக மேலும் பல ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**5. மத்திய நிதித்துறை செயலராக டி வி சோமநாதன் நியமனம்**

மத்திய நிதித்துறை செயலராக தமிழ்நாடு பிரிவு இ ஆ ப அதிகாரி டி வி சோ–மநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 1987ஆம் ஆண்டின் தமிழக பிரிவு இஆப அதிகாரியான டி வி சோமநாதன் மத்திய நிதியமைச்சகத்தின் செல–வினத்துறை செயலராக பணிபுரிந்து வந்தார். இந்நிலையில், அவர் மத்தி–ய நிதித்துறை செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய நிதியமைச்சகத்–தில் உள்ள செயலர்களில் மிக மூத்த அதிகாரி நிதித்துறை செயலராக நியமிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

---

**6. சுங்கத்துறை குற்றங்களைத் தடுக்க பிரிட்டனுடன் ஒப்பந்தம்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

சுங்கத்துறை தொடர்பான குற்றங்களைத் தடுப்பதற்கும், தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் பிரிட்டனுடன் இந்தியா ஒப்பந்தம் மேற்கொள்ள மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதவது: பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பிரிட்டன், வட அயர்லாந்து ஆகிய நாடுகளுடன் சுங்கத்துறை விவகாரங்களில் பரஸ்–பர நிர்வாக உதவி, ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கு ஒப்பந்தம் மேற்கொ–ள்ளவும், அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

சுங்கத்துறை தொடர்பான குற்றங்களைத் தடுப்பதிலும், அவற்றை விசாரிப்–பதிலும் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு இந்த ஒப்பந்தம் உதவும். மேலும், இருநாட்டு சுங்கத்துறை நிர்வாகத்துக்கு இடையே தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கு சட்டரீதியிலான வழிமுறையை இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தித் தரும். நாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தில் விரைவில் ஒப்புதல் கிடைக்கவும் இந்த ஒப்பந்தம் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**7. கீழடி ஏழாம்கட்ட அகழாய்வு: முதுமக்கள் தாழிகளிலிருந்து பானைகள் கண்டெடுப்பு**

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கீழடியில் நடைபெற்றுவரும் ஏழாம் கட்ட அகழாய்வில் கொந்தகைப் பகுதியில் கிடைத்த 2600 ஆண்டுகளுக்கு முந்தைய முதுமக்கள் தாழிகளிலிருந்து குறியீடுகளுடன் கூடிய பானைகள் கண்டெடுக்கப்பட்டன. கீழடியில் தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில் ஏழாம்கட்ட அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பிப்.13ஆம் தேதி தொடங்கிய இந்த அகழாய்வுப் பணிகள் கீழடி, அகரம், கொந்தகை ஆகிய பகுதிகளில் நடைபெற்று வருகின்றன.

அப்போது கொந்தகையில் மூன்று குழிகள் தோண்டப்பட்டு ஏழு முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. இதில் 3 மற்றும் நான்காம் எண்கொண்ட முதுமக்கள் தாழிகளில் இருந்த பொருள்கள் ஆய்வுக்காக வெளியே எடுக்கப்பட்டன. மூன்றாம் எண்கொண்ட தாழி முழுமையாக கிடைத்ததால் அதற்குள் மனித எலும்புகள், பானைகள் மற்றும் இரும்பு ஆயுதம் உள்ளிட்ட–வை இருந்தன. இதில் சிறிய வடிவிலான பானைகளில் ஒரேமாதிரியான குறியீடுகள் காணப்படுகின்றன. இது உணவுப்பாத்திரம் (அ) குவளையாக இருக்கலாம் எனக்கருதப்படுகிறது.

19 செமீ விட்டமுள்ள ஓர் உணவுப் பாத்திரத்தின் உயரம் 4.5 செமீ உள்ளது. மற்றொரு பாத்திரம் 14 செமீ விட்டமும், 16 செமீ உயரமும் உள்ளது. மற்றொ–ரு பாத்திரம் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. 3 குறியீடுகளும் எதனைக் குறிக்கிறது என்பது குறித்து அடுத்த கட்ட ஆய்வுக்குப் பின்னரே தெரியவரும். கீழடி ஆறாம் கட்ட அகழாய்வில் 42 குழிகளில் 39 முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றிலிருந்து 20 எலும்புக்கூடுகள் வெளியே எடுக்கப்பட்டன. இதில் சிலவற்றில் இதுபோன்ற பாத்திரங்கள் இருந்தன. ஆனால் அதில் குறியீடுகள் எதுவும் காணப்படவில்லை.

ஏழாம்கட்ட அகழாய்வில் இதுவரை வெளியே எடுக்கப்பட்டுள்ள 2 முதுமக்க–ள் தாழிகளிலும் குறியீடுகளுடன் பாத்திரங்கள் கிடைத்துள்ளது குறிப்பிட–த்தக்கது. மேலும் ஆறாம்கட்ட அகழாய்வில் வெளியே எடுக்கப்பட்ட எலும்பு–க்கூடுகளை மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் லக்னோவில் உள்ள பீர்பால் ஷாகினி இன்ஸ்டிடியூட் ஆப் பேலியோ சயின்ஸ் ஆய்வு கூடத்துக்கு ஆய்வுக்காக அனுப்பியுள்ளது.

ஆனால் வடமாநிலங்களில் கரோனா தொற்று பரவல் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து அந்த ஆய்வகம் மூடப்பட்டு, அது கரோனா வார்டாக மாற்றப்பட்டு–ள்ளதாக கூறப்படுகிறது. எனவே எலும்புகளின் DNA பரிசோதனை முடிவு–கள் வருவதில் அதிக காலதாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதாக தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

---

**8. 2020'இல் இராணுவத்துக்கு அதிகம் செலவிட்ட நாடுகளில் இந்தியா மூன்றாவது இடம்**

கடந்த 2020ஆம் ஆண்டில் ராணுவத்துக்கு அதிகம் செலவிட்ட நாடுகளில் அமெரிக்கா மற்றும் சீனாவை தொடர்ந்து இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. ஸ்வீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் 'ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம்' உள்ளது.

உலகளாவிய இராணுவ செலவினம் மற்றும் ஆயுத வர்த்தகத்தை இந்த நிறுவனம் கண்காணித்து வருகிறது. உலக நாடுகளின் இராணுவ செலவினம் தொடர்பான இதன் சமீபத்திய அறிக்கை வெளியானது. இதன்படி கடந்த 2020ஆம் ஆண்டில் இராணுவத்துக்கு அதிகம் செலவிட்ட நாடுகளில் அமெரிக்கா, சீனாவை தொடர்ந்து இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. உலக நாடுகளின் ஒட்டுமொத்த இராணுவ செலவில் அமெரிக்காவின் பங்கு 39 சதவீதமாக உள்ளது. இதையடுத்து சீனாவின் பங்கு 13 சதவீதமாகவும் இந்தியாவின் பங்கு 3.7 சதவீதமாகவும் உள்ளது.

அமெரிக்கா தனது இராணுவத்துக்கு கடந்த 2020'ல் 77,800 கோடிடாலர் செலவிட்டுள்ளது. சீனா 25,200 கோடி டாலரும் இந்தியா 7,290 கோடி டாலரும் செலவிட்டுள்ளன. கடந்த 2020ஆம் ஆண்டில், கரோனா வைரஸ் பரவல் இருந்தாலும் இந்த மூன்று நாடுகளும் முந்தைய ஆண்டைவிட கூடுதலாக இராணுவத்துக்கு செலவிட்டுள்ளன. அமெரிக்கா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.7 சதவீதத்தை இராணுவத்துக்கு செலவிட்டுள்–ளது. சீனா 1.7 சதவீதமும் இந்தியா 2.9 சதவீதமும் செலவிட்டுள்ளன.

2011–2020 வரை அமெரிக்க இராணுவ செலவு 10% குறைந்துள்ளது. ஆனால் சீனாவின் ராணுவ செலவு 76 சதவீதமும் இந்தியாவின் ராணுவ செலவு 34 சதவீதமும் வளர்ச்சி கண்டுள்ளது. உலகில் இராணுவத்துக்கு அதிகம் செலவிட்ட நாடுகள் பட்டியலில் அமெரிக்கா, சீனா, இந்தியாவை தொடர்ந்து, ரஷியா, பிரிட்டன், சவுதி அரேபியா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் உள்ளன. 2020'ல் உலக நாடுகளின் மொத்த ராணுவ செலவு முந்தைய ஆண்டைவிட 2.6% அதிகரித்துள்ளது. முதல் ஐந்து நாடுகளின் இராணுவ செலவு, மொத்த இராணுவ செலவில் 62 சதவீதமாக உள்ளது.

---

**1.** **குஜராத் மாநிலத்தின் GIFT நகரத்தில், பின்வரும் எவ்வகையான நிறுவனங்கள் செயல்பட அனுமதியளிக்கப்பட்டுள்ளன?**



அ) கொடுப்பனவு வங்கிகள்

**ஆ) வங்கி சாராத நிதி நிறுவனங்கள் ☑**

இ) அகில இந்திய நிதி நிறுவனங்கள்

ஈ) நியோ வங்கிகள்

✓ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டின் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் குஜராத்தின் GIFT நகரத்தில், பன்னாட்டு நிதியியல் சேவை மையத்தால் செயல்பட அனுமதியளிக்கப்படுடுள்ளன. கடன்கள், முதலீட்டு வங்கி மற் –றும் மூன்றாந்தரப்பு தயாரிப்பு விற்பனை உள்ளிட்ட முழு அளவிலான நிதியியல் சேவைகளை வழங்க அவை அனுமதிக்கப்படுகின்றன.

---

**2.** "LeadIT" **– தொழிற்துறை மாற்றத்துகான தலைமைத்துவ குழுவில் அண்மையில் இணைந்த நாடு எது?**

**அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஆ) சீனா

இ) ரஷியா

ஈ) ஜப்பான்

Leadit LEADERSHIP GROUP FOR INDUSTRY TRANSITION

✓ ஐக்கிய அமெரிக்க நாடுகள் "LeadIT" – தொழிற்துறை மாற்றத்திற்கான தலைமைக் குழுவில் சேர்ந்துள்ளது. அது, இந்தியா மற்றும் சுவீடனின் ஒரு காலநிலை முன்னெடுப்பாகும். அமெரிக்கா 'LeadIT'இல் சேருவதால், பாரிஸ் ஒப்பந்த இலக்குகளை பூர்த்திசெய்யவும், போட்டித்தன்மையை வலுப்படுத்தவும், மூன்று நாடுகளிலும் புதிய நிலையான வேலைகளை உருவாக்கவும் இந்தக் கூட்டணி உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**3.** APEDA'**இன்படி, 2020–21 நிதியாண்டின் ஏப்ரல்–பிப்ரவரிக்கு இடைப்பட்ட காலத்தில், எத்தனை சதவீதத்துக்கு, பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது?**

அ) 5.51%

ஆ) 10.51%

**இ) 26.51% ☑**

ஈ) 50.51%

26.51%

✓ இந்தியாவின் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி 2020–21ஆம் நிதியாண்டின் ஏப்ரல்–பிப்ரவரிக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் 26.51% அதிகரித்துள்ளது என வேளாண் & பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) தெரிவித்துள்ளது.

✓ COVID பேரிடர் தொடர்பான பல்வேறு சவால்களுக்கிடையிலும் 2020–21ஆம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான 11 மாத கால கட்டத்தில் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களின் ஏற்றுமதி 26.51% அதிகரித்து ₹43,798 கோடியை எட்டியுள்ளது.

---

**4.** **உலகின் மிகவும் ஆற்றல்வாய்ந்த காலநிலைமாற்ற முன்கணிப்பு மீத்திறன் கணினி உருவாக்கப்படவுள்ள நாடு எது?**



அ) இந்தியா

**ஆ) UK☑**

இ) சீனா

ஈ) அமெரிக்கா

✓ மைக்ரோசாப்ட் மற்றும் மெட் ஆபிஸ் (UK) ஆகியவை வானிலை மற்றும் காலநிலை மாற்றத்தை முன்கணிப்பு செய்வதற்காக உலகின் மிகவும் ஆற்றல்வாய்ந்த மீத்திறன் கணினியை உருவாக்க கைகோர்த்துள்ளன.

✓ 2022ஆம் ஆண்டில் செயல்படக்கூடிய இந்த மீத்திறன் கணினி, கடுமை –யான வானிலைகுறித்த துல்லியமான முன்னெச்சரிக்கைகளை வழங் –கும். அது, நாட்டை கடுமையான புயல்கள், வெள்ளம் மற்றும் பனியின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க உதவும்.

---

**5.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலை அமைந்துள்ள மாநிலம் எது?**



**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளா

இ) மகாராஷ்டிரா

ஈ) பஞ்சாப்

✓ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் எடப்பாடி க பழனிச்சாமி தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்திற்குப் பிறகு, தூத்துக்குடியில் அமைந்துள்ள ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலையை மீண்டும் திறக்க தமிழ்நாடு அரசு முடிவுசெய்துள்ளது.

✓ மருத்துவத்துக்கு பயன்படுத்தக்கூடிய உயிர்வளியை உற்பத்தி செய்யும் நோக்கத்திற்காக 4 மாத காலத்திற்கு இவ்வாலை செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தாமிர உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பிற ஆலைக –ளைத் திறக்கவோ (அ) இயக்கவோ அந்நிறுவனம் அனுமதிக்கப்படாது. உள்ளூர்வாசிகளின் எதிர்ப்பைத் தொடர்ந்து இந்த ஆலை, கடந்த 2018 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டு அரசால் மூடப்பட்டது.

---

**6.** **டென்னிஸில், 12ஆவது பார்சிலோனா ஓப்பன் பட்டத்தை வென்ற வீரர் யார்?**



**அ) ரபேல் நடால் ☑**

ஆ) ஸ்டீபனோஸ் சிட்சிபாஸ்

இ) ஜானிக் சின்னர்

ஈ) ஆண்ட்ரி ரூப்லெவ்

✓ 12ஆவது பார்சிலோனா ஓப்பன் போட்டியில், ஸ்பானிஷ் டென்னிஸ் வீரர் ரபேல் நடால் பட்டத்தை வென்றார். இது அவரது 87ஆவது பட்டமாகும். முதல் 10 சர்வதேச வீரர்களுள் ஒருவராக உள்ள கிரேக்க வீரர் ஸ்டீப –னோஸ் சிட்ஸிபாஸை வீழ்த்தி அவர் இப்பட்டத்தை வென்றார்.

✓ நடாலுக்கும் சிட்சிபாசுக்கும் இடையில் நடந்த இந்த இறுதிப்போட்டி 2021 ஆம் ஆண்டின் மிக நீண்ட ATP போட்டியாக கருதப்படுகிறது.

---

**7.** **'வருணா' என்பது இந்தியாவிற்கும் எந்நாட்டிற்கும் இடையிலான பலதரப்பட்ட பாதுகாப்புப் பயிற்சியாகும்?**



அ) ஆஸ்திரேலியா

**ஆ) பிரான்ஸ் ☑**

இ) இந்தோனேசியா


ஈ) இத்தாலி

✓ 'வருணா' என்பது இந்தியாவிற்கும் பிரான்ஸிற்கும் இடையிலான பலதரப்பட்ட கடற்படைப் பயிற்சியாகும். இந்த இருதரப்பு பயிற்சியின் 19ஆம் பதிப்பு 'வருணா–2021' 2021 ஏப்.27 அன்று நிறைவடைந்தது.

✓ அரபிக்கடலில் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சியில் மேம்பட்ட வான் பாதுகாப்பு மற்றும் நீர்மூழ்கிக்கப்பல் எதிர்ப்பு பயிற்சிகள், தீவிர வான்வழி பயிற்சிகள், தரை மற்றும் வான்வழி எதிர்ப்பு ஆயுதங்கள் மற்றும் பிற கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகள் அடங்கும்.

---

**8.** CSIR **நடத்திய சீரோ ஆய்வின்படி, மார்ச் மாதத்தில் மறுபடியும்** COVID–19 **பரவியதற்கு, கீழ்காணும் எதன் இல்லாமை, காரணமாக அமைந்தது?**



அ) ஆன்டிஜென்கள்

**ஆ) ஆன்டிபாடிகள் ☑**

இ) லிம்போசைட்டுகள்

ஈ) வெள்ளை இரத்த அணுக்கள்

✓ அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் (CSIR) நடத்திய செரோ ஆய்வின்படி, கடந்த 2020 செப்டம்பரில் உச்சத்தை அடைந்த COVID–19 மார்ச்சில் மீண்டும் பரவியதற்கு, சீரோ–பாசிட்டிவ் மக்களில் தேவையான ஆன்டிபாடிகள் இல்லாதது காரணமாக இருக்கலாம்.

✓ 17 மாநிலங்கள் மற்றும் இரு யூனியன் பிரதேசங்களைச் சார்ந்த 10,427 பேரிடம் CSIR ஒரு சீரோ–ஆய்வை நடத்தியது. ஆய்வு நடத்தப்பட்ட மக்க –ளிடையேயான சராசரி சீரோ–நேர்மறை 10.14 சதவீதமாக இருந்தது.

**9. சுற்றுப்புற வளியிலுள்ள உயிர்வளியை செறிவாக்கும் மருத்துவ சாதனத்தின் பெயர் என்ன?**

அ) தெளிப்பான்

**ஆ) உயிர்வளி செறிவாக்கி ☑**

இ) உயிர்வளி செயற்கை சுவாசக்கருவி

ஈ) உயிர்வளி ஆக்கி



✓ உயிர்வளி செறிவாக்கி என்பது ஒரு மருத்துவ சாதனமாகும்; அது, சுற்றுப்புற வளியில் உள்ள உயிர்வளியை செறிவாக்குகிறது. COVID–19 தொற்றுநோய்களின் போது, நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க இது மிகவும் தேவைப்படுகிறது. இந்த உயிர்வளி செறிவாக்கி, 78% நைட்ரஜன் மற்றும் 21% உயிர்வளியைக்கொண்ட வளிமண்டலத்தில் உள்ள உயிர்வளியை ஒரு சல்லடைமூலம் வடிகட்டி, நைட்ரஜனை மீண்டும் வளியில் விடுவித்து, மீதமுள்ள உயிர்வளியை செறிவாக்குகிறது.

---

**10. நடப்பாண்டின் (2021) உலக நோய்த்தடுப்பு வாரத்துக்கான கருப்பொருள் என்ன?**

**அ) Vaccines bring us closer ☑**

ஆ) Vaccine Works

இ) Educate and Immunise

ஈ) Vaccination Vacation




✓ ஆண்டுதோறும் ஏப்ரல் கடைசி வாரத்தில், "உலக நோய்த்தடுப்பு வாரம்" அனுசரிக்கப்படுகிறது. நோய்களுக்கு எதிராக எல்லா வயதினரையும் பாதுகாக்க, தடுப்பூசிகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதை இந்த நாள் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. "Vaccines bring us closer" என்பது நடப்பாண்டில் (2021) வரும் உலக நோய்த்தடுப்பு வாரத்துக்கான கருப்பொருளாகும். நடப்பாண்டு (2021) உலக நோய்த்தடுப்பு வாரத்தின் தொடக்கத்தில், நலவாழ்வு ஊழியர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கூகிள் நிறுவனம் ஒரு டூடுலையும் உருவாக்கியிருந்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1.லேசான மற்றும் மிதமான COVID தொற்று: நோயாளிகளுக்கான ஆயுஷ்–64 மருந்து பலனளிக்கும்**

கரோனா பெருந்தொற்றின் இரண்டாவது அலையால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ள இந்தச் சூழலில், லேசான மற்றும் மிதமான கரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ள நோயாளிகளுக்கு ஆயுஷ்–64 மருந்து பலனளிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சிக்கான மத்திய குழு, பல்வேறு மூலிகைகளிலிருந்து தயாரித்த 'ஆயுஷ்–64' மருந்தை தயாரித்துள்ளது. அறிகுறிகள் இல்லாத, லேசான மற்றும் மிதமான கரோனா தொற்று ஏற்பட்டுள்ளவர்களுக்கான சிகிச்சையில் நல்ல பலனளிப்பதாக நாட்டின் ஆராய்ச்சி நிறுவனங்களின் அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

லேசானது முதல் மிதமானது வரையிலான தொற்றுள்ள நோயாளிகளுக்கு ஆயுஷ்–64 மருந்தை வழங்கி அதன் பாதுகாப்பு மற்றும் தரத்தை உறுதி செய்ய, பலதரப்பட்ட மருத்துவ சோதனைகளை, ஆயுஷ் அமைச்சகம் – அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி மன்றம் ஆகியவை அண்மையில் வெற்றிகரமாக நிறைவுசெய்தன. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் கரோனா மேலாண்மைக்கான தேசிய பணிக்குழு, ஆயுர்வேதம் மற்றும் யோகா அடிப்படையில் தேசிய மருத்துவ மேலாண்மை நெறிமுறைகளுள் இந்த மருந்தை பரிந்துரைத்துள்ளது.

---

**2. இந்தியாவுக்கு 20 டன் மருத்துவ நிவாரணப் பொருள்களை அனுப்பி வைத்தது ரஷியா**

COVID தொற்றின் இரண்டாவது அலையில் சிக்கித்தவித்துவரும் இந்தியாவுக்கு உதவுவதற்காக 20 டன் மருத்துவ நிவாரணப் பொருள்களை ரஷியா அனுப்பிவைத்துள்ளது. அந்த நிவாரணப் பொருள்கள் இந்தியாவை வந்தடைந்தன.

**வங்கதேசம் உதவிக்கரம்:** கரோனா தொற்றுக்கு எதிராகப் போராடி வரும் இந்தியாவுக்கு அவசரகால மருந்துகளையும் மருத்துவ உபகரணங்களையும் வழங்குவதாக அண்டை நாடுகளில் ஒன்றான வங்கதேசம் அறிவித்துள்ளது.

***சீனா ஆதரவு:*** இந்தியாவுக்கு அதிகபட்ச உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது. இதேபோல், அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, அயர்லாந்து, பெல்ஜியம், ருமேனியா, லக்சம்பர்க், சிங்கப்பூர், போர்ச்சுகல், சுவீடன், நியூசிலாந்து, குவைத், மோரீஷஸ் ஆகிய நாடுகளும் இந்தியாவுக்கு உதவி செய்வதாக அறிவித்துள்ளன.

---

**3. சொந்த விண்வெளி நிலையத்துகான கலத்தை வெற்றிகரமாக ஏவியது சீனா**

விண்வெளியில் சொந்த ஆய்வு நிலையத்தை அமைக்க திட்டமிட்டுள்ள சீனா, அதற்கான முக்கிய கலத்தை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது. இதுகுறித்து PTI செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: சீனாவின் விண்வெளி நிலையத் திட்டத்தின் ஒருபகுதியாக, அந்த நிலையத்தின் முக்கிய பகுதியாக அமையவிருக்கும் கலத்தை சீனா விண்ணில் ஏவியுள்ளது. 'தியான்ஹே' என்று பெயரிடப்பட்டுள்ள அந்த விண்வெளி ஆய்வுக் கலம், சீனாவின் 'லாங் மார்ச்–5B Y2' இரக ஏவுகலம்மூலம் ஹைனான் மாகாணத்திலுள்ள வென்சாங் ஏவுதளத்திலிருந்து விண்ணிலேவப்பட்டது.

ஏற்கனவே, சிறு அளவிலான, குறைந்த நேரமே செயல்படும் 2 விண்வெளி நிலையக்கலங்களை சீனா சோதனை முறையில் விண்ணில் ஏவியுள்ளது. இந்த நிலையில், முதல்முறையாக மிகப்பெரிய அளவிலான ஆய்வு நிலையக்கலத்தை சீனா முதல்முறையாக விண்ணில் செலுத்தியுள்து. இவ்விண்வெளி நிலையக்கலம், 16.6 மீ நீளமும் 4.2 மீ அகலமும் கொண்டது. விண்வெளி நிலையத்துக்கு வரும் வீரர்கள் தங்கியிருப்பதற்கான தொழில்நுட்ப வசதிகள் அனைத்தும் இதில் உள்ளது.

இக்கலத்தைப் போலவே, 'தியான்காங்' என்று பெயரிடப்பட்டுள்ள தனது எதிர்கால விண்வெளி நிலையத்துக்கான மேலும் 10 தொகுதிகளை விண்ணில் செலுத்த சீனா திட்டமிட்டுள்ளது. அவற்றைக்கொண்டு உருவாக்கப்படும் சீனாவின் விண்வெளி ஆய்வு நிலையம் 10 ஆண்டுகளுக்குச் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பூமியிலிருந்து 340 கிமீ முதல் 450 கிமீ வரையிலான தொலைவில் வலம் வந்து அந்த ஆய்வுக்கலம் செயல்படும் என்று PTI செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது அமெரிக்கா, ரஷியா, ஐரோப்பா, ஜப்பான் ஆகிய நாடுகளின் கூட்டணியில் அமைக்கப்பட்டுள்ள சா்வதேச விண்வெளி நிலையம் மட்டுமே விண்வெளியில் இயங்கி வருகிறது. எனினும், அந்த ஆய்வு நிலையத் திட்டத்தில் சீனா பங்கேற்க அமெரிக்கா அனுமதிக்கவில்லை. அதனைத் தொடர்ந்து, சொந்தமாக விண்வெளி நிலையம் அமைக்க சீனா முடிவுசெய்தது. அதன் விளைவாகவே, 'தியான்காங்' விண்வெளி நிலைய திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது செயல்பட்டு வரும் சர்வதேச விண்வெளி நிலையம் வரும் 2024ஆம் ஆண்டுடன் ஓய்வுபெறுகிறது. அதற்குள் சீனா விண்வெளி நிலையம் வெற்றிகரமாக அமைக்கப்பட்டால், விண்ணில் செயல்படவிருக்கும் ஒரே ஆய்வுநிலையமாக அது இருக்கும் என்று கூறப்படுகிறது.

---

**4. முதுகுளத்தூர் அருகே சங்ககால பொருள்கள் கண்டெடுப்பு**

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே கருங்கலக்குறிச்சியில் 2,000 ஆண்டுகள் பழைமையான சங்ககாலத்தைச் சேர்ந்த மான் கொம்புகள், கருப்பு சிவப்பு நிற பானை ஓடுகள் உள்ளிட்ட பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன.

இங்கு கிடைத்த ஒரு முழு செங்கல்லின் நீளம் 29 செமீ அகலம் 15 செமீ உயரம் 7 செமீ ஆகும். இது பொ ஆ 1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சங்ககால செங்கல் அளவில் உள்ளது. இதேபோன்ற செங்கல் கமுதி அருகே பேரையூரிலும் கிடைத்துள்ளது. இரு கருப்பு, சிவப்பு நிற பானை ஓடுகளில் ஆங்கில எழுத்துகளான "உ, ஏ" போன்ற குறியீடுகள் உள்ளன. இதில் "உ" போன்ற குறியீடு அழகன்குளம் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அரைப்புக்கல் சிவப்புநிற கல்லிலும், குழவி கருங்கல்லிலும் செய்யப்பட்டுள்ளது.

---